அபிஜ்ஞான சாகுந்தலம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ஆராய்ச்சியாளர்
சேதுஸம்ஸ்தானமஹாவித்வான்
பாஷா கவிசேகரர் ரா. இராகவையங்கார்.

சிவமயம்.

முகவுரை

பத்திரம்.

No. 1051

காரைக்குடி

ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவர வித்தியாசாலைத்

தமிழ்ப்பண்டிதர்

ந. பலராம ஐயர்

இயற்றியது.

ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P. O.
RAMNAD DIST.

மன்னர்குடி

பாரதி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1923.

[All rights reserved.]

விலை ரூ. 1—4—0.

2153

சிவமயம்.

முகவுரை.

பண்டைக் காலத்தில் நமது நாட்டில் வழங்கி வந்த அருமையான வடமொழிக் கதைநூல்களுள் மிகச் சிறப்புடன் விளங்கியது **தசகுமார சரித்திரம்** என்பதொன்று. இதனைத் **தண்டி** யென்ற பெரும் புலவர் அரிய கத்திய நூலாக வடமொழியில் யாத்துள்ளார். இவர் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்து நானூறு வருடங்கட்கு முன் விதர்ப்பநாட்டில் தாராநகரத் தரசு புரிந்த போஜராஜன் அவைக்களத்து விளங்கிய நவரத்தினங் களு ளொருவர் என்ப. மகா கவியாகிய காளிதாசனுடன் ஒருங் கெண்ணப்படும் பெருமை வாய்ந்த இவர் தமது காலத்திலேயே **ஆசாரிய தண்டி** என்ற சிறப்புப்பற்றிய அடைமொழிப் பெயரு டன் அழைக்கப்பட்டமையின் இவரது புலமைத்திறம் நன்கு புலனும். ஒரு காலத்தில் இவரும் காளிதாசனும் தம்முண் மாறுகொண்டு இருவருள்ளும் புலமையில் மிக்கார் யாரென நாமகளை வினவிய பொழுது, "தண்டியே மகா கவி நீயோ வெனில் யானே," எனத் தேவியாற் புகழப்பட்டதாகப் பலரும் கூறுப. இவரியற்றிய **காவியாதரிசம்** என்னும் வடமொழி அலங்கார நூல் இன்றும் அணி நூல்களுட் சாலச்சிறந்து விளங் கும்.

இத்துணைப் பெருமை வாய்ந்த கவிஞர் பெருமான் வட மொழியிற் கடன்மடை திறந்தால் அன்ன நடையிற் பற்பல சுவை களுந் திகழக் கற்பனை நயத்துடன் அமைத்துள்ள தசகுமார சரித்திரத்தினைக் கதைப்போக்கினையெனும் விடாது தழுவி யொருவாறு தமிழிற் புனைந்தால், தமிழ் பயில்வோர்க்குப் பயன் படுவதோடு முதனூல் மாட்சியும் இனிது புலப்படும் எனக் கருதி இந்நூலைச் சின்னாண் முன்னர் வரைதற்குத் துணிந்தேன். எனினும், சிலவேளை முதனூலின் அழகினை நோக்க நோக்கக் கொண்ட முயற்சியைக் கைசோரவிடவுங் கருதினேன். இவ்வம யங்களில் எனது அன்புமிக்க நண்பரும் தமிழின் வளர்ச்சியைக் கனவினு மறவாத பெருந்தகையாளரு மாகிய காரைக்குடி ஸ்ரீமான் சு. ப. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள், தளர்கின்ற

காலத்தில் ஊன்றுகோல்போ லெனது ஊக்கத்தை யுயர்த்தியது மன்றி நூலை யச்சிட்டுதவும் விஷயத்தில் எனக்கு எக்கவலையு மின்றித் தாமே பொருட்செல வனைத்தையும் வகித்தருளினர். அன்னார்க்கு என்பாலுள்ள பேரன்பிற்கும் பெருங்கருணைக்கும் என்னுற் செயப்படுங் கைம்மாறு ஒன்றுமின்று; அவர், மேலும் மேலும் செல்வமோங்கித் தீர்க்காயுளுடன் பல நலங்களும் பெற்றுச் சிறந்து செந்தமிழினை வளர்ப்பதையே தந்தொழிலாகக் கொண்டருள எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானுக.

எடுத்த முயற்சி யினிது நிறைவேறத் திருவருள் புரிந்த தமிழ்த் தெய்வம் என்றென்றும் வாழ்க.

காரைக்குடி,
3–12–1923.

இங்ஙனம்,
த. பலராம ஐயர்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
103	26	நகரக்திற்	நகரத்திற்
111	31	வெழுச்சிக்க	வெழுச்சிக
151	30	மலையா	மலயா

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காப்பு.

விநாயகர் துதி.

பரமன் றலைக்கணியும் பாந்தளினுற் றூங்குங்
கரமொன்று மண்டக் கறங்கைத்—திரமொன்ற
வந்தசைக்கும் வாரணத்தாள் வாழ்த்தியீ ரைந்தாச
மைந்தர் கதைதவரைகு வாம்.

அவையடக்கம்.

கண்டி னின்சுவை கதுவிய கவின்கொளு மொழியாற்
றண்டி கூறிய சரிதையைத் தமிழினிற் சாற்ற
மண்டு மன்பினி லெழுந்தனென் மதிக்கலா திதனைக்
கண்ட வென்னுள நாணுமாற் கடிவரே கற்றோர்.

திருமால் துதி.

கவினிய புவனப் பரப்பெலாங் கவித்த
கவிகையிற் காம்பென நாபிச்
சவிதிகழ் மரையின் றண்டெனத் தாணித்
தனிக்கலக் கூம்பென வானத்
தவிர்நதிக் கொடிசேர் கழையென விரவி
யாழியச் செனச்சயத் தூணைத்
தெவரடு கால தண்டெனத் திகழ்மால்
சேவடி மங்கலஞ் செயுமால்.

1

உ

சிவமயம்.

தசகுமார சரித்திரம்.

முன்னுரை.

அதிகாரம் 1.

கடலாடையுடுத்த நிலமகட்குத் திருமுகமெனப் பொலிவுற் றோங்கும் மகத மெனப் பெயர்வாய்ந்த தேயம் ஒன்று உண்டு. அதன் கண், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் முடியி னின்று இழிந்து, மண்ணுளார்க்கு அமுதமாய்ப் பரந்து, இரு புடைவாரமும் பொன்னையும் மணியையும் கொழித்து, ஐந்திணை வளமும் ஒன்றினொடொன்று தலைமயங்க இயற்றி, எக்காலத்தும் இடையறுத நல்லொழுக்கம் பூண்டு திகழும் 'கங்கையென்றுல கேத்திய கடவுண்மா நதி', இருநிலமங்கையின் அழகிய கழுத் தில் இலங்கும் மங்கலவணியென விளங்கா நிற்கும். அப்புண்ணிய நதியின் கரையில், பல வளங்களும் பெற்று, மாட மாளிகை கூட கோபுரங்கள் மதில் அகழி உய்யானம் செய்குன்று முதலிய வற்றிற் சிறந்து விளங்கும் புஷ்பபுரி யென்னும் திருநகர் அந்நாட் டிற்குத் தலைநகராக அக்காலத்திருந்தது. கங்கைக்கரையின் மல ர்ந்த பெருந் தாமரைபோற் கண்டோர் கண்ணையும் மனத்தை யும் கவரும் தன்மையால் அதனைப் புஷ்பபுரியென்று கூறினர் போலும். அதில் இராஜஹம்சன் எனப் பெயரிய மன்னவன் மநுநெறிவழாமற் செங்கோல் செலுத்திவந்தான். சகல சற்குண சம்பன்னனன அப்புரவலனுக்கு அழகேயோருருவெடுத்தா லொத்த வசுமதி என்ற அணங்கு மனைக்கிழத்தியாக வாய்த்திருந் தனள். அவனுக்குத் தருமபாலன் பத்மோத்பவன் சிதவர்மன் எனப் பெயர்கொண்ட அமைச்சர் மூவர் இருந்தனர். பரம்பரை யான அமைச்சுரிமைத் தொழிலேப்பூண்ட அம்மூவரில், சிதவர்ம னுக்குச் சுமதி சத்தியவர்மன் என்ற இருகுமாரர்களும், தரும பாலனுக்குச் சுமந்திரன் சுமித்திரன் காமபாலன் என்னு மூன்று புதல்வர்களும், பத்மோத்பவனுக்குச் சுச்ருதன் இரத்தினே பவன் என்றிருமைந்தரு மிருந்தனர்.

அவருள், சிதவர்மன் புதல்வனுகிய சத்தியவருமன் உலகின் கண் வெறுப்புற்று முற்றுந் துறந்தவனுய்க் கடவுளடியைக் கனவினு மறவாது புண்ணிய நதிகளிலாடும்பொருட்டுத் தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டுவிட்டான். தருமபாலன் மகனுகிய காமபாலன் பாணர் வம்பர் முதலிய இழிகுணமாக்களோடு பொருந்திப் பரத்தையர் சேரியே கதியெனத் தறிதலையாய்த் திரிவானுயினன். இரத்தினேத்பவன் வியாபார நிமித்தம் தீவாந்தரங் கட்கு வங்கமேறி யுழன்றனன். ஏனைய சகோதரர்கள் தங்கள் பாரம்பரிய உரிமையாற் கிடைத்த அமைச்சுத் தொழிலே மேற் கொண்டு ஒழுகி நின்றனர்.

இங்ஙனமிருக்குநாளில், இராஜஹம்சனுக்கும் மாளவ தேசாதிபதியாகிய மானசாரனுக்கும் கடும் போர் மூண்டது. பெரும் படையுடனெதிர்த்த மானசாரன் தனது சேனை சின்னபின்னமாக முறியடிக்கப்பட்டதுமன்றித் தானும் இராஜஹம்சனுற் சிறையுண்டனன். மகதாதிபதி பெருந் தன்மையையே அணிகலனுப்பூண்ட அரசனுதலின், மானசாரனைக் கருணை பாராட்டி யுபசரித்துச் சிறையினின்றும் நீக்கி அரசுரிமையையும் அளித்தனன்.

"இன்னு செய்தார்க்கு மினியவே செய்யாக்கா லென்ன பயத்ததோ சால்பு", என்னும் பெரியார் வாக்குக்கு இலக்கியமாய் நின்ற இப்பெருந்தகையின் அருளினை வியந்து புகழாதாரெவருமிலர்.

பின்னர், இராஜஹம்சன் ஏக சக்கிராதிபதியாய் எதிரியொருவரும் இன்றிக் கவலையற்று உலகமுழுவதும் ஒரு கோலோச்சி வந்தனன். ஆயினும் அவனுக்குத் தீராமனக்குறையொன்றிருந்தது. மணவினை முடித்துப் பன்னுட் கழித்தும் தனது மரபினை விளக்கி அரசுரிமைபூணும் தவப் புதல்வனைப் பெறுததாலுண்டான ஆறுத்துயரம் அவன் மனத்தை அநவரதமும் வருத்திற்று. மகப்பேறு இல்லாதவர்க்கு இம்மை மறுமை இரண்டினும் இன்பம் இல்லையேயென வருந்துவான். மகவிலாமனை மலரிலாச்சோலையையும் மரையிலாப் பொய்கையையும் பிறையிலா அந்தியையும் ஒக்குமேயென மனம் நைவான். "மைந்

கில்லாதவர்க்கு மீனவாழ்வினின்மை யென்னும்." எப்பொரு ட்கு மிறைவனுகிய கடவுள் அருளின்றித் தனக்கு மகப்பேறு சித்தியாதெனத் துணிந்து, திருப்பாற்கடனடுவண் அரவணையிற் றுயிலும் அமலன் பதமலர்களை இடைவிடாது சிந்தித்து ஒழு கும் ஒழுக்கமே தலைப்பட்டு நின்றனன். இவன் வேண்டுகோ ளும் நல்வினைப்பயனும் கைகூடுங்காலமும் சம்பவித்தது. சில நாளில் அன்னேன்றன் பட்டமகிஷி கருப்பவதியாயினள். மன் னன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர்களும் தனது உயிர்த்துணைவராகிய மந்திரிமார் களும் ஏனைய அரசர்களும் புடைசூழ்ந்திருக்க மிக்க வைபவத் தோடு உரிய காலத்திற் சீமந்த மணவினைமுடித்துக் கழிபேரு வகையுடன் தனது அத்தாணி மண்டபத்தில் அரியணைமீது இத்தரையிடை இந்திரன் இவன் என யாவருங்கண்டு மகிழ வீற்றிருந்தனன். அப்பொழுது, செங்கலாடை புனைந்த திரு மேனியும் சிவசிவவெனும் திருவாயும்பெற்ற முற்றுந்துறந்த முனிவரிருவருவன் ஜபமாலிகையும் கையுமாய் அங்கு வந்து அரசனை நோக்கி "ஜயஜய விஜயீபவ" என வாழ்த்துக்கூறினன். வேற்றுநாட்டிற்குத் தான் அனுப்பிய அந்தரங்க ஒற்றருள் ஒரு வன் இங்ஙனம் வேறிருவரும் அறியாவண்ணம் மாறுவேடம் பூண்டு வந்துளானென்பதை யுணர்ந்த இராஜஹம்சன், தனது அமைச்சருடன் அவனை மந்திராலோசனை மண்டபத்திற் றனி யிடத்திற் கொண்டுசென்று, விசேஷம் யாது கொல்? சொல்லெ னக் கேட்டனன். ஒற்றனும் பின்வருமாறு சொல்லத் தொடங் கினன்.

"அரசர்க்கரசே! தங்கள் ஆணையைச்சிரமேற்கொண்டு மாள வதேசாதிபதியின் தலை நகருள் இம்மாறு வேடத்துடன் புகுந் துவந்து வந்தேன். முன் நடந்த போரில் தனக்குண்டான தோல்வியால் மனநொந்திருந்த மானசாரன் மகாகாள க்ஷேத்தி ரத்திற்சென்று மகேச்சுவரனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து அவ னருளால் வரம்பெற்ற கதாயுதமொன்று பெற்றுவந்துளானென் றும், அவனை எதிர்ப்பவர் யாவரும் இனிப்பிழைத்தல் அரிதென் றும் பெரியார் வாய்க்கேட்டறிந்தேன். இங்ஙனம் வரபலம் பெற்று வெற்றி முற்றுமெனத் திடமடைந்த மானசாரன், இனித்

தங்களையழிப்பது எளிதெனக்கருதி கால்வகைப்படையுடன் முற்
படுரி நோக்கிப் பிரயாண சந்நத்தனுயினன். அதுகண்ட
யான் இனித்தாமதித்தல் கூடாதென இங்கு ஓடோடியும் வந்
தேன்." என்று தூதன் தன் வரலாற்றை விளக்கிச்சுருக்கிக்
கூறினன். கலிங்கத்து அரசக்கடலினடுவில் அமிழ்ந்துகின்ற
அரசன் செவியில் ஒற்றன் சொற்கள் புகுந்த அளவில், அவ
னுக்கு அளவிலடங்காத் துயரமுண்டாயிற்று. எண்ணிலாத
போர்வீரர் பலர் திரண்டு எதிர்ப்பினும் சிறிதும் பொருட்படுத்
தாது அவரை இமைப்பொழுதில் இமையவருலகேற்றும் அதிர
வீரனுகிய இராஜஹம்சன், பகைவன் வரபலத்தாற்பெற்ற கதா
யுதத்திற்குச் சிறிதும் அஞ்சினவனல்லன்; இருதிறத்தாரிலும்
பலரும் நாசமடைவார்களே யென்று பரிதவித்தனன். தன்னல்
மறியையும் நாட்டையும் ஒருங்குபெற்றுச்சென்ற மானசாரன்
செய்ந்நன்றி யற்றவனுய் மீட்டும் படைகொண்டு வருவதைக்
கேட்டு மனமடங்காக் கோபங்கொண்டனன். இவன் முகவாட்
டத்தைக் கண்ணுற்ற மந்திரிகள், இவனை மதிலரண்சூழ்ந்த கோட்
டைக்குள் தனது பட்டமகிஷிக்குக் காவலாகச் சென்றிருக்கு
மாறும், வஞ்சிகூடிப் போர்க்கெழுந்த மானசாரனை எதிர்த்துத்
தாக்கி அமர்புரியத் தங்களுக்கு அநுமதியளிக்குமாறும் பெரிதும்
வேண்டிக்கொண்டனர். வீரர்க்குள் வீரனெனச்சிறந்த மன்ன
வனே அவர்கள் கூறியதற்குச் சிறிதும் இணங்காதவனுய் நால்
வகைப்படையினையும் ஆயத்தப்படுத்த ஆணையிட்டு, மானசாரன்
வரவினை ஆவலோடு எதிர் பார்த்திருந்தனன். மானசாரனே
பெருப்படையுடன் மகத நாட்டெல்லையுட்புகுந்து போர்தொடங்
கினன். புத்திமான்களாகிய மந்திரிகள், பூரணகும்பிணியான
ராணியையும் அவளைச்சார்ந்த அந்தப்புர மாதரையும் தமது
மனைவியர்களோடு விந்தியமலைச் சாரலிலுள்ள ஒரு மறைவிட
மான ஸ்தலத்திற்கு அனுப்பிவிட்டுப் பிறகு போர் தொடங்கு
தலே பல்லாற்றுலும் யுக்தமென்று அரசனுக்கு வற்புறுத்தினர்
கள். அவனும் மனமொப்பி அங்ஙனமே செய்தபின்னர்த் தனது
சதுரங்க சைன்யமும் வீரவேஷத்துடன் தன்னைச்சூழ்ந்துவரச்
சென்று தன் பகைவனை மிகுந்த சினத்துடனெதிர்த்தான். இரு
திறப்படைகளுக்கும் துப்பாட்டமில்லை கூடி. அதிரப்பொருதனர்; கள்
ளோர் அஞ்சுப்படியான பெரும்போர் நிகழ்ந்தது. மானசாரன்

இராஜஹம்சனுல் இரதம் குதிரை பாகன் வில் முதலியவற்றை இழந்து பதாதியாய் நின்றுவருந்தினவனுப், ஈசனளித்த கதாயுதத்தைச் சுழற்றி இராஜஹம்சன்மேல் வீசியெறிந்து வீராட்டகாசம் செய்தனன். எறிந்த கதை குறிதப்பிப் பாகனைக் கொன்றது; அரசனும் மயங்கி மூர்ச்சையாயினன். தேரிற்கட்டிய புரவிகள் நாதனற்று மருண்டு மறுவேகமும் பின்னிட, அறிவு மயங்கிக் கிடக்கும் அரசனுடன், விந்தியமலைச்சாரலில் வசுமதி தனது பாங்கியரோடு வதியும் மகாரணியத்தை நோக்கித் தற்செயலாய் ஓடிப்போயின. இதுவும் இறைவன்றிருவருளே.

தமது மன்னவற்கு நேர்ந்த விபத்தினைக் கண்ட மகதசேனைகள் சின்னபின்னமாய் நாற்றிசையிலுஞ் சிதறிப்போயின. மாளவாதிபன் வெற்றிமுரசறைந்து வாகைசூடி மகதத்தை எரியூட்டிப் புஷ்பமாபுரியிற் புகுந்து அதனையே தனக்குத் தலைநகராகக் கொண்டு வாழ்வானுயினன். இந்திங்ஙனம் நிற்க, போர்க்களத்தில் உடல் முழுதும் கல்லடைக்கண்களாய்த் தொளைப்புண்டு விழுப்புண்பெற்று மரணமூர்ச்சையாய் வீழ்ந்துகிடந்த இராஜஹம்சனுடைய மந்திரிகள் யாவரும், இரவு புலர்ந்துவைகறைப் பொழுதில் மெல்லெனத்தவழ்ந்து வீசிய மந்தமாருதத்தால் சிறிது உணர்வு மீளப்பெற்றவராயெழுந்து தமது அரசனைத் தேடிப் பார்த்தனர். களமுழுதும் தேடியும் அரசனது உடலினைக்கண்டிலாமற் கழிபெருந்துன்பமுற்று அவர், அரையன் மனைவி வசுமதியொளித்திருக்கும் விந்தியாரணியம் போய், நேர்ந்தவையாவற்றையும் முற்றிலும் அவட்குக் கூறிமுடித்தனர். காதலன் வெற்றிபெற்றுவரும் வரவினை யுன்னிக் கண்ணும்குழிய வழிநோக்கிநின்ற அக்கற்பரசி, அமைச்சர் கூறிய நாராசம்போன்ற சொற்கள் தனது இருசெவித்தொளையையுங் கிழிப்பத் தாங்கொணாத்துயரால் அவசமாய்க் கீழ்வீழ்ந்து மூர்ச்சையாயினள். என் செய்வாள் பாவம்! தனது தாதியரும் அமைச்சரும் மிகவும் தேற்ற ஒருவாறு உணர்வுபெற்றெழுந்து கடவுளையும் தன் விதியையும் நொந்து தன் காதலனை நினைந்து, "ஐய! அரசர்க்கரசே! நினது மாலையணிந்த மார்பகத்து வாழுமென்னைத் தனி நீத்துப் போதல் நீதியோ? மன்னுயிரைத் தன்னுயிர்போற்பாராட்டிக் கருணைகாட்டுங் காவல! ஏழையாகிய எளியேன்பால் அக்கருணை

நீத்ததேனோ? என்னை நின தின்னுயிராகப் பன்முறையு மென்பா லன்புடன் கூறியுள்ளாயே. அஃதங்ஙனமாதல் பொய்யோ? உயிரிருப்ப உடல் நீங்குமா? அண்ணலே! நீ பொய்யுரையாய், யான் நின்னைத்தணந்து ஒருபொழுதும் உய்யேன், உய்யேன். நீ யெனை மறப்பினும் யானுனைத்துறவேன். இனி எனக்கு உலக வாழ்வு முற்றிலு மருவருப்பே.” என்று பலவிதமாய்ப் புலம்பி அழுது தன துயிரை மாய்த்துக்கொள்ள முயன்றனள். அதனை நோக்கிய மந்திரிகள் இராணியின் துணிவுக்கு வியந்து பயந்து அவளை நோக்கித், “தாயே! நீ இப்பொழுது கருப்பவதி என்பதை நினைவாய். உலகமுழுவதும் ஒரு குடைநிழலில் அரசாளும் ஆண்சிங்கம் போன்ற அருமந்த மகனை நீ பெறுவாய். உன்னல் நாங்களும் எங்கள் கவலை தீர்வோம். தவத்தில் மிக்க முனிவர்கள், மகா பராக்கிரமசாலியான புதல்வனை நீ பெறுவாய் என்று முன்னம் மகாராஜாவிடம் கூறிப்போனதை, யாங்கள் கூடஇருந் தமையால் அறிவோம். நீ உனது உயிரை மாய்த்துக்கொள்வ தோடு, உலகிற்கு நன்மைபயக்கும் உத்தமச் செல்வனைய அர சிளங்கேசரியை வதைத்தல் அறமோ!” என்று பல நீதிகளையும் எடுத்துக்காட்டி அவளை அத்தீத்தொழிலினின்றும் தடுத்து விட்டனர்.

அப்பொழுது அமைச்சரால் தடுப்புண்டு ஒருவாறு அடங்கி யிருந்த வசுமதி அன்றிரவு அர்த்தயாமத்தில் யாவரும் அயர்ந் துறங்குகையில் ஒருவரும் அறியாதபடித் தன் உயிர்துறக்கும் மநோரதத்தை நிறைவேற்ற எண்ணி யாவரையும் விட்டு நீங்கித் தனியேசென்று அயலிலுள்ள ஒரு சண்பகச்சோலையை அடை ந்து தான் மேற்போர்த்திருந்த உத்தரீயத்தின் ஒரு நுனியை ஒரு சண்பகமரத்தின் ஒரு கிளையிற்கட்டி மற்றொரு நுனியைத்தனது அழகிய கழுத்திற்பிணித்துத் தன்னைத் தூக்கிட நினைத்து நின்று கடவுளைக்கருதித் துதித்து, “மன்மதனுடைய புஷ்பதனுசை அழகால் வென்ற எனதருமைத்திருமன்னனே! யான் ஏழேழு பிறப்பெடுப்பினும் நீயே எனக்குத்தலைவனாகவும் யானே உனக் குப்பத்தினியாகவும் இறைவன் அருள்புரிவானாக,” என்று வாய் விட்டரற்றி வேண்டினள். அப்பொழுது அச்சண்பகத்தினடி யில் உள்ள ஒரு புதரில், போர்க்களத்திலிருந்து புரவிகளால் வாயு

கதியாய்க் கொண்டு வரப்பட்ட தேரினின்றும் கீழ்வீழ்ந்து தன் னறிவு நீங்கிக்கிடந்த இராஜஹம்சன், தனது நல்வினைப்பயனல் அறிவுகூடப்பெற்று, அங்ஙனம் கள்ளிருளிற் புலம்பியவள் தனது பட்டமகிஷியே என்பதையுணர்ந்து அவளைக்கூவி யழைத்தனன். தனது கணவன் குரலெனவறிந்த அவளும், ஐயமும் அச்சமும் முதலிலடைந்தனளாயினும் பிறகு தன்றலைவன் உயிர்த்திருப்பதை உணர்ந்ததாலுண்டாய களிப்பினல் ஆநந்தபரவசமானவளாய்த் தனது பரிவாரங்களையும் தாதியரையுங்கூவினள். தூரத்தேலை வில் மகாராணியின் குரலைக்கேட்ட தாதியருஞ் சேவகரும் ஓடோடியும் வந்து அவளாற்காட்டப்பெற்ற மன்னவன் பாதத் தில் விழுந்து வணங்கினர். காணுமற்போன காவலனைக்கண்டு கழிபேருவகையடைந்தனர். பின்னர் மந்திரிகள், ஆண்டு அமைக் கப்பெற்ற பர்ணசாலையில் அரசனைக்கொண்டு சேர்த்து, அவன் பட்டாடைகளை யுடுத்தியதுமன்றி, அநுபவித்தே தீரற்பாலதா கிய தீவினைப்பயனல் ஓரோவொர் காலத்தில் துன்பமுழுந்த அரிச்சந்திரன் முதலியோர் சரிதங்களை யெடுத்துக்காட்டி அவன் மனத்திலுண்டாகிய துன்பத்தையு மாற்றி யிருந்தனர். அரசனும் அப்பன்னசாலையிலேயே சிலதினம் அரசாட்சியைப் பெறுமாறெங்ஙனம் என்று கவலையோடிருந்தான்.

இங்ஙனம் விந்தியமலைச்சாரலில் இவர்கள் ஆண்டுக்கிடைக் கும் கந்தமூலபலங்களையுண்டு வாழ்ந்துவருங்காலத்தில், அரசன் தனது மந்திரிகளுடன் அக்காட்டிற்றவஞ் செய்துகொண்டிருக் கும் தபோநிதியாகிய வாமதேவரை யடைந்து அவர்பாற்றருமோ பதேசம் கேட்டுவந்தனன். ஒருநாள் அரசன் வாமதேவருடைய பாதங்களில் நமஸ்கரித்துத்தான் பிரிந்த அரசாட்சியைப்பெறும் உபாயத்தைக் கூறியருளுமாறு இரந்து வேண்டிக்கொண்டான். வாமதேவர், அரசனை ஆசீர்வதித்துக் கையமைத்து, "அரச! நீ கவலையுறுதல், பொறுத்தோர் பரசன்வார். முன்னுலகங்களி னும் தன் புகழ் பரவுமாறு அரசாட்சி செய்யும் மகா வீரசிகா மணியாகிய புதல்வனைப் பெறுங்காலம் சமீபித்தது. அவனுலே யனத்துன்டாகிய துன்பமும் தனது பிரிவையும் பொறுமையும், அநுவரையில் இகபர சுகங்களை யெற்றவர்க்களிக்கும் இறைவனை எப்பொழுதும் இதயத்தில் மறவாமல் நினைத்து வணங்கிவருவா

போக," என்று அன்புடன் அனுக்கிரகித்தனர். சின்னட்சென்று பின் கோளரும் நாளரும் குறைவின்றி நல்ல இராசிகளிற்பொருந்தி நிற்பச் சுபதினத்தில் வசுமதி பாலசூரியனைப்போன்ற ஆண்மகனைப் பிள்ளெடுத்தனள். அரசன் முதலிய யாவரும் பேரானந்தமடைந்தனர். தெய்வசங்கற்பத்தால் அரசனிடம் வாஞ்சை மிகுந்த நான்கு அமைச்சர்களுக்கும் அன்னோர் மனைவியிடம் நான்கு புதல்வர் அதிகாலத்தில் உதித்தனர்.

அரசகுமாரனுக்கு இராஜவாஹனன் என்று நாமகரணஞ் செய்தனர். சுமதியின் மைந்தனுக்குப் பிரமதி என்றும், சுமந்திரன் புதல்வனுக்குச் சித்திரகுப்தன் என்றும், சுமித்திரன் குமாரனுக்கு மந்திரகுப்தன் என்றும், சுச்ருதன் மகனுக்கு விச்ருதன் என்றும் பேரிட்டழைத்தனர். இந்நான்கு மந்திரிகுமாரர்களும் இராஜவாஹனனிடம் நகமும் சதையும்போல நட்புரிமை பூண்டு சுக்கிலபக்ஷத்துச் தாராபதிபோல வளர்ந்துவந்தனர்.

அதிகாரம் 2.

ஒருநாள் ஒரு பிராமணன் இராஜஹம்சனிடம் சார்ந்து ஓரிளமகனை அவன் கைக்கொடுத்துப் பின்வரும் கதையினைக் கூறினன்.

"ஐயா! ஒருநாள் நான் ஆரண்யத்தில் சஞ்சரித்து வரும் பொழுது ஒரு ஸ்திரீயைக்கண்டேன். அவள் கந்தையுடையுடுத்துத் தலைவிரிகோலமாய்க் கண்ணீருங்கம்பலையுமாயிருந்தாள். அவளது நிலைமைக்கு இரங்கிய யான், 'இந்த நிர்மானுஷ்யமான காட்டில் நீ தனியே துன்பக்கடலுள் ஆழ்ந்தவளாய் ஏன் திரிதருகின்றனை?' எனக்கேட்டேன். அதற்கு அவள், பின்வருமாறு கூறினள். 'மகத தேசாதிபதியின் மனைவி வசுமதிதேவியின் சீமந்த விவாஹத்திற்காக, மிதிலை மன்னவனாகிய பிரகாரவர்மா தன் மனைவி மக்களோடு சதுரங்கபலத்துடன் புஷ்பபுரிக்கு வந்திருந்தான். பிறகு உடனே மகத ராஜனுக்கும் மாளவராஜனுக்கும் நடந்த போரில் தனது நண்பனுக்குத் துணைசெய்யும்பொருட்டு அங்கேயே இருந்தனன். அந்தப்போரில் மகதாதிபதி இராஜஹம்சன் இறந்துபோக அவன் படைகளும் அவனைச்சார்ந்தோரும் தோல்வியுற்றோடினர். பிரகாரவர்மன் சத்துருவின்

கைப்படாமற்றப்பி யோடிவந்து தன் மனைவிமக்களையும் எஞ்சி நின்ற தன் பரிவாரங்களையும் இரகசியமாய் ஒருவரும் அறியா வண்ணம் இரவில் அழைத்துக்கொண்டு தன் தேசத்திற்குப்புறப் பட்டுச்சென்றனன். செல்லும் வழியில் குறுக்கிட்ட ஒருகாட்டி னுட்புகுந்த அளவில் ஆண்டிருந்த வேடர்பலர் எதிர்த்து வளைத் தனர். பிரகாரவர்மன் தனது புஜபலத்தாலும் தன்னுடனிருந்த சில வீரர் துணையாலும் பெருங்கூட்டமாய் வந்த அவ்வேடரி னின்றும் மிக்க சிரமத்துடன் தப்பித் தன் மனைவியையும் அவளு டன் வந்த தோழியரையும் பாதுகாத்துச் சென்றனன். நானும் என் மகளும் பிரகாரவர்மாவின் இரட்டைப் பிள்ளைகளாகிய இர ண்டு ராஜகுமாரர்களுக்கும் செவிலித்தாயர்கள். எங்கள் வச மிருந்த இருகுழந்தைகளையும் தூக்கிக்கொண்டு, அதிவேகமாகச் சென்ற பிரகாரவர்மனோடு ஓடச்சக்தியற்றவர்களாய்த் திசைதெரி யாது ஓடிக் காட்டில் வழிதப்பிவிட்டோம். அந்தச்சமயத்தில் ஒரு பதிறடி வேங்கைப்புலி இடி இடித்தாற்போலக்குமுறி எங்கள்மேற்பாய்ந்து வந்தது. நானும் என் மகளும் உயிருக்குப் பயந்து ஓடினோம். ஓடியுமென்? பயத்திறற் கால் தடுமாறிக் கையிலுள்ள குழந்தையையும் போட்டுக்கொண்டு நான் கீழே விழுந்தேன். எனது கையிலிருந்து விழுந்த பிள்ளை அழுது கொண்டு பக்கத்திலிறந்துகிடந்த ஒரு பசுவினண்டை யோடி யொளிந்தான். பாய்ந்துவந்த புலி என்னைவிட்டு இறந்துகிடந்த பசுவினைக்கவ்வி இழுத்தது. அப்பொழுது தற்செயலாய் அவ் வழியாக வந்தவொரு வேட்டைக்காரன் தனதம்பினால் அப்புலி யைக்கொன்று வீழ்த்தினன். அம்மறவன் பொழுதுள்ள அரச குமாரனைப் பார்த்து மனமகிழ்ந்து அவனைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான். அவன் எங்குப்போயினனே யான் அறியேன். நான் மதிமயங்கிச்செய்வதான்றுந் தெரியாது என் மகளைப் பலவழியினுந்தேடிப் பார்த்தேன்; அவள் போனஇடம் புலப்பட வில்லை. சுடுதியிலுண்டான பலவிதமான ஆபத்துக்களாற்புத்தி கலங்கியிருந்தமையாலும், குடற்றறிக்கக் காட்டிற் பலவிடங் களிலும் ஓடினமையாலும் நினைவு தவறி மூர்ச்சையாய் விழுந்து விட்டேன். பிறகு அந்நிலையிலென்னைக்கண்ட இடையன் ஒரு வன் என்மேற்கருணைமிக்கு என்னைத்தன் குடிசைக்குக்கொண்டு போய் எனக்கு உண்டி முதலிய கொடுத்து உபசரித்தான். எனது

கலக்கந்தெளிந்து சிறிது ஆயாசந்தீர்ந்தவுடன் என்வசமிருந்து கைதவறின அரசிளங்குமரனைக் கண்டுபிடிக்கவேண்டும், இல்லாவிடின் எனதாசனுகிய பிரகாரவர்மனை யடைந்து நடந்த துக்ககரமான வர்த்தமானங்களை அவன் செவிசார்த்தவேண்டும், என்ற துணிவுடன் எழுந்து இக்காட்டில் நாற்புறமும் தேடிவருகிறேன்,' என்று தனது விருத்தாந்தத்தை அந்த ஸ்திரீ கூறிமுடித்தனள். அதன்பிறகு அவள்கதி என்னவாயிற்றோ எனக்குத்தெரியாது.

மிதிலை ராஜனுக்கு நேரிட்ட துன்பங்களுக்காக நான் பரிதபித்துக் கூடுமானால் அவன் குழந்தைகளைத் தேடிப்பிடிக்கத்தீர்மானித்தேன். அப்படித் தேடியலைகையிற் காட்டின் நடுவில் ஒரு சண்டிகையின் கோயிலைக்கண்ணுற்றேன். அதையணுகியதும் அங்குச் சில சவரர் கூட்டமாய் நின்றுகொண்டு தங்களுக்குச்சமீபகாலத்தில் கிடைத்த நிர்விக்கினமான வெற்றிக்காகக் காளிதேவிக்குப் பூசையிட்டு நரபலி கொடுக்கத்தீர்மானித்துக்கொண்டிருப்பதையும் அவர்கள் நடுவில் ஓர் அழகிய ஆண் குழந்தை செஞ்சாந்து பூசிச் செம்மலர் சூடி விளங்குவதையுங் கண்டேன். காளிதேவியின் அருள் அவர்களுக்கு மேலும் மேலும் உண்டாகும்படித் தற்செயலாக அநாதையாய்க்கிடைத்த அவ்விளமகனைப் பலியிட அவர்கள் துணிந்தனரென்பது அன்னோர் தம் பேச்சிலை விளங்கிற்று. எவ்விதமாய்ப் பலிகொடுப்பது என்பதைப்பற்றியே அவர்களுக்குள் விவாதம் நடந்துகொண்டிருந்தது. சிலர் அக்குழந்தையை ஒரு மரக்கிளையிற் றலைகீழாய்த்தொங்கவிட்டு வாளாயுதத்தாற் சிரத்தைச் சேதித்துவிடவேண்டுமென்றனர்; சிலர் பலிபீடத்திற் குழந்தையைப் படுக்கவைத்துத் தலையை அரியவேண்டுமென்றனர்; சிலர் பிள்ளையை ஆகாயத்தில் வீசியெறிந்து அது கீழ்விழுமுன் கூரிய கத்தியை அதன்கீழ் ஏந்தவேண்டுமென்றனர்; வேறு சிலர் பலிபீடப்பாறையில் அதனை நிறுத்தி நாற்புறமும் தாங்கள் சூழநின்று வில்லை வளைத்து ஏககாலத்திற பல அம்புகளைத்தொடுத்து அம்புபடுமிடங்களினின்றும் குருதிகொட்டக் கொன்றுவீழ்த்தலே சரியான வழியென்றனர்; மற்றுஞ்சிலர் பிள்ளையைக்கட்டவிழ்த்துவிட்டு அவன்மேல் வேட்டைநாய்களை ஏவி அவலுடலைச் சின்னபின்னமாய்ப் பிடுங்கி யெறிதலே உத்தமமான வழியென்றனர்.

இன்னும் எனையோரும் தங்கள் தங்கள் புத்திக்கெட்டியவாறு தோன்றும் கொடுமையானயுக்திகள் பலவும் கூறினர்கள். ஐயோ, பாவம்! காலதூதரைப்போன்ற அக்கொடியர் வசமகப்பட்ட அக் குழவி என் செய்யும். பான்மணமறு வாயோடு விளங்கும் அப் பாலகனைக் கண்டதும் எனக்கு என்னையறியாத துக்கம் பிறந் தது. அவனை எங்ஙனம் உய்விக்கலாமெனப் பலவிதத்தாலு மாலோசித்தேன். எல்லாம் வல்ல இறைவனகிய நீலகண்ட மூர்த்தியைத் தியானித்து மனத்தை யொருவாறு திடப்படுத்திக் கொண்டு அச்சவரர்களை யணுகிநின்று அவர்களை நோக்கி மிக்க வணக்கமுடன், "பெரியோர்களே! நான் இந்தக்காட்டில் என் குழந்தையாகிய இளம்புதல்வனைடு வழிதப்பிவிட்டேன். நடந்த இளைப்பாற் குழந்தையை யொருமரத்தடியில் வைத்து நான் தூங்கிப்போயினேன்; விழித்துப்பார்க்குமளவில் அவனைக்கண்டி லேன். அவன் எங்கேயோடிப் போயினனே? அவனைத்தேடித் திரிந்து வருகிறேன். இந்தக்காட்டில் இதுகாறும் எந்த மனிதர் முகத்தையும் பார்க்கவில்லை. தெய்வகதியாய், மிக்க நல்லவர் களான உங்களைக்கண்டேன். எனது குழந்தையைத் தேடித் தருவீர்களானல் இந்தத் துர்க்காதேவியின் பரிபூரணமான கருணையுங்களுக்கு உண்டாகுமாறு நான் மூன்று பொழுதிலும் ஜபம்செய்து வருவேன். அவள் அருள் உங்களுக்குத்தப்பாமல் கிடைக்கும்," என்று கல்லினுங்கடிய அவர் மனங்கரையுமாறு புலம்பினேன். என் வேண்டுகோளுக்கிரங்கிய அவர்கள் தங்கள் வசமிருந்த அக்குழந்தையை முன்னிறுத்தி, இவனே அப்புதல் வனென, யானும் அவன்மேல் விழுந்து வாரியணைத்துத் தழுவிக் கண்ணீராறுப் பெருக்கி அவனைக்கட்டிய கைந்நெகிழாமல் பல வாறு வாய்விட்டுப் புலம்பினேன். எனது பேரன்பினைக்கண்ட அச்சவரர் என்னிடம் 'அக்குழந்தையை விட்டு நான் கொடுத்த ஆசீர்வசனங்களைப் பெற்றுத் தம்மிடம் பெயர்ந்து சென்றனர். நான், அக்குழந்தையைப் பாதுகாக்கத் தக்கவன் நீயேயென நம்பி உன்னிடம் அவனைக் கொண்டுவந்தேன். அவனை இக் குழந்தை, அவனைக் காப்பாற்றுவது உன் பாரம்."

இந்த மறையோன் வரலாற்றைக் கேட்ட இராஜஹம்சன், தனது உயிர்நண்பனை பிரகாரவர்மனுக்கு நேர்ந்த பலதுன்பங்

கியாயும் நினைந்து பெரிதும் மனங்கன்று அவனது குழந்தைக்கு உபகாரவர்ழா என்று பெயர் இட்டுத் தன் புதல்வனைப்போல வளர்த்துவந்தான்.

ஒருநாள் இராஜஹம்சன் புண்ணிய ஸ்தல தரிசனத்தின் பொருட்டு மாதுவேடத்துடன் பல இடங்களுக்குப்போய் வரும் வழியில், மறவர்கள் வசிக்கும் சேரி ஒன்றை அடைந்தனன். அப்பொழுது கண்ணீரெடுத்துச் செல்லும் பல மறத்தியர்களுள் ஒருத்தியின் பின்னல் அழுகையுருவெடுத்தா லொத்த ஓரிளங் குழந்தை போவதைப் பார்த்தனன். அம்மழவின் பேரழகிலீடு பட்ட அரசன் அக்குழந்தை பின்றொடரும் மறத்தியை நோக்கி, "அம்மா! இக்குழந்தை யாருடையது?" என்று வினவ, அதற் கவள், "ஐயா, என் கணவனுகிய வேடர் தலைவன், தனது சேனை யுடன் இவ்வழியாக வந்த மிதிலை மன்னனை யெதிர்த்துத்தோற் கடித்து வெருட்டியபொழுது, அவன் விட்டோடிப்போன குழந் தையைக் கொண்டுவந்து என் கையில் அளித்தனன். அதுதான் இக்குழந்தை," என்று மறுமொழி கூறினள். இதைக்கேட்ட மன்னன், அப்புதல்வன் தனது நண்பன் புதல்வனே என்பதைத் தெளிந்துணர்ந்து, அக்குழந்தையை தனக்குத் தந்தருள அவளைப் பெரிதும் வேண்டிக்கொண்டனன். அவளும் உடன்பட்டுக் கொடுக்கத், தெய்வகதியாற்கிடைத்த அம்மழவினுடன் அரசன் தனதிருப்பிடமடைந்து, அவனுக்கு அபகாரவர்மா எனப்பெய ரிட்டுத் தன் புதல்வனோடு வளர்த்து வந்தனன்.

ஒரு தினம் வாமதேவருடைய மாணாக்கர்களுள் ஒருவன் ஆண்குழந்தை யொன்றைக் கொண்டுவந்து இராஜஹம்சனை யடைந்து பின்வரும் வரலாற்றைச்சொல்லினன்.

"ஐயா! நான் இராமதீர்த்த கட்டத்தில் ஸ்நானஞ்செய்து மீண்டுவருங்கால், ஒரு காட்டில் வயது முதிர்ந்த ஸ்திரீயொ ருத்தி அப்பொழுது பிறந்த குருத்துக் குழந்தையின்றிக் கையிலேந்தி வருவதைக் கண்ணுற்றேன். அப்பதிவிரையை நோக்கி, 'நீ யார்? இந்தப் பச்சைக்குழந்தையுடன் என்ன காரியமாய் அலைந்து திரிகின்றாய்?' என்று கேட்டேன். அதற்கவள் காலயவனத்திலிற் காளகுப்தன் என்னும் வணிகனொருவன் உளன். அவனுக்கு ஆயிற்சிறந்த கடவிரையென்னும் பெய

ருடைய மகளொருத்தியுண்டு. அவளை மகத தேசாதிபனின் அமைச்சன் புதல்வனாகிய இரத்தினேத்பவன் என்னுஞ் செல்வ வாணிகன் மணம்புரிந்தனன். சிலநாளில் அச்சுபவிரதைப்பெய ரிய நங்கை கருப்பமுற்றனள். அவள் தலைவனாகிய வணிகசிகா மணி தனது ஜன்மதேசத்தைச் சாரவேண்டும் என்னும் வேண் வாதன்னைப் பிடர்பிடித்துந்த இரகசியமாய்த் தன் மனைவியையும் அவளது செவிலியாகிய என்னையும் உடன் அழைத்துக்கொண்டு நள்ளிருளில் வங்கமேறிப் புறப்பட்டனன். நடுக்கடலில் எதிர் பாராதடித்த கடும் புயற்காற்றினால் தத்தளித்த மரக்கலம் தண் ணீர் மட்டத்திலிருந்த வொரு பாறையிற்மோக்கி முட்டைபோற் சின்னபின்னமாயுடைந்தது. நானுஞ் சுபவிரதையும் ஆண்டு நடுக்கடலில் மிதந்த ஒரு கட்டையின் ஆதாவால் மெதுவாய்க் கரைசேர்ந்தோம். இரத்தினேற்பவன் கதி எப்படி முடிந்தோ எங்களுக்குத் தெரியாது. உண்டான பயத்தாலும் பட்ட துன் பத்தாலும் புருடனை யிழந்த துயராலும் பீடிக்கப்பட்ட சுப விரதை இந்தக் காட்டிற் றிடீரெனக் கருப்பநோயுற்று இவ்வழ கிய குழந்தையைப் பெற்றெடுத்தாள். தான் பட்ட வேதனை யால் உணர்வு நீங்கி அவசமாய் அதோ இருக்கும் ஒரு சுனையின் கரையில் விழுந்து கிடக்கிறாள். யாவரேனும் உதவி செய்யக் கிடைப்பார்களோ என்று அங்குமிங்குந் தேடிவரும்பொழுது தற்செயலாய் உம்மைத் தெய்வமிங்கே கொண்டுவந்துவிட்டது." என்று கூறி முடித்தனள்.

இங்ஙனம் அவள் பேசிமுடிக்குமுன், ஒருமலை கையும் காலும் பெற்றுவருவதுபோல ஒரு காட்டானை எங்கள்மேற் பாய்ந்துவந்தது. உடனே அந்த ஸ்திரீ பயந்து கையிலுள்ள குழந்தையைக் கீழே போட்டுவிட்டு ஓடோடிப்போனாள். நான் பக்கத்திலிருந்த மராமரமொன்றின்மேல் ஏறிக்கொண்டேன். வந்த யானை தன் திரண்ட துதிக்கையாற் கீழே கிடந்த குழந் தையை வாரித் தூக்கிற்று. அச்சமயம் அருகிலுள்ள புதரி னின்று சிங்கமொன்று யானைமேற் பாய்ந்து கிழித்தது. அம் மத்தமாத் தன்துதிக்கையிலிருந்த குழந்தையை ஆகாயத்திற் றாக்கி யெறிந்துவிட்டுக் கீழே வீழ்ந்து மாண்டது. மேலெறி யப்பட்ட குழந்தையை அங்கிருந்த மரத்தின் கிளையில்

உட்கார்ந்திருந்த பெருங் குரங்கொன்று கவ்வுவதை நிறுத்தி யெனமயங்கி அந்தரத்திலேயே கைப்பற்றிக்கொண்டது. உடனே அதனைத் தனது குட்டியன்றெனத் தெளிந்த மந்தி, மரத்தின் மேற் பல கிளைகள் பின்னிக்கொண்டிருந்த ஓரிடத்தில் வைத்து விட்டு ஓடிப்போயிற்று. யானையை அடித்த சிங்கம் அதன் மூளையைச் சிறிது ருசிபார்த்தவுடன் தான் வந்த வழியே சென்றது. இவற்றையெல்லாங் கண்டு உடல் கம்பித்திருந்த நான், சிறிது நேரம் சென்று பயம் தெளிந்து ஏறியிருந்த மரத்தை விட்டிழிந்து உயிருடனிருந்த குழந்தையை மரக்கிளைகளினின்றும் நீக்கி யெடுத்து அதன் தாயையும் அவளது செவிலியையும் பல விடத்தும் தேடிப்பார்த்தும் கண்டிலாமையால் எனது பரம குரவனுகிய வாமதேவரை யடைந்து நடந்தவற்றைக் கூறிக் குழந்தையை அவர் பாதத்திற் கிடத்தினேன். அவர், இக் குழந்தையைப் பாதுகாக்கத்தக்கவர் தாங்களே யென்று நங்களிடம் கொடுத்துவரக் கட்டளையிட்டனர். அவர் ஆணையைச் சிரமேற்றாங்கி இதோ குழந்தையைக் கொண்டுவந்திருக்கிறேன். பெற்றுக்கொள்ளுங்கள்," என்று கூறிக் குழந்தையை இராஜஹம்சனிடம் கொடுத்து அச்சீடன் தனது குருவின் ஆச்சிரமத்தை யடைந்தான்.

இராஜஹம்சன், தனது நண்பனுகிய இரத்திலேற்பவனுக்கு உண்டான துன்பத்தையும் அகால மரணத்தையும் சிந்தித்து வருந்தித் தெய்வம் அவன் குழந்தையைத் தன்பாற் சேர்த்தமைக்குப் பெரிதும் வியந்து கடவுளைத் துதித்தனன். இவ்வரலாற்றினை உடனிருந்து கேட்ட இரத்திலேற்பவன் சகோதரனும் அரசன் அமைச்சனுமாகிய சுச்ருதன், தனது உடன் பிறந்தானுக்காக மிகவும் வருந்தி, அவன் குழந்தையைக் கண்டதால் ஒருவாறு துயர நீங்கி, அதனைத் தனது புதல்வனுடன் வளர்த்துவர விடைபெற்று, அதற்குப் புஷ்போத்பவன் என்ற பெயரிட்டுப் பாதுகாத்துவந்தனன். புஷ்போத்பவன், இராஜவாஹனன் முதலிய குழந்தைகளோடு நட்புப்பூண்டு களிப்புடன் வளர்ந்து வந்தான்.

பின்னர் ஒருநாள், இராஜஹம்சன் தனது பர்ணசாலையில் வசுமதி சிறு குழந்தையொன்றிற்குப் பாலூட்டிக்கொண்டிருப்

பைதக்கண்டி, இப்புதிய குழந்தை ஏதெனக் கேட்டான். அதற் கவள் பின்வருமாறு கூறினள்.

"நாதா! நேற்றிரவு நான் தூங்குகையில் ஏதோ சொப்பனங் கண்டவள்போல விழித்தேன். பார்க்கையில் என் எதிரில் ஒரு வித்தியாதர ஸ்திரீ நிற்கக்கண்டேன். நான் திடுக்கிட்டு எழுந்து, 'நீ யார்? இங்கே என்னிடம் ஏன் வந்தாய்? சொல்' எனக் கேட்க, அவள், 'தாயே! நான், மந்திரி தருமபாலன் குமாரனுகிய காமபாலனுடைய மனைவி; யக்ஷராஜன் மணிபத்திரனுடைய புதல்வி; தாராவளி என்னும் பெயருடையேன். இயக்கராஜன் ஆணையால் என் புதல்வனுகிய இச்சிசுவை உன்னிடஞ் சேர்க்க வந்தேன். உனது தவப்புதல்வனுகிய இராஜவாஹனன் உலகில் எவரும் அடையாத மகோந்நத நிலைமையடைவான். அவனுக்குப் பணிவிடைபுரியும் பாக்யம் என் மகனுக்குக் கிடைக்குமாறு இப்போழுதே அவனைக்கொண்டுவந்து உன் கையில் அடைக்கலமாகக் கொடுத்தேன்.' என்று கூறி இக் குழவியை என் வசம் தந்து அம்மங்கை திடீரென மின்னல் போல மறைந்துபோயினள்." என்று வசுமதி அக்குழந்தை கிடைத்த மார்க்கத்தை எடுத்துக் கூறினள்.

இவ்வரலாற்றைக் கேட்ட அரசன் பெரிதும் வியப்படைந்து அக்குழந்தையைக் கையில் வாங்கி, அர்த்தபாலன் எனப் பெயரிட்டு அதன் பெரிய தகப்பனுகிய சுமித்திரன் வசம் கொடுத்து ஏனைய இராஜகுமாரர்களுடன் வளர்த்துவருமாறு ஆஜ்ஞாபித்தனன்.

மற்றொருநாள், வாமதேவருடைய சீடருளொருவன், மிக்க அழகுடைய குழந்தை யொன்றைக் கொணர்ந்து இராஜஹம்சனிடம் கொடுத்துப் பின்வரும் விருத்தாந்தத்தினைச் சொல்லினன்.

"மகாப்ரபோ! நான் தீர்த்தயாத்திரையாகத் தென்றேசம் போனகாலையில், காவேரி நதியில் ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனமுடித்துக் கரையேறி ஜபம் செய்துகொண்டு நின்றேன். அப்பொழுது நதிக்கரையிற் சிறிது தூரத்தில் ஒரு கிழவி சிறு

குழந்தை யொன்றைக் கையில் வைத்துக்கொண்டு பிரலாபித்துக் கதறுவதைக்கண்டேன். அவளை நெருங்கி அவள் படுந்துயரினுக்கரணம், 'பாட்டி! நீயார்? ஏன் இக்கிறு குழந்தையுடன் நதிக்கரையிற் கிடந்து புலம்புகிறாய்?' என்று வினவினேன். அவள் "ஐயா! மகததேசாதிபதியான இராஜஹம்ச மகாராஜனின் மந்திரியாகிய சிதவர்மனுடைய குமாரன் சத்தியவர்மன், தீர்த்தயாத்திரையாக இங்கு வந்த பொழுது, இக்காவேரி தீரத்தில் வசிக்க ஆசைகொண்டு அருகிலுள்ள அக்கிரகாரத்திற்றங்கியிருந்தான். அப்பொழுது, காளியென்னும் பெயரிய ஒரு பார்ப்பனக்கன்னியை மணஞ்செய்து கொண்டனன். அவள் மலடி என்பதை அறிந்த சத்தியவர்மன் அவள் தங்கையாகிய கௌரி யென்பாளையும் பின்னர் மணமுடித்து இரு மனைவியரோடும் வாழ்ந்து வந்தனன். சில நாளில், பரமேச்சுவரன் திருவருளால் அக்கௌரியிடம் இக்குழந்தை உதித்தது. நான் இதற்குச்செவிலி. இக்குழந்தையிடத்தும் கௌரியிடத்தும் மிக்க துவேஷத்தைக்கொண்ட காளி, பொறுமைப் பேயாற் பீடிக்கப் பெற்ற காரணத்தால், இவ்வாற்றங்கரை யோரத்தில் குழந்தையும் கையுமாக உலாவிக்கொண்டிருந்த என்னைப் பிரவாகத்திற் றள்ளிவிட்டு ஓடிப்போயினள். அவ்வமயம் அருகில் ஒருவருமில்லாததால் எனக்கு உதவிகிடைக்கவில்லை; அக் காளியும் தப்பிப்போயினள். தற்செயலாய் அவ்வெள்ளத்தில் மிதந்து வந்த வொரு மரத்தின் கிளையொன்றினைப் பற்றிக்கொண்டு குழந்தைக்குத் தீங்கு நேரிடாவண்ணம் நீரோட்டத்தின் வழியாக மிதந்து வந்தேன். வெள்ளம் மரத்தை இக்கரையோரஞ் சேர்த்தது. அதன் சார்பால் நானும் குழந்தையோடு கரையேறும்பொழுது, மரக்கிளை யொன்றில் தொத்திக்கொண்டிருந்த கருநாகமொன்று என்னைத் தீண்டிற்று. இனி நான் உயிர் பிழையேன். என்னையும் இக்குழந்தையையும் இக்கோலங்கண்ட அம்மகாபாவிக்குத் தக்க தண்டனை ஈசன் செய்வாராக. இக்குழந்தையைப்பெற்ற உத்தமி எப்பாடு படுவாளோ? நான் இறந்தால் இதனைத் 'தாயிடம் சேர்ப்பா ரெவரோ? அப்படிநீலியினின்றும் இதனைக்காப்பவ ரெவரோ? என்று வருந்திப் புலம்புகிறேன்" எனப்பேசிவந்தவள் திடீரெனக் கீழேவீழ்ந்து மாய்ந்தனள். விஷவேகத்தை நீக்க நான் மணிமந்திர ஔஷதங்களால் முயன்றும் சிறிதும்

பயன் படவில்லை. இறந்துபோன அக்கிழவிக்கு உரிய ஈமக் கடன் முடித்து, அக்குழந்தையைப்பெற்றோர்தம் மிருப்பிடம் இன்னதென யான் அறியேனைகையால், அவர்களைத்தேடுதல் அசாத்தியமெனக்கருதி, அதனைத்தங்கள் வசம் சேர்ப்பித்தலே நலமென்று உடன் கொண்டுவந்தேன்," என்று தன் கதையினைச் சொல்லி முடித்தான்.

இராஜஹம்சன் குழந்தையை எடுத்து, அதற்குச் சோமதத்தன் எனப் பெயரிட்டு அதன் பெரிய தகப்பனுகிய சுமதியின் கையிற் கொடுத்து, மற்ற இராஜ குமாரர்களோடு வளர்த்துவர ஆஜ்ஞாபித்தான்.

இங்ஙனம் இராஜவாஹனனும் மற்றைப் பிள்ளைகளும் ஒருங்கு வளர்ந்து வருநாள், அவர்களுக்கு அரசன் தனது மந்திரிகளின் உதவியாற் பலவிதமான வித்தைகளையும் கற்பித்தனன். அக்குமரர்கள் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்ந்து, இதிகாச புராணங்களிலும் நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் அறுபத்துநான்கு கலைகளிலும் தேர்ச்சியடைந்து, அரசர்க்குரிய ஆனையேற்றம் குதிரையேற்றம் அஸ்திர சஸ்திரப்படைக் கலப்பயிற்சி முதலியவற்றில் எவரும் தமக்கு நிகரிலராய் விளங்கினர். இன்னும், அரசன் கௌடிலியம், காமந்தகீயம் முதலிய இராஜ தர்மசாஸ்திரங்களை ஐயந் திரிபு அறியாமை நீங்க அவர்களுக்குப்போதித்தனன். சங்கீதம் ஆயுள்வேதம் ஜோதிஷம் கணிதம் முதலிய நூல்களிலும் அன்னோர் நிபுணர்களாயினர். களவு சூது முதலிய தொழில்களிலும் வல்லுநராய் விளங்கினர். உலகிலுள்ள எல்லா வித்தைகளிலும் இவர்கள் அறியாத வித்தையொன்றுமில்லை. உருவிலும் நற்குண நற்செய்கைகளிலும் சிறந்து சௌரிய பராக்கிரமசாலிகளாய் விளங்கும் அக்குமரரை நோக்கி, அரசனும் அமைச்சரும் இனி நமது பகைவரை அழித்து எவ்வகை இடையூறுகளினின்றும் நீங்கி, மீட்டும் அரசாட்சியைப்பெறுவது திண்ணமென்று கருதி ஆநந்த பரவசராயிருந்தனர். இராஜவாஹனன் ஏனையமைந்தர்களுக்கிடையில், தாரகை நடுவண்விளங்கும் சுக்கிலபக்ஷத்துத் தண்மதிபோலத் திகழ்ந்திருந்தனன்.

அதிகாரம் 3.

ஒருசமயம் வாமதேவர் அரசனை யணுகி, "ஐயனே! நினது காதலனும் மற்றைய அரசகுமாரரும் காமனை வெல்லுங் கட்டழகும் கார்த்திகேயமூர்த்தியை யொத்த பராக்கிரமமும் பொருந்தியுள்ளார்கள். சகல கலைஞானங்களிலும் தேர்ச்சிபெற்றுள்ளார், உலகிலெவராலும் சாதித்தற்கரிய பெருஞ் செயல்களையும் மிக்க எளியனவாய்ச் செய்து முடிப்பர். இனி அவர்களால் உனது பகைவரொழிவர்." என்று எடுத்துக்கூறினர். இதனைக் கேட்ட மன்னன், முனிவர் மொழிக்குடன்பட்டு இராஜவாஹனனையும் மற்றையவரையும், நல்லதினத்தில் ஐந்து அங்கங்களும் குறைவின்றியிருக்கும் அமயத்தில் பற்பல தேயங்கட்கும் சென்று வென்றிகொண்டு மீண்டுவர ஆசீர்வதித்து விடைகொடுத்து அனுப்பினன்.

குமரர்களும், நற்சகுனங்கள் தம்மெதிர்ப்பட வழிக்கொண்டு பன்னெடுங் காவதங்கடந்த பின்னர், விந்தியத்தைச் சார்ந்த மகாரணிய மொன்றை யடைந்தனர். ஆண்டு, இரவிபட்டமையால் யாவரும் களைப்பாறத் தங்கினர்கள். மற்றையோர் விடுதியமைத்து அடிசில் சமைக்குந்தாழிலை மேற்கொண்டுநிற்க, இராஜவாஹனன் ஒருவனுமே அவ்வந்தி வேளையில் வேறு வேலையின்றி அவ்வனத்தின் நிலைமையிற்றென அறிவான் கருதியுலாவிவந்தனன். அவன் அப்பொழுது, எஃகினும் வலியபாகையும் காளிமை தவழ்ந்தமேனியும் பெற்றுரௌருவன் எதிர் வருவதைக் கண்டனன். அவன் மேனியெங்கும் வடுக்கள் பல காணப்பட்டமையால், பல சண்டைகளிலும் விழுப்புண் பெற்றுளான் அவன், என்பது விளங்கியது. ஆயினும் அவன் தரித்திருந்த பூணூலால் அன்னேன் அந்தணனே என்னும் ஐயப்பாடு நிகழும். இவனைக் கண்ட இராஜவாஹனன், அன்னேன் செய்த வந்தனோபசாரங்களை யேற்றபிறகு, அவனை நோக்கி, "ஐயா! நீவிர் யாவர்? அந்தணர்போலக் காணலுறுகின்றீர். நும்மேற் காணும் வடுக்களால் வேடர்வில்லியருள் ஒருவரென வும் தோன்றுவீர். இத்தகைய நிர்மானுஷ்யமான காட்டில் என் தனிமையில் அலைந்துதிரிகின்றீர்?" என்று கேட்டனன். அதற்கு அப்புதியோன் பின்வருமாறு சொல்லத் தொடங்கினன்.

"இந்தக் காட்டிற் சில பிராமணர்கள் தமது ஒழுக்கந்தவறிக் கருமசண்டாளர்களாய் வில்லியர் முதலிய அரணியவாசிகளு டன் உண்டுகளித்து ஒழுகுவாராயினர். அறுதொழிற்குரியராய் ஐவகை வேள்வியாற்றி நான்மறை பயின்று முத்தீவளர்க்கும் இருபிறப்பாளருள் ஒருவனுகப்பிறந்தும் யானும் மேற்குறித்த ஒழுக்கந்தவறியோருடன் ஒருங்கு பயின்றுவந்தேன். என்பெயர் மாதங்கன். ஒருசமயம் நான் என் கூட்டாளிகளுடன் இந்தக் காட்டைச் சூழ்ந்துள்ள நாட்டினுட் புகுந்து கொள்ளையடித்து, ஆங்குள்ள ஆடவரையும் பெண்டிரையுங் கையையும் காலை யும் கட்டிப்போட்டுவிட்டு அவர்கள் பொருள்களைக் கொள்ளை யடித்து வந்ததுமன்றிச் சிலரைச் சிறைபிடித்தும் வந்தேன். திரும்புகாலையில் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த சிலர் ஒரு பிரா மணனைப்பிடித்து அவனிடத்துள்ளவற்றைப் பிடுங்கிக்கொண்டு அவனையும் கொலைசெய்யச் சூழ்ந்தனர். இதனைக்கண்ட யான் மனம் பொறுதவனுப் அவ்வேடர்களை அதட்டி விலக்கி அவ் வந்தணனை விடுவிக்க முயன்றேன். அவர்கள் வெகுளிமேற் கொண்டு தமது கையிலுள்ள படைக்கலங்களாற் என்னைக் கொன்று வீழ்த்தி அம்மறையவனை விட்டுவிட்டுச் சூறையாடிய பொருளுடன் போயினர். பின்னர் யான் யமலோகத்திலிருக்கக் கண்டேன். ஆண்டுப் பொன்மயமான மண்டபமொன்றில் நவ ரத்தினங்கள் வைத்திழைத்த அரியணையொன்றின்மேல் தென் றிசைக்கடவுள் வீற்றிருந்து ஆணைசெலுத்திக் கொண்டிருந் தனன். காலதூதர்கள் என்னைப்பற்றி அவன் முற்கொண்டு போய்விடலும், நான் வணங்கிநின்றேன். அவன் என்னைச் சிறிது போழ்து உற்றுநோக்கிப் பிறகு சித்திரகுப்தனை அழை த்து, "இவன் பல பாதகச்செயல் புரிந்திருப்பினும் ஆயுட்காலம் முடிந்து வந்தவனல்லன். இவன் இறத்தற்குரிய முடிவுநாள் இன்னும் வரவில்லை. மேலும் சாதுவாகிய அந்தணனொரு வனைக் காத்தற்பொருட்டுத் தன்னின்னுயிரையும் விடத்துணிந்த னன். இவ்வொரு நல்வினை இவன் முன்செய்த தீவினையனைத் தையும் அழித்தது. இவன் இங்கு வந்தமையால், தீவினையாளர் கள் நரகிற்படுந் துன்பங்கள் பலவற்றையும் இவனுக்குக் காட் டிப் பிறகு இவனைப் பழைய உடலிற் சேர்ப்பிக்குமாறு கால தூதர்களுக்குக் கட்டளை யிடுவாயாக" என்றனன். காலன்

ROJA. MUTHIAH
ARTIST

பெற்றுளது. அப்பாறையைப் பெயர்க்கும் வன்மையுடைய அரசிளங்குமாரனை நானெயிக்காட்டிற் காணப்பெறுவாய்' என்று கூறி மறைந்தருளினார். இறைவன் அருளியாங்கு நின்னை யீண்டுக் காணப்பெற்றேன். உனது உதவியினை எதிர்பார்த்து நிற்கின்றேன்," என்றனன். மாதங்கன் வேண்டுகோட்கிணங்கிய இராஜவாஹனன் அவனுக்கு உதவிபுரிய வாக்களித்து, மீண்டு தனது நண்பரை யடைந்து உணவுகொண்டு, நள்ளிருளில் அன்னோர் உறங்கும் அமயம் பார்த்து அவர்களைப் பிரிந்து, மாதங்கனைப் பின்பற்றி அவன் காட்டும் வழியே யகன்றனன். அவனுடைய நண்பர்கள் மறுநாள் வைகறைப்பொழுதில் துயிலெழுந்தவுடன் அரசகுமாரனைக் காணப்பெறாது, அக்காட்டின் பல பாகங்களிலும் தேடிப்பார்த்தனர். அவனைக் காணாமையால் யாவரும் ஒருங்குகூடி யோசித்து எண்டிசாமுகத்திலும் அவனைத் தனித்தனித் தேடிச்செல்வதென்றும் பின்னர் யாவரும் உஜ்ஜயினி நகரத்தில் ஒருங்குகூட வேண்டுமென்றும் தீர்மானித்து ஒவ்வொருவரும் ஒவ்வோர் திக்கிற் பிரிந்து சென்றனர்.

மாதங்கன்பின் சென்ற இராஜவாஹனன், அவன் காட்டிய வழியேபோய் வனநதியின் கரையினை யடைந்து, அங்குக் கண்ட ஸ்படிக லிங்கத்தினையும் உமைபம்மையின் அடிச்சுவட்டினையும் தொழுது வணங்கி வலங்கொண்டு பிலத்தினையடைந்து அதன் வாயிலின் அருகில் நின்ற பெரும் பாறையினைப் பெயர்த்துத் தூக்கினன். ஆண்டுக் காணப்பெற்ற செப்புத்தகட்டிற் பொறித்துள்ள வழியே பிலத்துவாரத்தில் இருவரும் புகுந்து பாதாள லோகத்தை யடைந்தனர்; ஆண்டு நவரத்தின கசிதமாயிலங்கும் நகரமொன்றைக் கண்ணுற்று அதனையணுகி அங்குள்ள அழகியதோர் சோலையில் அளவிலாத இன்பம் பயக்கும் அம்புய வாவியொன்றன் கரையில் அமர்ந்து இளைப்பாறினர். செப்புத்தகட்டிற் பொறித்துள்ளபடி மாதங்கன் அம்மலர்வாவியில் மூழ்கிப் புனிதனுய்க் கண்டிகையும் திருநீறும் பூண்டு அவ்வாவிக்கரையிலொருபுறத்திருந்து மந்திரவிதிவழாது குண்டம் வகுத்துத் தழல் வளர்த்து நெய்யவிசொரிந்து வேள்வி புரிந்து நின்றனன்; இராஜவாஹனன், அன்னோன் பக்கலிலிருந்து புரியும் மகவினைக்கு இடையூறு நேராவண்ணம் காவல் புரிந்த

னன். இங்ஙனம் இருப்புழி, மாதங்கன் தான்னியற்றிய வேள்வி முடிவில் எழுந்து அங்கியை மும்முறை வலம்வந்து கொழுந்து விட்டெரியும் அத்தழலிடைக் குதித்துக் குளித்து வெளிவந்து தேஜோமயமான தெய்வவுருக்கொடு திகழ்ந்தனன். இதனைக் கண்ட ராஜவாஹனன் மிக்க வியப்பும் களிப்பும் அடைந்து பரவசனுயினன்...

அவ்வமயம், அழகே யுருவெடுத்தாலனைய அங்கனை யொருத்தி, சர்வாபரண பூஷிதையாய் அளவற்ற தாதியர் புடைசூழ்ந்து உபசரித்துவரத் தான் தாரகையிடை விளங்கும் உவாமதிபோல அரசவன்னமும் நாணியொதுங்க நடந்து இவர்களை நோக்கி வந்தனள். தோன்றினவுடன் மாயாதமின்னற்கொடியொன்று அசைந்துவருவதுபோல இடைதுவள நூபுரம் குமுற அடிபெயர்த்து எதிர்வரும் இவ்வணங்கு யாவளோ என்று இவர் ஐயுற்று வியந்து பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, அம்மங்கை மாதங்க மறையவனையண்மி அவன் பாதத்தில் விழுந்து வணங்கி எழுந்து ஒருபுறம் நாணிநின்று, தான் கையிற் கொணர்ந்த அரிய நாகரத்தினமொன்றை அவனுக்குப் பாதகாணிக்கையாக அளித்தனள். அம்மடந்தையின் பேரழிலை இரு கண்களாலும் பருகிய மாதங்கன், அவளை நீ யாவளோ என்று வினவ, அவள் மூவுலகையும் விலைகொள்ளும் முத்தொளி பரப்பும் புன்னகை புரிந்து குயிலும் நாணப் பின்வருமாறு இன்மொழி பகர்வாளாயினள்.

"ஹே! பூசுரோத்தம, யான் இப்பாதல வுலகை யாண்டுவந்த அசுரேந்திரன் மகள்: காளிந்தியென்னும் பெயருடையேன். எனது பிதா இந்திராதி தேவர்களை வென்று தனது புகழை யாண்டும் பரப்பினேனன். அதனைப் பொறுத தேவர்களின் வேண்டுகோளால் திருமால் அவனைச் சமரிலெதிர்த்துச் சமனுலகிற்கு விருந்தாக்கினன். பிதாவின் பிரிவிற்கு ஆற்றது வருந்தும் என்னை ஸ்ரீ நாரதமுனிவர் கண்டு தேற்றியதுமன்றி, திவ்விய தேஜோவாஞகிய மஹாபுருஷ னொருவன் என்னை மணந்து இப்பாதல வுலகையும் பாதுகாத்தருளுவான், என்று அநுக்கிரகித்தனர். மேகத்தின் நறுந்துளியை விரும்பி நிற்கும் சாதக பக்ஷிபோலத் தங்களுடைய கருணைக்குப் பாத்திரமாகும் நன்

Chapter 6.

Chapter Six Title.

"Chapter six! Chapter six begins with this sentence. This sentence is the sixth, counting from the chapter's first sentence. This sentence is the fifth sentence to mention the number six. This sentence is the fourth sentence to mention the number six. This sentence is the third sentence to mention the number six. This sentence is the second sentence to mention the number six. This sentence is the first sentence to mention the number six. Six sentences mention six. Six sentences mention six. Six sentences mention six. Six sentences mention six. Six sentences mention six. Six sentences mention six.

"Chapter six begins with this sentence. This sentence is the sixth, counting from the chapter's first sentence. This sentence is the fifth sentence to mention the number six. This sentence is the fourth sentence to mention the number six. This sentence is the third sentence to mention the number six. This sentence is the second sentence to mention the number six. This sentence is the first sentence to mention the number six. Six sentences mention six. Six sentences mention six. Six sentences mention six. Six sentences mention six. Six sentences mention six. Six sentences mention six.

வீரகேதுவைப் பெண்கேட்டனன்; அவன் சம்மதியாது மறுத்து விட்டனன். அதனாற் கோபமேற்கொண்ட மத்தகாளன் பெரும் படையுடன் இந்நாட்டினுட் புகுந்து அரசனை எதிர்த்தனன். அதற்காற்றாத வீரகேது தனது பெண்ணை அவன்பாலொப்பித் தனன். வாமலோசனையைத் தனது நகரத்திற்குக்கொண்டு சென்று ஆண்டு மணவினைபுரியக் கருதிய மத்தகாளன் தான் திரும்பும் வழியில் இவ்வனம் வேட்டையாட நல்ல விடமென்று கருதிப் படமாடங்களாற் பாசறையிட்டுத் தங்கியுள்ளான். வீர கேதுவின் மந்திரியாகிய மானபாலன், தனது அரசனுக்குண் டான அவமானத்திற்கு மனம் புழுங்கி, ராசகுமாரிக்குத் தனியே கூடகாரமமைத்துத் தனது போர்வீரர்களோடு அவளுக்கு உடற் காப்பாக அமைந்துள்ளான்'.

புத்திமானாகிய அவ்வயோதிகனின் பேச்சிற்கு மகிழ்ந்து அவன் வறுமைக்கிரங்கி, நான் கண்டெடுத்த வைரக்கல்லை அவ னுக்குக் கொடுத்தேன். அவன் பெற்றுக்கொண்டு என்னை மனமார வாழ்த்திவிட்டுத் தனது மாணவர்களோடு புறப்பட்டுப் போயினன். வழிநடந்த இளைப்பினாற் களைப்புண்ட யான், அப்பாழ்ங்கோயிலி னொருபுறத்திற் படுத்து அயர்ந்து நித்திரை செய்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம், 'இதோ திருடனகப் பட்டான்' என்ற பெருங்கூச்சல் கேட்டு விழித்தேன். பார்க் கும்பொழுது, என்னிடம் வைரக்கல்லைப்பெற்ற அக்கிழவனை விலங்கிட்டுப் பல போர்வீரர் சூழ்ந்து வந்தனர். என்னைக் கண்டதும் காவலாளிகள் அக்கிழவனைவிட்டு என்னைப்பற்றிக் கையிலும் காலிலும் தளையிட்டு இழுத்துச்சென்று எனது முறையீட்டிற்கு ஒரு சிறிதும் செவிகொடாது சிறையிலிட்டனர். அங்கு என்னுடன் சிறையிடப்பட்டிருந்த பலரையும் நான் விசாரித்தபொழுது உண்மை வெளிவந்தது. அவர்கள் மந்திரி மானபாலனுடைய வேலையாட்களென்றும், அவர்கள் தங்களு டைய எஜமானனது தூண்டுதலின்மேல் மத்தகாளனைக் கொலை செய்ய நள்ளிரவில் அவன் கூடகாரத்திற் புகுந்ததாகவும், கல் வினை வசத்தால் அங்கு அவன் இல்லாதிருக்க, வந்து வெறுங் கையோடு மீள மனமின்றி, அவன் பள்ளியறையைக் கொள்ளை யிட்டுப் பொக்கிஷத்தைக் கைக்கொண்டு அயலிலுள்ள காட்டு

லோடி யெள்ளிந்தனரெனவும், மறுநாள், போர்வீரர்பலர் தங்க ளைத் தேடிவந்து பிடித்துப் பொருளையும் மீட்டுத் தம்மையும் சிறையிட்டனரென்றும், கொள்ளைபோன பொருளில் விலையுயர்ந்த அருமையான பெரு வயிரக்கல் ஒன்றைத் தவிர மற்றவை அகப்பட்டன என்றும், அதுவே நான் தற்செயலாகக் கண்டெடுத்து அம்மறைக்கிழவற்கு அளித்ததென்றும், அவர்களுடைய பேச்சிலை தெரிந்துகொண்டேன். தங்களைப்போலச் சிறையிடப்பெற்ற காரணத்தால் எனக்கும் அவர்களுக்கும் மன ஒற்றுமையும் நட்பும் உண்டாகிச் சிறையினின்றும் தப்ப வழி யாராய்ந்திருந்தோம். இரவில் காவலாளிகள் உறங்கும் அமயம் பார்த்து, நாங்கள் சிறைக்கூடத்தை உடைத்து வெளிப்பட்டு மானபாலன் பாசறையை அடைந்தோம். எனது விருத்தாந்தத்தினைக் கேட்ட அம்மந்திரி மனமகிழ்ந்து என்னை அன்புடன் உபசரித்தனன். இதை உணர்ந்த லாடாதிபதி வெகுண்டு, தனது ஒற்றரை மானபாலனிடமனுப்பி என்னையும் மற்றுஞ் சிறைப்பட்டவர்களையும் தன்பால் உடனே விட்டுவிடவேண்டுமென்றும், இன்றேல் தான் யாவரையும் கடுந்தண்டனைக்குள் ளாக்குவதாகவும் அறிவித்தனன். என்னால் தைரியமடைந்த மந்திரி மானபாலன், அவன் அனுப்பிய தூதரை யிகழ்ந்துபேசி, 'என்னே! இவ்வாசன் யாவன், இவனுக்கு யாங்கள் கீழ்ப்படிய,' என்று மத்தகாளனையும் வைது அவமதித்து விடுத்தனன். இதனைக் கேள்வியுற்றதும், மத்தகாளன் தலைதெரியாக் கோபங் கொண்டு தன்னைச் சூழ்ந்துள்ள போர்வீரர்களோடு ஆயுதபாணியாய் வந்து எங்கள் பாசறையைச் சூழ்ந்து எதிர்க்க ஆரம்பித்தனன். இவன் இங்ஙனம் செய்யவேண்டுமென்றே எதிர்பார்த்த மானபாலன், தான் தயாராக வைத்திருந்த போர்வீரர்களை அணிவகுத்து நிறுத்தி என்னைப் போர்க்கோலம் புனைவித்து வேண்டிய அஸ்திரசஸ்திரங்களை யீந்து ரதாரூடனாக்கித் தனது சேனைக்கு நாயகனையிருந்து போர்புரிந்து வென்றிகொண்டு மீள வேண்டிக் கொண்டனன். எனது பராக்கிரமத்தில் நம்பிக்கைவைத்து அவன் இங்ஙனம் செய்தனன். யானும் நம்பிக்கைத்துரோகம் செய்யக்கூடாதென்று தீர்மானித்து, மிக்க வீராவேசத்துடன் லாடாதிபதியை எதிர்த்துப் போர்புரிந்து அவன் எறிவந்த தேர் முதலியவற்றை அழித்துக் கடைசியில் அவனது தலையையும்

வெட்டி வீழ்த்தினேன். எல்லன் தொடுத்தடையை யுணர்ந்த அவன் சேனை பின்னிட்டு நாற்றிசையிலும் சிதறுண்டு ஓடிப் போயின. நான்கன் அவன் பாடிவீட்டைக் கொள்ளையடித்து வெற்றிமுரசறைந்து மீண்டோம். மந்திரி என்னை எதிர்கொண்டு பலபடப் புகழ்ந்து பெருமைப்படுத்தினன்; இவற்றையெல்லாம் கண்ணுற்ற வீரகேதுராஜன் பெரிதும் மனமுவந்து தனது மானத்தைக்காத்த என்னைக் கொண்டாடித் தன் மகள் வாமலோசனையை எனக்கு மணம்புரிவித்து யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்தனன். என் மனங்கவர்ந்த இந்நங்கையர் சிரோன்மணியுடன் எல்லையற்ற இன்பந்துய்த்து ஒரு குறையுமின்றி வாழ்ந்து கொண்டிருக்குங் காலத்தும் தங்களைக் காணுத குறையே பெருங் குறையாக என் மனத்தை வருத்திற்று. முக்காலமுமுணர்ந்த முனிவரொருவன் கூறியபடி என்னின்னுயிர்த் துணைவனை மகாகால தேவத்திரமாகிய உஜ்ஜயினிபுரத்திற் காணலாமென்றெண்ணி என் பத்தினியோடு பரிவாரங்கள் புடைசூழ இவண் வந்தேன். தங்களையும் கண்டு மகிழ்ந்தேன்," என்று சோமதத்தன் தனது வரலாற்றினைக் கூறிமுடித்தான்.

இராஜவாஹனனும் சோமதத்தனும் இன்னணம் அளவளாவிக் களித்திருக்கும்பொழுது, ஒருவன் அவர்களை நோக்கிவந்து வணங்கி நின்றனன். அன்னோன் புஷ்போத்பவன் என்னுணர்ந்த இருவரும் அவனை மார்புறத்தழுவி இன்மொழி பேசி, அவன் சரிதையைக் கூறவேண்டினர். அவனும் இராஜவாஹனனைப் பிரிந்தபின் தனக்கு நேர்ந்தவற்றைப் பின் வருமாறு புகன்றனன்.

அதிகாரம் 5.

புஷ்போத்பவன் கதை.

"இராஜகுமார! விந்தியாடவியில் நாம் அனைவரும் தங்கியிருந்தபொழுது தாங்கள் எங்களைப்பிரிந்து தனியேபோகத், தங்களை மீண்டும் வரக்காணுமையால், யாங்கள் பற்பல விடங்களினும் தங்களைத்தேடிக் கண்டுபிடிக்க எண்ணி நாற்றிசையிலும் தனித்தனியே பிரிந்து சென்றோம். சிலகாலம் தங்களைத்தேடித் திரிந்த பின்னர் ஒருநாள் ஒரு பசுவடிவாதத்தடியிலொரு பதத்தடியிற்றங்கி இளைப்பாறிக்கொண்டிருந்தேன். அப்பொழுது

உயரிய அம்மலைச்சிகரத்தினின்று ஒருவன் கீழேவிழ முயற்சிப் பதைக்கண்டு, உடனேஎழுந்து சென்று கீழே வீழ்பவனை என் காதலங்களாலேந்தி மரத்தடியிற் சேர்த்தேன். மிக உயரத்தி னின்று வீழ்ந்த அதிர்ச்சியிலுற் பிரஜ்ஞையற்றிருந்த அவனைத் தேற்றிக் களைப்பு நீக்கி இருக்கச்செய்து அவனது விருத்தாந்தத் தினை அறிவிக்க வேண்டினேன். அவன் பின்வருமாறு பகர்ந் தனன்.

"ஐயனே! யான், மகதாதிபதியின் மந்திரி பத்மோத்பவ னின் குமாரனாகிய இரத்திறைத்பவன். வியாபாரநிமித்தமாகக் காலயவனத்வீபத்திற்குச் சென்றிருந்தபொழுது அங்குள்ள வணிகேந்திரனின் புதல்வியை மணந்து சின்னட்டங்கியிருந்து பின் ஒருநாள் கருப்பிணியான என் மனைவியோடு வங்கமேறி ஊர்க்குத்திரும்பினேன். மாக்கலம் கரையை அணுகும்பொழுது அடித்தபெரும் புயலாற்கலங்கவிழ்ந்து என்னை நீங்கலாக ஏனை யோர் மூழ்கிமாண்டனர். மனைவியை இழந்த மாபெருந்துய ரால் மனங்கலங்கிய யான் உயிர்விடத்துணிந்தகாலையில், எதிர்ப் பட்ட முனிவரொருவன் எண்ணிரண்டாண்டு கழிந்தபிறகு இழந்த மனைவியை எய்தப்பெறுவாய் என்று தேற்றத்தேறிய தால் இத்துணைக்காலமும் உயிர்வாழ்ந்திருந்தேன். இன்றோடு பதிறைறு வருடமும் தொலைந்தன. மனைவியைக்காணலாகுமெ ன்ற எண்ணமும் அகன்றது. ஆதலால், துன்பத்திற்கிடமாகிய இச்சரீரத்தினைத் தொலைக்கக்கருதி இம்மலைச் சிகரத்தினின்று கீழே வீழ்ந்தேன்," என்று இவன் கூறிக்கொண்டிருக்கும் பொழுதே சமீபத்தில், "தாயே! பதிறைறு வருடங்கழித்துப் பிரிந்துபோன கணவனையும் மைந்தனையும் காணப்பெறுவாய், என்று முனிவர் கூறியிருப்பவும், நீ அக்கினிப்பிரவேசமாகுதல் நீதியோ? நெருப்பில்விழாதி," என்று ஒரு ஸ்திரீ உரக்கக்கூவி னதைக்கேட்டேன். இச்சொற்களைச் செவியுற்றதும் யான், "பிதாவே! இன்னுந்தாங்கள் கூறவேண்டியன பலவுள; ஆயினும் சற்றுப் பொறுத்திருக்க வேண்டுகின்றேன். இப்பொழுது கேட்டகுரலின் முகாந்தரத்தை அறிந்து விரைந்து வருகின் றேன்," என்றுகூறி அவனையங்கேவிடுத்துக்குரல் கேட்டவழியே மிகவிரைந்து ஓடோடிபுக்கென்று பார்க்கும்பொழுது, அங்

சோர் சோலையின் கரையில் பெருந்தியோன்று பொலாங்கி யெரி வதையும் அதனை யொரு ஸ்திரீ மும்முறை வலம்வந்து தீப்பா யத் தயாராக நிற்பதையும் அவளுடைய தாதியர்கள் பக்கத்தில் நின்று புலம்புவதையும் கண்டேன். உடனே நான் ஒரேபாய்ச் சலாகத்தாவி அம்மாதினை கருப்பில் விழாது எடுத்தணைத்து அவளையும் தாதியரையும் அழைத்துவந்து என் பிதாவின் முன்பு நிறுத்தி, அவர்களைநோக்கி, இத்தனி வனத்தில் அவர்கள் யாது புரிகின்றனர், என்பதை விளங்க வுரைக்குமாறு கேட்டேன். தாதியருள் முதியோள் பின் வருவனவற்றைக்கூறினள்.

"ஐயா! இதோ நிற்பவள் காலயவனத்வீபத்தில் வணிகேச ரகிய காளகுப்தனின் புதல்வி; சுவிருதை என்னும் பெயருடை யாள். இவள்தனது காதலனுடன் மரக்கலமேறி ஊர்க்குவரும் பொழுது உண்டான பெரும்புயலாற் கலங்கவிழ்ந்து யாவரும் மூழ்கிமாண்டனர். இவளும் இவளது செவிலித் தாயாகிய யானும் தெய்வாதீனமாய் அண்டையில் மிதந்துவந்த பெரிய மரக்கட்டையொன்றைப் பூணையாகப் பற்றிக் கரைசேர்ந்தோம். இன்னஇடம் போவதென்றுணராத யாமும் அன்பினையிழந்து ஆருளர்முற்றிய இம்மாதும் ஒருகாட்டினுட்புகுந்து திரிந்தோம். பூரணகருப்பவதியாயிருந்த யிவள் ஓராண்மகவினை யீங்கு ஈன்றனள்; என்றுமிம் பட்டகாலிலே படும் கெட்டகுடியேகெடும் என்னும் முதுமொழிக்கிணங்க, அக்குழந்தையினை என்கையினின்று மோர்மதயானை துக்கிச்சென்றது. இத்தகைய துன்பங்களால் உயிர்விடத்துணிந்த இவளைத்தற்செயலாய் அங்குவந்த முனிவ ரொருவன் தேற்றி, பதினைந்து கடந்தபின் காதலனையும் கான் முனையையும் கண்டுகளிப்பாய், என்று உறுதிமொழி கூறிப்போ யினன். அன்று தொட்டு அவ்வனத்திலேயே ஓராச்சிரமம் அமைத்து இத்துணை நாளும் வதிந்திருந்தோம். பதினைந்து வரு ஷம் போயும் பயன்படாமையைக்கண்டு, இவள் பொறுமையற்று வளாய் இச்சோலையிடைத் தீக்குழி அமைத்து நாங்கள் தடுப்ப வும் கேளாது அதில் வீழ்ந்திறக்கத் துணிந்தனள்," என்று இரங்கிக்கூறினள். கேட்டவுடன் இம்மாது எனது தாயே என் பதை அறிந்து, அவள் பாதத்தில் நமஸ்கரித்து, என் பிதாவை யும் அவளுக்குக்காட்டினேன். இருவரும் ஒருவரை யொருவர்

அறிந்து ஈருடலு மோருடலுமாயினர். பின்னர் இவ்விதமாகத் தங்கள் உயிரினைக்காத்த என்னை மார்புறத்தழுவி ஆசீர்வதித்து இருவரும் அம்மாத்தினடியில் இருந்து எனது வரலாற்றினைக் கேட்க, யான் என் சரிதையை அவர்களுக்கு எடுத்துரைத்தேன். பிறகு எனதிரு முது குரவரையும் ஓரிருடியின் ஆச்சிரமத்தில் விடுத்துத் தங்களைத்தேடிப் பலவிடங்களிலும் சென்றேன். நான் விந்தியாடவியில் அலைந்துகொண்டிருக்கையில் ஒருநாள் பாழ் மண்டபமொன்றைக்கண்டு அங்குச்சென்று பரிசோதிக்கையில் பாளமாகத் திரார் என்னும் தங்கமோகராக்கள் அடங்கிய பெரும் புதையல் கிடைத்தது. உடனேசில மோகராக்களையெடுத்துச்சென்று அயலிற்றங்கியிருந்த வாணிகக் கூட்டமொன்றைச் சேர்ந்து, மாடுகளும் கோணிப்பைகளும் வாங்கித் திருமி மண்டபத்தை யடைந்து புதையலை யெடுத்து மூட்டைகளாகக் கோணியிற் கட்டிப் பொதிமாடுகளின் மீதேற்றிக்கொண்டு மீண்டு அவ் வாணிகச் சாத்தினை யடைந்தேன். உடன்வந்த வொரு வணிக புத்திரனோடு நட்புரிமைபூண்டு அவனோடு தெய்வாதீனமாய்க் கிடைத்த நிதியுடன் ஒருவித இடையூறுமின்றி உஜ்ஜயினிமாநகரம் வந்துசேர்ந்தேன். பிறகு அங்கோர் மாளிகை வாங்கிப் பர்ணசாலையில் விட்டுவந்த என் பெற்றோர்களையும் அழைத்து வந்து ஆண்டு வதிதருகின்றேன். என் நண்பனது தாதையாகிய பந்துபாலன் செய்த நன் முயற்சியால் மாளவ தேசாதிபதியின் அநுமதியையும் பெற்று வாணிகஞ் செய்து வாழ்ந்துவருகின்றேன். இடையிடையே தங்களைக் காணவேண்டிய கருத்துடன் பற்பல இடங்களுக்கும் பிரயாணம் செய்து வந்தேன். என் ரூலும், அவை பயன்படாதொழிந்தமைகண்டு வருந்தின என்னைப் பந்துபாலன் தேற்றி, 'இன்னனம் அலைதலாற் காரியம் கைகூடாது; சகுனசாஸ்திரவல்லபத்தால் அரசகுமாரன் வரவை யறிந்துரைப்பேன்; கவலற்க,' என்று நன்மொழி பகர்ந்தனன். அவனது சோதிடவல்லபத்தால் தங்கள் வருகையை அறிய விரும்பிய யான் பிரதினமும் அவன் மாளிகைக்குச் சென்றுவருவது வழக்கம். அங்கு அவன் மகள் பாலசந்திரிகை என்பாள் எழிலோருருவெடுத்தாலனையாள்; அவளைக் கண்டது முதல் அநங்கன் அம்பால் அகமுடைந்து வருந்தினேன், என் மனங் கொள்ளைகொண்ட அவ்வேந்திழையை எய்தும் வழி

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET

யாதென ஆய்ந்துகொண்டிருந்தேன். அம்மங்கையர் மணியும் என்பால் விருப்புடையாள் என்பதை அவள் முகக்குறிப்பாலும் நயனபாஷையாலும் நன்கு அறிந்துகொண்டேன். கூடிய சீக்கிரத்தில் அவளைப் பெறுதற்குரிய உபாயத்தைநாட மனமுறையும் உண்டாயிற்று. பக்ஷிபாஷையை நன்கு அறிந்துள்ள பந்து பாலனோடு ஒருநாள் நகர்ப்புறச் சோலைக்குச்சென்று, ஆண்டுள்ள பக்ஷிகளின் பேச்சினால் தங்கள் வருகையை ஆராயுமாறு அவனை யொருபுறம் விடுத்து, நான் தனியே சோலையில் உலாவி வந்தேன். ஆங்கோர்புறம் அழகிய கமலவாவியொன்றன் கரையிலுள்ள லதாக்ருகத்தில் என்னுளங் கவர்ந்த பாலசந்திரிகையைக்கண்டு முதலில் உருவெளித் தோற்றமோ என்று ஐயுற்றேனெனினும் பின்னர் அன்னவளாதலைத் தெரிந்து, தெய்வமே முன்னின்று அவளையங்குத் தனியே கொணர்ந்து தந்தது என்று மனமகிழ்ந்து அவளை யணுகி நலம்பாராட்டி யெனது காதலைப் பலபட எடுத்துரைத்தேன். அவளும் பெருநாணுடையளாயினும் என்பால் வேட்கையுற்றவளாதலின் காதல் கைம்மிக்கு நாணினை விடுத்து அன்பு பொருந்திய இன்மொழியால் தன்னுள்ளக் கிடக்கையைப் பின்வருமாறு இசைத்தனள்.

"நாதா! இம்மாலை தெய்வத்தை யாண்டிவந்த மானாபரன், வயோதிகநிலை யடைந்தமையால் உலகவின்பத்தைத் துறந்து தன்மகன் தர்ப்பஸாரனுக்குப் பட்டாபிஷேகம் செய்து உஜ்ஜயினியில் அரசாளவைத்தனன். தர்ப்பசாரன், உலக முழுவதையும் ஒரு குடையிலாளும் புவநேசுவரனைக் கருதிப் பரமேசுவரனைக் குறித்துக் கடுந்தவஞ்செய்ய இராஜகிரியாகிய இமாசலத்திற்குப் போயினன். போகுங்கால் இவ்விராச்சியாதிகாரத்தைத் தனது அத்தையின் புதல்வர்களாகிய சண்டவர்மன், தாருவர்மன் என்னும் இருவர்பாலும் வைத்துத் தான் தவம்புரிந்து மீண்டு வருமளவும் அரசுபுரிய ஆஜ்ஞாபித்துச் சென்றனன். தாருவர்மன் தனது மூத்தோனாகிய சண்டவர்மன் சொல்வழிக் கேளாணைக் கட்டுமீறித் தறிதலையாய்ப் போக்கிரிகளுடன் சேர்ந்து அக்கிரமங்களைப் புரியலானன். அவன் செய்யாத தீச்செயல் ஒன்றுமில்லை; பலரிலுள்ளார் செல்வத்தை யபகரிப்பதையும் அவர் மனைவிமக்களைக் கற்பழிப்பதையுமே தொழிலாகக்

கொண்டனன். அவன் என்னைக் கண்டதுமுதல் காமாதுரனாய்க் கீசகன் சைரந்திரியைப்படுத்திய பாடெல்லாம் படுத்துகின்றனன். நானும் இதுகாறும் பல சாகசச் செய்கைகளால் அத்துன்மார்க்கனுடைய கையினின்றும் தப்பி என் கன்னிமைக்குப் பங்கமின்றிப் பிழைத்தனன். பழிபாவங்கட்குச் சிறிதும் அஞ்சாத அவன் காமத்தாற் கண்ணிழந்து என்னைப் பலாத்காரமாகக் கைப்பற்றுதற்கு வேண்டிய வழிகளைத் தேடுகின்றனன். தங்களைக் கண்டதுமுதல் எனக்குப் பதி நீங்களே என்று தீர்மானித்து விட்டேன். இனி அக்கொடியவன் கைப்படாது தப்ப வழியுமறிகிலேன். நான் படும்பாட்டை எவரறிவார்? ஈசா, என் செய்வேன்? ஏழை பெண்ணைப்பிறந்து இத்துயருறுகின்றேன்? பெண்பிறப்பு கொடிது கொடிது; அதனிலும் அழகுடன் பிறத்தல் அறவே கொடிது. என்னழகே எனக்குப் பகையாயிற்றே!" என்று கல்லுங்கரையப் புலம்பினள். புலிவாயிற்பட்ட புனமான் போலவும் காட்டுப்பூனை வாயிற்கௌவிய பைங்கிளிபோலவும் பரிதவிக்கும் அப்பெண்கொடியை அக்கொடியனினின்றும் காக்கத்துணிந்து, அவள் படுந்துயரைமாற்றிச் சொரியுங் கண்ணீரைப் போக்கி, 'இனியுளம் வருந்தற்க, அத்தியற்குச் சிறிதுமஞ்சேல்; அப்பாவியைச் சமனுலகஞ் சேர்ப்பிக்கின்றேன்;' என்று சபதங்கூறி, அவளைப் பின்வருமாறு நடந்துகொள்ள அறிவுறுத்தினேன்.

"அழகிற் சிறந்த அணங்கே! இனி நீ, உன்னையொரு யகூதன் விரும்பியிருப்பதாகவும் அவன் எப்பொழுதும் யாண்டும் உன்னைப் பிறரறியாது காவல்புரிந்துவருவதாகவும், அவ்யகூதனை எவன் கொன்றுவென்றி கொள்கின்றனனோ, அவனையே மணம் புரியத் தீர்மானித்துள்ளதாகவும் பகிரங்கம் செய்வாயாக. தாருவர்மன் இதனைக் கேள்வியுற்று யகூதனுக்கு அஞ்சி உன்னை நினையாது விலகியொழிவானெனில் மிகவும் நன்று; அவனும் உயிர்தப்புவான். அங்ஙனமின்றித் தான் பிடித்த பிடியை விடாத முதலைபோல் அவன் மூர்க்கனுய் உன்னை அடைய நினைத்தால், புவனேந்திரனை தர்பசாரமகாராஜனின் மந்திரியாகிய தாருவர்மாவுக்குத் தமது கிருகத்தில் ஆபத்து நேரிடில் அபவாதத்திற்கு இடனுகுமென்றும் அதுபற்றிப் பாலசந்திரனையைப்

டலறிய அவனை தனது மாளிகைக்கு அழைத்துச்சென்று தன் மநோரதத்தை நிறைவேற்றிக்கொள்வதில் எவ்விதமான ஆக்ஷேபனையும் இல்லையென்றும், உன் சுற்றத்தாரையும் தோழி யரையும் கொண்டு அவனுக்கு அறிவிப்பாயாக. பெரும்பாலும் இவ்வழிக்கு அவன் உடன்படுவான் என்பது திண்ணம். அங்ஙனம் அவன் உன்னைத் தனது மாளிகைக்கு அழைத்துப்போ கையில் யானை ஸ்திரீவேஷம்பூண்டு உன் உயிர்த்தோழியாக உடன்வருகின்றேன். அவனுடைய அந்தப்புரத்திலுட் புகுந்த பின், பீமசேனன் கீசகனைத் தொலைத்ததுபோல யானை அவனை யொழித்துவிட்டு, உனது தோழியாகவே உன்னிடம் எவ்வித அச்சமும் இன்றி ஒருவருக்கும் ஐயமுண்டாகாமல் வெளிவந்து விடுவேன். பிறகு, நம் இருவர்க்கும் உள்ள காதலை உனது பெற்றோர்க்குத் தெரிவித்து அன்னோர் அநுமதியையும் தடை யின்றிப் பெற்று உன்னை மணந்துகொள்வேன்" என்று உபாயங் கூறினேன். ஒருகால் தாருவர்மனுல் எனக்கு ஏதேனும் தீங்கு நேரிடுமோ என்று அவள் கொஞ்சம் அஞ்சினளெனினும், எனது உறுதிமொழிகளால் அச்சம் தீர்ந்து, தான் அங்ஙனமே செய்வதாக ஒப்புக்கொண்டு, என்னை விட்டுப்பிரிய மனமில்லாத பிரிய மனத்துடன் பிரிந்துபோயினள். பாலசந்திரிகையை ஒரு புறமாக ஏகவிடுத்து நான் மீளவும் சோலையில் விடுத்துவந்த பந்துபாலனை அடைந்தபொழுது, ஒரு திங்கள் அளவிற்குள் தங்களைக்கண்டு இன்பமடைவேன், என்று நன்மொழி கூறினன். பிறகு இருவரும் வீடு சேர்ந்தோம்.

யான் எதிர்பார்த்தவண்ணமே யாவும் நிகழ்ந்தன. தாரு வர்மன் மறுநாட் காலைப் பாலசந்திரிகையை அழைத்துத் தன் மாளிகைபுக்கனன்; யானும் அவள் தோழியாக மாறுவேடம் பூண்டு அவளுடன் சென்றேன். அன்றிரவே பாலசந்திரிகை யின் அந்தப்புரத்திற்கு நள்ளிரவில் வந்த தாருவர்மனை யான் மேற்பாய்ந்து எதிர்த்தேன். எனக்கும் அவற்கும் கொடிய மல்லயுத்தம் நிகழ்ந்தது. பாலசந்திரிகை என்னாது முடியுமோ என்று ஏங்கி யயலிலொருபுறம் நின்றுகொண்டிருந்தனள். யான் எனது அஸ்தலாகவத்தால் அவனைக் கைகாலாட வொட்டாமற் கட்டிப்பிடித்துக் கரசரணங்களைக் குமைத்துக்கொன்றேன்.

பிறகு உடனே குலுக்கிருந்து என்னு கொலக்கை யொருவாறு திருத்திக்கொண்டு பாலசந்திரிகையோடு அந்தப்புரத்தினின்றும் வெளிவந்து தாருவர்மன் யகந்தன் கையால் மாண்டனன் என்று புலம்பிக்கூட்டம். அரண்மனையிலுள்ளாரும் பிறரும் ஓடோடியும் வந்து தாருவர்மன் இறந்துகிடப்பதைக்கண்டு ஐயோதுசெய்தவன் படாதுபட்டனன் என்று கூறித் தம் அநுதாபத்தைக் காட்டினர். இதனால் அரண்மனையிலுண்டான பெருங் குழப்பத்தினிடையே யான் பாலசந்திரிகையை அழைத்துக்கொண்டு வெளியேறி அவனை யவள்மனைவயின் விடுத்து என்னில்லஞ் சேர்ந்தேன். நகர மாந்தர் பலரும் விபப்பும் அச்சமும் அடைந்தவராய்ப் பாலசந்திரிகையைக் கண்மணிபோற்றும் பாராராயினர். அவளது பெற்றோரும் உற்றோரும் அவனை மணப்பவன் யாவனே என்று கவலைமேற்கொண்டனர். ஈதிங்ஙனமிருப்பச் சின்னாள் கழித்து யான் அவள் பெற்றோரை யண்மி, அவளைப் பற்றிய யகூததேவனை எனது மந்திரசக்தியால் அகற்றுவதாகக் கூறி மந்திரஞ் செபிப்பதுபோற் றந்திரஞ் செய்து பின்னர் அவர்கள் சம்மதியின்மேல் மணம்புரிந்துகொண்டேன். பந்துபாலன் முன்னர்க் கூறியாங்கு இன்று நீங்கள் வரவேண்டிய தினமாதலின் உங்களைக் காணலாகுமென்ற கருத்துடன் தேடிக்கொண்டு இவண் வந்தேன்; தங்களைக்கண்டு பெருங் களிப்பினையடைந்தேன்" என்று தன் சரிதையைக் கூறிமுடித்தனன்.

அரசிளங் குமரனும் சந்தோஷமடைந்தவனாய் தன் விருத்தாந்தத்தையும் சோமதத்தன் வரலாற்றினையும் புஷ்போத்பவனுக்கு விரிவாக எடுத்துரைத்தபின், யாவரும் உஜ்ஜினிமாநகருட் புகுந்து புஷ்போத்பவன் மாளிகையைச் சேர்ந்தனர். இராஜஹம்சன் புஷ்போத்பவனுடைய ஆசாரிய புத்திரன் என்ற பெயருடன் ஆண்டுத் தங்கியிருந்தனன். சின்னாளில் அவன் கல்வி கேள்வி அறிவொழுக்கம் சௌரிய பராக்கிரமங்களில் யாவரினும் மேம்பாடுற்று விளங்கியதால் அவனது புகழ் நகரமெங்கும் பரவியது.

அதிகாரம் 6.

வசந்தகாலம் வந்தது; செடிகொடிமரங்களெல்லாம் இளந்தளிரின்று மலரரும்பி விளங்கின. யாண்டு நோக்கினும் பச்சைப்

பசேலெனப் பசும்புற் பரவின தோற்றம், உலகமாது பச்சைப் போர்வை போர்த்தது போலிருந்தது. வறியனொருவன் பெருந் தனம் பெற்றது போலவும், துன்பத்தையே அநுபவித்தவன் சுவர்க்கவின்பத்தை யெய்தியது மானவும் உயிர்வர்க்கங்கள் யாவும் பெருங்களிப்படைந்தன. வையகவாழ்வு துன்பமே யென் பார் கூற்றை மறுப்பது போல எங்கும் மகிழ்ச்சியே காணப் பெற்றது. சோலைகளும் வாவிகளும் மன்மதனுடைய ஆயுத சாலைகளாக அழகுபெறத்திகழ்ந்தன. அவனது எக்காளமாகிய குயில், மாமரங்கடோறும் இளந்தளிர்களைக் கோதி மகிழ்ந்து, மதராஜனைத் தமது பஞ்சமஸ்வரத்தாற் கூவியழைத்தன. வீசிய மந்தமாருதம், மலயாசலத்திலுள்ள செஞ்சந்தன விருக்ஷங்களின் நறுமணத்தைக் கவர்ந்துகொண்டு, மந்தகதியாய் மன்மதனது சேனாபதிபோலத் தனது பிரபாவத்தால் விரகிகளின் மனத்துண்டான காமாநலத்தை மேலோங்கி எரியச்செய்தது.

உஜ்ஜயினி நகரத்தின் காளையரும் கன்னியரும் காமதேவனின்றிருவிழாவைக் கொண்டாடத் தொடங்கினர். அப்பொழுது, மானசாரன் புதல்வியாகிய அவந்திசுந்தரி, தனது உயிர்த் தோழியாகிய பாலசந்திரிகையோடு ஆயவெள்ளம் புடைசூழ்ந்து வர மிகமநோகரமான நகர்ப்புறச் சோலையை யடைந்து ஓர் பாலாம்பவிருக்ஷத்தின் மூலத்தில் மன்மதனை ஆவாகனஞ்செய்து திருவிழாக்கொண்டாடினள். அரசகுமாரியைக் காணவேண்டு மென்ற ஆவல்கொண்டு, இராஜவாஹனன், தனது பாங்கனாகிய புஷ்போத்பவனுடன் அப்பொழிலையடைந்து, ஆண்டுள்ள பல அற்புதக் காட்சிகளையும் கண்டுமகிழ்ந்து, அவந்திசுந்தரியிருந்த இடத்தை அணுகினன். அவன் அவளைக்கண்டதும், மன்மதன் தனது இரதிதேவியுடன் விளையாடுவதற்காக இயற்றிய அழகிய பதுமையொன்று அன்னநடை வாய்ந்தொளிர்கின்றதேவென வியந்து தன் பாங்கற்குரைத்தனன். பாலசந்திரிகையால் அழைக்கப்பெற்று நண்பரிருவரும் அவந்திசுந்தரியின் முன்பு சேர்ந்தனர். இராஜவாஹனனைக்கண்ட அரசகுமாரியும் அவனது பேரெழிலில் ஈடுபட்டவளாய், அன்னனை அங்கனே தான் செய்த பூஜைக்கு மகிழ்ந்து வரங்கொடுக்க உருவெடுத்து வந்தனை தல் வேண்டும், என்று தென்றற்காற்றில் நடுங்கும் காம

வல்லிக்கொடிபோல் மதன்வாதையாற் றுவண்டொடாகிந்தனள். இராஜவாஹனனும் தன்மனத்தை யவள்பால் விடுத்து. அவளது பேரழகினைக் கண்களாற் பருகிநின்றனன்.

இராஜகுமாரி, தன்முன்னிற்கும் மகாபுருஷன் யாவனெனத் தனது பிராணசகியாகிய பாலசந்திரிகையை வினவ, அவள் பலர் முன்னிலையில் அவன் உண்மைச்சரிதையைக்கூற மனமில்லாதவளாய்ப், "பெண்மணியே! இவர் எனது பர்த்தாவின் மைந்தர்; அர்த்தசாஸ்திரகுமாரர்; கல்விகேள்விகளிலும் புஜபலபராக்கிரமங்களிலும் உயர்ந்தோர்; நிகரற்ற மந்திரவித்தை கைவந்தவர்; உன்னாற் பூஜிக்கப்பட எவ்விதத்திலும் அருகானவர்;" என்று கூறினள். இம்மொழி கேட்ட அம்மாதும், அவ்விருவரையும் அழைத்துப் பீடங்களிலிருத்தி, இராஜவாஹனனுக்கு அர்க்கியபாத்திய ஆசமன்யமளித்து உபசரித்துத் தெய்வப்பிரசாத நிர்மாலியங்களை அளித்துப் பாதத்தில் வணங்கிநின்றனள். இராஜகுமாரன், தனக்கு அவள்பால் அளவிலாக்காதல் உண்டாவதை உணர்ந்து, இஃதென்னென இறும்பூதெய்திச் சிறிது பொழுது தியானத்தமர்ந்திருந்து, பழம்பிறப் புணர்ச்சியெய்தி, இவளே போனபிறப்பில் தனக்கு மனைவியாயிருந்த யஜ்ஞவதியாவாள், என்பதை அறிந்து, இவளுக்குப் பூர்வஜன்ம விருத்தாந்தத்தைக் குறிப்பால் அறிவித்து நிகழ்வதையுணர நிச்சயித்தனன். அவ்வமயத்தில், அழகுமிக்க இராஜஹம்சமொன்று ஆண்டு உலாவுவதைக்கண்ட அவந்திசுந்தரி, தனது உயிர்ப்பறவையாகிய பாலசந்திரிகைக்கு அதனைக்காட்டி, அதைத் தனக்கு விளையாடப்பற்றித் தரவேண்டினள். அவளும் அதற்கு மனமிசைந்து சிலம்பு மேகலைகள் ஒலிசெயாதடக்கிப் பைப்பய நடந்து அன்னத்தைப் பிடிக்கச்சென்றனள். அப்பொழுது, இராஜவாஹனன் பாலசந்திரிகையை நோக்கிப் பின்வருமாறு பேசலாயினன்.

"பெண்ணே! வாளாதுதன்வழியே யதேச்சையாய்ப் பயமின்றி, ஈண்டுள்ளார் நம்மைப்பற்றூர் என்ற நம்பிக்கையுடன் செல்லும் அவ்விராஜஹம்சத்தைப்பற்றிச் சிறைப்படுத்தல் தருமமன்று; மேலும் அது பாபத்திற்கிடனும். இதனைத் திருஷ்டாந்தப்படுத்த முன் நடந்த விருத்தாந்தமொன்றினைக் கூறுகின்றேன். நீங்களனைவருஞ் செவிசாய்த்துக் கேட்டு, உண்மை

யுணர்ந்துகொள்ளும் வண்மையுடையீர் தக்கவாறு முருவிடாக. முன் ஒருகூலத்தில் மன்மதனை அழகால்வென்ற சாம்பன் எனப் பெயரிய ஆடவர்திலகன் ஒருவனிருந்தான்; அவனுக்கு அழகு குணங்களிற்சிறந்த யஜ்ஞவதி என்பாள் மனமொத்த மனைக்கிழத்தியாக வாய்த்திருந்தாள். இருவரும் ஒருநாள் உய்யானத்திற் புகுந்து பொழில்விளையாட்டயர்ந்து வருகையில் ஆண்டுள்ள காமரத்தடாகத்தில் அன்றலர்ந்த காமரை மலர்களுக் கிடையே இராஜஹம்சமொன்று அயர்ந்து உறங்குவதைக்கண்டனர். அவ்வன்னத்தின் வனப்பிலீடுபட்ட யஜ்ஞவதி அதனைப் பற்றித்தருமாறு தன் காதலனைக்கேட்டனள். அவனும் அதற்கிணங்கித் துயிலைடைந்திடந்த அம்மராளத்தைப்பற்றித் காமரை நூலால் அதன் கால்களைப்பிணித்துத் தன்காதலி முற்கொணர்ந்து 'நங்காய்! கமலமலர்களுக்கிடையே கவலையற்றுக் கண்டுயின்று கொண்டிருந்த இக்காதம்பத்தினைக் கைப்பற்றித் துன்புறுத்துதல் தர்மவிரோதமான செய்கை. மேலும், இஃது யோகம்புரியும் தபோதிதபோற் காணப்படும் தோற்றப்பொலிவினைக் கண்டு நின்பொருட்டு இதனைப்பற்றிக் கொணர்ந்தேன். நீயும் இதன் எழிலினை முழுதுங்கண்டு மகிழ்ந்தனை; இனியேனும் இதன்காலைப்பிணித்துள்ள கட்டினையவிழ்த்து வேண்டுமிடம் தடையின்றிப் போகுமாறு விடுப்பல்;' என்று கூறி, அதன் கால்களைக்கட்டிய நூலையவிழ்த்து விடுத்தனன். அவ்வன்னம் வாய்திறந்து சாம்பனை நோக்கி, 'வீர! யான் ஒரு முனிவன்; மனம்பொருந்திச் செய்யும் யோகத்திற்கு இடையூறு நேராவண்ணம் அன்னவருக்கொண்டு, இம்மநோகரமான ஸரஸில் பதுமமலர்களுக்கிடையே துயில்வதுபோற்கிடந்தேன். எனது யோகினுக்கு இடுக்கண் புரிந்த பாபம் உன்னைவிடாது. அறிவொழுக்கங்களிற் சிறந்தவளாயினும், பெண்வழிநிற்கும் பேதையாதலின், நீ மனைவியைப்பிரிந்து மாதுயருறுவாயாக,' என்று சபித்தது. இச்சாபமொழிகேட்ட சாம்பன், உளமுடைந்து நடுங்கி, அதனைநோக்கி, 'அறியாது செய்த இப்பிழையைப் பொறியோய்! அன்புடன் பொறுத்தருள்புரிவாயாக,' என்று பாதங்களில் வீழ்ந்து பன்முறை வேண்டிக்கொண்டனன். அவன் வேண்டுகோட்கு மனமிரங்கிய மராளம், 'ஐயனே! என்சாபம் பழுதாகாது; நினக்குத் தீவினையும் உன்னைப் பற்றுதலொழியாது. மெய்யாகவே கருணை

பொருந்திய மனமுடையோ யாதலின், மனைவியின் வியோகத்தை இப்பிறப்பிலெய்தாது தவிர்வாயாக. மறுபிறப்பில் இவளை நினது மனைவியாக அமைவள். நீ அவளை மணந்தவுடன், என்னை இருமூகூர்த்தகாலம் காலினை நூலாற்பிணித்துப்பந்தித்த பாபத்தால், உனது கால்களில் விலங்கிடப்பெற்று இருதிங்களளவும் சிறைப்பட்டிருப்பாய். பின்னர் விடுபட்டு உன்மனைவியோடு ஏகசக்கிராதிபதியாய் உலகமுழுவதையும் ஆண்டு, பலவிதமான சுகபோகங்களை யநுபவிப்பாயாக. மறுபிறப்பில் நீவிர் பழம் பிறப்புணர்ச்சியைப் பெறும்வண்மையும் தந்தேன்.' என்று கூறித் தான்செல்லும் வழிச்சென்றது. இவ்வரலாற்றினை இராஜ வாஹனன் கூறிவரும்பொழுதே, அவந்திசுந்தரிக்குப் பூர்வஜன்ம விருத்தாந்தம் யாவும் தெளிவாகப் புலப்பட்டது. தானே முற் பிறப்பில் யஜ்ஞவதியாயிருந்ததும் எதிரிலிருந்து தனக்குப் பழம் பிறப்புணர்ச்சியைக் குறிப்பிலில் அளித்த மகாபுருஷனை கழிந்தபிறப்பிற் சாம்பனாயிருந்த காதலனை என்பதும், இப்பிறப் பிலும் இவனை தனக்கு நாதனாகற்பாலான் என்பதும், அது பற்றியே தன்மனமும் புனல்வழிப்புற் சாய்ந்தாற்போல அவன்பா லோடுகின்றதென்பதும் அவளுக்குக் காதலாமலகமாய் விளங் கின.

உடனே, அவந்திசுந்தரி அன்னத்தைப் பிடியாதிருக்கப் பாலசந்திரிகைக்குக் கூறி அரசகுமாரனை நோக்கி, "ஸ்வாமி! நானே யஜ்ஞவதியென்பதை யறிந்தேன். தாங்களே முற்பிறப்பி லென்காதலர். இப்பிறப்பிலும் யானே உமக்குரியவள்;" என்று கூறியதுமன்றிப் பழம்பிறப்பில் தம்மிருவர்க்கும் நேர்ந்தவை பல வற்றையும் எடுத்துரைத்தனள். இருவரும், இவ்வாறு ஒருவரை யொருவர் உணர்ந்து, முற்பிறப்பிலிருந்த காதல் இத்துணைநாள் பிரிந்திருந்தமையாற் பன்மடங்காய்ச் சிறந்துவர, அளவளாவிப் பேசிக் களித்திருந்தனர். இதனைக்கண்ட புஷ்போத்பவனும் பாலசந்திரிகையும் பெருவியப்பும் மகிழ்வும் அடைந்து தம்மை மறந்து நின்றனர்.

இத்தருவாயில், மானசாரன் பட்டத்துத்தேவியாகிய அவந்திசுந்தரியின் நற்றாய், தன்மகள் பொழிலிற்கொண்டாடும் காமன்றிருவிழாவினைக்கண்டு களிக்குமாறு தன் பரிவாரங்கள்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR 623 106

புடைசூழ ஆண்டுப்போந்தனள். இவள் வருகையை உணர்ந்த பாலசந்திரிகை, தன் நாயகற்குப் பெருந்தேவியின் வரவினைக் குறிப்பாலுணர்த்த, அவன் இராஜவாகனனையுடன்கொண்டு அயலிலுள்ள அடர்ந்த மரங்களுக்கிடையே மறைந்து சார்ந்தனன். வந்த பெருந்தேவி மகளையடைந்து திருவிழாக்கண்டு மகிழ்ந்து, பின் அவள் முகவாட்டத்தையுங்கண்டு, பொழில்விளையாட்டாற் களைத்தனள் போலுமென்று கருதி யவளையுடன்கொண்டு தன் னரண்மனை புக்கனள். தாயுடன் செல்லும் அவந்திசுந்தரி தன் பிரிவினைக்காதலனுக்குக் குறிப்பாலுணர்த்த வெண்ணி, ஆண்டுச் சென்றுகொண்டிருந்த இனிய ஆண் அன்னமொன்றை நோக்கிக் கூறுவாள் போன்று, "ஹே! இராஜஹம்சகுலதிலகா! இதுகாறும் மகிழ்வுடன் உன்னுடன் விளையாடிக்கொண்டிருந்தயான், திடீரென்று எனது தாய் அழைத்துச்செல்லும்பொழுது உடன் செல்லவெண்ணுவது நியாயமன்றே? இதனை என்னைக்குறித்து வேறுவிதமாக நினையேல்," என்று இராஜவாகனனுக்குக் கூறிப் போயினள். இராஜவாகனன் புன்சிரிப்புடன் அவன் மாளிகையை யடைந்தனன்.

காதலிருவருங் காமங்கைமிக்கு, ஒருவரையொருவர் மீள வுங்காணுமாறெங்ஙனமென்று கவலையுற்றிருந்தனர். அவந்தி சுந்தரிக்கு மாலையம்பொழுதிற் காமநோய்மிகுந்து காமனையுந் தென்றலையுந் திங்களையுங் கோகிலத்தையும் வைது புலம்புவாளா யினள். இதனைக்கண்ணுற்ற தோழியர் செய்த சைத்தியோப சாரமெல்லாங் காய்ந்த எண்ணெயிற்றெளித்த நீர்போலக்காமா நலத்தின் வேகத்தை மேலோங்கச்செய்தது. அரசகுமாரி ஆற் றுளாய்த்தன்னுயிர்ப் பாங்கி பாலசந்திரிகையை அழைத்துத்தன் பால் இளகியமனத்துடன் கருணைபாராட்டுமாறு காதலர்க்கெழு திய நிருபமொன்றை யவள்கையிலீந்து, தன் கணவன்பாற்றூது விடுத்தனள். கடிதத்தைக் கைக்கொண்டுசென்ற பாலசந்திரிகை, தன் முகசந்திரனைக்கண்டு குவிந்த அம்புயம்போன்ற அஞ்சலி யஸ்தத்துடன் இராஜவாகனனை யடைந்து நிருபத்தையீந்தனள். அவன், கடிதத்தைக்கண்டு மகிழ்ந்து பாலசந்திரிகையை நோக் கிச், "சோலையிற்கண்ட ஞான்றே என்மனத்தை யவள்பால் விடுத்துவந்தனைபோல், அதன் நிலைமையை அவளே னன்கறிவாள்.

காவலையுடைய அவள் கன்னிமாடத்தை யான் இப்பொழுது அணுகுதல் தகாதன்று. கூடிய சீக்கிரத்தில் அவள்பால் வருதற்குரிய உபாயத்தைத்தேடுவேன். அதுகாறும் அவ்வளப்பாது காத்தல் தனதுகடன். என்னுயிர்த்தோழனாகிய புஷ்போற்பவனது மனமொத்த பிராணநாயகியாகிய நீ என் காதலிக்குப் புறம்பேயுளாவும் உயிர் அல்லையோ? ஆதலால் அவளுக்குத் தெரிதல் கூறுவாயாக," என்று கூறி மீளவிடுத்தனன். பாலசந்திரிகையின் தேற்றமொழியால் அரசகுமாரியு மொருவாறு தேறியிருந்தனள்.

இராஜவாஹனன், ஒருநாள் தனது ஆற்றுமையை ஆற்றக் கருதித் தன் காதலியைக்கண்ட பொழிலிடம்புக்கு, அவள் பயின்ற இடங்களெல்லாமும் உலாவி வந்தனன். அன்னவள் அன்னம் குயில் கிளி மயில் மான் முதலியவற்றைக்கண்டதும் அவன் மனத்துள்ள மதனவேதனை முன்னிலும் பன்மடங்காக வளர்ந்தெழுந்தது. அவன் துயர்மிக்கு நின்றவிடத்து நில்லாமற் சோலையிற் சுற்றிவரும்பொழுது, அங்கோர் அலங்கார பூஷித ஸ்ரீத்தோற்றப்பொலிவுடன் விளங்கிய அந்தணனைக்கண்ணுற்று அவனையணுகிப் பரஸ்பரம் பிரணமஞ் செய்தபின் அவன் விருந்தாந்தத்தினைக் கேட்டனன். அம்மறையவன், தான் விந்தியேசுவரன் என்னும் பெயருடையான் என்றும், இந்திரஜால மகேந்திரஜால வித்தைகளிலும் மந்திர தந்திர மாயாவித்தைகளிலும் கைதேர்ந்தவனென்றும், தான் பற்பல ராஜசமஸ்தானங்களுக்குச்சென்று தன் வித்தையின் பிரபாவத்தைக் காட்டிப்பரிசு பெற்று இப்பொழுது உஜ்ஜினி மாநகரம் வந்துள்ளாஞகவும் தெரிவித்தனன். இருவரும் அளவளாவிப்பேசி நண்பராயினர். அம்மறையவன் இராஜவாஹனனை யுற்றுநோக்கி, அவன் முகக்குறிப்பால் மனத்திலுள்ள கவலையையுணர்ந்து, அவன் மனோவியாகுலத்தை யுரைக்கக்கேட்டனன். ராஜகுமாரனும் அவந்திசுந்தரிபால் தான்கொண்ட காதலை வெளியிட்டுக்கூறினன். அப்பார்ப்பான், எவ்விதத்தானும் அரசகுமாரியை இராஜவாஹனன் பெறுவதற்குவேண்டிய உதவியைத்தான் புரிவதாக வாக்களித்தனன். இருவரும் சிறிதுபோழ்து ஆலோசித்துத் தாங்கள் மேற்கொண்ட காரியம் நிறைவேறுதற்குத்தக்க உபாயத்தையும்

கில் அவன் தனது தலைவிக்குப் பதிலன்கு லொகங்களின் அலைப்பையும் அவற்றி லுள்ள ஆபரணச்சரிய விசேஷங்களையும் எடுத்துக்கூறி யவளை மகிழ்வித்தனன்.

அதிகாரம் 7.

சோழுல்கங்களின் இலக்கணங்களை இராஜவாஹனன் கூறக் கேட்ட அவந்திசுந்தரி பெரிதும் மனமகிழ்ந்து தன் மகிழ்நன் மலயகுளரிக்வனங்கு, 'அப்பா, எடுத்துக்கூறிய வருணனை களால் அலகிலா அறிவு மாகந்தமும் அடைந்தேன். இதற்காக யான் செய்யுங் கைம்மாறுமுண்டோ? என்னை மணந்தின்புறு வதுபோலச், சரஸ்வதியையும் மணந்து இணையற்ற ஆநந்த த்தைத் தாங்கள் அநுபவித்தற்குச் சிறிதும் பொருமையின்றி அநுமதிதந்தேன்; இலக்ஷ்மி சரஸ்வதிகளாற்றங்களுக்குண்டா குஞ் சுகத்திற்கு என்னுள்ளுண்டாம் சுக மீடாகுமோ?' என்று உபசாரங்கூறினள்.

இன்னணம் இராஜவாஹனன் தனது தெவியோடு எல்லா பஞ்செய்து கன்னி மாடத்திற்களித்திருந்தனன். ஒருநாளிரவில் இருவரும் அயர்ந்துறங்குகையிற் கனவிலாரன்னபகதி காளிற் கமலதாலாற் பிணிப்புண்டதனைக்கண்டு, கடிதுவிழித்து நோக் குங்கால், இரண்டு செந்தாமரைமலர்களைச் சுற்றிரவுடைய கண் ணிய கிரணங்கள் சூழ்ந்துகிடப்பனபோல, இராஜவாஹனனு டைய இரண்டு பாதங்களும் வெள்ளிச்சங்கிலியொன்றினால் இறு கப்பிணிப்புண்டிருந்தன. கண்ட அவந்திசுந்தரி காதலற்கு நேர்ந்த இடரிற்கு ஆற்றாது மனங்கலங்கி வாய்விட்டுக்கூப்பி புலம்பினள்; அவள் அழுவதைக்கண்ட அவள் தோழியரும் தாதியரும் உடன் புலம்பினர்கள். கன்னிமாடமுழுவதும் அழுகுரலாரவாரம் நிறைவிற்று, அதனைக் காவல்செய்வோர் விழித்தெழுந்து, யாது சம்பவித்தது என்றறியக்கருதி உட்புகு ந்து பார்த்தனர். அரசகுமாரியின் பள்ளியறையிற் பஞ்சணை யடுக்கிய பரியங்கத்தின்மீது இராஜகுமாரனிருவன் கால்கள் சங்கிலியாற்பிணிப்புண்டு கிடப்பதைக்கண்டு, அவனது தம் பிரமான தோற்றப்பொலிவா லவனை யறிதுகுமற்றுசிலவராய், அக்காவலாளிகள் ஓடோடியுஞ்சென்று உற்றவிதையத்தை விவ

மாய் அரசன் சண்டவர்மனிடங்கூறினர். அரசன் இதனைக் கேள்வியுற்றதும் கோபாவேசங்கொண்டு கண்களினின்றுந் தீப் பொறி பறக்கக் கனன்று கையொடுகை யெற்றிக் கன்னிமாடத் திற்குக் கடிது வந்தனன். அவன் இராஜவாஹனனைக்கண்டதும், தனது தம்பி தாருவர்மன் அகாலமிருத்துவினை யடைதற்குக் காரணியாயிருந்த பாலசந்திரிகையின் கணவனை புஷ்போத்பவ னுடைய நண்பனேயிவன் என்பதையுணர்ந்து கடுஞ்சினமூண் டனன். அரசன் இராஜகுமாரியைநோக்கி, "இவள் யாங்களெல் லோரையும் அவமதித்து எங்கள் அநுமதியின்றி, வரன்முறை யறியாத யாரோவொரு அநாமதேயனைக் கன்னிமாடத்துட் கொண்டு கற்புநிலைகுன்றி இம்மாசற்றகுலத்திற்கு மறுவண்டா க்கி நிலவுலகமுள்ளளவும் நீங்காப்பழியை யாக்கினள். இயல் பாயுள்ள தன் மதியை எங்கேவிடுத்தாள்? இக்காவலையுடைய கன்னிமாடத்துட் புகுந்து கற்பழித்த கசடனகிய இவள் காத லனை யின்றையதினமே கழுவேற்றுகின்றேன்; அக்காட்சியினை இவள்கண்டு களிப்பாளாக." என்று கடுமொழி வழங்கினங் கூறினன். இராஜவாஹனன், இவ்வமயம் வெகுண்டெழுவதாற் பயனின்றெனத்தெளிந்து, ஊழ்வினையின் வல்லபத்திற்கடங்கித் தன் காதலியைநோக்கி, இப்பொழுது நேர்ந்துள்ள துன்பத்தை யநுபவிக்கவேண்டியகாலம் இரண்டுமாதமேயென்று அறுதி யிட்டு அன்னங்கூறியதை எடுத்து நினைப்பூட்டி, அவளை அத் தனை நாளும் பொறுத்திருக்குமாறு வேண்டிக்கொண்டனன். சண்டவர்மன் ஆணையால் அவன் அப்பொழுதே சிறைச்சாலை யிற் செறிக்கப்பெற்றனன். மாளவதேசத்தின் பழைய அரசன் அரசியராகிய மானசாரனும் பெருந்தேவியும் இதனைக் கேள்வி யுற்றுத் தம்மகளின் களவொழுக்கத்திற்காகக் கவன்று வருந் தினரெனினும், கடைசியில் இராஜவாஹனன் தங்கள் மருமகன் தலையறிந்து அவன் கொலையுண்ணின் தமது புதல்வி அமங்கலை யாவதோடுகூட அவளும் இறந்துபடநேருமேனன்று எண்ணி, அவனுக்குக்கொலைத்தண்டனைவிதித்தல் கூடாதென்று ஆலோசி த்ததுமின்றி அங்ஙனம் அவன் இறந்துபடிற் முழும் உடன் உயிர்துறப்பதாகவும் கூறினர். சண்டவர்மன் தான்கொண்ட எண்ணத்தை நிறைவேற்றும் விருப்பினையினும், அம்முதியவர்

கள் இறந்துபோவதாகவும் நினைத்து, விஷயங்கள் யாவற்றையும் விவரமாய்த் தெரிவிப்பதற்காகத் தர்ப்பகாரணுக்குத் திருமுகமெழுதி வேற்றாளிடம் கொடுத்தனுப்பி அவனை எதிர்பார்த்திருந்தான். இதற்கிடையில் அவன், புத்திரபாத்திரனைக் குடும்பத்திலிருந்து பிரித்துவிட்டதுமன்றி அவன் செல்வத்தையும் அபகரித்துப் பொக்கிஷத்திற் சேர்த்துக்கொண்டான். பின்னர்க்கோபமிகுந்த பந்தசானனமோன்றைப் பஞ்சரத்தையே பதுபோல இராஜவாஹனனை வலிய மாங்களாலியன்ற கூண்டொன்றில் அடைத்து உள்ளை உளையும் குடிக்க நீருங்கொடாது, அப்பாவியாசன், அவன் பட்டினியாலிறக்க நேரிடின் அதுவும் நன்றென்றே வாளாவிருந்தனன். ஆயினும் அசினக்குமாரன், தனக்கு மாதங்களனித்த அரிய காகரத்தினத்தை யொருவருமறியாது தனது சிகையில் அணிந்திருந்தமையால், பசிதாகங்களால் வருந்துகளின்றி அழுதமுண்டவன்போல எவ்வித்தக்குறையுமின்றி வஜ்ஜிரசரீரியாயிருந்தனன்.

சண்டவர்மன், தான்விரும்பிய அங்கதேசாதிபதிபின் மகளைப் பலவந்தமாகக்கைப்பற்றி நினைத்து அவன்மேல் சர்வசைன்ய படையுடன் போர்க்கெழுந்து காட்டிலுட்புகுந்து சூரையாடி அவன் நகரமாகிய சம்பாபுரியைச்சூழ்ந்து முற்றுகையிட்டனன். அவன் போகும்பொழுது இராஜவாஹனனையும் கூண்டோடு உடன்கொண்டேகினன். சம்பை மன்னனாகிய சிம்மவர்மன், தனக்குத் துணைசெய்யவென்றுத் துகை விடுத்த பரசர் படையுடன்வந்து துணை புரிதற்குமுன், கோபத்தாற் பொறுமையற்றவனுய்த் தனது படையுடன் போர்க்கோலம் பூண்டு நகரினின்று வெளிவந்து, பகைவனை எதிர்த்துப்பெரும் போர்புரிந்தனன். நெடுநேரம் கொடும்போர்புரிந்தும், முடிவிற் சிம்மவர்மன் தொற்றுப் பகைவர்கையிற் சிக்கினன். சண்டவர்மன் தன் கையகப்பட்ட பகைவனை, அவன் மகள்பாற் தனக்குள்ள காதலால், ஒன்றுஞ்செய்யாது காவலில்வைத்து, நகரினுட்புகுந்து, சிம்மவர்மன் புதல்வி அம்பாலிகையென்னும் அபலாத்தினத்தைக் கைப்பற்றி, மறுநாட்காலை சோதிடர்கள் குறித்த நல்ல முகூர்த்தத்தில் அவளை மணஞ்செய்யத் தீர்மானித்தனன்.

யாவரும் விவாக சம்பிரமத்தில் முயற்சித்திருக்கும்மயத்தில், இமயத்திற்றவம்புரியும் தர்ப்பசாரண்பாற் சென்ற தூதன், அவன் பொறித்தனுப்பிய திருமுகத்தோடு வந்துசேர்ந்தனன். சண்டவர்மன் அதனை முத்திரைநீக்கி வாசித்துப்பார்க்கையிற் பின்வருமாறு வரையப்பெற்றிருந்தது. "பாவம், மூட்டாளே! என் விண்ணக ஆலோசனை செய்கிறாய்? நம்மையெல்லாம் அலகூயற்றிசெய்து காவலையுடைய கன்னிமாடத்திலிட்டுருந்து கற்பழித்த கயவற்குக் கருணைகாட்டலுமுண்டோ? வயது மூத்தமையால் அறிவு கடுமாறியிருக்கும் விருத்தர்களின் அபிப்பிராயத்தை இவ்விஷயத்திற்கேட்டல் அடாது. காமத்தால் அறிவிழந்த அக்கசடனை விதிப்படி சித்திரவதைபுரிந்து அதன் விவரத்தையும் எனக்கு அறிவிப்பாயாக. காமாதுரியாய்க் கற்பிழந்த அம்மங்கையை விலங்கிட்டுக் கடுங்காவலுடன் சிறையிடுவாயாக. எனதினைய சகோதரன் கீர்த்திசாரனையும் தூஷயிட்டுச் சிறைச்சாலையுட்சேர்த்துவாயாக." என்று வரையப்பெற்றிருந்தது.

இதனைக்கண்ட சண்டவர்மன், மறுநாள் வைகறைப்பொழுதிலேயே இராஜவாகனனைக் கொலைக்களங்கொண்டு குறுகிச் சிறிதுந்தாழ்க்காமற் முனையவன்றலையைப் பட்டத்து யானையின் காலாலிடறிக்கால்முதற்கு அதனையாண்டுக்கொணரஆஜ்ஞைசெய்தனன். சண்டவர்மன், அம்பாலிகையை மணமுடித்து இராஜவாகனனையுங் கொன்றபின்னரே அங்கதேசாதிபதிக்கு உதவியாகப் படையெடுத்துவரும் அவனது நண்பராகிய மறுநில மன்னரை எதிர்க்கத்தீர்மானித்தே இங்ஙனம் உத்தரவிட்டனன்.

பரிதி கீட்டிசையிலுதிப்பதற்குச் சிறிதுமுன், இராஜவாகனன் கொலைக்களம் கொண்டுவரப்பட்டனன்; பட்டத்து யானையுங்கொணரப்பெற்றது. அவ்வமயத்தில் அவன் காலைப்பிணித்திருந்த வெள்ளிச்சங்கிலி தானேவே கழன்றுவிழுந்து ஓர் அரமகளாக மாறிற்று. நிலாவொளி வீசும் அத்தெய்வமகள் அவனெதிர்நின்று கூப்பியகையுடன் பின்வருமாறுரைக்கலாயினள்:-

"அரசிளங்குமர! யான் கூறுவதை அன்புடன் கேட்டருள்வாயாக. அடியேன் விண்ணுலக அரம்பையருள் ஒருத்தி; ஸோமரச்மி என்னுங் கந்தர்வனின் புதல்வி; சுரதமஞ்சரிப் பெய

ருடையேன். யான் முன் ஒருநாள் இமாசலத்தினிடையே யுள்ள மந்தாதகசரஸிற்கு மேலாகக் ககனமார்க்கமாய்ப்போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது எதிர்வந்த அன்னப்பறவைகளின் கூட்டமொன்று வழியைத் தடைசெய்தது. அக்கூட்டத்தினை இடைவிலக்கி ஊடுசெல்லக்கருதிய யான் எனது கையை வீசி அவைகளை விலக்கினேன். அப்பொழுது என் கையிலணிந்திருந்த வைரம்பதித்த தங்கச்சங்கிலி கழன்று கீழே பொய்கையில் அர்க்கியம் விட்டுக்கொண்டிருந்த மார்க்கண்டேய முனிவரின் றலைமேல் விழுந்தது. உடனே முனிவர் சினந்து தனது தியானத்திற்குப் பங்கஞ்செய்த என்னைச் சங்கிலியாகப்போகுமாறு சபித்தனர். யான் அஞ்சி மனங்கலங்கி அவர்பாதத்தில் விழுந்து, அபுத்திபூர்வமாய்ச்செய்த எனது பிழையைப்பொறுத்தருளுமாறு பெரிதும் வேண்டினேன். அவர் பின்னர் மனமிரங்கி யான் சங்கிலியாகக் கிடக்கவேண்டியகாலம் இருநிங்கள் அளவேயென்றும் அப்பொழுதும் யான் எனது சுய அறிவுடனிருக்குமாறும் கருணையோடு அருள்செய்தனர். இவ்விரண்டு மாதகாலமும் உனது கால்களைப்பிணித்திருந்த சங்கிலி யானே. முனிவரது சாபமேற்று யான் சங்கிலியாக மாறிக்கிடந்தபிறகு, வித்தியாதரனாகிய வேகவானின் பௌத்திரனும் மானசவேகனின் புத்திரனுமாகிய வீரசேகரனெனப் பெயரிய இக்ஷ்வாகுகுலமன்னன், அச்சங்கிலியைக் கண்டெடுத்து அவ்வுருவிலிருக்கும் என்னையும் இன்னுளென்றறிந்து கைக்கொண்டு போயினன். வீரசேகரன், வத்ஸராஜ குலபூஷணனாகிய நரவாகனதத்தனுக்கு விரோதமாய்த் தர்ப்பசாரமெடு நட்புரிமை பூண்டனன். தர்ப்பசாரன் தனது நண்பனாகிய வீரசேகரற்குத் தன் தங்கை அவந்திசுந்தரியை வதுவையாற்றுவதாக வாக்களித்திருந்தனன். அவ்வித்தியாதரன், தனக்கு மனைவியாக வாய்ப்பவளின் அழகினைக் காணவிரும்பி யொருநாள் நள்ளிரவில் உஜ்ஜினிக்கு வந்து தன் மாயாவல்லபத்தால் எவருங்காணாது கன்னிமாடத்துட் புகுந்து அரசகுமாரியின் சயனக் கிருகத்தை யடைந்தனன். அங்குத் தனக்குத்தேவியாக வரற்பாலளென்று தான் கருதிய அணங்கு உன் கைகளாற்றழுவப்பெற்று உனது மார்பினிடத்து அன்புடன் துயில்வதைக்கண்டு பொறுமைகொண்டு மனம்புழுங்கி, உன்னை உஜ்ஜினி மன்னனிடங்காட்டிக் கொடுப்பமெண்ணித்தன்

கையிற் சங்கிலியுருவுடனிருந்த என்னுல் உன்கால்களைப் பிணித் துப்போயினன். இன்றையதினம், முனிவர் கூறிய சாபம் விமோ சனமாகும் நற்றினமாதலின் என்னுருவினைப் பெற்றேன். சென்ற இரண்டு மதியளவும் உனக்குப் பாதலேவை செய்துவந்தேன். இனி என்னுலெதேனும் ஆகற்பாலதுளதாயிற் கூறுவாயாக," என் றனள். இதனைக்கேட்ட ராஜகுமாரன் அவளை நோக்கி, "யான் றனைநீங்கிச் சிறைவீடு பெற்றமையை எனது பிராண நாயகிக் குக்கூறி அவள் மனக்கவலையை மாற்றுவாயாக. இதுவே எனக் குச் செய்யும் உபகாரம்; இனி விடைதந்தேன் ஏகுதி," என்று கூறி விடுத்தனன். அந்த அப்சரசும் மறைந்து விண்வாயேகினள்.

அப்பொழுது, மணக்கோலம்பூண்ட சண்டவர்மன் அம்பா லிகையைப் பாணிக்கிரகணஞ் செய்யப்புகுங்கால், கள்வனெரு வன் பாய்ந்து அவனை வாளினுற் குத்திக்கொன்றனன் என்றும், பற்றுதற்காகச் சூழ்ந்த நூற்றுக்கணக்கான போர்வீரர்களை யெல் லாம் அக்கள்வனெருவனே கொன்று குவித்து அரசகுமாரி அம்பாலிகையையும் கைப்பற்றி வெளியேகுகின்றனனென்றும் போராரவாரமுண்டாயிற்று. இதனைக்கேட்டதும், இராஜவாஹ னன் ஆண்டுத் தன்னெதிர் நிற்கும் சண்டபோதம் என்னும் பட்டத்து யானையின்மேல் ஆண்சிங்கம்போற் பாய்ந்தேறிப் பாகனை அறைந்து கீழே வீழ்த்திவிட்டுத் தானே யானையை விரைந்து நடாத்தி அரண்மனை வாயிலையடைந்தனன். அங்கு ஓர் அழகியவாலிபன், தன்னைப்பலர் ஒருங்குசூழ்ந்து எதிர்த்த பொழுதும் ஒரு சிறிதும் அஞ்சாது மதயானைபோல யாவரையுங் கலக்கிக் கையிலுள்ள வாட்படையா லெவரையு மணுகவொட் டாது தகைத்து மிக்கலாகவமாக வெளியில் வீராட்டகாசத் துடன் வந்துகொண்டிருந்தனன். இவனை யானைமேல்வந்த இராஜவாஹனன் கண்டு "ஏ! வீரர்க்குள்வீர, உனது புஜபல பராக்கிரமத்திற்கும் அஸ்தலாகவத்திற்கும் மெச்சினேன்; இனி நீ ஒன்றியாய்ப் போர்புரிதலொண்ணுது. என்னிடம் வருதி; உன்னை எதிர்ப்பவரை அரைநொடியில் அந்தகனூர்க் கனுப்பு வேன்" என்று கூவினன். இம்மொழிகேட்ட அவ்வாலிபன், இராஜவாஹனன் இருந்த யானைமேற் பாய்ந்தேறினன். இராஜ வாஹனன், தனது அருகில்வந்த வாலிபன் தன் நண்பனுகிய

அபகாரவர்மன் என்பதை அறிந்து வியப்புங் களிப்புங்கொண் டவனுய், அவனை மார்புறத்தழுவி யருகிலிருத்தினன்; அவனும் அரசிளங்குமரனை யறிந்து வணங்கிப் போராநந்த மடைந்த னன். உடனே யானைமேலிருந்த பற்பல வாயுதங்களையும் இவ் விருவருங் கைக்கொண்டு, தம்மை எதிர்த்தவர் யாவரையுங் கொன்றும் வென்றும் வீதியிற் பவனிவந்தனர். இத்தறு வாயில், பெருஞ்சேனையொன்று அழகுமிக்க இளைஞனொருவ னுல் அணிவகுத்து நடாத்தப்பெற்றுவந்து சண்டவருமன் சேனைமேல் விழுந்து சின்னபின்னமாக்கியது. பகைவர்சேனை முதுகுகாட்டியோடி நாற்புறமுஞ் சிதறுண்டது. இவ்வீரன் யாவனே என்று இராஜவாஹனன் அபகாரவர்மனைக் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுதே, அச்சேனைநாயகன் தனது யானையை விரைவாக நடாத்தி, அவர்பால் வந்து, இருவரையும் வணங்கி, அபகாரவர்மனை நோக்கி, 'ஐயனே! நீ கூறியாங்கு யான்சென்று அங்கமன்னற்கு உதவிபுரியவந்து கொண்டிருந்த துணையரசர் படைகளை முன்னதாக நடத்திவந்து சண்டவர்மன் சேனையை நூழிலாட்டினேன்; எஞ்சியோர் சிதறுண்டனர்,' என்று கூறி னன். அபகாரவர்மன், அவ்வீரனை இராஜஹம்சற்குக்காட்டி, 'ஐய! இவன் எனது நண்பன்; புறத்துலாவும் உயிர்போல்வான்; தனமித்திரன் என்னும் பெயருடையான்,' என்று எடுத்துரைத் துத் தனமித்திரனை நோக்கி, 'அன்ப! நீ எடுத்துக்கொண்ட வேலையை முற்றிலும் இனிது நிறைவேற்றுவாயாக; நீ சென்று அங்கதேசாதிபனைச் சிறைவீடுசெய்து, பகைவர்பாற் பெற்ற கொள்ளைப்பொருளை நமது படைஞர்க்குப் பங்கிடுவாயாக,' என்று கூறிவிடுத்தனன். அவன் சென்றபின், அரசகுமாரனும் அபகாரவர்மனும் தாமேறிய யானையை நடாத்தி நகரினின்று வெளிவந்து கங்காநதியின் கரையைச்சேர்ந்து, ஊர்தியினின்று மிழிந்து அங்குள்ள அழகியதோராலமரத்தினடியிற் குளிர்ந்த நீழலையடைந்து அளவளாவிக் களித்திருந்தனர். அவ்வமயத் தில் ஆயுதபாணிகளான போர்வீரர் பலருடன் தனமித்திரன் தம்மைநோக்கி வருவதைக்கண்டு, இவர்கள் யாவரோ என்று வியந்துநோக்கிக் கொண்டிருக்கையில் அவர்களும் அருகணைந் தனர். அங்ஙனம் வந்தவர்களை இன்னரென்றுணர்ந்து தனது நண்பர்களாகிய உபகாரவர்மா, அர்த்தபாலன், பிரமதி, மித்திர

11051

குப்தன், விச்ருதன், என்னுமிவர்கள் புடைசூழ்ந்துவர மிதிலை மன்னனாகிய பிரகாரவர்மனும், காசிதேசாதிபனாகிய காமபாலனும், சம்பாபுரியரசனாகிய சிம்மவர்மனும் தன்னைக்காணவேண்டி வந்தனரென்பதை யறிந்த இராஜவாஹனன் எழுந்து எதிர்கொண்டு முகமன்கூறி அன்னோரை யுபசரித்து வீற்றிருக்கச்செய்தனன். காணுமற்போன பழந்தனத்தைக் கடவுளருளாற் றிடீரெனக் கண்டவர்போல யாவருங் கழிபேருவகையெய்ன்னுங் கரையிலாக் கடலிலாழ்ந்து களித்திருந்தனர். அப்பொழுது இராஜவாஹனன், தான் நண்பர்களைப்பிரிந்து மாதங்களுடன் பாதலஞ்சென்றதுமுதல் அன்றளவுந்தனக்கு நேர்ந்தவற்றை யறிய வேணவாக்கொண்ட நண்பர்களுக்குத் தனது விருத்தாந்தத்தை விரிவாய் எடுத்துக்கூறியதுமன்றிச் சோமதத்த புஷ்போத்பவர்களின் சரிதைகளையும் நன்முக எடுத்துக்கூறினன். ஆண்டு வந்துள்ள மற்றை நண்பர்களும் தங்கள் தங்களுக்கு நேர்ந்தவற்றை யெடுத்துக்கூறவாரம்பித்து, முதலில் அபகாரவர்மா தனது சரித்திரத்தைப் பின்வருமாறு கூறினன்.

அதிகாரம் 8.

அபகாரவர்மன் சரித்திரம்.

தாங்கள் எங்களைப்பிரிந்தபின், விந்தியாடவியினின்றும் நாங்கள் அனைவரும் ஒருவரையொருவர் பிரிந்துசென்று பற்பல திசைகளிலும் தங்களைத்தேடலுற்றோம். யான், அங்கதேசத்திற்குச்செல்லுமாற்றினைப் பற்றிச்சென்று கங்கைக்கரையிலுள்ள அதன் றலைநகராகிய சம்பாபுரியை அணுகினேன். பட்டணத்திற்குச் சமீபத்திலுள்ள உபவனமொன்றில் மரீசியெனப் பெயரிய தவமுனிவரொருவர் இருந்தனர். அவர் மூதறிவினையும் முக்கால வுணர்ச்சியையும் அற்புத தெய்வத் தன்மையையும் யான்வரும் வழியிற் பலர் சொல்லக் கேள்வியுற்றதனல் அவரைக் கண்டு தங்கள் இருப்பிடத்தையறிய எண்ணங்கொண்டு புறநகர்ப் பொழிலுட்சென்று அவரது ஆச்சிரமத்தை யடைந்து பார்க்கும் பொழுது, ஆங்கோர் இளமாமரத்தினடியில் முதிய முனிவரனொருவன் என்புதோல்போர்த்த உடம்பினையுய்க் கிருஷ்ணஜினத்தில் வீற்றிருக்கக்கண்டேன். அவரையணுகி வந்தனை செய்து வணங்கினேன்; அவரும் என்னை அருகிலிருத்தி

யாவினைனக்கேட்டனர். யான் எனது வலாற்றினைச் சுருக்கி யுரைத்துத் தங்கள் இருப்பிடத்தினை யறியவெண்ணிக் கிரிகாலஞானியாகிய மரீசி முனிவரைக்கேட்க வந்தேனென்றுகூறி, அவரையும் எனக்குக் காட்டுமாறு பிரார்த்தித்தேன். இதனைக் கேட்ட தபசி பின்வருமாறு உரைத்தனர்.

"ஏ! குமார! நீ சொல்லிய பெயரையுடைய முனிவரொருவன் இப்பன்னசாலையில் முன்னொருகாலத்திருந்தனன். ஒருநாள் காமமஞ்சரியென்னும் பெண், மிகுந்த துக்கம் பொருந்திய முகத்தினளாய், முத்துப்போன்ற கண்ணீர்த்துளிகள் தன் கனகடத்தை நனைப்ப, வார்சான்ற மணிக்கூந்தல் மண்ணிற்புரள வந்து, 'வான்முகிலும் மின்னும் வறுநிலத்தில் வீழ்வதுபோல்,' அம்முனிவன் பாதத்தில் வீழ்ந்து புலம்பினள். அவள் தன் மனத்திலுள்ள துயரத்தினை யம்முனிவனுக்கு உணர்த்த ஆரம்பிக்கும் முன்னமே, அப்பெண்ணினது தாய், தனது உற்றோர் உறவினர் பலர் புடைசூழ மிகுந்த கோபத்தோடு ஆச்சிரமத்தை யடைந்து முனிவனை வணங்கி நின்றனள். இதனைக்கண்ட முனிவன் மனமிரங்கி அப்பெண்ணை நோக்கி, 'அணங்கே! நீ துயருறுதற்குக் காரணமென்னை? சொல்வாயாக,' என்று கேட்டனன். அதற்கு அவள், 'ஸ்வாமீ! இதோவந்திருக்கின்ற இவர்களனைவரும் அசாரமாகிய சம்சார பந்தத்தில் அழுந்திய மனமுடையராய், நிலையாகிய உலகதத்துவத்தைப் பெரிதினை எண்ணி ஆத்மலாபத்தை அறவே மறந்துகிடப்பவர்கள். யானோ உலகப்பற்றைநீக்கி உயர்வீட்டினைப் பெறக்கருதியுள்ளனன்; பிறவிப்பெருங்கடல் நீந்துதற்குரிய பெரும்புணையாக நின்னிணையடியைத்தஞ்சமென்றடைந்தேன்; இதுவரை, நாற்குருள்புரிந்நினதுகடனன்றே?' என்று முனிவரன் பாதங்களைப்பற்றிப் பணிந்து நின்றனள். அப்பெரும்தகை அவளது தாய் முனிவனை மீளவும் வணங்கித் தன் குறைகளைப் பின்வருமாறு பகர்ந்தனள்.

"எல்லாம் வல்ல முனிச்சரத்தடனே! அடியேன் கூறுவதில் குற்றங்குறைகளிருப்பினும் நாயினைப் பொறுத்தருள்புரிந்து எனது விண்ணப்பத்தினைக் கேட்டருளவேண்டுகின்றேன். என் புத்திரியை நினைடமண்முற்றில் எவ்வித முன்னை பெருவினையாக என் மகள் கருதுகின்றனள். புத்திரியைத்

கைவிடல் கருமமாகுமோ? கணிகையர் குலத்தைச்சேர்ந்த நாங்கள், எங்களுக்குப் பெண்குழந்தை பிறந்தால் குலவிடு தூதினை முகம் கருதுவது வழக்கம். பெண்குழந்தை பிறந்தது முதல் அதனைச் சீராட்டிப் பாராட்டித் தாலாட்டி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக உயர்ந்த உணவினை மிதமாகவூட்டி இயற்கையழகையும் செயற்கையழகையும் நாளுக்கு நாள் அபிவிருத்தியடைய வளர்ப்போம். பிறந்தகாலந்தொடங்கி அழகினை வளர்ப்பதிலேயே எங்களுக்குக் கண்ணுங்கருத்தும். அப் பெண் ஐந்துவயதடைந்தபின் எத்தகைய ஆடவரையும், பிதாவாயிருப்பினுங்கூடப், பார்க்கலிடோம். பிறந்தகாலில் ஆயுஷ்ஹோமம் முதலிய வைதிகச்சடங்குகளைச் செய்து திருவிழாச் செய்வோம். பெண்களுக்குரிய கல்வியினைக் குறைவறக்கற்பிக்க ஆரம்பிக்குங்காலம் அதுவே. ஏராளமான பொருட்செலவையும் கவனியாமல் நல்ல அநுபவமுதிர்ச்சியினையுடைய தக்கபுத்திமான்களான ஆசிரியர்களைக்கொண்டு எல்லாவித்தைகளையுங்கற்கச்செய்வோம். முக்கியமாகச் சுயபாஷையிலும் சிறந்த தேசாந்தரபாஷைகளிலும் எழுதப் படிக்கக் கற்பிப்பதோடு உயர்ந்த காவியங்களையும் அறியச்செய்வோம். இனிமையாகவும் சாதுரியமாகவும் பேசுதற்கும் சமயோசித வசனங்களை உபயோகிக்கவும் சபாரஞ்சிதமாக உபந்யசிக்கவும் பழக்குவோம். கந்தகதம்ப புஷ்பமாலைவரை சாஸ்திரங்களிலும் பரீக்ஷைகள் செய்வதிலுங் கைதேர்ந்தவளாக்குவோம். சங்கீத சாகித்திய நடன சித்திரசிற்ப நாடக சாஸ்திரங்களிலும், வீணை வேய்ங்குழலாதிய இசைக்கருவிகளைக் கையாளுவதிலும் நிகரற்றவளாக்குவோம். வியாகரணம், தருக்கம், சோதிஷம் என்ற சாஸ்திரங்களில் உயர்ந்த நுண்ணிய அறிவினையுண்டாக்குவோம். எவ்வித்தானும் ஒருவருதவியுமின்றி ஜீவநோபாயம் செய்யக்கற்பிப்போம். சொக்கட்டான் சூது சதுரங்க முதலிய விளையாடல்களிற்பழக்கி அவற்றுள் எதிரியை வமாற்றும் தந்திரங்களையும் பணயம் வைக்கும் முறைமையையும் வெல்லும் உபாயங்களையும் நன்றாக அறிவுறுத்துவோம். திருவிழாக் காலங்களிலும் மற்றும் பலர் கூடும் சமயங்களிலும் ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு போகும் முறைகளைத் தெரியப்படுத்துவோம். பெரியோரைப் புகழ்வதிலும் வசைகளுக்கு இரங்குவதிலும் கவனிக்கவேண்டிய

வற்றைக் கடைப்பிடிக்கச் செய்வோம். இவ்விதமாக அப் பெண்ணை எல்லா நலங்களிலும் சிறந்தவளாகச் செய்தபின்னர், அவளைப் பெரிதும் விரும்பும், அன்றி யவளாற் பெரிதும் விரும் பப்பெற்ற, ஆடவனெருவனுக்கு அளிப்போம். அழகு குலம் மேன்மை கல்வி அறிவு சாமர்த்தியம் முதலியவற்றிற் சிறந்தா னெருவனுக்கே பெண்ணைக் கொடுப்போமெனினும் அவன் செல்வவந்தனாக இருக்கவேண்டும் என்பதை முக்கியமாகக் கவ னிப்போம். அவரவர்களும் சக்திக்குத்தக்க பொருள்களைக் கொடுப்பவராயிருப்பினும் பெரும்பொருள் கொடுப்பவனுக்கே பெண்ணைக்கொடுப்பது எங்கள் வழக்கம். இங்ஙனம் கிடைக் கும் பொருளில் கற்பித்த ஆசிரியர்களுக்கும் ஒரு பங்குண்டு. எது எவ்விதமாக இருந்தபோதிலும் அப்பெண், தாய், தாய்க் குத்தாய் என்னுமிவர்கள் சொல்வழியில் அணுவளவும் தவறாமல் நிற்கவேண்டும். வினைவசத்தால் இதோ நிற்கும் இப்பெண் கணி கையர் குலத்துட்பிறந்து காமனும் விரும்பும் போழுகும் கருதற் கரிய கல்விநலனும் பெற்று எங்கள் குலதீபமாக விளங்குகின்ற னள். தெய்வசங்கற்பத்தால் இக்குலத்திற் பிறந்தவிவள் குலத் திற்குரிய தருமத்தை அநுஷ்டித்தலைக் கைவிட்டு அதற்கு விரோதமாய், ஏன், ஈசுவர சம்மதத்திற்கும் விரோதமாய்த் தனக்கெனப் புதுவழியொன்றைக் கற்பித்துக்கொண்டனள். கண்ணுக்கழகனை அந்தணவிளைஞனெருவனைக்கண்டு காமுற்று அவனையே தனக்குத் தலைவனாக் கொண்டொழுகுகின் றனள். அவன் அழகினைத்தவிர வேறுசெல்வம் ஒன்றும் அவன்பாலின்று. பதியிலார் குலத்துட்பிறந்தும் அவனையே பதியெனக்கருதிக் கற்புடைய குலஸ்திரீபோல நடக்கும் இந்தக் குலாசாரத்தைக் கைவிட்ட கொடியபாவியால் என் குடும்பம் அழிந்தது. இவளை விரும்பிவரும் செல்வவான்களை இவள் நிந்தித்துப் புறக்கணித்தமையால் அவர்கள் கோபமும் வெறுப்பு மேற்கொண்டு போயினர். அவர்களாற் பிழைத்த எங்கள் கதியினி என்னாகுமோ? எங்கள் கைப்பொருளையெல்லாஞ்செல விட்டுச் செப்பமடைந்தவிவள், குலத்தைக் கெடுக்கும் கோடாலிக் காம்பாயினளே யென்று மனம் வருந்திய யான், இவளுக்கு நற்புத்திகற்பித்து நல்வழிப்படுத்த எண்ணி இவளைக் கண்டித்த தனால், இவள் என்னையுங் குடும்பத்தையும் வெறுத்து யாவற்றை

யுந்துறந்து இவ்வனத்திற்குத் தவஞ்செய்ய வந்துவிட்டனள். ஆசாரஹீனையாய்க் குடும்பத்தைத் தெருவிலலையவிட்ட இவளுக்கு வீடுங்கிட்டுமோ? கடவுளும் அருள்புரிவரோ? இவளையே நம்பியிருக்கும் யாங்கள் இனி எங்ஙனம் பிழைப்போம்?" என்று கண்ணீராறுகப் பெருக்கிக் கதறியழுதனள்.

இதனைப்பார்த்த மரீசி முனிவன், அப்பெண்ணை நோக்கி, "அணங்கே! நீ தவஞ்செய்யவேண்டி இங்கு வந்துள்ளாய். தவமென்பது சாமானியமன்று; அது பற்பலதுன்பங்களுக்கு இடனையது. மேலும் உன்னைப்போன்ற மெல்லியராற் சிறிதும் தாங்கற்கரியது. தவத்தாற் பெறற்பால பயன் இருவகைத்து; ஒன்று, இணையற்ற இன்பமயமான மோக்ஷத்தைப் பெறுவது, மற்றொன்று சுவர்க்காதிபுவன போகங்களைப்பெறுவது. இவற்றுள் முன்னையது, அடைதற்கரிய அநந்த ஞானத்தாற் பெறற்பாலது; பின்னையது யாவராலும் எளிதினெய்தக்கூடியது; அவரவர்கட்கென்று விதிக்கப்பெற்ற தருமத்தைச் சரிவர அனுசரித்துச் சன்மார்க்கத்திலொழுகித் தமக்கும் பிறர்க்குந் தாம் செய்யவேண்டிய கடமைகளை நன்கு நிறைவேற்றுபவர்கள் யாவராலும் இது சுலபமாய் அடையப்பெறும். ஆதலால் நீ மீண்டுசென்று குடும்பத்தைச்சேர்ந்து தாய் சொல்வழியில் நிற்றலே யுனக்குத் தக்கது," என்று உபதேசித்தனன். அதற்கு அம்மடந்தை, சிறிதும் மனமொவ்வாதவளாய், "சுவாமி! அடைக்கலம் புகுந்த என்னைக்காத்தலின்றிக் கைவிடுவீராயில், அநாதையாகிய யான் கடிதில் தீப்பாய்ந்து உயிர்துறப்பேன். இஃதுண்மை," என்று கண்கலுழ்ந்துரைத்தனள். இதைக்கண்ட முனிவன் அந்நங்கையின் பிடிவாதத்தை யுணர்ந்து, தான் மறுப்பின் ஒருகால் பிராணத்தியாகம் செய்வளோ என்று அஞ்சி, அவளது தாய் முதலியவரை நோக்கி, "நீங்கள் இவளைச்சின்னாள் இவண் விட்டேகுங்கள். துறவியாய்த் தவம்செய்வதிலுள்ள கஷ்டங்களை இவள் அநுபவித்தறிந்தால் எனதுபதேச மொழியிலுள்ள உண்மை புலப்படும். பின்னர் இவள், தானே வீட்டிற்குத்திரும்பி உங்களையடைந்து சொல்வழி நிற்பாள்," என்று கூறினன். அவர்களும் அதற்கு மனமொப்பி அப்பெண்ணை அம்முனிவனைச்சிரமத்தில் விடுத்துப்போயினர். சிலகாலத்திற்குள் இவளது கல்வி கேள்வி யறிவுநலங்களையும் அதிதீவிர பக்திமுதிர்ச்சியையும் கண்ட முனி

வனது மனத்தை இவள் மகிழ்வித்துக் களிக்கச்செய்தது ஒரு வியப்பன்று. ஒருசமயம் அம்மாது, "அறத்தைக்காட்டிலும் பொருளின்பங்களைப் பெரியனவாக உலகங் கருதுகின்றதே! இஃதென்ன வியப்பு!" என்று கூறி நகைத்தனள். இதைச் செவிசார்த்தியு முனிவன், "குழந்தாய்! அர்த்தகாமங்களைக்காட்டிலும் தருமம் உயர்ந்ததெங்ஙனம்? அதனை நீ எங்ஙனமறிந்தாய்? கூறுதி," என்று கேட்டனன். அதற்கு அவள், "ஐயனே, இவ்வரிய விஷயத்தினைக் கூறுமாறு எனக்கு ஆணைகந்தது என்னைப்பரிகசிப்பதுபோலாம்; ஆயினும் ஒன்றிற்கும் பற்றுகபேதையனுடைய புன்மொழியைக் கேட்டுக் களிப்படையக் கருதுகின்றீர்கள். ஆதலால் ஆணையைச் சிரமேற்கொண்டு பேசுகின்றேன். பொருட் பொருத்தமும் சொற்றிருத்தமுமில்லை என்பேச்சினை அன்புடன் ஏற்றருள்வீராக," என்று கூறிப் பின் வருமாறு கூறினள்.

"அறஞ்செய்தவனுக்கே பொருளுமின்பமு முண்டாம்; ஆதலால் அறமின்றிப் பொருளுமின்பமும் பயன்படா. அறமே முடிவில் அழிவிலா வின்பத்தைத்தருவது; மோக்ஷத்திற்கு முதற் காரணமாய் நிற்பது.

"திருந்திய நல்லறச் செம்பொற் கற்பகம்
பொருந்திய பொருளொடு போகம் பூத்தலால்
வருந்தினு மறத்திற மறத்த லோம்புமின்
கரும்பெனத் திரண்டதோட் காலவேற் கணீர்."

என்று பெரியாரும் கூறியுள்ளார். மானசீக தியானத்தாலேயே ஆத்மலாபத்தைத் தருவது அறமன்றே? பொருளின்பங்களைப் போலப் புறக்காரணங்களால் அது வேற்றுமைப்படாது. அறவழிகளில் அழுந்திய மனத்தூய்மையுடையோரைப் பொருளின் பங்களாலுண்டாகும் குறைகள் ஒன்றுஞ்செய்யா; ஒருகால் அவை பங்கப்படுத்தினும், சிறிது நன்முயற்சியாற் பண்டை நிலையைப் பெறலாம்; அம்மட்டோடன்றி முன்னுண்டான குற்றங்கள் முற்றிலும் நீங்கப் பெறுவதோடு, கிரகணகாலத்தில் ஒளிமழுங்கியிருந்த சந்திர சூரியர்கள் பின்னர்த் தோன்றி முன்னிலுஞ்சிறந்து ஒளி வீசுவதுபோலப், பண்டையிலும் பன்மடங்கு சிறந்த நிலைமையை யடைவர்.

"இதற்குதாரணமாக இதிகாசபுராணங்களில் அநேக சரித் திரங்கள் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. பிதாமகன் தான் படைத்த திலோத்தமையைத் தானெவிரும்பியதும், சிவன் துரோணரது மனைவியைத் தூசுகளைந் தன்னமிடச்சொல்லியதும், மேலும் அவர் தாருவன முனிவர்பால் விடசங்கமத்திருவுரு வுடன் பிச்சையேற்கச் சென்றதும், கிருஷ்ணன் பதினாயிரங் கோபிகா ஸ்திரீகளை மணந்ததும், சூரியன் குதிரையையும் வாயு வானரத்தினையும் அத்திரிமகர்ஷி மானினையும் சேர்ந்ததும், சந்தி ரன் குருபத்னியையும் இந்திரன் அகலிகையையும் பராசரன் தாசகன்னியையும் வியாசர் அம்பிகை அம்பாலிகையையும் கூடிய தும் ஆகிய இன்னோரன்ன செயல்களெல்லாம் அரக்கருஞ்செய்ய அஞ்சத்தக்கன வல்லவோ? இவற்றுல் மேலுரைக்கப் பெற்றவர்க் குண்டான குறைவு எவ்வளவு? இவை அன்னோர்தம் பரிபா கத்தை அழித்தனவோ? பக்தியாற் சுத்தியடைந்தமனம், தூளி படலத்தாலழுக்கடையாத ஆகாசம்போல, எவற்றுலும் மலின மடையாது நிர்மலமாகவே இருக்கும். ஆதலால், தருமத்தின் பிரபாவத்தில் நூற்றிலொரு பங்கேனும் இவ்வர்த்தகாமங்கள் உடையனவாக அடியேன் ஒருபொழுதும் கருதேன்."

இவற்றைக்கேட்ட அம்முனிவனுக்கு அவள்பால் உண் டான காதலுக்கு அளவேயில்லை. அவன் அவளை நோக்கி, "அணங்கே! நீ மிகநன்றுகப்பேசினை; நித்தியாநித்திய வஸ்து நிர்த்தேசம் செய்து உண்மைப்பொருளை யுள்ளவாறறிந்தவர் களின் பக்திக்கும் இப்பிரபஞ்ச சுகத்திற்கும் எவ்விதப் பொருத் தமும் இல்லையென்று நாம் கருதக்கூடாது; ஆயினும் பிறவி முதல் இந்நிலையிலிருக்கும் என்னைப் போன்றவர்கட்கு அத்த காமங்களின் உண்மைத் தன்மை எவ்வாறறியக்கிடக்கும்? ஆத லால் அவற்றின் தன்மையையும் அவைகளைப் பெறும் உபாயங் களையும் அவற்றுலுண்டாகும் பயன்களையும் அறியவேண்டுவது அத்தியாவசியமாகும்," என்று கூறினன். அம்மாது பின்வரு மாறு பகர்ந்தனள்; "ஐயனே! பொருளின தியல்பு பொருளை யீட்டுதலும் ஈட்டிய பொருளை வளர்த்தலும் பின்னதனைச் சற்பாத்திரத்திற் செலவிடுதலுமாம். இதற்குக் கருவி விவசாயம் பசுபாலனம் வியாபாரம் இராஜரீகம் முதலிய தொழில்களாம்.

யின், தலைகுனி நிற்கிறார் செல்வதென்பது கடமைகளை யினிது நிறைவேற்றுதலும் அறுத்செய்தலுமாம். காமமாவது, குலம் குணம் கல்வி அறிவு செல்வம் ஆயுள் முதலியவற்றில் ஒப்புமையுடையோராய தலைவனும் தலைவியும் ஒருவரையொரு வர் விழைந்து, இவ்வுலகத்தில் அநுபவிக்கும் இன்பமாம். இதற் குச் செல்வமும் அழகும் சிறந்த கருவிகளாம். அநுபவித்தா லாயினும் ஏனையோரால் இத்தன்மைத்தென்று உரைக்கப்பட்டா தகாய் அநுபவித்தார்க்கும் வாய்விட்டுரைக்க முடியாததான இவ்வுலக ஆகந்தமே அகன்பாலும்."

இவற்றைக் கேட்ட முனிவன், அவளது செல்வன்மை யாலும் உயர்ந்தினைகத்தாலும் அறிவழிந்து அவள் அழகென் னும் வலையிற்சிக்கித் தான்மேற்கொண்ட துறவறநிலையமறந்து அவள் வசப்பட்டு நின்றனன். தான் சாத்தவழிபொழுதுமியல் பினனை அடைய, அம்மாது தன்னுடன்கொண்டு இரதமொ ன்றிலேறி நகரம்புகுந்து இராஜவீதியிலுள்ள தன் வீட்டை யடைந்தனள். அவர்கள் வரும் வழியில், முகசமுறையார் மற்றை காட்டினும் மன்மதன் நிருவிழாவென்று பாராட்டிக்கொண் டிருந்தனர். மறுநாட்காலையில் அம்முனிவன், அம்மாதின் கட்ட ளைப்படி, மதுரி முதலியவற்றைநீக்கி உயர்ந்த வாசனைத்திரவியங் கள் கலந்த பனிநீரில் ஸ்நானஞ்செய்து, சந்தன குங்கும பரிம ளமான்மதமணிந்து, அடையாபரணங்கிருதவுப்பக் காம வடிவாரிற் றன்னைமேற்கொண்டு, அக்கணிகை மாதினிடம் சென் றுடன்ந்து புறம்போந்து, நகரமாந்தர் பலருங்காண மதயானை சவுந்தரஞ்செய்து மனைசேர்ந்து, கபமனைக்கவரும் புறக்கம்போழில் யடையடிவழுந்தான். அக்கணிகைமாதும், தன்னிலும்பாருகணைப் பொருந்து தணைந்தாலும் நரியாது மின்பற்றிவரும் அம்முனிவனை யுடன்கொண்டு, இராஜவீதிகளின் வழியாக நகரலக்ஷணத்தை வுரைத்துக்கொண்டுசெய்யவரும் காலையைவும் கண்ணியரையும் காட்டிப், பலர்கூடி மன்றக்கூடலுற்ற சென்று நகரிலோரைச் கண்காட்சி காண்பித்துச் சோலைக்கு அழைத்துச்சென்றனன். அங்குப்பல மாதர்கள் புடைசூழ அரசன் முகலியார் இருந்த னர். முனிவனுடன் சென்ற காமமஞ்சரியைக் கண்ட அரசன், "அணைத்தே! முனிவருடன் வந்திருப்பாயாக" என்று

இருக்கையிற்று உபசரித்தனள். அவளும் அரசன் முதலியோரை வணங்கிக் குறித்த ஆசனத்தமர்ந்தனள். அப்பொழுது அங்குவந்திருந்த மடந்தையருளொருத்தி யெழுந்து அரசன் பாதங்களில் விழுந்து வணங்கி, "ஐயனே! நான் இவளுக்குத் தோற்றதாக ஒப்புக்கொண்டேன்; இனி நான் இவளுக்கு அடிமையே" யென்று கூறினள். யாவரும் காமமஞ்சரியைக்கொண்டாடினர்; அரசன் அவளுக்கு விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் கொடுத்துச் சம்மானஞ்செய்தனன். அவற்றைப்பெற்றுக்கொண்டு அவள், நகரமாந்தர் பலரும் புகழ்ந்துகொண்டாடத் தன்னில்லத்திற் சேர்ந்தனள். போகும்வழியில் அவள் முனிவனை நோக்கிப் பின்வருமாறு கூறினள்: "பெருமைமிக்க முனிவர! தங்களால் நான் கிருதார்த்தையாயினேன்; தாங்கள் எனக்குச் செய்த உதவி மிகப்பெரிது; அதற்காக எனது மனமார்ந்த வந்தனங்களைச் செலுத்துகிறேன். இனித் தங்களிஷ்டம்போலத் தவத்தினையியற்ற வனத்திற்குத் தயைகூர்ந்து மீண்டருள்வீராக," என்றனள். இதனைக்கேட்டலும் இடியோசைகேட்ட நாகம்போல மனமுடைந்து அம்முனிவன், "அழகுமிக்கபாவாய்! இஃதென்ன? இவ்வுதாசீனம் எதனால்? என்பால் எப்பிழை கண்டனை? இதுகாறும் என்மேல் நீ காட்டிவந்த கழிபெருங்காதல் யாண்டேகியது?" என்று கரைந்தான். இம்மொழியேற்ற அம்மங்கை புன்னகைபுரிந்து, "ஐயனே! அரசன் முன்னிலையில் எனக்குத்தோற்றதாக ஒப்புக்கொண்ட அவளுக்கும் எனக்கும் முன் ஒருநாள் ஒரு விவாதம் எற்பட்டது. அதன்கண், மிகுந்த வைராக்கியத்தோடு தவம்புரியும் மரீசி முனிவரனை என்வசப்படுத்தும் வல்லபம் எனக்கிராது என்று, அவள் வீண்வாதம் பேசினள். யான் 'அங்ஙனமே அவரை வசப்படுத்திலுல் நீ யாதுசெய்வை?' என்று அவளொடும் பந்தயங்கூறி ஒட்டினேன். அவ்விதம் முனிவனைவென்றுல், தான் எனக்கு அடிமையாவதாகச் சபதம் செய்தனள்; யான் தோற்றேனெனில் அவளுக்கு அடிமையாக ஒப்பினேன். எளியேன்பால் தாங்கள் காட்டிய பெருங்கருணையால், யானை பந்தயத்தைக்கெலித்தேன்," என்றுகூறி நகைத்துப்போயினள். இதனைச் செவிசார்த்திய முனிவனுக்கு உண்டான நிகைப்பும் வியப்பும் அளவிலடங்குமோ? தான் தனது அறிவிழந்து உயர்நிலைதவறிய

கின்றேன். எனது முன்னோர் அநுஷ்டித்துவந்த ஒழுக்கங்களையும் கொள்கைகளையும் கைவிட்டுப் புறச்சமயிகளின் பொய் வழியை மெய்வழியாக்கொண்டது எனக்கு முற்றிலும் அருவருப்பைத் தருகின்றது. சுருதிஸ்மிருதிகளை அலகையாடுஞ் செய்து வருவிக்கப்பட்ட தம்மத்தைக் கைவிட்டு ஆசாரஹீனருடைய கொள்கைகளைப் பரிசோதிக்காமலும் கொண்டாடப்பெற்று வந்த தெய்வத்தை ஓதாமல் நிந்திக்கும் இப்புறச்சமய உபதேச மொழிகளைச் செவியேற்றிருத்தல் என் மனத்திற்குச் சிறிதும் பொருத்தமாயில்லை. ஆகலால் இம்மாதக்கடியிற் றனியேயிருந்து என்னிதயை நொந்து புலம்புகின்றேன்," என்றனன். இதனைக் கேட்டபான், அவனது துன்பத்திற்கு மனமிரங்கி, அவனைக் கொஞ்சகாலம்பொறுத்திருக்க அறிவுறுத்திக் கூடிய சிக்கிரத்தில் அவன் இழந்த பொருளையெல்லாம் மீட்டுத்தருவதாக வாக்குறுதி செய்துபோயினன். பின்னர் யான் அச்சம்பாபுரியுட் புகுந்து, ஆண்டுள்ள பல கையர் கயவர்களின் கபடநாடக வஞ்சகங்களை வெல்லும் உபாயங்களை யாராய்ந்தும், சாதுக்களான நல்லவர்களின் பொருளை யபகரித்துச் செல்வ வந்தர்களான கொடியர்களைத், தாங்கொண்ட அந்தியாயார்ச்சிதப்பொருள்களை, எவ்விதத்தானும் உடையவர்பால் விடச்செய்து அத்தீயரை முன்னைய வறியநிலைமைக்குக் கொணர்ந்து நிறுத்தும் வழிகளை யாலோசித்தும், தீர்க்கமான எண்ணத்திலாழ்ந்து நின்றேன்.

அன்று காலையிலேயே யான் அவ்வூரிலுள்ள பல சூதாடுகழகங்களிலுஞ்சென்று பல சூதர்களோடுஞ் சேர்ந்து பழகினேன்; இருபத்தைந்து விதமான சூது விளையாடல்களையும் அவற்றுள் ஒருவரையொருவர் பிறரறியாது வமாற்றும் ஜால வித்தைகளையும் பொய்ப்பாய்ச்சிகைகள் செய்யும் வித்தையும் அவற்றையுருட்டும் அல்லகவங்களையும் நன்முகக் கவனித்து அறிந்துகொண்டேன்: சூதாடும்பொழுது எதிரியை மறைபொருள் பொருந்த வைதுபேசுதற்கும், கையிற் பொருளில்லாவிடினும் டம்பமாய்ப்பேசிப் பணயம் வைப்பதற்கும், எதிரியை மயக்கி அவன் ஆட்டத்தைக் கெடுப்பதற்கும், கசமுசி பிரிப்பதற்கும், வைத்த பணயத்தைத் தந்திரமாய் மாற்றுதற்கும், ஏமாற்றுகளை

கயப்படுத்தியுங் கோழையை அச்சுறுத்தியும் இருவர்பாலும் பொருளை யெட்டியமட்டும் தட்டிப் பறிப்பதற்கும், கையிற் கிட்டிய பொருளைத் தாராளமாய்ப் பலர்க்கும் பங்கிட்டுக்கொடுப் பதற்கும் இன்னோரன்ன பலவழிகளிலும் எனக்கு நிகரெவரு மில்லையென்று பலருஞ்சொல்லுமாறு புகழ்படைத்தேன். ஒரு நாள் இருவர் சூது விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது ஒரு வன் தவறியாடியதைக் கண்டு, அருகிலிருந்த யான் சிரித்தேன்; உடனே அதனைக்கண்ட மற்றையோன் பெருங்கோபங்கொண்டு என்னை நோக்கி, "சிரிப்பு என்னும் வியாஜத்தால் அவனுக்கு ஆட்டங் கற்பிக்கின்றனையோ? நீ யாது அறிவை? அவன் சூதிற் குப் புதியன்; நீ என்னை வெல்ல வல்லவனையின், அவனுக்குப் பதிலாக நீயே என்னுடன் ஆடுதி. இன்றேல் வாய்வாளாமை மேற்கொண்டு ஒரு மூலையிற் பதுங்கிக்கிட," என்று சினந்து கூறினன். உடனே யான் ஆண்டுள்ள பலரையும் சாக்ஷிவை த்து அவர் அநுமதியின்மேல் அவனுடன் ஆட ஆரம்பித்துப் பதினாயிரம் தினார் மோகராக்களைப் பணயமாக வென்று கைப் பற்றினேன். பாதித்தொகையினை யச் சூத மகாசபையிற் பிர முகாயினர்க்கு வெகுமதியாகப் பங்கிட்டுக்கொடுத்து மிகுந்த பாதி மோகராக்களைக் கைக்கொண்டு சென்றேன். யாவரும் எனது வள்ளற்றன்மையைப் புகழ்ந்து கொண்டாடினர். அவர் களுடைய சபாக்கிராசனதிபதி எனக்கு விருந்து செய்து உபசரித்தனன், எவனுக்குச்சார்பாக நின்று ஆட்டத்தை வென் றேனை, அவன் விமர்த்தகனென்னும் பெயரினையுடையான். அவனுக்கும் எனக்கும் அத்தியந்த சிநேகமுண்டாயிற்று; அவன் என்னிடத்திற் பெரிதும் நம்பிக்கைவைத்து என் சொல் வழி நிற்பவனையினன். அவன் மிகுந்த அன்புடன் என்னைத் தனது வீட்டிற்கு அழைத்துச்சென்று ஆதித்தியஞ்செய்தனன். அவனைச் சம்பாபுரியிலுள்ளோர் யாவரது விருத்தாந்தமும் நன் கறிந்துகொண்டேன். ஒருநாள், சிவபெருமானது நீலகண்டம் போல இருண்ட நள்ளிருளில், யான் கருநிறமெய்ப்பை யணிந்து கன்னக்கோல் கத்தரிக்கோல் பற்றுக்குறடு பொய்த்தலை மாயாஞ் ஞனம் சொக்குப்பொடி மாயவிளக்கு அளவுநாடா கர்க்கடகக் கருவி மணிக்கயிறு விட்டிற்பட்டி முதலிய உபகரணங்களோடு வாளேந்திய ஏகயினனுய் வீட்டை விட்டு வெளியேறினேன்.

அந்நகரத்திற் பெயர்பெற்ற செல்வனாகிய சாவகாரியொருவன் வீட்டிற் புகுந்து அவனது பணப்பொட்டியைக் கைக்கொண்டு வெளிவந்தேன். நான் இராஜவீதியின் வழியாகவரும்பொழுது, விண்ணின்றிழிந்து மண்ணிற் சஞ்சரிக்கும் மின்னற் கொடி-போன்ற ஒளியுருவமொன்றினைக் கண்டேன்; அணுகிநோக்குங் கால் அஃதோர் அழகிய அணங்காயிருத்தலையறிந்து, அவள் அந்நகரினைக் காவல்செய்யும் காவற்றெய்வமோ என்றையுற்று நின்றேன். அப்பெண்ணும் என்னைக் கண்டஞ்சி நின்றனள். யான் அவளைநோக்கி, 'நீ யாவள்? எங்கிருந்து வருகின்றனை? எங்குப் போகின்றனை?' என்று வினவினேன். அவளும் அச்சந் தோடு பின்வருமாறு பகர்வாளாயினள்.

"இவ்வூரில் குபேரதத்தன் எனப் பெயரிய வணிகனொருவனுளன்; யான் அவன்மகள். யான் பிறந்தகாலமுதல், இந்நகரிற் சிறந்த செல்வமுள்ள வணிகபுத்திரனை தனமித்திரனுக்கு என்னை விவாகம் செய்வதாக என்பிதா வாக்களித்திருந்தனன். தனமித்திரன் தனது பிதா இறந்த பின்னர்த் தன் ஆட்சியின் கீழ்வந்த அளவற்ற ஐசுவரியத்தையெல்லாம் தனது ஒளதாரியகுணத்தால் வறியோர்க்கீந்து தான் வறிஞனாயினன். யாவரும் அவனை வள்ளலென்று கொண்டாடிப் புகழ்ந்தனர்; ஆயினும் அவன் பரமஏழை ஆய்விட்டமையால், என்பிதா என்னை அவனுக்கு மணஞ்செய்விக்க மனமின்றிப் பெண்கொடேனென்று மறுக்கின்றனன். இப்பொழுது எனது தந்தை என்னை இந்நகரில் மகததேசுவரியவானை அர்த்தபதி என்பானுக்கு விவாகஞ்செய்யத்தீர்மானித்துள்ளான். அவ்வர்த்தபதியோ தனது பெயரை யதார்த்த நாமமாகக் கொண்ட பெருந்தனிகன்; என்னை யவனுக்கு விவாகஞ்செய்ய நாளையதினமே நல்லதினமென்று முகூர்த்ததினமுங் குறிப்பிட்டாயிற்று. இம்மணம் நிறைவேறாமலிருக்கவும், என்மனங் கொள்ளைகொண்ட காதலனாகிய தனமித்திரனை விவாகஞ்செய்து எனது பிதா முன்னர்ச் செய்துள்ள வாக்கினை நிறைவேற்றவுங்கருதி யான், எனது பெற்றோர் முதலிய எவருங்காணாவண்ணம் இந்நள்ளிருளில் எனது அன்பனாகிய தனமித்திரன் வீட்டிற்குநோக்கிச்சேறன். அவன் வீட்டிற் குப்போகும்வழியை யான் குழந்தை முதலறிவேனாதலாலும்,

என்காதலே எனக்கு வழித்துணையாக நிற்பதாலும், இவ்விரு ண்ட நிசியில் துணிவுடன் புறப்பட்டேன். இதோ என் ஆபத ணைப்பெட்டி, இதனைப் பெற்றுக்கொண்டு என்னைத் தடையின் றிப்போக வழிவிடுவாயாக," என்றுகூறி அம்மாது தன் கையி லிருந்த அருங்கலச் செப்பினை என்கையிலீந்தனள்.

அதனைப்பெற்றுக்கொண்ட யான், அவளுடைய நிலைமை க்கு மனமிரங்கி, 'அழகுடைய மங்காய்! நினது அன்பிற்கு வியந்தேன்; ஒரு சிறிதும் அஞ்சலை; உன்னை யானை நினது காதலன் வீட்டிற்கொண்டு சேர்ப்பல், வருதி,' என்றுகூறி அவளது அச்சத்தைத்தெளிவித்து அழைத்துச் சென்றேன். சிறிதுதூரம் சேறலும், ஊர்க் காவலாளிகள் கைகளிற் றீவர்த்தி களோடு பெருங்கூட்டமாய்க் கடுகி யெதிர்வரக் கண்டோம். இவர்களைக்காணலும் அப்பெண் நடுநடுங்கிளள்; யான் அவளை நோக்கிப், "பெண்ணே! நீ ஏன் அஞ்சுகின்றனை? என்னைப்பல ரும் ஒருங்குசேர எதிர்ப்பினும் எனது கைவாளால் அனைவரை யும் கண்டதுண்டமாக்கி வெல்லும் வல்லபம் எனக்குண்டு. ஆயினும் நின்பொருட்டாக அங்ஙனம் போர்புரியாது, தந்திரத் தாற் றப்பிப்போக உபாயங்கூறுவல். சற்றுச் செவிசாய்த்துக் கேட்டி. யான் விஷதிருஷ்டியால் மயங்கினவன்போல விழுந்து கிடப்பேன்; நீ அவர்களைப்பார்த்து, 'நாங்களிருவரும் இன்றிரவு இங்ஙகர்க்கு வந்தோம்; இதோ என் கணவன் கருநாகமொன்றுற் கடிப்புண்டு விழுந்து கிடக்கின்றனன். எவரேனும் மணிமந்திர ஔஷதங்களால் விஷத்தைப்போக்கி அவனுக்கு உயிர்தந்தருளி னால், அவருக்கு எந்நாளும் கடவுள் அருள்புரிவார். அகதியா கிய ஏழையென்மேல் அன்பு பாராட்டுங்கள்,' என்று மனமிர ங்கக்கூறுவாயாக," என யாங்கள் தப்புதற்கு வழியையும் கற்பித் துக்கொடுத்தேன்.

பயத்தினால் மனங்கலங்கியிருந்த அப்பெண்ணும், அவளு க்கு இயல்பாயுண்டான நடுக்கத்தினால் யான் கூறியாங்கு நடிக் கத்தக்கவளாயிருந்தனள். யான் விடந்தலைக் கேறியவன்போல மயங்கிக்கிடந்தேன். காவலாளிகளும் வந்தனர். அப்பெண் ணும் யான் கூறியாங்குக் கபட நாடகமியற்றினள். அக்காவ லருள் ஒருவன், தனக்கு விஷபரிகாரஞ் செய்யத்தெரியுமென்று

கூரினைக்கு உயிர்ப்புவரப் பலவித முயற்சியும் செய்தனன். ஒன்றும் பயன்படாமற்போகவே, அவன் அப்பெண்ணைநோக்கி, 'மாதே! இவன் இனி உயிர் பிழையான்; விதியின் வல்லமையை யாவரே வெல்ல வல்லார்? நீதுன்புறுவதாற் பயனின்று; இன்றி லவுகழிய நானை வைகறையில் நீ உனது நாயகனுக்குச் செய்ய வெண்டிய ஈமக்கடன்களைப்புரிய, யாங்கள் உதவிபுரிவோம். அதுவரை நீ உடலைக்காத்திரு,' என்று கூறித்தன் தோழரோடு காவற்பெழுன்மேற் போயினன். இன்னணம் இவர்கள்போன பின், யான் எழுந்து அம்மங்கையை யழைத்துக்கொண்டு அவளன்பன் வீட்டினை யடைந்து, அவளைநோக்கி, "ஐய! யான் ஒரு கள்வன்; இந்நகாவீதியில் வரும்பொழுது, இம்மாது, தனது காதலன்றி வேறு துணையிலாதவளாய் நின்பால் வரு வதைக்கண்டு மையலுற்று, யானே அவளுக்குத் துணையாக உடனழைத்துவந்து உன்வயின் விடுத்தேன். அவள் விலை யுயர்ந்த நகைப்பெட்டியும் சிறிதா இருக்கின்றது; அதனையும் பெற்றுக்கொள்." என்று கூறிப் பேழையையும் அவன்கைக் கொடுத்தேன். இதனைக்கண்ட அவ்வணிக குமாரன், "நண் பனே! நீ எனக்குக் கொணர்ந்த அரும்பொருட்கு விலையில்லை. உன்னை வந்தித்து வாழ்த்தவும் என் சொற்கள் போதா. நீ செய்துள்ள செயலை நினைக்குங்கால், எனக்கு அளவற்ற வியப் பும் விம்மிதமும் உண்டாகின்றன. என்னுயிரையே எனக்குத் தந்த உனக்கு யான் என்ன கைம்மாறியற்றமுடியும்? இச்செய லால் என்னை உனக்கு அடிமையாகக் கொண்டனை. என்னு டலையுனக்கு அடிமையாக்க எண்ணினேனே; என்ன மூடமதி! அஃதெம்மாத்திரம்! என்னுயிரனைய காதலியைத்தந்த உனக்கு இச்சடபதார்த்தமான உடலோ கைம்மாறுகும்? நீ இவளை என் பாற் சேர்த்திராவிடில், என்னுயிர் அந்த உடலை மிக்களிதி லுறந்து போயிருக்குமே," என்று கூறி என்னடியில் வீழ்ந்து பணிந்தனன். யான் அவனை வாரியெடுத்து மார்போடணைத்து, "நண்பனே! உலகங்கொண்டாடும் வள்ளலாகிய உனக்கு, யான் செய்தது ஓருபகாரமாகுமோ? இது கிடக்க; இனிமேல் யாது செய்யப்போகின்றனை? அதனை யுரைப்பாயாக," என்று கேட் டேன். அவன் அதற்கு, இப்பெண்ணையவள் பெற்றோர் அந மதியின்றி மணந்துபின்னர் இந்நகரில் வசிக்க எண்ணுவது அபா

யத்துக்கிடமாகுமென்றும், எனக்கும் அதுவே கருத்தாகுல், இன்றிரவே தான் தன் காதலிண்ய யுடன்கொண்டு சம்பாபுரியை விட்டு நீங்கித் தூரதேசங்களுக்குப் போய்விடத் தயாராக இருப்பதாகவும் கூறினன். இதனைக்கேட்ட யான், "நண்ப! புத்தியும் சக்தியும் உடையவனுக்குத் தன்றேசமென்றும் பரதேசமென்றும் வித்தியாசமில்லை. ஆயினும், இளங்கொடிபோற்றுவளும் இம்மெல்லியலை யுடன்கொண்டு செல்வது என் மனத்திற்குச் சம்மதமில்லை. பெற்றோரையு முற்றோரையும் பிரிந்து செல்லும் வருத்தம் இவள் மனத்தை வருத்த, தூரதேசப் பிரயாணச்சிரமம் இவள் உடலைவருத்த, இவற்றைக்கண்டு நீ இடைவிடாது வருந்த இப்பொழுது சம்பவித்தது என்ன? என் புத்திக்கெட்டிய மட்டில், நீ இவளை மணந்தபின் இந்நகரிற் றைரியமாய்த் தங்கியிருப்பதால் எவ்வித அபாயமும் உண்டாகாதென்று நிச்சயமாக உரைப்பேன். நான் இப்பொழுது கூறப்போகும் உபாயத்தினைச் சிறிது கவனிப்பாயாக. இன்றிரவே இவள் நம்மிருவரையும் தனது பிதாவின் மாளிகைக்கு அழைத்துப்போகட்டும். பின்னர் யான் சொல்வழி நீ கேட்பாயாக," என்று கூறினேன். அவன் அதற்குச் சம்மதித்தனன். நாங்கள் மூவரும் அப்பெண்ணின் வீட்டையடைந்தோம். அவளே யெங்களுக்கு வழிகாட்டியாகவும் ஒற்றுகவும் அமைந்தனள். தனமித்திரனும் யானும் அவள் உதவியால் வீட்டிற்புகுந்து மண்பாண்டங்களைத் தவிர மற்றை யெல்லாப் பொருள்களையும் ஒன்றும் விடாமற் களவாடிக்கொண்டு அப்பெண்ணை அவள் வீட்டிலேயே இருக்கச்செய்து, ஒருவருமறியாமல் வெளியேறித் திருடிய பொருள்களை யோரிடத்திற் புதைத்து மறைத்துவிட்டு வீதிவழியாகப் போய்க்கொண்டிருந்தோம். அப்பொழுது நகரமாந்தர் பலர் கூட்டமாக எதிர்வந்தனர். அவர்கள் எங்களை யணுகுமுன் இராஜவீதியின் ஓரமாக ஓர்யானை நின்றுகொண்டிருக்கக் கண்டு, இருவரும் வேகமாகப்பாய்ந்து அதன் மேலேறி, அவ் யானைமேலிருந்த பாகனை யடித்துக்கீழே தள்ளிவிட்டு அதனை நடத்திச் சென்றோம். அவ் யானை மதம்பிடித்திருந்தமையால் தன்னெதிர்ப்பட்டோர் பலரையும் சாய்த்துத்தள்ளிக் காலால் மிதித்துக் கொன்று கனவேகமாகச்சென்றது. தனமித்திரன் வீட்டின் பின்புறத்துள்ள சாலையின்வழியாக அம்மத்தமா செல்லும்

பொழுது, யாங்களிருவரும் எங்கள் தலைக்குமேல் அருகிலிருந்த மரக்கினைகளை யிறுகப் பற்றிக்கொண்டோம்; அந்தயானை தன் வழியே சென்றது. உடனே யிருவரும் கீழிறங்கித் தனமித்திரன் வீட்டையடைந்து உட்புகுந்து நன்னீரில் ஸ்நானஞ் செய்து, சயனித்துக் கிட்டிசையிற் பரிதியெழுமளவும் மெய்ம் மறந்துறங்கினேம். உதயகாலத்தில் எழுந்து காலைக்கடன்களை முடித்து, முதலிரவில் யாங்களியற்றிய தொழிலைப்பற்றி நகரமாந்தர் யாது பேசிக்கொள்கின்றன வென்பதை அறியவிரும்பி வீட்டை விட்டு வெளிக்கிளம்பினேம். குபேரதத்தன் வீட்டிலுள்ள பொருள்கள்யாவுங் கொள்ளையடிக்கப்பெற்ற விஷயத்தைக் கேள்வியுற்ற அர்த்தபதி, மனம்வருந்தித், தனக்கு இனி மாமனாக வருபவற்குற்ற இடையூற்றை நீக்கக்கருதி, ஆயிரம் மோகராக்கள் அடங்கிய பணப்பையை அவன் உபயோகத்திற்குக் கொடுத்தனுப்பி உபகரித்ததுமன்றி, விவாகத்திற்கு இப்பொழுது அவசரப்படவேண்டாமென்றும் ஒருதிங்கள் கழித்த பின்னர்க் கடிமணம் முடிக்கலாமென்றும் கூறியனுப்பினன்.

பின்னர் யான் தனமித்திரனுக்குச் சில விஷயங்களைப் போதித்துத், தொலைந் செய்யப்பெற்ற அழகிய பணப்பையொன்றுடன் அரசனிடஞ் சென்று பின்வருமாறு விண்ணப்பஞ் செய்யச் சொல்லினேன். "இராஜசிகாமணியாகிய தங்கள் பாதாரவிந்தங்களுக்கு இந்நகர வாணிகனாகிய வசுமித்திரனது புதல்வன் தனமித்திரன் மிகுந்த வணக்கமாய்ச் செய்துகொள்ளுமாம் விண்ணப்பம். ஐயனே, அடியேன் கைப்பொருளை யிழந்து வறியனைதாற் பலரும் என்னை நிந்தித்திகழத் தலைப்பட்டனர். நான் செல்வவானையிருந்த காலத்தில் எனக்கு மணம் புரிவிப்பதாகப் பன்முறையும் வாக்களித்திருந்த குபேரதத்தன் தனது புதல்வியினை, இப்பொழுது காலகதியால் ஏழையான எனக்குக் கொடேனென்று மறுத்துவிட்டுத், தனிகனை அர்த்தபதிக்கு விவாகம் செய்விக்கத் தீர்மானித்துள்ளான். காதலியையும் மானத்தையும் ஒருங்கே யிழக்க நேர்ந்தமைக்குப் பெரிதுந் தாபமடைந்த யான் இவ்வுலக வாழ்க்கையினை வெறுத்துக் கடல் தலம்புரிந்து மறுமைக் காயினும் நற்கதிபெறவெண்ணிக் காட்டிற்குச் சென்றேன். அங்கு ஒருநாள் நான் காதலியை யிழந்த

துன்பம் பொறுதவனுய் வாளோயோச்சி எனது கழுத்தைபறுத் துக்கொண்டு உயிர்மாய்க்கத் துணிந்தபொழுது, சடைமுடியுஞ் செங்கலாடையு முடையனுய் விபூதி ருத்திராக்க முதலிய சிவசின்னங்களைப்பூண்ட முனிவரனெருவன் எதிர்ப்பட்டு, இங் ஙனம் மனமுடைந்து உயிர்விடத் துணிந்தமைக்காக என்னைக் கண்டித்து, என் எண்ணத்தை மாற்றி யென்னையுந்தேற்றினன். அவன் என்னைநோக்கிப், 'பிள்ளாய்! தற்கொலைபுரிவது பாவ மென்பதை யுணர்ந்திலையோ? இழந்துபோன பொருள்களை மீளவும் பெறுதற்கு உபாயங்கள் பலவுள; ஆனல் இறந்துபோன உயிர் மீண்டுவராது. அளவற்ற ஐச்வரியங்களை நினைத்தபோது பெறும் வல்லமை எனக்குண்டு; எடுக்க எடுக்கக் குறைவுபடாத உலவாப்பணப்பை யொன்று என்னிடமுளது. நீ வேண்டிய பொருள்களையெல்லாம் இச்சித்தபொழுதே அது கொடுக்கும். துறவியாகிய எனக்கு அப்பையினற் பயனில்லை; வேண்டுமாயில் உனக்கு அளிக்கின்றேன். இப்பணப்பையினை எக்காலத்திலே னும் பிறருக்குக்கொடுக்க நீ நினைத்தால் யான் இப்பொழுது சொல்லும் இரகசியத்தை நன்கு கவனிப்பாயாக. இப்பை வணிகர்க்கும் கணிகையர்க்குமே பயன்படும்; ஏனையோர்க்குப் பயன்படாது. இதனற் பொருள்பெறக்கருதிய ஒருவன், முத லிற் செய்யவேண்டிய தொன்றுண்டு; தான் பிறரை வஞ்சித்து அநியாயமாய்ச்சேர்த்த பொருள்களை யெல்லாம் அப்பொருளு க்கு உடையவர்பாற் கொடுத்துவிட வேண்டும்; பிறகு தம்மிடத் துள்ள பொருள்கள் யாவற்றையுஞ் சத்பாத்திரமான அந்தணர் க்கு அளித்துவிடவேண்டும். இவற்றைச்செய்த பின்னர் இப் பைக்குப் பூஜைசெய்து இதனை இரவில் இரகசியமாகக் காப்பி ட்டு வைக்கவேண்டும். மறுநாட் காலையில் எழுந்துபார்க்கும் பொழுது விலையுயர்ந்ததான அளவற்ற நிதியங்களை இதன்கட் காணலாம். தெய்வத்தன்மையுள்ள இப்பையினைப் பெற்றுக் கொள்,' என்று கூறி அதனை என்கையிற்கொடுத்து அம்முனி வரன் மறைந்துபோயினன். ராஜச்ரேஷ்டனே, தங்கள் அநு மதியின்றி அப்பையினை யான் வைத்திருத்தல் கூடாதென்று கருதி அதனையும் ஈதோ கொண்டுவந்துள்ளேன்." என்று இவ்விதமாகத் தனமித்திரனை அரசனிடஞ் சொல்லச் சொன் னேன்.

மேலும் யான் அவனை நோக்கி, "நண்ப, இங்ஙனம் நீ அரசற் குரைத்தால், அவனும் உனது இராஜவிசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் மகிழ்ந்து, பையினைக்கொண்டு வெண்டியபொருளுக உனக்கு அநுமதி தருவான். அவன் உத்தரவினைப் பெற்றுக்கொண்டு, இப்பையினது பெருமையை யுணர்ந்த பிறர் இதனை உன்னிடத்தினின்றும் அபகரித்துக்கொள்ளாமல், காப்பாற்றுமாறு அரசனை வேண்டிக்கொண்டு உனது வீட்டிற்கு மீள்வாயாக. பின்னர் உன்கையிலுள்ள பொருள்களையெல்லாம் தானஞ்செய்துவிடு. பிறகு நள்ளிருளில், நாம் திருடிப் புதைத்து வைத்திருக்கும் அளவற்ற பொருள்களிற் சிலவற்றை யெடுத்துப் பையினை நிரப்பிவிடுவாயாக. வழிநாட் காலையில் அதனை யெடுத்துக்கொண்டு வணிகர் ஆவணத்துட் சென்று பலர்க்கும் அப்பையினது பெருமையை யெடுத்துக்கூறி உன்பொழின்மேற் செல்வாயாக. குபேரதத்தன் இதனைக் கேள்வியுற்றதும், இப்பொழுது மருமகளைக்கொள்ள நினைத்திருக்கும் அர்த்தபதியினை யொரு சிறிதும் பொருட்படுத்தாது, தன் மகளை உனக்கே கொடுக்கத் தீர்மானித்துவிடுவான். இதனை உணர்ந்து அர்த்தபதி கோபங்கொண்டு குபேரதத்தனை அடியோடு கெடுக்க முயலுவான்; ஆயினும் அவன் அங்ஙனம் செய்தற்குமுன் அவனை நீயே முந்திக்கொவணண்டியாக்கி விடவேண்டும்".

எல்லாம் யான் கூறியபிரகாரமே நிகழ்ந்தன. யான், எனக்குச் சூதாட்டத்தில் நண்பனை விமர்த்தகனை அர்த்தபதிக்குச் சிநேகனைப்போல நடிக்கச்செய்து, அவனுக்கும் தனமித்திரனுக்கும் விரோதத்தை உண்டுபண்ணினேன். தெய்வச்செயலாகத் தனமித்திரனுக்கு உண்டான பாக்கியத்தைக்கண்ட குபேரதத் தன் தன் மகளைத் தான் முன்னர்க் கூறியுள்ள வாக்குறுதியின் படி அவனுக்கே மணம்புரியத் தீர்மானித்தனன். அதுபற்றி அர்த்தபதியினை அலக்ஷியஞ்செய்தனன். அதனால் அவனுக்கு அளவிலாக்கோபம் மூண்டது.

அக்காலத்திற் காமமஞ்சரியின் இனிய சிநேகிதியாகிய ராகமஞ்சரி பாடலாடலாதியவற்றிற் சிறந்து பக்குவமடைந்திருந்தனளாதலின் அவளை யரங்கேற்றுவிக்கவேண்டிய முயற்சி நிகழ்ந்தது. அரசனுக்கிய சிறந்த நகரமாந்தர் பலரும் அவைக்

கட்டுமுடியிருந்தனர். அவள் அரங்கமேடையேறி யாவர்க்கும் வந்தனம் புரிந்து ஆடல்புரிந்தனள்; அவள் பேரழகினைக் காண்டலும் என் மனமும் ஊசலாடத் தொடங்கியது. யான் என்வசந் தப்பிப் பாவசமாயினேன். என்றும் நான் கண்டறிந்திராத புதியதோர் காதலுணர்ச்சி என் மனத்திலுதித்தது. பலபடக் கூறியென்; யான் அவளைப்பெறுது உயிர்வாழ்தலுமரிது என்ப தெனக்குப் புலனுயிற்று. பின்னர் எங்ஙனம் நிகழ்ந்ததென்பதி யானறியேன்; ஆடலின் முடிவில் அவள் அன்புடன் என்னைக் கடைக்கண்களால் நோக்கிப் பொருள்பொதிந்த புன்னகை புரி ந்து அரங்கினின்றும் புறம்போந்தனள். யான் வீட்டிற்கு வந் ததும் மனவமைதியற்றவனுய்த் தலைவலியென்னும் வியாஜத் தோடு படுத்துக்கிடந்தேன். காதலின் நிலையை முன்னரே அநுபவித்து அறிந்த தனமித்திரன், தலைவலியின் உண்மை யின்னதென்பதை உணர்ந்து, என்னை நெருங்கி, அவ்விராகமஞ் சரியின் உத்தம குணங்களைப் பலவிதமாகப் புகழ்ந்துரைத்து அவளை எவ்விதத்தாலும் பெறுதல் கூடுமென்று என்னைத்தேற் றிப் பின்வருமாறு கூறுவானுயினன். "அன்பனே! அவ்விராக மஞ்சரி கணிகையர் குலத்துதித்தும் நற்குலத்திற் பிறந்த கன்னி போல உயர் குணங்களையுடையாள். அவளைக் குணத்தினு லடையலாகுமே யன்றிச் செல்வத்தாலடைய முடியாது. மணஞ் செய்துகொண்ட புருடனையன்றி வேறெவரையுங் கண்ணெடுத் துப்பாராக் கற்பினையுடையாள் அவள். ஆதலால் அவளை விவாக மூலமாகவே பெறவேண்டும். அவளுடைய நற்குயும் தமக்கை யும் தம்மாலியன்றவளவும் அவள் மனத்தை வேறுபடுத்த முய ன்றும் ஒரு சிறிதும் பயன்படாமைகண்டு, அரசனை யணுகி அவ ளது குலவிரோதமான செய்கையைக்கூறி, எவனேனும் தங் கள் சம்மதமின்றி அவளை அபகரித்துக்கொண்டுபோனுல் அவ னைத் திருடனுக நிர்ணயித்துத் தண்டிக்கவேண்டுமென்று பெரி தும் வேண்டிக்கொண்டனர்; அவனும் ஒப்பினன். ஆதலால் ஏராளமான பொருள் கொடுத்தாலன்றி அவளை உற்றருறவின ரிடமிருந்து பெறுதல்முடியாது; அவளோ குணநலங்கண்டன்றி யொருவனை மணவாள்," என்று தனமித்திரன் கூறிமுடித்தனன்.

இதனைக் கேட்ட யான் சிறிதுபோழ்தாலோசித்துக் காம மஞ்சரியின் பிரதான வேலைக்காரியாகிய பௌத்தபிக்ஷாணி

பொருத்தியைத் தூதியாகக்கொண்டு எனக்கு அவள் தங்கை பாலுண்டான காதலை அவளுக்குத் தெரிவிப்பதுடன், யான் தனமித்திரனுடைய தெய்வீகப் பணப்பையைத் திருடிக் காம மஞ்சரிக்குக் கொடுக்கத் தயாராயிருப்பதாகவும் அதற்குப் பதி லாக இராகமஞ்சரியை எனக்கு விவாகம்செய்து கொடுக்க வேண்டுமென்றும் அவளிடம் அறிவிக்குமாறு விடுத்தேன். காமமஞ்சரியும் அதற்கு மனமொப்பினள்; யானும் தனமித்திர னுடைய பணப்பையை அவளிடம் கொடுத்து அன்றே இராக மஞ்சரியை மணந்துகொண்டேன். பின்னர் என தூத்தரவின் படி, அர்த்தபதியின் நண்பனைப்போல நடிக்கும் விமர்த்தகனுக் கும் தனமித்திரனுக்கும் ஆவணவீதியிற் பெருஞ் சண்டையுண் டாயிற்று; அதில், விமர்த்தகன் தனமித்திரனை நோக்கி, 'எந்தப் பணப்பையின் செருக்கினால் நீ துள்ளுகின்றனையோ, அதனை நாளையே இழந்துபோவாய்; வன்மையுடையனைல் அதனைக் காப்பாற்றிக்கொள்,' என்று யாவருமறியப் பேசினன். அதற் கேற்ப அன்றிரவே பணப்பை காணுமற்போகவே, தனமித்திரன் அரசனிடஞ்சென்று, முதல்நாள் ஆவணத்தில் தனக்கும் விமர்த் தகனுக்கும் அர்த்தபதியின்பொருட்டு நடந்த விரோத சம்பா ஷணத்தை யெடுத்துக்கூறி, அன்றிரவே பணப்பை காணுமற் போனதையுங் கூறித் தனக்கு நியாயமளிக்க வேண்டினன். அரசன் அர்த்தபதியை யழைத்து விமர்த்தகனைக்கொணருமாறு ஏவினன்; ஆனால் விமர்த்தகன் என் ஆணையைச் சிரமேற்றாங்கித் தங்களைத் தேடிக்கொண்டு உஜ்ஜினிமா நகரத்திற்குப் போய் விட்டமையால், அவனை அர்த்தபதி பல இடங்களிற் றேடிப்பார்த் துங் கண்டிலன், அவன் விமர்த்தகனை அந்நகரிற் றேடிப்பாராத சூதசபையுமில்லை தாசிவீடுமில்லை. எங்குங்கண்டிலாது அவன் திகைத்தலை யறிந்த அரசன், அர்த்தபதி தன் நண்பனை எங் கேயோ ஒளித்துவைத்துவிட்டு இராஜதண்டனைக்குப் பயந்து அவனை வெளிக்கொணராது பாசாங்கு செய்கின்றனனென்று தீர்மானித்து அவனைச் சிறையிலிட்டனன்.

சின்னாள் கழித்தபின், காமமஞ்சரி தான் பெற்ற அரிய பணப்பையின் பயனை அடையக் கருதி, முதலில் தான் விரூபகனிடமிருந்து அநியாயமாய் அபகரித்த எல்லாப்பொருள்

களையும் அவனிட மொப்புவித்தனள். வறுத்தபாயிறு முளைத்தது போலத் தன்கைக்கு மீண்ட பொருள்களைப்பெற்ற விரூபகன் தான் கொண்ட பிக்ஷாடவின் கோலத்தையும் பௌத்த சந்நியாசிகளின் கூட்டுறவையும் அறவே யொழித்துத் தன் வீட்டுக்குத் திருமி வழக்கம்போலத் தன் தொழில்புரிந்து நின்றனன். பிறகு காமமஞ்சரி தன் கையிலுள்ள பொருள்களையெல்லாம் அந்தணர்க்கும் அறவோர்க்கும் தானஞ்செய்து விட்டனள். இவற்றையெல்லாம் யான் தனமித்திரனுக்குக் குறிப்பித்தேன். அவனும், என் உத்தரவினைப்பெற்று அரசனையடைந்து காமமஞ்சரியின் செயல்களை எடுத்துக்கூறிப் பணத்திற் பேராசைகொண்ட அவள் இவ்விதமாகத் தருமஞ் செய்ய முகாந்தரமொன்று மில்லையே! அதனால், தான் இழந்த தெய்வத்தன்மையுள்ள பணப்பை அவள்பாலிருக்கவேண்டும், என்று தனக்குள்ள ஐயப்பாட்டினையும் அறிவித்தனன். இதனைக் கேட்டலும் அரசன் அக்காமமஞ்சரியை இராஜசபைக்கு வர ஆஜ்ஞாபித்தனன். இதனையறிந்த யான் காமமஞ்சரியை நோக்கி, 'அரசன் உன்னை இப்பொழுது அழைப்பதன் கருத்தினை உணர்வைகொல்? எதிர்பாராத உனது தயாள குணத்தினாலும் ஔதாரியத்தினாலும், தனமித்திரனுடைய காணுமற்போனபை உன்னிடத்திலிருக்கவேண்டும் என்று அநுமானங்கொண்டனன் போலும். அவன் அங்ஙனங் கேட்கில் நீ யாது கூறுவை?' என்று கேட்டேன். அவள் இன்னது சொல்வதென்றறியாது கலங்கினள். யாவருங் கலந்து பேசியதில் அவளுடைய நற்றாய் கூறிய யுக்தியின்படித் தாங்கள் அர்த்தபதியினிடமிருந்து பெற்றுக்கொண்டதாகக் கூறத் தீர்மானிக்கப்பெற்றது. அவள் அங்ஙனம் கூறுவதற்குப் போதிய சான்றுகளுமிருந்தன. தனமித்திரனிடமிருந்து பையைத் திருடியவன் அர்த்தபதியின் நண்பனை விமர்த்தகன் என்ற விஷயம் நகரம் முழுவதும் அறிந்ததொன்றுதலாலும், அர்த்தபதிக்கும் காமமஞ்சரிக்கும் நெருங்கின பழக்கமுண்டாதலாலும், இவள் அர்த்தபதியிடமிருந்தே யப்பையினைப் பெற்றிருக்கவேண்டுமென்ப தநுமிக்கத் தக்கதாயிற்று. காமமஞ்சரி அவ்விதமே யரசனிடங் கூறலும் அரசன் அர்த்தபதியின்மேற் பெருங் கோபங்கொண்டு அவனைக் கழுவிலேற்றத் துணிந்தனன். ஆயினும் தனமித்திரன் அரசன் பாதமலரிற்பணி

ந்து, தன் பொருட்டு எவனும் உயிர்துறத்தல் கூடாது என்று பெரிதும் வேண்டிக்கொண்டதனால், அரசன் அர்த்தபதியின் செல்வத்தைப் பிடுங்கி இராஜ்ஜிய பொக்கிஷத்திற் சேர்த்து அவனையுந் தேசப்பிரஷ்டனாக ராஜ்ஜியத்தினின்றும் துரத்தி விட்டனன். அடுப்பு நெருப்பும் போய் வாய்த்தவிடுமிழ்ந்த அதிர்ஷ்ட ஹீனையாகிய காமமஞ்சரிக்குத் தனமித்தான் வேண்டு கோளால் அரசன், அவள் உண்பதற்கும் உடுப்பதற்கும் போதிய பொருளை அவ்வர்த்தபதியின் பொருளினின்றும் ஒரு சிறிது எடுத்துக்கொடுத்தனன். நான் இராகமஞ்சரியை ஸ்வர்ணத் தாலும் நவரத்தினத்தாலும் நிறைந்த எனது மாளிகைக்கு அழைத்துச் சென்றேன்.

மனிதன் எவ்வளவு புத்திமானாக இருப்பினும் ஊழ்வினையை வெல்லுதல் எளிதன்று; மதியால் விதியைவெல்ல முடியுமோ? ஒரு நாள் நான் என் காதலியாகிய இராகமஞ்சரியுடன் அறு சுவை யுணவுண்ட பின்னர் மதுபானஞ் செய்து மகிழ்ந்திருந் தேன். 'கள்ளினுமுளது கொல் கருத்தழிப்பதே,' என்று கூறிய படி மதுமயக்கத்தால் மதிமயங்கிய யான் இன்னது செய்தால் இன்னது நிகழும் என்பதை யாராயாது, குடிவெறியிலிருப்ப வர்கள் தமது வழக்கத்தொழிலைப் பலரறிய வெளியிடுவதுபோல, என் மனைவியை நோக்கிப், 'பெண்ணே! இங்ஙகரிலுள்ள அரும் பொருள்களை இவ்விரவே கொள்ளையடித்துவந்து இவ்வீட்டை நிரப்பப்போகின்றேன்; நீ என் வல்லபத்தைப்பார்ப்பாய்,' என்று வீரவாதம் பேசி வாளாயுதத்தைக் கையிலெடுத்து வீதியிற் புறப்பட்டேன். இயன்றஅளவு தடுத்தும் தடைபடாது செல் லுகின்ற என்னைப் பின்தொடர்ந்து சென்று அழைத்துவருமாறு என் மனைவி தனது செவிலியாகிய சுருகாளிகை என்பவளை உடன் அனுப்பினள். சிறிது நேரத்திற் கெல்லாம் யான் கரந்து செல்வதைக்கண்டு ஐயுற்ற காவலாளர்களாற் பற்றப்பட் டேன். சிறிதளவு எதிர்த்துப் போர்புரிந்தேனெனினும் மதி மயங்கிக் கீழே விழுந்த என்னை யாவரும் எளிதிற் பிடித்து விலங்கிட்டனர். அப்பொழுது சுருகாளிகையும் அங்குவந்து சேர்ந்தனள். ஊர்க்காவலோடு செய்த சண்டையாற் சிறிது வெறிதெளிந்து அறிவுகூடப்பெற்று, இப்போது தென்னசெய்வ

தென்று ஆலோசித்தேன். ஆண்டு நிற்கும் சுருகாளிகையை நோக்கி, 'ஏ, அறிவற்ற கிழப்பேயே! உனக்கு இங்கென்ன வேலை? ஓடிப்போ! எனது பொய்ந் நண்பனையும் பேராசை பிடித்த உன் மகள் இராகமஞ்சரியையும் ஒன்று படுத்த நீ செய்த தந்திரங்களெல்லாம் தொலைந்தன. அவனுடைய பணப்பையும் அவளுடைய நகைகளும் திருடப்பெற்றனவாதலால் இனி ஒன்றும் உன்னுற் செய்ய வியலாது. இனிச் சந்தோஷத்துடன் உயிர்துறப்பேன்,' என்று உரக்கக் கூவினேன். அவள் யான் கூறிய குறிப்பையுணர்ந்து அக்காவலரைக் கண்ணுங் கண்ணீருமாய் நோக்கி, 'பெரியோரே! இவன் கூறுவது முழுதும் உண்மையே, சின்னண்முன் எனது பொருள்களெல்லாம் களவு செய்யப்பட்டன. இவனைச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்; தயைசெய்து நீங்கள் அநுமதி தருவீராக,' என்றனள். அவர்கள் உத்தரவின்மேல், அக்கிழவி என் கால்களில் விழுந்து, தன் மகளினுடைய கொள்ளையிடப்பெற்ற பொருள்கள் எவ்விடத்துள்ளன வென்பதைத் தனக்குத் தெரிவிக்குமாறு கல்லுங்கரையப் புலம்பியழுதாள். அவளுடைய துன்பத்திற் கிரங்கினவனைப்போல யான், கீழே கிடந்த அவளைத்தூக்கி நிறுத்திக் கொண்டே அவளது காதில் அவள் இன்னசெய்யவேண்டுமென்பதை யொருவருமறியாமற் சொல்லிவிட்டேன். அதனைக் கேட்ட அவள் யாவருங் கேட்கும்படி உரத்த குரலால் என்னை யாசீர்வதித்துப் போயினள். காவலாளிகள் என்னைச் சிறைக்களங்கொண்டு போயினர்.

மற்றை நாள் யான் நகரநியாயாதிபதியாகிய காந்தகன் என்பவன் முன்னுற் கொணர்ந்து நிறுத்தப்பெற்றேன். இக்காந்தகன் தனது பிதாவினது நியாயாதிபதி ஸ்தானத்தை அவன் காலஞ்சென்றபிறகு இப்பொழுதுதான் சமீபகாலத்திற்குமுன் அடைந்தவன்; சிறிதும் தான் மேற்கொண்ட தொழிலில் அநுபவமில்லாத இளைஞன். மேலும் அறிவின்மை ஆணவம் தற்பெருமையாகிய துர்க்குணங்களுக் கிருப்பிடமானவன். அவன் என்னை நோக்கி, 'நீ தனமித்திரனுடைய பணப்பையையும் திருடிய பொருள்களையும் திருப்பிக்கொடாவிட்டால், பதினெண்விதமான கொடிய தண்டனைகளைப்பெற்று முடிவில் சிரச்சேத

மடைவாய்.' என் றர்த்தித்தேன். யான் அவளைப் பார்த்து நகைத்து, 'யான் திருடிய பொருள்களிலெவற்றைக் கொடுப் பினும், பொய்த்தோழுகிய தனமித்திரனது பையை மாத்திரம் கொடேனென்று மறுத்துவிட்டேன். அதனல் அவன் உத்தர வின்படிக் கசையடி படிக்கப்பெற்றேன். இத்தண்டங்களால் அவர்கள் என்பால் அறிந்ததொன்றுமில்லை. பயத்தாலும் பயத் தாலும் பலவித உபாயங்கள் செய்தும் என்பாலெதுவும் பலிக்க வில்லை. ஒவ்வொருவரும் இது வீண்வேலை யென்று போயினர்; யானும் வாளா சிறைச்சாலையிலிருந்தேன். சின்னளில் யான் பெற்ற கசையடிப்புண்களும் ஆறி மாறின.

கடைசியில், ஒருநாள் மாலையில் சந்தகாளிகை நல்ல ஆடை யணிகளணிந்து புன்னகை பொருந்திய முகத்தோடு யானிரு க்கு சிறைச்சாலைக்கு வந்தனள். காவலில்லாத சமயம்பார்த்து அணுகி என்னைத்தழுவிப் பின்வருமாறு பேசலாயினள். "ஐயனே! நீ நல்ல அதிருஷ்டசாலி. உன்னுடைய தந்திரங்கள் வீணுகப்போகவில்லை. நீ கூறிய வண்ணம் விஷயங்களைத் தன மித்திரனுக்கு உரைத்தேன். அதற்கிணங்க அவனும் அரச னிடத்திற் சென்று, நீ உனது நண்பனிடத்தும் மனைவிமாட்டும் உண்டான ஆதாரமற்ற சமுசயத்தினுற் பணப்பையினையும் நகை களையும் திருடிக்கொண்டு ஓடும்பொழுது காவலாளிகளாற் பிடிக் கப்பெற்றுச் சிறைவைக்கப்பட்டனை யென்றும், இப்பொழுது நகைப்பெட்டியினைத் திருப்பிக் கொடுத்துவிட்டது போலப் பணப்பையினையும் கொடுத்துவிட்டால் உன்மீது கருணைபாரா ட்டிச் சிறைவீடு செய்யவேண்டுமென்றும் அரசனை மன்றாடிக் கேட்டுக் கொண்டனன். யானும் இராகமஞ்சரியின் சகாயத் தால், இராஜகுமாரியான அம்பாலிகையின் செவிலியாகிய மங்களிகையோடு கலந்து பழகி நட்புப் பூண்டேன். அதனல் அம்பாலிகை என்மீது மிகவும் அந்தரங்க விசுவாசம் வைக்கத் தலைப்பட்டனள். ஒருநாள் உப்பரிகையின்மேல் விளையாடிக் கொண்டிருந்த இராஜகுமாரியின் கரிணைக்கிருந்த மலர்கள் கீழேகுலைந்திருப்பக்கண்டு, யான் அவற்றைத் திருத்திவைப்பவள் போலச் சில மலர்களைக்கீழே விடுத்தேன்; பின்னர்க் கீழ்வீழ்ந்த மலர்களைப் பொறுக்கி ஆண்டு வெகுகையின் மிருந்த மணிப்

புறுக்களின்மேல் எறிபவனைப்போல, அந்தப்புரத்திற்குக் கீழுள்ள சிறைச்சாலைக்குச் சென்று கொண்டிருந்த காந்தகன்மீது எறிந்தேன். அவன் அதனை இராஜகுமாரி தன்பாற் காட்டிய அன்பின் அறிகுறி யென்று மயங்கிக் கருதி உப்பரிகையை நோக்க, அங்கு நடந்த யாதோவொரு விநோதத்தைக்கண்டு புன்னகைபுரிந்த அம்பாலிகையைப்பார்த்து, அவள் தன்னைக் கருதியே அங்ஙனம் செய்தனனென்று வீண் மனோராஜ்ஜியஞ் செய்தனன். அதனால் அவன் அவள்பாற் காதல்கொண்டு அனங்கவே ளம்பால் மன முடைந்துபோயினன். அன்றுமாலை அரசன் புதல்வி கந்தசந்தன புஷ்ப தாம்பூலாதிகளோடு சில விலையுயர்ந்த நகைகளையும் ஆடைகளையும் ஒருசிறு பெட்டியில் வைத்துப் பூட்டித் தன்னிலச்சினையும் அமைத்து என்கையிலீந்து அதனை இராகமஞ்சரியினிடம் சேர்க்கக் கூறினாள். ஆனால் அதனை யானெடுத்துக்கொண்டு காந்தகன் வீட்டிற்குச் சென்றேன். அவன் என்னைத் தானமிழ்ந்திய காமவாரிதியைக் கடப்பதற்குக் கிடைத்த புணையெனக் கொண்டாடினன். நான் இராஜபுத்திரி யவன்மேற் காதல்கொண்டு விரகானலத்தால் வெதும்பி வாடுவதைப் பலபடப் புனைந்துரைத்து, 'அதனை உனக்கு அறிவிக்கவெண்ணியே இப்பேழையைத் தன் அன்பின் குறியா யனுப்பியுள்ளா' ளென்று கூறி மேலும் பின்வருமாறு பகர்ந்தேன். "காந்தக! உன் பெருமையை நீ யுணராய், மலையினுயர்ச்சியை மலையறியாததுபோல். உன்னுடைய ஜாதகம் ஒப்புயர்வற்றது. எனக்குத்தெரிந்த சோதிடனொருவன் உளன்; நவக்கிரகங்களும் அவனெடும் பேசுவது வழக்கம். அவன், இவ்விராச்சிய லக்ஷ்மி உன்னையே அடையப் போகின்றனளென இரகசியமாக எனக்குக் கூறியுள்ளான். அதற்கேற்ப அரசனது ஏகபுத்திரியான அம்பாலிகையும் உன்மேல் அளவற்ற காதல்பூண்டிருக்கின்றனள். சாமுத்திரிகநூலார் கூறும் உத்தம புருஷ லக்ஷணமுழுவது முன்பாலுண்டாதலால் உனக்கு உலகிலொருவற்கும் கிடைக்காத மகோந்நத தசையுண்டாகப்போகின்றது. முதலில் அரசன், தனது மகளையுனக்கு அளிக்க ஒருகால் அசம்மதமுடையனாக விருப்பினும், பின்னர்த்தன் மகளின் இறந்துபாட்டிற்கு அஞ்சி அவளை உனக்கு மணம் புரிவித்துத் தேசத்தையும் உன்பாலொப்புவிப்பான். பிறகு

இந்தப் பஞ்சாசத்கோடி பூமண்டலத்திற்கும் இறைவன் நீயே யன்றே? இதனை யாராய்ந்துபார். ஆயினும் அரையன் புத்ல்வி யுன்னைப்பெறுது அரைக்கணமும் சகியாள்; அரசன் சம்மதியைப்பெற்று அவளை மணப்பதென்றால் நாள்பல கழியும். ஆதலால் இரகசியமாக நீ அந்தப்புரக் கன்னிமாடத்தை யடைய உபாயம் நாடவேண்டும்; பின்னர் யாவும் இஷ்டம்போலமுடியும். உங்களிருவரையும் ஒன்றுகச் சேர்த்துவைத்து மனமுவக்கக் கருதிய வெனக்குத்தோன்றும் உபாயமென்றைக் கூறுவல், கேட்டி. அந்தரங்க காராக்கிருகத்திற்கும் அரண்மனை யந்தப் புரக் கன்னிமாடத்திற்கும் இடையேயுள்ள சுவர் மூன்று சாண் கனமேயுடையது. அதனைத்தினைத்துக் கன்னவாயிலொன்று செய்துகொண்டால், நீ நினைத்தபோது போக்குவரவினைப்புரியச் சௌகரியமுண்டாகும். கன்னிமாடத்துட் புகுந்த பின்னர்க் காவலாலும் தோழியராலும் இடையூறுண்டாகா வண்ணம் பார்த்துக்கொள்ளுவது என்பொறுப்பு. ஆயினும் கன்னம் வைப்பதிற் கைதேர்ந்த தந்திரசாலியொருவன் சகாயத்தை நீ அந்தரங்கமாய்ப் பெற்று வழியமைத்துக் கொள்வதுன்பொறுப்பு. இஃது செய்ய உன்னுற் கூடுமோ?" என்றேன். இதனைக்கேட்ட அவன், "அம்மா, நீ நன்றுகக்கூறினை. இப்பொழுது கன்னம்வைப்பதிற் கைதேர்ந்த கள்வனொருவன் என்வசமிருக்கின்றனன். தோண்டுவதிற் சகர புத்திரரிலுஞ் சாமர்த்திய முடையான். இவனைத் துணைக்கொண்டால் காரிய சித்தியாகுமென்பது திண்ணம்," என்று கூறினன். "அப்படியாயின் அவன் யாவனே? யாங்குளன்? உடனே அவன் உதவியைப் பெறுவதிற்றடையென்ன?" என்று யான் கேட்டேன். அதற்கு அவன், "அவனை உனக்கு நன்றுகத்தெரியும். தனமித்திரனது பணப்பையினைத் திருடிய் கள்வனே இச்செயற்குத்தக்கவன்" என்றனன். உடனே யான், "ஐயனே! இதற்கோருபாயங் கூறுவல், நீ யவனிடஞ்சென்று வேண்டிய கன்னவாயிலையொருவருமறியாது அமைத்துக்கொடுத்தாற் சிறைவீடுசெய்வதாக வாக்குறுதிசெய்க. அவன் அமைத்துக் கொடுத்தபின்பு மிளவும் விலங்கிட்டு அவன் பணப்பை கொடாத பிடிவாதத்தை அரசற்கு அறிவித்துச் சிரசாஜ்ஞை செய்து நமது இரகசியம் வெளிப்படாமல் அவனைத் தொலைப்பாயாக." என்று கூறினேன்

அவனும் இதுவே நல்லயுக்தியென்று செய்ய மனமொப்பினன். இதுவிஷயத்தை உன்னோடு முன்னர்க்கலந்து பேசுமாறு என்னை யிவண்விடுத்து அவனும் சிறைச்சாலைக்கு வெளியே நிற்கின்றனன். உன் சம்மதத்தை யான் அவற்குத் தெரிவித்ததும் அவனும் உடனே வந்து உன்னைக்கண்டு வாக்குறுதி தருவான்." என்று ச்ருகாளிகை கூறிமுடித்தனள்.

ச்ருகாளிகையின் தந்திரோபாயத்திற்கும் பெருமுயற்சிக்கும் அவளைக்கொண்டாடி, எனது சம்மதத்தை நியாயாதிபதிக்குக் கூறி யவனை என்னிடம் உடனே அனுப்பக் கேட்டுக்கொண்டேன். அவன் உள்ளே புகுந்து, யான் கன்னவாயிலமைத்து உதவிபுரிந்தால், என்னைச் சிறைவீடுசெய்வதாகப் பொய்ச்சத்தியஞ் செய்துகொடுத்தனன். அவன் முகத்திலும் அகத்திலுள்ள வஞ்சகத்தை நன்றாக அறிந்துகொண்டேன். ஆயினும் யானும் இவ்விரகசியத்தை யொருவற்கும் வெளியிடாதிருப்பதாக வாக்குறுதிதந்தேன். இதனைக்கேட்டபின் அவன் எனது தலையைநீக்கி நல்ல உணவளித்துச் சின்னாளில் யான் எனது பழைய தேகதிடத்தைப் பெறுமாறு செய்தனன். பின்னர் இருவருமாகச்சேர்ந்து அரண்மனைச் சுவரிற் கன்னம் வைக்க ஆரம்பித்தோம். சிறைச்சாலையில் அந்தரங்க காராக்ருகத்தின் சுவரிலொருமூலையிலெவரு மறியவொண்ணுதபடிக் கன்னவாயிலொன்றை யெனது பணிமுகக் கன்னக்கோலால் அமைத்தேன். வேலைசெய்து கொண்டிருக்கும் பொழுதே, பொய்ச்சத்தியஞ் செய்துகொடுத்த அப்புல்லியனைக் கொறலறமே, என்று தீர்மானித்து விட்டேன், தன்னைக் கொல்லவந்த பசுவையுங் கொல்லுக என்பது விதியாதலால். கன்னவாயிலமைத்த உடனே அதன் வழியாகத் தலையை நீட்டிப்பார்த்த அவனை எனது வாளினால் வீசியெறிந்து கொன்றேன்.

பிறகு ச்ருகாளிகையின் உதவியால் யான் கன்னிமாடத்திற் புகுந்து அங்குள்ள விலையுயர்ந்த பொருள்களைக் கவர்ந்து செல்லத் தீர்மானித்து உட்புகுந்தேன். யான் இராஜபுத்திரியின் பள்ளியறையை அடைந்ததும், அம்சதூளிகாமஞ்சத்தின் மேல், வெண்ணிற முகின்மிசை விளங்கும் மின்னற்கொடிபோன்ற அவளது தோற்றப் பொலிவினையும் பேரழகினையும்

கண்டமாத்திரையில் யான் என்னையே மறந்தவனைனன். பின்னவன் கெட்கப்போன விடத்திற் புருடனைப் பறிகொடுத்த குறுட்போனவிடத்தில் என் நெஞ்சைப்பறி கொடுத்துச் செய்வதின்னதென்றறியாது திகைத்தேன். அப் பெண்மணியை எழுப்பிவுல் அவள் சித்திரைகிரி என்னைக் கண்டஞ்சி ய்ரற்றுவாளாயின், சேடியருங் காவலருமெழுந்து என்னைப்பற்றி சித்திரவதை செய்வார்கள் என்று நினைத்து அவளை எழுப்பாது விடுத்தேன். அங்குக் கிடந்த தூரியமொன்றினை யெடுத்துக் கட்டிலின்மீது அவள் தூங்கும் நிலையினைச் சுவரிற் சித்திரித்து அவளது அன்பினைப் பெறக்கருதி வணங்குபவனைப்போல என்னுருவினை அதன் பக்கலிலெழுதிப் பொறித்தேன். அச்சித்திரத்தின்கீழ்,

மின்னலின் கொடியென விளங்கு பாவையே!
நின்னடி மலர்தொழு நேய மிக்குளேற்
குன்னரு ளின்றியே யுய்யு மாறுண்டோ?
மன்னிய துயில்கொடு வதித னீதியோ?

என்ற பாடலையு மெழுதினன்.

பின்னர் அங்கு வைத்திருந்த உயர்ந்த காம்பூலத்தைத் தரித்துக்கொண்டு, சுவரிலொருபுறம் சித்திரித்திருந்த இரட்டைச் சக்கரவாகங்களின் மீது தம்பலத்தை யுமிழ்ந்துவிட்டு, அவள் கையிலணிந்திருந்த கணையாழியை என் விரலிற் செறித்து என் கைக்கணையாழியை அவள் விரலிற் சேர்த்து, ஒருவருமறியாது கன்னவாயிலின் வழியே சிறைச்சாலையை அடைந்தேன். அங்கு, முன்பு உயர்ந்தவ லதிகாரியாயிருந்து இப்பொழுது என்னுடன் சிறைப்பட்டிருந்தகால் கட்புரிமை பூண்டிருந்த சிம்மதேவனைக் கண்டு, அற்றைப்புரச்சுவரிற் கன்னம்வைத்த வந்த காந்தகனைத் தன் கொன்றதாக அரசற்குக் கூறிச் சிறைவிடு செய்துகொள்ள உபாயங் கூறிவிட்டு, யான் சருகாளிகையுடன் சிறையினின்று வெளிப்பட்டேன். செல்லும்பொழுது வழியில் மூர்க்கரால் தெரிர்ப்பட்டனர். யான் சுலபமாகத் தப்பித்துக் கொள்ளக் கூடியவனையினும் வயது முதிர்ந்த சருகாளிகையை என்ன செய்வது? அவளை விட்டுப்போக மனமின்றிப் பின்வரும் உபாயத்தைச் செய்தேன். டான் அவர்தீன எதிர்ப்படலானேன்போல

அவர் கூட்டத்திற் பாய்ந்து, "என்னைத் திருடனென்று நீங்கள் பிடித்துக்கொள்வதில் எனக்கு ஆசேபனை யொன்றுமில்லை; வயது சென்ற கிழவியாகிய இவளை யொன்றும் செய்யாது விட்டுவிடுங்கள்," என்று கூவினேன். இதனைக் கேட்டதும் என் கருத்தை யுணர்ந்த ச்ருகாளிகை அவர்களைநோக்கிப் "பெரியோரே! இவன் எனது மகன். இவனைப் பைசாசமொன்று பற்றியுள்ளது. மணிமந்திர ஔஷதங்களிறற் றக்க பரிகாரம் செய்ததன்மேல் நேற்றையதினம்தான் இவன் சுயநினைவு கூடப் பெற்றுச் சுகமடைந்தனன். அதனைக்கண்டு இவனுக்கு நல்லுணவளித்துச் சுத்தமான உடை உடுக்கச்செய்து அவனிஷ்டம் போலப் போகவிட்டேன். பாதியிரவிலப் பிரமாக்கதம் மீளவும் அவனைப் பற்றிக்கொண்டது; அவன் வெளிப்பட்டுச் சென்று நீதிபதியாகிய காந்தகனைக் கொன்றுவிட்டு, அரசகுமாரியை விவாகஞ் செய்து கொள்ளாமல் விடேன் என்று உன்மத்தம்பிடித்தவனைப் வீதிவழியாக ஓடுகின்றனன். என்னுயிரன்றவளவு விரைவாக அவனைப்பிடிக்க ஓடிவருகிறேன். நீங்கள் எல்லாரும் தயவுசெய்து அவனைப் பிடித்துக்கட்டி என்னிடங்கொடுங்கள். அவனை வெளிவிடாது வீட்டிலடைத்துத் தக்க சிகிச்சை செய்யவேண்டும். யாவருந் தள்ளாத கிழவிக்கு உபகாரஞ்செய்யுங்கள்" என்று கெஞ்சிக்கேட்டனள். அவள் இங்ஙனம் கூறியவுடன் யான், "காற்றை விலங்கிட உங்களால் முடியுமோ? காகங்கள்கூடி இராஜாளியைப் பிடிக்குமோ? இஃ தென்ன முட்டாள்தனம்!" என்று கூறிவிட்டு வாயுகதியாய் ஒருவர் கையிலுமகப்படாமற் பாய்ந்து போயினேன். யாவருந் திகைத்து நின்றனர். ச்ருகாளிகை, அக்காவலாளிகளை என்னைப்பற்றுது விட்டுவிட்டதற்காக வைதுரைத்துக் கூவிக்கொண்டு என்னைத் தொடர்ந்தோடி வந்தனள். இவ்விதமாக இருவரும் வீடுவந்து சேர்ந்தோம். இத்தனை காளும் என்னைப்பிரிந்து பெருந்துயரடைந்திருந்த இராகமஞ்சரியைத்தேற்றி அவளது மனக்கவலையை யொழித்தேன். மறுநாட் காலையிலெழுந்து தொழுனை தனபித்திரனைக்கண்டு விஷயங்களைக் கூறிப் பின் நகர்ப்புறச் சோலையிலுள்ள பரிதி முனிவ ராச்சிரமத்தை யடைந்து, பழிக்குப்பழி வாங்கியதை யவனுக் குணர்த்தித் தங்கள் வருகையினை யறிந்துரைக்கக் கேட்டேன். அவனுங் கடுந்

தனம்புரிந்து மதினைந் கிடைக்கப்பெற்ற ஞானதிருஷ்டியின் வல்லபத்தால் தங்கள் வருகையினை அறிந்துரைத்தனன்.

யான் கூறியவாறு செய்த நண்பனை சிம்மகோஷன் அரசலில் நன்கு பாராட்டப்பெற்றுக் காந்தகனுடைய ஸ்தானத்தில் நியாயாதிபதியாக நியமனஞ் செய்யப் பெற்றனன். சிறைச்சாலையில் யான் செய்துவைத்த கன்னவாயில் எனது போக்குவரவிற்கு மிகுந்த சாதகமாயிருந்தது. ச்ருகாளிகையின் உதவியால் அரசகுமாரியை எளிதிலெய்தப் பெற்றேன்; இருவரும் ஒருடலும் ஒருயிருமுடையராய்க் கந்தருவ விதிப்படி மணந்து நஞ்சுற்ற காம நனி நாகரிற்றுய்த்துக் களித்து நின்றேம். அக்காலத்தில் உஜ்ஜயினி மன்னனாகிய சண்டவர்மன் இவ்வங்க மன்னனாகிய சிம்மவர்மன்பால் மகட்பேசி வரத் தூதரை விடுத்தனன். சிம்மவருமன் மகட்கொடை மறுத்தமையாற் சண்டவர்மன் சினந்து தனது நால்வகைப் பெரும்படையும் புடைசூழ்ந்து வரப்போர்க் கெழுந்து ஈண்டுவந்து சம்பாபுரியை முற்றுகையிட்டனன். இவன் இங்ஙனம் செய்வானென்பதை முன்னரே யுணர்ந்த அங்காதிபன், தனது நண்பனை நால்வகைப் படையுடன் வந்து இவ்வமயம் உதவிபுரியுமாறு வேண்டித் தூதரை யனுப்பியிருந்தனன். அவர்கள் வந்து உதவிபுரிதற்குமுன், சிம்மவருமன் மனம் பொருளுவ்வெகுண்டு தனது படைஞருடன் நகரினின்றும் புறம்போந்து பகைவரை எதிர்த்துப் பெரும்போர் புரிந்தனன். ஆயினுமென்? பகைவன் பெரும் படையுடன் இருந்தமையாற் சிம்மவருமன் தோற்றுச் சிறைப்பட்டனன். ஜயசாலியாக நகரினுட்புகுந்த சண்டவருமன், கன்னிமாடத்திருந்த அம்பாலிகையையும் சிறையாகப் பற்றிச் சென்று வைகறைப்பொழுதில் மணமுடிக்கத் தீர்மானித்தனன். யானும் அவளுடன் அம் முகூர்த்தத்திலேயே தனமித்திரன் வீட்டிற்கு அழைத்துச்சென்று கிருகப்பிரவேச மகோத்ஸவத்தைச் செய்யுத்தீர்மானித்தேன். நான் தனமித்திரனை நோக்கி, 'அன்பா! நீ சிதறுண்ட அங்கதேசப் படைகளை யொருங்குசேர்த்து ஊரிலுள்ள பிரமுகரான வீரர்களையு முடன்கொண்டு சென்று, நமக்கு உதவிபுரியும் பொருட்டு வரும் நட்பரசர்களின் படைகளுடன் சேர்ந்து விரைந்து வந்து வைகறைப்பொழுதில் பகைவனை

யெதிர்ப்பாயாக. அவ்வமயத்தில் நாகர பகைவன் றலையின்றி யிருக்கும் விநோதத்தைக்கண்டு மகிழ்வாய்.' என்று கூறிவிடுத் தேன். அவனும் எண்ணியபடி முடிக்க வேகமாகச்சென்ற னன். யான் தனியேயிருந்து இன்னது செய்வது என்று ஆராய்ந்தேன். அவசர கல்யாணத்தினாலுண்டான குழப் பத்தால் அரண்மனை முழுவதும் அல்லோல கல்லோலமாயிருந் தது. அவ்வமயத்தில் மணவினை யியற்றும்பொருட்டு ஏட்டிலும் மறையவர் கூட்டத்துள் யானுமொருவனுய் உடைவாளை மறை த்து மண மண்டபத்தை யடைந்தேன். அங்கு வேதியர்கள் குண்டமமைத்து அழல்வளர்த்தி ஓமம்புரிந்து அவிசொரிந்து நிற்பப் புரோகிதர் வேதமந்திரங்களை யெடுத்தோத நல்ல முகூர்த் தத்தில், அங்கிசான்ருக அரசகுமாரியைப் பாணிக்கிரஹணஞ் செய்ய நினைத்துச் சண்டவருமன் எழுந்தனன். அப்பொழுது தயாராக விருந்த யான் அம்பாலிகையை எனது கையிற் பற்றிப் பாணிக்கிரகணஞ் செய்து என் உடைவாளையுருவி வீசிச் சண்ட வருமன் சிரத்தைச் சேதித்தெறிந்தேன். இதனைக்கண்டோர் யாவரும் பிரமித்துப் பார்த்துக் கொண்டிருக்கையில், இதுவே நல்லசமயமென்று அவனைத்துக்கி யெடுத்து வாயுவேகமும் பின்னிட வெளிப்பட்டு, எதிர்ப்பட்டோரனைவரையும் சூறை மாருதம்போற் சுழற்றியெறிந்து தனமித்திரன் வீட்டில் அவளை விடுத்து வெளிவந்தேன். என்னைப் பற்றவந்த மாளவவீரர் பலரையும் கைவாளாற் கண்ட துண்டமாகக் கரணை செய்து யான் வாள்வினையாடலைப் புரிந்து வரும்பொழுது, நிருண்ட பருவமேகத்தின் றனிதம்போன்ற தங்கள் குரலைக்கேட்டுக் கோடையில் வாடிய பயிர்போல வருந்தியிருந்த யான் பேரின் பக்கடலிலாழ்ந்தேன். பின்னர் நடந்தயாவுந் தாங்களையறிவீர் கள்."

இவ்விதமாக அபகாரவர்மா தனது அற்புத சரித்திரத்தைக் கூறி முடித்ததும், இதனைக்கேட்ட இராஜவாஹனன், களவு நூலாசிரியனுகிய கர்ணீசுதனைக்காட்டினும் தன் வித்தியாப் பிரபாவத்தினுல் மேன்மையடைந்த தனது நண்பன் வியந்து புகழ்ந்து கொண்டாடினன். பின்னர் இராஜவாஹனன் உத்தர விடைபெற்று, உபகாரவர்மா அவன் பாதங்களை வணங்கித் தனது சரித்திரத்தைக் கூறலாயினன்.

அதிகாரம் 9.

உபகாரவருமன் சரித்திரம்.

நான் தேச சஞ்சாரஞ்செய்து வருகையில் ஒருநாள் விதேக தேசத்தை யடைந்தேன். மிதிலாநகரத்தினை அணுகி அதன் புறத்திலுள்ள காளிகோட்ட மொன்றினைக்கண்டு சிறிது இளைப் பாறலாமென்று தங்கினேன். அங்கிருந்த வயது முதிர்ந்த சந்நியாசினி யொருத்தி என்னைக்கண்டு அர்க்கிய பாத்திய ஆசமனியங்கள் அன்புடனளித் துபசரித்தனள். பின்னர் அவள் என்னை ஏற இறங்கச் சிறிதுபோழ்து உற்றுப்பார்த்துக் கண்ணீர் சிட்டழுதனள். ஏனழுகின்றீ ரென்று யான் கேட்டதற்கு அவள் பின்வருமாறு விடைபகர்ந்தனள்.

"சுபாக! இம்மிதிலாபுரி மன்னன் பிரகாரவர்மன் என்பவ னொருவன் இருந்தனன். அவன் மகத தேசாதிபதியான இராஜ ஹம்சனுக்கு உயிர்நண்பன். அவர்கள் இருவருடைய பட்டத் துத் தேவியராகிய வசுமதி பிரியம்வதை என்னுமிருவரும் அன்புமிக்க தோழிமார்கள். வசுமதி தேவியின் சீமந்த மனை விழை காணப் பிரகாரவர்மனும் அவன் தேவி பிரியம்வதையும் புஷ்பபுரிக்குப்போனார்கள். சீமந்தம் முடிந்து பாவரும் களித் திருக்கும்பொழுது இராஜஹம்சனுக்கும் மாளவதேசாதிபனாகிய மானசாரனுக்கும் போர் நிகழ்ந்தது. அதில் இராஜஹம்சன் அடியோடு தோற்றுப்போயினன். பிரகாரவர்மன் மீண்டு தனது தேசத்திற்கு வந்து பார்க்கையில், தனது தமயன் ஸம் ஹாரவருமாவின் புதல்வர்களான விகடவர்மன் முதலியோர் ராஜ் ஜியத்தை அபகரித்துக்கொண்டு அரசாண்டு வருவதைக்கண்டு தனது உடன்பிறந்தாள் மகனாகிய ஸுஹ்ம தேசாதிபனை யடை ந்து அவனது உதவியைப்பெற்று இராஜ்ஜியத்தை அடைய எண்ணித் தன் மனைவி மக்களோடு அத்தேயத்திற்குப் பிரயாண மாயினன். போகும்வழியிற் காட்டிலுள்ள வேடர் கூட்டமொ ன்று எதிர்த்து இவன்கையிலுள்ள பொருள்கள் யாவற்றையும் கவர்ந்தேகினர். அவனது இரட்டைப் பிள்ளைகளில் இளைய குமாரனைக் கையிற்கொண்டுசென்ற யான் வேடர் விட்ட கொடுங் கணைகளுக்கு அஞ்சி அடர்ந்த காட்டிலோடி யொளித்தேன்; அங்குப் பெரும்புலியொன்று என்மேற் பாய்ந்து வந்தறைந்தது;

யான் பயந்து குழந்தையை எறிந்து விட்டேன்; அவன் அயலில் இறந்துகிடந்த பசுவினண்டையோடி யொளிந்தனன். அப் பொழுது தற்செயலாக வந்த வேட்டுவனொருவன் கைக்கணையால் வியாக்கிரம் மாண்டது. வந்த வேடன் அவசமுற்றுக் கிடந்த என்னை இறந்தேதனென்று மதித்து விடுத்துக் குழந்தையைக் கைக்கொண்டு போயினன். காட்டில் வந்த ஆட்டிடையனொரு வன் என்னைத்தன் வீட்டிற்குக் கொண்டுபோய்ப் புலியறைந்த காயங்களை யாற்றி என்னைக் காப்பாற்றினன். என் உடம்பு குணமடைந்தவுடன் என் எஜமானை யடைந்து நடந்தவற்றைக் கூறிவிடத் தீர்மானித்திருந்தேன். அப்பொழுது என் மகள் ஓரிளைஞனெடும் அக்குடிசைக்கு வந்தனள். அவள் தனக்கு நேர்ந்தவை யாவற்றையும் எனக்குக்கூறினள். பிரகாரவர்ம னின் சேனை வேடர்களுக்குத் தோற்றதும், தன்கையிலிருந்த அரசன் குழந்தையை யிழந்ததும், வேடனொருவன் றன்னை விரு ம்பியதும், அவள் அதற்கிணங்காமையால் அவன் அவளைக் கொலைசெய்யத் துணிந்ததும், அவ்வமயத்தில், தன்னுடனிருக் கும் வாலிபன், அங்குத் தற்செயலாய் வந்து தன்னைக் காத்து தவி புரிந்ததும், அவ்விளைஞன் பிரகாரவர்மன் பரிவாரங்களைச் சேர்ந்த வீரருள் ஒருவன் என்றும், அவன் வேடனினின்றுந் தன்னைக்காத்தபின் தன்னை மணந்துகொண்டனனென்றும் இன் னோரன்ன விவரங்களை யெல்லாம் ஒன்றும் விடாமல் அவள் எனக்கெடுத்துரைத்தனள். பின்னர் யாங்கள் அவ்விளைஞனைத் துணைக்கொண்டு பிரகாரவர்மன் பிரியம்வதை யோடிருந்த இடத்தையடைந்து, அவனதிருபுதல்வர்களையுமிழந்த வரலாறு களையெல்லாம் சாங்கோபாங்கமாய்க் கூறினேம். இதனைக்கே ட்ட அவ்விருவரும் அடைந்த துயரத்திற்கு அளவேயில்லை. பிறகு, பிரகாரவர்மன் தனது இராஜ்ஜியத்தை மீட்கச்செய்த முயற்சிகளியாவும் வீணுயின. அவனும் அவன் மனைவியும் விகடவர்மனுற் சிறையிடப்பட்டனர். இவ்விதமாக எனது அர சனுக்கும் அரசிக்கும் நேர்ந்த விபத்தை எண்ணி எண்ணி என் மனம் புண்ணுயினமையால், யான் யாவற்றையும் வெறுத்துப் பிக்ஷுணிக்கோலம்பூண்டு இந்நகர்ப்புறக் காளிகோயிலில் வசி த்து வருகிறேன். எனது மகள் மிகுந்த வருத்தத்தோடு விகடவர் மன் தேவியாகிய கல்பசுந்தரியினிடம் தாதியாக அமர்ந்திருக்

கின்றனள். பிரகாரவர்மாவின் குழந்தைகள் இப்பொழுது இருக்குமாயின் உன்னைப்போல இருப்பார்களே என்றும் அவர் களிருந்தாற் பெற்றோர்க்கு இந்நாளில் பாதுகாவலும் வருந்தி யழுதேன். மேலும் அக்குழந்தைகளின் சாபம் உன்னிடத்துக் கண்டமையால் எனக்குப் பழைய ஞாபகங்களெல் லாம் உண்டாயின," என்று அம்முதியவள் கூறிப்புலம்பி அழு தனள்.

இவ்வரலாற்றினைக் கேட்ட யான் அவளுக்குத் தேறுதல் கூறித் தாபரத்தைத் தணித்துப் பின், அவள் காட்டிலொரு புனிவனைக்கண்டு குழந்தையை யிழந்த விருத்தாந்தத்தினைக் கூறியதை நினைப்பூட்டி, அவன் குழந்தையைக் காட்டிற் கண்டு பிடித்த விதத்தையும், அதனை எடுத்துச்சென்று இராஜஹம்ச னிடஞ் சேர்த்ததையும், அக்குழந்தை யானை என்பதையும் அவளுக்கு விரிவாக எடுத்துரைத்தேன். அவளுக்கு அப்பொ ழுது உண்டான வியப்பிற்கும் ஆநந்தத்திற்கும் அளவுமுண்டோ? இழந்த பழந்தனத்தை யெய்திய ஏழையைப்போலத் தலைதெரி யாக் களிக்கடலிலாழ்ந்தனள். பின்னர் யான் அவளை நோக்கி, "அம்மா! என் மாதாபிதாக்களுக்கு இன்னலிழைத்த மாபாவி யான விகடவர்மனை நாசஞ்செய்ய இனித் தடையுமுண்டோ? ஆயினும் பல சகோதரர்களின் பலம் அவனுக்கிருக்கலாலும், பொதுவாக நகரமாந்தரனைவரும் அவனை விரும்பியிருத்தலாலும் அவனை வெளிப்படையாக எதிர்த்தழித்தல் எளிதிலியலாது. ஆதலாற் சிறிது ஜாக்கிரதையோடு வேலைசெய்யவேண்டும். மேலும் என் பெற்றோர்க்கே என்னை யின்னனென்று தெரியா தாகையால் மற்றையோ ரெங்ஙனமறிவார்? ஆதலால் என் எண் ணங்களை நிறைவேற்றத் தக்க காலங்கிடைக்குமளவும், 'கொக் கொக்கக் கூம்பும் பருவத்து' என்ற பெரியார் வாக்கின்படி அட ங்கியிருக்கத் தீர்மானித்துளேன்," என்று எடுத்துரைத்தேன்.

எனது செவிலித்தாயாகிய அம்முதியவள் என்னைப் பிற ரறியாவண்ணம் அக்காளி கோயிலிலேயே மறைத்து, உண்டி உதவி உபசரித்துப் போற்றிவந்தனள். இரவு முழுவதும் தூக்க மின்றி என் கருத்தை நிறைவேற்ற ஏற்ற வழியினை யாராய்ந்து, முடிவில் அரண்மனை அந்தப்புரமே இவ்விடசித்தியைத் தரும்

இடமெனத் தீர்மானித்து எங்ஙனம் அதனுட் புகுதலென்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன். மறுநாட் காலையில் என் செவிலியை யழைத்து, அவளுக்கு அந்தப்புர ரகசியங்கள் யாதேனும் தெரியுமோ, என்று கேட்டேன். இக் கேள்வியினைக் கேட்ட வாய் மூடுமுன், ஒரு ஸ்திரீ யங்குவந்தனள்; அவளைக் கண்டதும் அக்கிழவி, 'மகளே! ஈதோ நமது எஜமானரின் புதல்வன். அவனைக் காண்,' என்றனள். அவளும் என்னை ஏற இறங்கப்பார்த்து என்னை யின்னனென்றறிந்து வாரியெடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து 'குழந்தாய் குழந்தாய்' என்று கதறி ஆனந்தபாஷ்பஞ் சொரிந்தனள். அவளது உள்ளக் கிளர்ச்சி யொருவாறு அடங்கிய பின், யான் அவளை அரண்மனை விருத்தாந்தங்களை யெடுத்துரைக்குமாறு வேண்டினேன். அவள் பின்வரும் விவரத்தைக் கூறினள். 'விகடவர்மனது பட்டமகிஷியாகிய கல்பசுந்தரி அவனை முற்றிலும் அருவருப்போடு வெறுக்கின்றனள். காமரூப தேசாதிபதி களிந்தவர்மனுடைய புதல்வியாகிய அவள் தேவரம்பையினும் மேலான அழகுடையளாய் எல்லா நலங்களிலுஞ் சிறந்து விளங்குகின்றனள். விகடவர்மனுக்குப் பல மனைவியரிருப்பினும் அவளையே பெரிதும் விரும்பியிருக்கின்றனன். ஆயினும் அவளுக்கு அவனைக் கண்டாலும் வேம்பாயிருக்கின்றது,' என்ற விவரத்தை எடுத்துரைத்தனள்.

இவற்றைக் கேள்வியுற்ற பின் யான் தினமும் புனைந்து சரும் அற்புதமான புஷ்பமாலைகளை இராணியினிடங் கொடுக்கும்படிக்கும், அவள் மனத்தைக் கலைத்துப் புருஷன் பால் ஏற்கெனவே உள்ள வெறுப்பினை மேன்மேலும் அதிகப்படுத்தும் படிக்கும் அத்தாதியினைக் கேட்டுக்கொண்டேன். மேலும் தம்மை மணந்த நாயகர்கள்பால் வெறுப்புக்கொண்ட வாசவதத்தை முதலிய சிறந்த பெண்மணிகள் தங்கள் மனத்திற் கொத்த அன்புடைக்காதலர்களைப் பெற்றுக் களித்த கதைகளையெல்லாம் அவளுக்கு எடுத்துக் கூறச்சொன்னேன். இன்னும் அரசன் ஏனைய அந்தப்புரமகளிர்பாற் காட்டும் அன்புடைச் செயல்களை யெல்லாம் பட்டமகிஷிக்கு எடுத்துரைத்து அவள் பொறுமையினை வளர்த்தி அரசனிடமுள்ள அருவருப்பைப்

ROJA. MUTHIAH
ARTIST

பதின்மடங்காகக் கொடுப்பேனென். இவை யெல்லாம் நிகழ்ந்த பின் அக்கள்ளச் சூழ்ச்சியின் மை நிலையை எனக்குத் தெரிவிக்கச் சொன்னேன். எனது தூதியராகிய தாயும் மகளும் என் கருத்திற் கிணங்க மேற்கொண்ட தொழிலில் நன்முக முயற்சித்து வந்தனர். சின்னாளில் எனது செவிலி என்னை யணுகிக் கல்ப சுந்தரி தன் கணவனை முற்றிலும் வெறுக்கின்றனளென்றும், அவனை அவள் மணந்தது அழகிய மாதவிக்கொடி வெப்பமடைத் தின்மேற் படர்ந்ததை நிகர்க்குமே யெனக் கரையிலாத் துயர்க் கடலிலாழ்ந்து கிடக்கின்றனளென்றும் சொல்லி, இப்பொழுது யாது செய்வதுரை யெனக் கேட்டனள். எனதுருவம் பொறித்த அழகிய படமொன்றை அவள் கையிற் கொடுத்து, இதனைக் கல்பசுந்தரி காணுமிடத்திற் சேர்க்கச் சொன்னேன். அவளும் அங்ஙனம் செய்தனள். அப்படத்தினைக் கண்ட ராணி, அஃதோர் சித்திரம் வரையும் சிற்பிதனது கைவன்மையைக் காட்டித் தன் மநோபாவத்தைப் பொறித்த அழகிய உருவமென்று கருதிப் பெரிது முவந்து எழுதியவன் சாமர்த்தியத்தைப் புகழ்ந்து கொண்டாடினள். இதனைக்கண்ட என் செவிலி, 'இப் பெரிய நிலைமையில் இவ்வுருவமுடைய யௌவனபுருடனும் இருக்கக்கூடும்; இருந்து யாருக்கென்ன பயன்?' என்றனள். அதற்கு அரசி, 'நமக்கொன்றும் பயன்படாவிடினும், இத்தகைய அழகிய உருவமுடையானைக் கண்ணுற் காணும் பாக்கியமேனும் என்னைப்போன்ற பாவியர்க்குண்டோ?' என்று கூறிப் புலம்பினள். இதனைக்கண்ட கிழவி, "மகளே! நீ வருந்தாதே! இவ்வுருவமுடையான் ஓரிராஜகுமாரன். சின்னண்முன்னர் நிகழ்ந்த வசந்தோற்சவகாலத்தில் உன்னைப் பொழிலிற்கண்ட அவன் உனது ஒப்புயர்வற்ற போழகில் லீடுபட்டு மன்மத பாணங்களால் மனமழிந்திருக்கின்றனன். அவன் உன்னைக் காணிடற் றுணியிர்துறப்பது திண்ணமென்று கருதி, என்னை யணுகி, உன்னைச் சந்திப்பதற்கு உதவிபுரிய வேண்டினன். யானும், அவன் உன்னை கண்ணுற் காண்பதாற் றோஷம் இல்லையென நினைத்து உன் அநுமதியின்மேல் அங்ஙனமே செய்வலென ஆற்றினேன். இத்துணை நாளும் யான் உனக்குக் கொண்டு வரும் விசித்திரமான புஷ்பமாலைகள் யாவும் அவன் புனைந்தவையே; இப்படிப்பட்ட அவனைமுகிபடை. அவன் மேற்

கண்டால், அழகின் மாத்திரமின்றிக் கல்வி குணம் பராக்கிர மங்களினும் நிகரற்ற ஆடவர் திலகன் அவனே யென்று நீ யறி வாய்," என்று கூறினள்.

இதனைக்கேட்ட ராணி சிறிது போழ்தாலோசித்துச் செவி லியை நோக்கித், "தாயே! இனி உன்னிடத்தில் எதனை யொளி த்துவைக்கவேண்டும்? என்னுடைய பிதா இந்நகரை யாண்ட பிரகாரவருமாவின் நெருங்கிய நண்பன். என்னுடைய தாயும் அவனது மனைவி பிரியம்வதையும் இணைபிரியா அன்புடை யார்கள். இவ்விருவரும் கன்னியராயிருக்கும்பொழுது, தாங்கள் அன்புடைய நாயகரை மணந்து கருக்கொண்டு ஒருத்திக்குப் பெண்ணும் மற்றொருத்திக்குப் பிள்ளையும் பிறந்தால் அப் பெண்ணை அப்பிள்ளைக்கு விவாகம் செய்வதாக வாக்குறுதி செய்துகொண்டனர். அதற்கேற்பப் பிரியம்வதாதேவி அழ கிய இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றனள். சின்னாள் சென்று என் தாய் என்னை யீன்றனள். ஆயினும் விதியினை யாவர் வெல் லுவார்? பிரியம்வதையின் பிள்ளைகள் காணாமற்போனபின், எனது பிதா, பிரகாரவர்மாவின் தமயன் பிள்ளையாகிய விகட வர்மனுக்கு என்னுள்ளக்கருத்தினை யறியாமலே விவாகம் செய்துவிட்டனன். இவ்விகடவர்மனே மகா கொடியவன்; அநீதி அக்கிரமம் முதலியவற்றிற்கு இருப்பிடமானவன்; கல்வி யறிவில்லாக் கசடன்; முன்பின் யோசியாத மூர்க்கன்; பொய் யையே அணிகலனப் பூண்ட புல்லியன்; தயையற்ற தறுகண் ணன்; இன்பமின்னதென் றறியாத ஏழை; கொண்டமனைவியர் க்குத் துன்பங்கொடுக்குங் குரூபி. அவனைப்பற்றிப் பேசவும் என் நாக் கூசுகின்றது; நினைக்கவும் என்மன நடுங்குகின்றது. என்னை இவன் ஏனே மணந்தான்? உயர்வுதாழ்வறியாத இம் மூடன், என்னிலுங் குலம் அழகு குணம் முதலியவற்றிற் குறை ந்தவளாகிய ரமயந்திகை என்னும் என் மாற்றாளுக்கு, நான் எனது குழந்தைபோல அன்புடன் வைத்து வளர்க்கும் சண்ப கச் செடியின் மலர்களை என்னைக் கேளாமலே பறித்துச் சூடிக் களித்திருந்தனன்; புனிதமான எனது சயனத்தில் அவ்வேசை யுடன் கூடி யின்புற்றனன். இவற்றையெல்லாம் கண்ட நின் மகள் புஷ்கரிகை என்மேலன்புடையளாதலால், மனத்தில்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET

மறைத்துவைக்காமல் எனக்குக் கூறினள். அவளுக்கே அவன் செய்கை பொறுக்கவில்லை. என்னைப் பலவிதத்திலும் அவன் நிந்தித்திருக்கிறான்; ஆதலால் நான் அவனை வெறுப்பது அநியாயமன்று. இனிப் பாவமும் பழியும் மறுமையில் நரகமும் கிடைப்பதாயினும் சரி, அவனுடன் ஒருநிமிஷமும் வாழ ஒருப்படேன். நீ கூறிய இராஜகுமாரனைக் காணவேண்டுமென்ற அவா என்மனத்திலுண்டாகின்றது. அவனை இன்றையதினமே எனது அந்தப்புரச் சோலையிலுள்ள மாதவி லதாக்ருஹத்திற்கு அழைத்து வருவாயாக. இவ்விஷயத்தில் உதவிபுரிவாயென்று உன்னையே நம்பியிருக்கிறேன்," என்று தன் மனக்கருத்தை யெல்லாம் வெளியிடுக கூறினள். இவற்றைக்கேட்ட செவிலியும், கல்பசுந்தரிக்குத் தன்னால் இயன்றவளவு உதவிபுரிவதாக வாக்களித்துப் பின்பு என்னையடைந்து நடந்தவை யனைத்தையும் ஒன்றும் விடாமல் உரைத்தனள்.

மாலைக்காலம் வந்தது; சூரியன் மேற்றிசைக் கடலிலாழ்ந்தனன்; பெரிய நெருப்புத் தணலினைக் கடலிற் போட்டதும் மேலெழுந்த புகைப்படலம்போல மயங்கிருளெங்குஞ் சூழ்ந்தது. யானும் படுக்கையிற் படுத்தவண்ணம் மேற்செய்வதென்னென ஆராய்ந்து கிடந்தேன். கல்பசுந்தரியை அடைந்தால் பிறன் மனைவிழைதலாகிய பாவமும் பழியும் எனக்குண்டாகுமே யென்றவருத்தம் என் மனத்தை வாள்போலறுத்தது; ஆயினும் இழந்த அரசுரிமையைப் பெறுதற்கும் எனது பெற்றோரைச் சிறையினின்றும் மீட்பதற்கும் இவளைப் பெறுவதினும் வேறு வழியில்லையே என்ற எண்ணம் என் நெஞ்சைத் திடமுறுத்தியது. எனது உயிர் நண்பராகிய இராஜவாஹனனும் மற்றைய தோழர்களும் எனது செய்கையைக் கேட்டு என்னை நிந்திப்பார்களே யென்று என்மனம் வலிமை குன்றியது. இவ்விதமான மறுதலையுற்ற எண்ணங்களாற் கலங்கிய மனத்துடன் துயின்று போனேன். யான் தூங்குகையி லொரு சொப்பனந் தோன்றியது; அதில் ஸ்ரீ கணேசர் பிரத்தியக்ஷமாகி என்னை நோக்கி, "ஏ குழந்தாய்! உன் மனத்திலுள்ள சஞ்சலத்தினைப் போக்கவே இப்பொழுது இங்கு வந்தேன். நீ கொண்ட காரியத்தைக் கைசோரவிடாதே. சிவபெருமான் சடையிலணிந்துள்ள கங்கா

நதியினை யொருநாள் எனது துதிக்கையாலளைந்தேன். அதற்குக் கங்கை சினந்து என்னை மனிதனுகப் பிறக்கச் சபித்தனள். யான் அவளை நோக்கி, நீயும் மனிதப்பிறவி யெடுத்துப் பலனையுந் தோயப்பெறுவாய், இப்பொழுது கிரீடித்ததுபோல அப்பொழுது யானும் மனிதனுகி உன்னை யடைந்து கிரீடித்து மகிழ்வேன், என்று பிரதிசாபமளித்தேன். இவ்விதமாயும் முன்னிகழ்ந்தது. அதனுலன்றே இவன் பிறந்தபொழுதே என்னுடைய அம்சமே நீ. ஆதலால் ஒனறற்கும அஞ்சாதி," என்று கூறிப் போயினர்.

அதன்பின் யான் மனேரதிடமடைந்து என் கருத்தினை நிறைவேற்ற முயற்சித்தேன். மறுநாட் பகல்கழிந்து மாலை வந்தது; உடனே யான் கரியஉடை ஒன்றுதரித்து நூலேணி முதலிய சிலகருவிகளுடன், உடைவாளொன்றுமே துணையாகக் கொண்டு வெளிப்புறப்பட்டேன். விரைவில் அரண்மனையை யணுகி அகழியை எளிதிற்முவிக்கடந்து நூலேணி யுதவியால் மதிலையும் இவர்ந்து உட்புறத்திற் குதித்து, அங்கு வந்திருந்த புஷ்கரிகை வழிகாட்ட அந்தப்புர ஆராமத்தை யடைந்தேன். அங்குள்ள வகுள சண்பக சரள குங்கும மசோகமாதிய விருக்ஷ ஜாலங்களுக்கிடையே சக்கிரவாக முதலிய பறவைகளின் சிலு சிலுப்புரையைக் கேட்டுச் சந்தோஷ மடைந்தவனுய் அவற்றைக் கடந்து, அங்குள்ள சிற்றருவியொன்றினைத் தாவி, இருபுறங்களிலும் அசோக விருக்ஷங்களும் நவமல்லிகைக் கொடிகளும் அலங்காரமாயிலங்கு மொருபாதையின் வழியே யோர் இள மாமரச்சோலையை யடைந்து அதனிடையே திகழும் மாதவி லதாக்ருஹத்தினைச் சேர்ந்தேன். ஆங்கு நவரத்னபரணங்களால் விளங்கும் அணிகலப் பேழை யொன்று அம்சதூளிகா மஞ்சமொன்றன்மேல் வைக்கப்பட்டிருந்தது. நறுமணங்கமழும் பலவகை மலர்களாலும் மெழிலுறக் கைபுனைந்தியற்றப்பெற்ற அக்கொடிவீட்டின் வனப்பினை யாவரே எடுத்துரைக்க வல்லார்? கந்த சந்தன புஷ்ப கதம்ப சூர்ணங்களும் பனிநீரும் உயர்ந்த தாம்பூல மாதிய காமோத்தீபகமான பல பொருள்களும் ஆண்டு அழகு பெற அமைக்கப்பெற்றிருந்தன. அம்மஞ்சத்தி லுட்கார்ந்து சிறிது போழ்து சுகந்தத்தை அநுபவித்திருந்தேன். அப்பொழுது மெல்லிய காலடிச் சத்தங்கேட்டு அருகிலுள்ள மரத்தினடி-

யில் ஒளித்துக்கொண்டேன். அப்பொழுது அங்கு வந்த கல்ப சுந்தரி எதிர்பார்த்தபடி பெண்ணை யாண்டுக் காணப்பெறுகவ ளாய்த் தன் விதியினை நிந்தித்துப் பலவாறு புலம்பித் தன்னை யொறுக்கும் மன்மதனையும் தென்றல் குயில் என்பில் மதிபாதிய வற்றையும் வைது புலம்புவாளாயினள். அதனைக்கண்ட யான் மனம்பொறுது அவளெதிர் வந்து புலப்பலை மாற்றிக் கவலையை யாற்றினேன். அவளும் கவலைநீக்கிக் களிக்கடலிலாழ்ந்தனள். யாங்களிருவரும் எழுபிறப்பினும் தொடர்ந்துவந்த உழு வலன்பு எங்களைப் பிணித்து நிற்பதை புணர்ந்தோம்; ஒருவரை யொருவ ரின்றியமையாதவராயினோம். இன்னணஞ் சில போ ழ்து கழிந்தபின்னர் யான் அவளை நோக்கி, "அன்புடையணை ங்கே! இன்பமனைவி! இத்தனை காலும் விதியன்றோ நம்மைப் பிரித்திருந்தது? இனிப் பிரியோம். இனி இதற்கு நீ உதவிபுரிய வேண்டிய செயலொன்றுளது. எனது படத்தை அரசனுக் குக் காட்டி, இத்தெய்வதேக ஸ்வரூபலாவண்யங்கள் மானுடரி டத்தி லேகதேசமுங் கண்டதுண்டோ என்று கேள். அதற் கவன் இல்லையென்று கூறி இந்தியாதெனக் கேட்பன். அத ற்கு நீ பின்வருமாறு விடைபகர்வாயாக.

'இப்படம் ஒரு கிழவியாற் கிடைக்கப்பெற்றது. அவள் மந்திர சாஸ்திரங்களிற் கைதேர்ந்தவள். யார் இந்த உருவத்தை ப்பெறவேண்டினும் அவர்கள் உச்சரிக்கவேண்டிய மந்திரங்களை யும் செய்யவேண்டிய கிரியைகளையும் எனக்குபதேசித்திருக் கின்றனள். அதற்குப் பெரியதோர் அக்நிகுண்டம் வளர்த்து அங்கியிலாகுதி சொரிந்து யாகம்புரிய வேண்டும். அதற்கு நூறு சந்தனக்கட்டைகளும் நூறு அகிற் கட்டைகளும் சாக்குச் சாக்கான கர்ப்பூரக்குவியல்களும் பட்டுவஸ்திரங்களும் தேவை. இவ்யாகம் புரிவதற்கு முதலில் நகரத்துள்ளார் பலர்க்கும் விருந் தளிக்கவேண்டும். காலை முதல் மாலை வரை தனியேயிருந்து மந்திரம் பயின்று வேள்வி புரிவேனுயின், இத்திவ்ய தேகத்தை யான் பெற்றுக்கொள்வேன். பிறகு யாகமுடிவில் மணியோசை யொன்று கேட்கும்; அப்பொழுது நீ உனது பரிவாரமின்றித் தனியே என்னிடம் வந்து யான் கேட்கும் வினாக்களுக்குத் தடையின்றி விடைபகர்ந்து பின்னர் என்னை நீ கண்ணைக் கட்டிக்

கொண்டு ஆலிங்கனம் செய்து கொள்வாயாலுல், இத்திவ்ய ரூபத்தை நீ பெற்றுக்கொள்வாய். யான் எனது ஸ்திரீ ரூபத்தை யடைவேன். உனது விகாரவுருவம் மறைந்துபோகும். உனக்கு இஷ்டமாலுல் இதனைப்பெறலாம் இன்றேல் வாளாதிருக்கலாம். எனினும் இவ்விகாரவுருவத்தோடு நீயிருக்குமளவும் உன்னை நான் கண்ணெடுத்துப்பாரேன்,' என்று கூறிவிடுவாயாலுல், அவன் அவசியம் இவ்வுருவத்தைப்பெற விரும்புவான். மேலும் இவ்விஷயத்தைப்பற்றி மந்திரி பிரதானியர் முதலான நகரமாந் தர்களோடு நன்றுகக்கலந்து யோசித்து அவர்கள் அநுமதியை யும் பெற்றே செய்து கொள்ளவேண்டுமென்றும் இதிற் சிறிதே னும் வஞ்சகமிருப்பின் எடுத்தகாரியஞ் சித்திபெறாது என்றும் அவனுக்கு நன்கு பகர்வாயாக. அவனும் அவ்விதமே செய்ய மனமொப்புவான். இவ்வந்தப்புர ஆராமத்தில் ஒருபுறத்திலோ மம் வளர்த்தி மந்திரம் பயின்று கொண்டிருப்பாய்; ஓமப்புகையி னற் சூழுண்ட இச்சோலையில் யான் ஒருவரு மறியாது வந்து உட்புகுந்து இம்மாதவிப் பொதும்பரி லிருப்பேன்," என்று கூறி முடித்தேன். அவளும் அங்ஙனமே செய்ய ஒப்புக்கொண் டனள். பின்னரும் யான் அவளை நோக்கி, நீ அரசனுடன் இவ்விஷயத்தைக் குறித்துப் பேசும்பொழுது, அவன் உனது மாற்றுள் வசத்தனுயிருப்பதால் அவன் இவ்வுருவினைப் பெறுவ தில் உனக்குச் சம்மதம் இல்லையென்றும், அங்ஙனமின்றியவன் உன்னையே யினி விரும்பி நிற்பதாக வாக்களித்தாலுயி லிச்சடங் கினைச் செய்யத் துணிவதாகவும் அவனிடம் பேசி, யவன் மறு மொழியையும் எனக்குத் தெரிவிப்பாயாக, என்று கூறினேன்.

பிறகு யான் அவளைவிட்டுப் பிரிந்து சென்றேன்; என் அடிச்சுவடுகளைப் புஷ்கரிகை மறைத்துக்கொண்டே வந்து வழிவிட்டனள். யான் வந்தவழியே மீண்டு நகர்ப்புறக் காளி கோயிலை யடைந்தேன். சில நாளில் யான் எதிர்பார்த்த வண் ணமே யாவும் நிகழ்ந்தன. விகடவர்மராஜன், தனது பட்ட மகிஷியின் மந்திர சக்தியால் தெய்வ வுருவம் பெறப் போகிறுன் என்றும், அந்தப்புர நந்தவனத்திலேயே பட்டமகிஷியின் முன் னிலையி லிது நிகழுமாதலால் இவ்விடயத்திற் கபடதந்திரங்கள் ஒன்றுமில்லையென்றும், இதற்கு அமைச்சர் முதலிய அறிவாள

ரும் அதுமதி யளித்துள்ளார் என்றும் நகரமெங்கும் அமளி துமளியான வதந்தி பரவியது. மணிமந்திர ஔஷதங்களின் மகிமா ப்ரபாவத்தால் உலகிற் பல அற்புதச் செயல்களும் எதிர் பாராத வண்ணம் நிகழ்கின்றன வாதலால், இவ்விந்தையு மேன் நிகழக் கூடாதென்று பலரும் பேசிக்கொண்டனர்.

யாவை மெதிர்பார்த்தவிதமே நடைபெற்றன. முதலில் நகரவிருந்தும் மறுநாள் வேள்வியும் நிகழ்ந்தன. அன்று மாலை அரண்மனைச் சோலை முழுவதும் புகைப்படலத்தாற் போர்த்தி ருந்தது. புகையும் இருளும் எனக்குச் சாதகஞ் செய்தன; யான் ஒருவருமறியாவிதம் சோலையிலுட் புகுந்தேன். கற்ப சுந்தரி என்னிடம் விரைந்துவந்து, தான் அரசனிடம் யான் கூறியவிதம் பேசியதையும் அவன் இனி வேறுமகளிரைக் கனவி னும் கருதவில்லையென்று வாக்களித்ததையும் கூறிப் பின்பு, காமனை சான்றாகக் கந்தருவ மணமுடித்த தன்னை யிக்கனமே சான்றாகவுங் கைப்பற்றியருள என்னைக் கேட்டுக்கொண்டனள். யானுமவளைத் தழுவி மாதவிப் பொதும்பரில் மறைவாக விருத்தி வேள்வியழன்முற் சென்று ஆண்டுக் கட்டியிருந்த மணியை அடித்தேன். அரசனது இறுதிக்காலத்தை யறிவிப்பதுபோல அம்மணியுமொலித்தது. பின் யான் பீடத்திருந்து செபஞ்செய் வதுபோற் பாவனை செய்து கொண்டிருந்தேன். சிறிதுநேரத் திற் கெல்லாம் விகடவர்மன் அங்குவந்தனன்; என்னைக் கண்ட தும், அச்சமும் ஐயமுங் கொண்டவனைப்போல அவன் சிறிது அகன்று நின்றனன். யான் அவனை நோக்கி, "நாதா! நீ இவ் வுருவினைப் பெற்ற பின் வேறு மாதரை நெஞ்சாலுந் தொடே னென்று நீ யெனக்குச் செய்து தந்த சபதத்தை இவ்வக்கினி சாக்ஷியாக மீளவு மொருமுறை செய்து தருவாயாக," என்று கேட்டேன். அவன் இதனைக்கேட்டதும் ஆண்டிருப்பது தன் மனைவியே யென்று அச்சமும் ஐயமுநீங்கிச் சபதஞ் செய்யத் தொடங்கினன். உடனே யான் புன்னகை செய்து, "ஐயனே! யான் எவளுடைய அழகிற்கு அஞ்சவேண்டும்? என்னிலும் வழகிற் சிறந்தாளுண்டோ இவ்வுலகிலுண்டோ? ஒருகால் அப்சர கள் உன் வலையிற் பட்டால் உன் மனோபீஷ்டப்படிச் செய் மீளவும் நீ சபதஞ் செய்யவேண்டாம். இனி, உன்

மனத்திலடக்கி வைத்திருக்கும் இரகசியமான விஷயங்கள் அனைத்தையும் எனக்கெடுத்துரைத்தாய் பின்பு பிறற் கரிய இவ்வருணிலைப் பிறுவாயாக," என்று பகர்ந்தேன். விகடவர்மன் அதற்கிணங்கித் தன் மனத்திலுள்ள இரகசியங்களைப் பின்வரு மாறு கூறினன்.

"பெண்மணியே! எனது பிதாவின் இளைய சகோதரனாகிய பிரதாபவர்மாவுக்கு விடங்கலந்த உணவினை யளித்துக் கொல்ல என் அந்தரங்க மந்திரிகளை யழைத்துக் கலந்து பேசியுள்ளேன்; காளையதினமே சிறைச்சாலையி லுள்ள பிரதாபவர்மனைக் கொன்று அவன் சோயிலைவிறந்தான் என்று ரகசியமாகப் அறியப் பிரங் கப்படுத்தத் தீர்மானித்திருக்கிறேன். இரண்டாவது, என தினைய சகோதரன் விசாகவர்மனைப் புண்டரபுரத்தில் நிகழுங் கலகத்தை யடக்கச் சிறு சேனை யொன்றுடன் செல்ல ஆஜ்ஞா பித்துள்ளேன். அவன் ஆண்டுச் செல்வதனின் மடி-தறிண்ணம். அதற்காகவே யவனை யனுப்புகிறேன். காளையை அவன் புறப் படப்போகிறான். மூன்றாவது, எனது வியாபாரியான சார்த்த வான் என்பவனையும் பாஞ்சாலதேசக் கிழவணிகனொருவனையும், கணதியென்னும் பெயருடைய யவன வியாபாரியினிடத்துள்ள பெறுதற்கரிய வைரமணி யொன்றினை மிகக் குறைந்தவிலைக்குத் தந்திரஞ்செய்து வாங்க ஏற்பாடு செய்துள்ளேன். முடிவில், மிகுந்த பராக்கிரமசாலியான குறுநில மன்னனாகிய அநந்தசீரன் என்பவனுடைய நாட்டிற் பல கலகங்களை யுண்டாக்கி, அவற்றை நீக்கச் செல்வதுபோற் சேனையோடங்குச் சென்று அவனைத் தொலைக்கும்படி எனது பிரதானியாகிய சதவஹனி என்பானுக்கு ஆஜ்ஞையிட்டிருக்கிறேன். இவையே பிறரறியாமல் என்மனத் தடக்கியிருக்கும் இரகசியங்கள்," என்று கூறி முடித்தனன்.

இவற்றையெல்லாங் கேட்ட பின்னர் யானெழுந்து, நீ செய்த வினைகட்கெல்லாம் பிரதிப் பிரயோசனமாக இதனைப் பெற்றுக் கொள்வாயென்று எனது கைவாளைவீசி அவனை யிரு துண்டமாக வெட்டி வீழ்த்தி நெருப்பிற் றள்ளி ஏராளமாக நெய்யையும் கருப்பூரக்குவைகளையும் மேலேகொட்டி அனலை மேலோங்கி யெரியச் செய்தேன். விகடவர்மனுடலம் நொடி-

யிற் பொடியாயது. எனது செய்கையைக் கண்டஞ்சி யொரு புறம் அகன்று நின்ற என் காதலியைத் தேற்றி அவளது கையைப்பற்றி யுடனழைத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றேன். பட்டமகிஷியுடன் சென்ற என்னை மந்திரி விஞ்சையர்கோ புத்துரும் சேனாவீரரும் விகடவர்மனை யெனக்கருகி, அரண்மனையிலுள்ளார் யாவரும் பணிந்து போற்றி யுபசரித்தனர். உணவுகொண்ட பின்னர் அரசியுடன் சயனக்கிருகத்தை யடைந்தேன்; அங்கு, விகடவர்மன் காடோறும் வழக்கமாகச் செய்து வந்துள்ள தொழில்கள் யாவற்றையும் அவனை யெடுத்துச் சொல்லக்கேட்டு நன்றாக அறிந்துகொண்டேன்.

பின்னர், வழிகாட் காலையிலெழுந்து ஸ்நானஞ் செய்து காலைக்கடன் முடித்துப் பின் அத்தாணி மண்டபத்தை யடைந்தேன். அங்குவந்த மந்திரி முதலாயினோரையும் மற்றுமியாரையும் நோக்கி, "ஐயன்மீர்! யான் எனதுருவத்தை மாற்றிய நோவிற எனது குணச்செயலையும் மாற்றிவிட்டேன். எனது சிறிய தகப்பனாகிய விகாவர்மனைச் சிறையிடு செய்து இப்பொழுதே எண்டுக் கொணர்மீராக. அவருடன் அவர் மனைவியாகிய பிரியம்வதாதேவியையும் உடன்கொண்டு வருமீராக. அவருக்கு உரியதாகிய இவ்விராஜ்ஜியபாரத்தை யான் அபகரித்துக்கொண்டது பிழை யென்பதை யிப்பொழுதுணர்ந் தேனகலின் அவரைச் சிறையினின்றும் நீக்கி இராஜ்ஜியத்தை யவர்பாலிலிப்புனித்து யான் அவ்வழியொழுகத் நிர்மானித்து விட்டேன்," என்றேன். பின் எனதினைய சகோதரனுகிய விகாவர்மனை யுடனே அழைத்துவரச்செய்து அவனை நோக்கி, "தம்பி! புண்டரபுரக் கலகத்தையடக்க நீ யிப்பொழுது அங்குச் செல்லவேண்டாம். ஆண்டுள்ளாரிருக்கும் கொடிய பஞ்சத்தால் வந்தனவே யாயிருந்திருக்கும் அவ்வுணவைப் பொருந்திய புண்ணின்மேற் பூச்சியுங் கடித்ததுபோல, மேன் மேலும் துயருறுத்தல் நியாயமன்று. வினைபொருண்மலிந்துள்ள நாட்டிலுள்ள யாம் பஞ்சத்தாற் பீடிக்கப்பட்டோரை நலிதல் பெரும் பாவமாம். அவர்கள் நமது நாட்டிலுட் புகுந்து நம்மைக் கொள்ளையிடாமற் பார்த்துக் கொள்ளவேண்டியது நமது காரியமே தவிர, அவரோடு வலிவிற் சண்டைக்குப்போகவேண்டியது

அவசியமில்லை. ஆதலால் நீ இப்பொழுது போர்க்குப் புறப்பட வேண்டாம்," என்றுகூறி அவனைப் புண்டராபுரத்திற்குப் போக வொட்டாமற் றடுத்துவிட்டேன். அதன்பின், இரத்தினவியா பாரிகளிருவரையு மழைத்து, "நாம் அந்த வைரமணிக்குத் தக்க விலைகொடுத்து வாங்குதலே நியாயமே யன்றி அவ்வணை வணி கனை யமாற்றுதல் நமது கௌரவத்திற்கு அழகில்லை," என்று கூறி அவன் சொன்ன விலையைக்கொடுத்து வாங்க ஆஜ்ஞாபித் தேன். பிறகு, பிரதானி சதஹனியை வரவழைத்து அவனை நோக்கி, "நீ இனி அநந்தசீரற்கு எவ்வித தீங்குமுபயற்றுதி. அவன் மேலிருந்த பிழையெல்லாம் அவன் பிரகாரவர்மாவின் பால் வைத்திருக்கும் பொன்பேயன்றி வேறில்லை. இப்பொ ழுது நாமே பிரகாரவர்மாவினைப்பற்றிய அபிப்பிராயத்தினை மாற்றி விட்டமையால், அநந்தசீரனை யாமே கடியக் காரண மொன்று மில்லை. மேலும் சிறிய பிதாவாகிய பிரகாரவர்மாவே இனி இராஜ்ஜியபாரம் வகிக்கப்போகின்றமையின், அவருடைய உத்தரவின்றி அவர்களுடைய கண்டர்கள் விஷயத்திற் பிரவேசிப் பது பிழைபாடுடையதாகும்," என்று கூறிவிடுத்தேன். இவற் றைக் கண்ட அரசாங்க உத்தியோகத்தினர் யாவரும், யான் விகடவர்மனை யென்பதை ஐயமற உணர்ந்தேதை யன்றி, அவன் திவ்விய லாவண்யஸ்வரூபத்தையும் நற்குண் நற்செய்கைகளையும் பெற்றமைக்குப் பெரிதும் மனமகிழ்ந்தனர். எனது பெற்றோர் கள் அப்பொழுதே சிறைமீட்கப்பெற்றுச் சிம்மாசனத்திலமர்ந் தார்கள்; வழக்கம்போல அவர் முறை தவறுது அரசாட்சி நடத்தத் தேசமெங்கும் ஒரு குறைவுமின்றிச் செழித்தோங்கி யது. சின்னாள் கழித்து என் பெற்றோர்க்கு என் விருத்தாந் தங்கள் முழுவதையும் எனது செவிலியைக் கொண்டு தெரிவித் துப்பின்னர் அவர்களுடைய பதகமலங்களிற் பணிந்து வணங் கினேன். இரு குழந்தைகளும் உயிருடனிருப்பதை என்று மறிந்த அவர்கள் இழந்த இன்னவிழியை மீளப் பெற்றார் போல இணையிலா மகிழ்ச்சி யடைந்தனர். என் பிதாவின் ஆணையை மேற்கொண்டு யான் யுவராஜ்ய பட்டாபிஷேகத்தை யும் பெற்றேன். இனித் தங்களைக் காணவேண்டிய குறை யொன்றுமே என்னை வருத்தியது; தங்களை எங்ஙனங் கண்டு பிடிப்பது என்று ஆலோசித்திருக்கும் பொழுது, எனது பிதா

என்ற பெரும் கவலையினின்றும் நீங்கி மகிழ்ச்சி அடைந்தார். அக்கடிதத்தில், பிலாத்தின் தலைமையிலுள்ள கல்டேயர்கள் படைகளைத் தாக்கி அழித்து ஆயுதங்களையும், சில்லரைப் பணங்களையும் தேருக்கும் முக்கிய வருவாய் என்பதையும் கூறிக் காமதேனுவின் காவலைப் படையுடன் வந்து தனக்கு உதவி புரியவேண்டுமென்ற வாசகம் பெற்றிருந்தது. உடனே யாதும் தாமதமின்றி உடன் போய்க்கொண்டு இவண் வந்தேன்; யான் வருமுன்னே பகைவன் மடிந்தழிந்து போயினன். யாவரும் அருளையிலும் அருளையால தங்கள் வருகையினைப் பெற்ற இன்பவாரியில் மூழ்கினேம்."

என்று தன் வரலாற்றினை உபகாரவிதா கூறி முடித்தனன். இராஜவாகனன் அங்குள்ள அனைவரையும் நோக்கி, நமது மன்னன் செய்து முடித்துள்ள அரிய பெரிய செயல்களை நோக்கும் போது அவனிடத்திய தருமசிந்தாந்தமான அன்பொழுகு நிலைமை யினைநோக்க மாறுபடுமென்றும், 'வல்லானுக்குவல்லான் வையகத் தெல்லாம் பெருவழக்குத் தீர்க்குமுண்டோ' என்ற பெரியார் கூற்று உண்மையே யென்றும் கூறி முடித்தனன். பின்னர் ஆசகுமாரன் குறிப்பினை யுணர்ந்து அர்த்தபாலன் தனது சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினன்.

அதிகாரம் 10.

அர்த்தபாலன் சரித்திரம்

தான் தங்களைத் தேடிக்கொண்டு மற்றைய கப்பல்களோடு புறப்பட்டுச் சென்ற கடல் சூழ்ந்த விக்காவிலிருந்து புறப்பட்டு இடைவழியும் பார்த்துச் சென்றும் கழிந்தேன். நாளாவட்டாணலி என்னும் காசிபுரியை யடைந்து அங்குள்ள கங்கைக் கரைப் புன்னிய கட்டமாகிய மணிகர்ணிகையில் முழுகிக் காலகால ஈசுர்த்திபாகிய அவிமுக்தேசுவரனுடைய ஆலயம் புகுந்து கடவுளை மனமொழி மெய்களாற் பிரார்த்தனை வணக்கினேன். பின்பு, நகரத்தின் புறம்புற வாயிலாக வெளிவந்து ஓர் தனியிடத்தில் உலாவிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அபோதகிட காத்திர வஜ்ர சரித்திரா கூடிய மகா பலவாகிரதவினைக் கண்

டேன்; தூயா அருகையினால் அவன் கண்கள் இரண்டிலு மெழு வைப்பதும் போற் கிடைத்திருந்தன. அதிசயித்து படைவியா க்கு காணப்பட்ட அவன் அங்கனம் அருகை வனக்கு வியப் பினைத்தந்தது; அவனுக்கு அவனிறந்த தன்பத்தைத் தரு சூக் காரணமானதென்னவென்றறிய அவாவினேனும். உடனே யான் அவனை நோக்கி, "அன்பனே! உன்னைப் பார்த்தாற் சு த்த வீரனைப் போலத் தோன்றுகின்றனை; பலிஷ்டனாக இருக்கின் றாய். அவனிடமுடியாத இத்தகைய தாயத்திற்குக் காரணம் யிருப்பதென்னை? உயிரையும் துரும்பாகக் கருதுக்கூடிய உனக்கு சோர்ந்தவனென்னை? வனக்கு வெளியிடுவதைக்கூடாயின் வன் மனோவியாகுலத்திற்கு வது வின்னதென்றுரைப்பாயாக; வன் னும் கூடுமாயினதற்குப் பரிகாரம் தேடுவேன்," வன்று அவனைக் கேட்டேன். வன்னை யவன் நிமிர்ந்தோக்கி யின்னார்த் தனது வாலாற்றினை வனக்குரைப்பதற் றனக்கியா தொரு தடையுமில்லை யென்று சொல்லினன். இருவரும் ஒரு காவிய விருக்கைத்தினடியி லுட்கார்ந்தோம். அவன் தன் வா லாற்றினை அடியில் வருமாறுரைப்பானுயினன்.

"அன்பனே! யான் இவ்வூரிலுள்ள செல்வ வர்களுள் ஒரு வணிகன் புதல்வன்; பூரணபத்திரனென்பே பெயரினை யுடை யேன். இளமை தொடங்கி என் மனம்போன போக்கெல்லாம் முழுதும் இயல்பினேன். என் தந்தை தன்னுயிரன்னவை புயன்று என்னை நல்வழிப் படுத்தப் பார்த்தனர்; யான் அவர் சொல்வழி கேளாது கட்டின்றித் திரிந்து முடிவிற் களவுத் தொ ழிலைக் கைக்கொண்டு பெருந் திருடனானேன். இந்நகரிலுள்ள ஒரு பெரிய வணிகன் வீட்டிற் களவுசெய்து வெளிப்படும் பொழுது காவலாளிகளாற் பிடிக்கப்பட்டுச் சிறையிலடைக்கப் பெற்றேன். நியாயாதிபதிகள் விசாரித்துப் பலநாளைய திருட னுகன் யானையின் காலாலனது தலையை யிடறிக்கொல்லு மாறு எனக்கு மரணதண்டனை விதித்தனர். அந்நகரமே அரண் மனை வாயிலின் முன்பு, பிரதான மந்திரியாகிய காமபாலன் எதிரில் என்னைக் கொணர்ந்து நிறுத்தி என்மேற் பட்டத்து யானையை வினைர்கள். யான் ஓடிப்போகாவண்ணம் பூமியிலா ழப் பதித்துள்ள வலிய தொழுமரத்தூணொன்றில் எனது கை

களை யிறுகச்சேர்த்துப் பிணித்திருந்தனர். பாகன் குத்துக் கோற்காரர் இவர்களின் துண்டுதலை யும்கூட்டமாக வேடிக்கைப் பார்க்கவந்திருந்த மனிதர்களின் ஆரவாரத்தா லும் அம்மதயானை, தன்மேலிருந்த மணிகள் பேரொலி செய்யத் தனது துதிக் கையை உயர்த்துக்கொண்டு கன்னைப்பற்றி மேலே தூக்கிக் கீழே யடிக்குமாறு அதிவேகமாய் என்மேற் பாய்ந்து வந்தது. எக்காலத்திலும் பயம் என்ப தின்னதென் றறியாதவனாகிய யான், எனது கைகளைச் சேர்த்தியிருந்த தொழுமரத்தைக் கைகளோடு சேர்த்தவண்ணமே பிடுங்கிக்கொண்டு, என்மேற் பாய்ந்துவந்த யானையினை எதிர்த்து அத் தொழுமரத்தால் அதன் மத்தகத்தில் ஓங்கியடித்தேன். யானை மயங்கிப் பின் வாங்கியது. மேலிருந்த பாகன் யானையைப் பலவிதமாகவை தும் அங்குசத்தாற்குத்தியும் அதன் கோபத்தை வளரச்செய்து மீளவும் அதனை என்மேற் பாய்ந்துவரச் செய்தனன். நான் அஞ்சாத நெஞ்சினனாய் அத்தொழுமரத்தைச் சுழற்றி முன்னை யிலும் பன்மடங்கு உரத்து அதன் மத்தகங் குழிய அடித்தேன். யானை ஒரு நிமிஷநேரம் மனங்கலங்கி நின்று பின்னர்த் திடீ ரெனத்திரும்பி ஓடிப்போயிற்று. பாகன் மீளவும் அதனைப் பலவிதமாகத் துன்புறுத்தி என்மேல் மூன்றுவது தடவையும் எதிர்த்துவரச் செய்தனன். ஆயினும், தொழுமரமுங் கையு மாய்க் கம்பீரமான தோற்றத்தோடு மீளவும் அடிப்பதற்குத் தயாராக நின்றுகொண்டிருந்த என்னைக்கண்ட மாத்திரத்தில், அவ்யானை பிளிறிக்கொண்டு பாகனையும் பொருட் படுத்தாமல் ஓடிப்போயிற்று. அதன்பின், பாகனும் மற்றையோரும் யானை யைக் கொணரச்செய்த முயற்சிகள் பலவும் பயனற்றன. இவற்றை யெல்லாங் கண்டிருந்த மந்திரி காமபாலன், எனது கைகளைச் சேர்த்திருந்த தொழுமரத்தை நீக்கி, என்னை அருகி லழைத்து அன்புடன் நோக்கி, "ஏ வீர! இவ்யானையை இது காறுந் தடைசெய்தோர் ஒருவருமில்லை. இது பகைவரைக் கொல்வதில் யமனிலும் உரம் படைத்தது. இனைய யானை உன்னால் வெல்லப்பட்டதாயின், உனது பராக்கிரமம் எவராலும் பாராட்டற் பாலது. இத்தகைய சுத்தவீரனாகிய உனக்கு இக்கதி சிறிதும் தகாது. ஆகலால் இன்று முதல் இக்களவு முதலிய தீய தொழில்களை விட்டு நல்வழிப் படுவாயாகில் என்

மனத்திற்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருவாய். யான் இப் பொழுதே உன்மீது விதித்த கொலைத்தண்டனையை மாற்றிவிடு கின்றேன். என்னிடத்து வேலைக்கமர உனக்கு இஷ்டமிருக் குமா?" என்று கேட்டான். கொலைத் தண்டனை விதிக்கப் பெற்ற பெருந் திருடனாகிய என்னையுந் தன்னிடம் வைத்துக் கொள்ள விரும்பிய அப்பெருந்தகையினை நினைத்து நினைத்து உள்ளமுருகி, அவனடிமிசை நெடுதுவீழ்ந்து புலம்பி, எனது கயவினை யன்றோடு விடுவதாக வாக்களித்தேன். அவனும் என்னை மன்னித்துத் தன் வீட்டில்வைத்து நண்பனைப் போலப் பாதுகாத்து வந்தனன். அவனுக்கு என்னிடம் பரிபூரணமான நம்பிக்கை யேற்பட்டபிறகு, ஒருநாள் எனது வேண்டுகோட் கிணங்கி அவன் தன்னுடைய சரித்திரத்தைப் பின் வருமாறு கூறினன்:—

குசுமபுர (புஷ்பபுரி) த்தை யரசாண்டுவந்த ரிபுஞ்சய மகா ராஜ (ராஜஹம்சன் பிதா) னுக்குத் தருமபாலனெனப் பெயரிய அமைச்சனொருவனிருந்தான் அவன் கல்வி கேள்வியறி வொழுக் கங்களிற் சிறந்தவன். அவனுக்குச் சுமித்திரன் எனப் பெயரிய மைந்த னொருவனிருந்தான்; அவன் எல்லாவிதத்தினுந் தந் தையை நிகர்த்தவன். அவனது இளைய சகோதரனாகிய யான், தருமபாலனுடைய மற்றொரு மனைவியின் புதல்வன். கூடா வொழுக்கினரை நட்புக்கொண்டு காமுகனாகத் திரிந்து வந்த என்னை என் மூத்தோன் கண்டித்து நல்வழிப்படுத்த முயன்ற னன். அவன் அன்புடன் கூறிய நல்லுபதேசமொழிகளை யொரு சிறிதுஞ் செவிக்கொளாது யான் என்வழியே திரிந்தேன்; எனது நன்மையினைக் கருதி அவன் கண்டித்தபொழுது யான் அதனைப் பொறுக்காது வீட்டைவிட்டுத் தேசாந்தரஞ் செய்ய வெளிக் கிளம்பிவிட்டேன். யான் பற்பல இடங்களிலும் சுற் றித் திரிந்து பின், கடைசியிலிக் காசியம் பதியினை யடைந்தேன். நகரத்தைச் சார்ந்த அந்தப்புர வயந்தச் சோலையில் ஒருநாள், காசி தேசாதிபதியான சண்டசிம்மனது புதல்வியாகிய காந்தி மதி என்னும் பெண்மணி, தனது தோழியருடன் பந்து விளை யாடிக்கொண்டிருக்கையில் தற்செயலாக அங்குச் சென்றேன், அவளைக்கண்டேன், அவளழகில் ஈடுபட்டுக் காமுற்றேன். சமயம் பார்த்திருந்து அவளைத்தனியே சந்திக்கவும் பெற்றேன்.

யாங்களிருவரும் ஒருவரை யொருவர் விரும்பினமையின் பிறரறி யாது கந்தர்வ மணம்புரிந்துகொண்டோம். சின்னாளில் அவள் கருப்பமடைந்து காலக்கிரமத்தில் ஒரு புதல்வனை யின்றனள். அவருடைய அந்தரங்கத் தோழியருட் சிலரேயன்றி வேறெவரும் இதனையறியார். அத்தோழியர் இவ்விஷயம் வெளிவருமாயில் அரசகுமாரிக்கு அபவாதமும் அவள் குலத்திற்குப் பழிச் சொல்லும் தங்களுக்கு மானக்கேடும் விளையுமென்று அஞ்சி அக்குழந்தை பிறந்தவுடன், தாய்க்குச் சிசு உயிரின்றிப் பிறந்ததாகப் பொய்கூறி விட்டு, அதனை எடுத்துச் சென்று அரண்மனைப் புறத்துள்ள புனிலமொன்றிற் கிடத்தி, அதனைக் கொண்டுபோய் மயானத்திலெரித்து விடும்படி இழிகுலவள்ளி யொருத்திக்கு ஆஞ்ஞாபித்தனர். அவளும் நள்ளிருளில் அங்ஙனஞ் செய்து திரும்பிவருங்கால், நகரக்காவல் புரிவோர் அவளைக்கண்டு ஐயமுற்று, அகாலவேளையிற் சஞ்சரிப்பதற்குக்கான காரணம் கூறினுங் கேளாது கடுந்தண்டம் புரிவதாக அச்சுறுத்தினர். அதனைக் கேட்டு அவள் உண்மையினை வெளியிட்டனள். இராஜகுமாரிக்கும் எனக்குமுள்ள காதல் பரிதாபகரமாயிற்று. இவ்விஷயம் உடனே அரசன் காதிற் கெட்டியதும் அவன் என்னைப் பிடித்துக்கொண்டுவரத் தனது கிங்கரர்களோடு புறப்பட்டனன். அந்தப்புரச் சோலையிலுள்ள செய்குன்றினடியிலுள்ள இரகசியமான குகையொன்றில், நடந்த விஷயமொன்றையு மூராது அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருக்கையில், அந்தஸ்திரியின் உதவியால் அவர்கள் அறிந்துகொண்டு, திடீரென நாற்புறமுஞ் சூழ்ந்து என் கைகளைக் கயிறுகளாற் பிணித்துக் கொலைக்களங் கொண்டுபோயினர். அரசனையின் படிக் கொலைவினை புரிவோன் எனது தலையினை வெட்டியெறியத் தனது வாளை யிசிறுன். யான் திடீரென உடலை வளைத்துத் தலையைக்குனிந்து கொண்டமையால் அவன் வாள்வீச்சுக் குறி தவறி யென்கையின்மேல் விழுந்து கட்டியிருந்த கயிற்றினை யறுத்துவிட்டது. தெய்வகதியாகச் சுவாதீனத்தைப் பெற்ற யான், அக்கொலையாளி மீளவுந் தனது வாள் வீசுதற்கு முன், அவன் மேற்பாய்ந்து அவன் கைக்கத்தியினைப் பிடுங்கிக்கொண்டு அவனையும் என்னை எதிர்த்திதார் பலரையும் கண்டதுண்டமாக வெட்டிக் கரணையாடிவிட்டு ஒருவர் கையிலும் அகப்படாமல்

ஓடிப்போயினேன். மிருந்த தெளர்ப்பாக்கியனுன யான் எனது காதலியைப் பிரிந்து, நிற்க நிழலுமின்றிப் பல விடங்களிலும் அலைந்துகொண்டு செல்லுகையில் ஒரு காட்டின் வழியாகப்போ னேன். அங்கு, ஒப்புயர்வற்ற போழுகின் யுடைய தெய்வப் பெண் ஒருத்தியினைக்கண்டேன். அதேகந் தோழியர்கள் பரி வாரமாகப் புடைசூழ என்னெதிர்வந்த அந்த மாதின் முகத்தில் ஆறுத்துயர் குடிகொண்டிருந்தது. அவள் என்னையணுகி அங்கை கூப்பித்தொழுது, ஆண்டிருந்த ஆலமரத்தினடியில் வீற்றிருக்கவேண்டிக் கொண்டனள். யானும் அவள் வேண்டு கோட்கிணங்கி அவளுடன் அம் மரத்தினடியி லுட்கார்ந்து அவளைநோக்கி, 'நீ யாவள்? உன்னிருப்பிடம் யாது? என்னை யிண்டிருக்கக்கூறிய காரணம் என்னையோ?' என்று கேட்டேன். அவள் தேனினுமினிய மொழியாற் குயிலும் நாணப் பின்வரு மாறு கூறினள்.

"ஐயனே! யான், யக்ஷாதிபதியான மணிபத்திரனுடைய மகள்; காராவளி யென்னும் பெயருடையேன். மலயாசலத்தி லுள்ள அகஸ்தியாச்சிரமத்திற்குச் சென்றிருந்தேன்; அங்குப் பதிவிரதா சிரோன்மணியாகிய லோபாமுத்திரையினைக் கண்டு வணங்கி, அவள்பாற் றருமோபதேசங் கேட்டுத் திருமிவருகின் றேன். வருங்வழியில், காசிநகரத்தின் மயானத்திலொருசார் ஒரு குருத்துக் குழந்தை அழுதுகொண்டிருக்கக் கண்டேன். அவ்வழகிய ஆண்குழந்தையை அங்ஙனம் விட்டுப் போகத் தாய்க்கு மனம் எங்ஙனம் வந்ததோ என்று வருந்தி, அதன் அநாதை நிலைமைக்குப் பரிதபித்துத் தனியே விட்டேக மன மின்றி அதனைக் கைக்கொண்டு எனது நகரத்திற் கேகிக் குழந் தையை என் பிதாவின் கையிற்கொடுத்து, அது கிடைத்த விதத்தினையுங் கூறினேன். ஒருநாள் எனது பிதா அளகாபுரிக் குச் சென்றிருந்த பொழுது அவ்வழகிய குழந்தையைக் குபே ரனுக்குக் காட்டினேன்; குழந்தையைக் கண்டவுடன் சிவபெரு மான் முழுநிகிய அளகேசன், என்னைத் தன்பால் வரவழைத்து என்னை நோக்கிப், 'பெண்ணே! நீ இக்குழந்தையைக் காணுந் தொறும் உன் மனத்திலுண்டாகும் உணர்ச்சி யாது? கூறுக,' என்றனன். அதனைக் கேட்ட யான், 'ஐயனே! இதனைக் காணும்

'மகாபுருஷ! தவறு செய்தவன் யானே. நீ எனது மகளை மணந்து கொண்டதனல் எனக்குப் பெருமையும் நன்மையுஞ் சித்தித்தன, என்பதை யறியாது அதற்குப் பிரதியாக உன்னைக் கொலைசெய்யத் துணிந்த பிழை என்னதே. யாதோ பைத்தியம் பிடித்தவன் போலவும் பேய்க்கோட்பட்டவன் போலவும் வகையறியாது செய்த குற்றத்தினை நீயே பொறுத்துக்கொண்டாலன்றி யானென் செயவல்லேன். எனது அரசாட்சியும் உயிரும் என் மகளும் யாவும் உன்னுடையனவே யாதலால் அவற்றை யுன்னிஷ்டம்போற் செய்யலாம்,' என்று இரங்கிக் கூறினன். அவனைக்கண்ட எனக்குப் பரிதாப முண்டாகி மனமிளகிற்று. என் கோபமாறியது. உடனே அவனை யாண்மனையோடு காசியிற் சேர்த்து யானுந் தாராவளியோடு அவனையடைந்தேன். அரசன் பெருங் களிப்புடன் ஏற்றுபசரித்து நகரத்தாரறிய எனக்கும் காந்திமதிக்கும் மணவினையை மிக்க விமரிசையுடன் நிறைவேற்றினன். தாராவளி காந்திமதிக்குப் பழம்பிறப்பின் வரலாறுகளை யெல்லாம் விளங்க எடுத்துரைத்தனள்; யான் இருமனைவியருடனும் அளவிலா இன்பத்தினை அநுபவித்திருந்தேன். பிறகு, அரசன் என்னையே இளவரசாக யுவராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்து, இராஜ்யாதிகாரம் முழுவதையும் என்வசமொப்புவித்தனன்.

இவ்விதமாகக் காமபாலன் தனது சரித்திரத்தைக் கூறி முடித்து, என்னை வழக்கம்போல அன்புடன் பாதுகாத்து வருவாயினன். பின்னர்க் காலாந்தரத்தில், அவனுடைய மாமனராகிய அரசன் வையக வாழ்வினை நீத்து விண்ணுலக மேவினன். இறந்துபோன சண்டசிம்மராஜனுக்கு இரு புதல்வர் இருந்தனர்; மூத்தவனுகிய சண்டகோஷன் சிற்றின்பப் பிரியனுய்த்தடுமாறி வியாதி பீடிதனுகி அகால மரணத்திற் குள்ளாயினன். இளையவனுகிய சிம்மகோஷன் ஐந்து வயதுக் குழந்தையாயிருந்தனன். காமபாலன், அக்குழந்தை சிம்மகோஷனைச் சிங்காதனத்திலேற்றி அரசனுகப் பட்டாபிஷேகஞ் செய்து தானே அரசுரிமைத் தொழிலை நடாத்திவந்தனன். சிம்மகோஷனுக்குத் தக்க வயது வந்து யௌவனநிலை யடைந்தவுடனே இராச்சியம் அவன்பா லொப்புவிக்கப்பட்டது. ஆயினும் அவன்

அநுபவமுதிர்ச்சியில்லாத இளைஞனையிருந்தமையின் துர்மந்திரி களின் வசப்பட்டு அவர்களுடைய வழியிலொழுகுவானுயினன். அவர்கள், காமபாலன் அரசகுமாரியை பலாத்காரமாகக் கைப் பற்றிக்கொண்டன னென்றும், அரசனைப் பிராணஹானி செய் வதாக அச்சுறுத்தி அவன் அநுமதியை வாங்கி அவளை மணந்து கொண்டதாகவும், அரசனது மூத்த புதல்வனுகிய சண்டகோ ஷனை விஷமிட்டுக் கொன்றதாகவும் இவ்விளைஞனை சிம்மகோ ஷனுக்கு அவர்கள் போதித்தது மன்றி, அண்ணனைத் தொலைத் தது போலத் தம்பியாகிய அவனையும் அடியோடழித்துவிடுவான் என்றும், துர்ப்போதனை செய்தனர். மேலும் காமபாலனு டைய கருத்திற்கு விரோதமாய் அரசன் ஒரு சிறிது ஒழுக நேரிடினும், அரசன் முந்திக்கொண்டாலன்றிக் காமபாலன் அரசனை யொருநொடியிலழித்து விடுவானென்று அரசனுக்குக் காமபாலனிடம் விரோதமுண்டாகும் உபாயங்கள் பலவற்றையும் அத்தீயோரியற்றினர். ஆயினும் அத் துன்மந்திரிகளின் போ தனையின்படி அரசன் காமபாலனுக்கு விரோதமாகச் செய்த தந்திரோபாயங்கள் பலவும், வித்தியாதரமங்கையாகிய தாரா வளியின் சாமர்த்தியத்தால், பகலவனைக் கண்ட பனிபோலொ ழிந்தன. இப்படி நிகழுங்காலத்தி லொருநாள், சிம்மகோஷ ராஜனது பட்ட மனைவியாகிய சுலக்ஷணைதேவி, காந்திமதியின் முகவாட்டத்தைக்கண்டு, அவள் துயருறக் காரணமென்னையோ வென அவளைக் கேட்டனள். அதற்கு அவள், 'எனது பர்த்தா என்னைப்போலத் தனக்கு மனமுவந்த மனைவியும் எனக்குத் தோழியுமாகிய தாராவளியோடு சல்லாபமாயிருந்து அவள் மடியிற் றுயில்வுறுங்காற் சொப்பனமொன்று கண்டு அதில் எனது பெயரினை வாய்விட்டுக் கூறி பன்புடனணைத்தமையாற் பொருமைகொண்ட தாராவளி துணிமிக்கு நாயகனை வெறுத்துத் தணந்து போயினள். புருடன் எவ்வளவு வணங்கி வேண்டிக் கொண்ட போழ்தினும் அவள் கோபம் தணியாதாயிற்று. அதனல் எனது கணவர் தீராத்துயர மடைந்திருக்கின்றனர். அவர் மநோவியாகூலத்தைக்கண்டு யானுங் கவலையுற்றுள்ளேன் இதுவே என் முகவாட்டத்திற்குக்காரண' மென்று எடுத்துக் கூறினுள். இதனைச் சுலக்ஷணைதேவி அரசனுக்கு அறிவிக்க, அவன் இதுவே நல்ல சமயமென்று கருதி, சிறிதும் அஞ்சுத

வின்றிக் காமபாலனை யொழித்துவிடவேண்டிய உபாயங்களைச் செய்தனன். இவன் கபடச் செயலொன்றையுமுணராத காமபாலன் ஆண்மனையில் வழக்கம்போல அரசாட்சித் தொழில் புரிந்து நிற்கையில், அரசனது ஆணையைப் பெற்ற அவனது கிங்கர்களிற் பலர் காமபாலனைத் தீமனெனச் சூழ்ந்து பற்றிச் சென்று சிறையிலிட்டனர். அவனுக்கு விரோதிகளான துர்மந்திரிகள் பலரும் ஒருங்குகூடிப் பல அபாண்டமான குற்றங்களையேற்றி நகரமுழுவதும் பகிரங்கப்படுத்தி நியாய வாயிலாக விசாரிப்பவர் போலப் பாவனை செய்து அவனுடைய கண்களைச் சூன்று அவனைக் கொலைசெய்யத் தீர்ப்புச் செய்திருக்கின்றனர். இவ்விஷயங்களைக் கேள்வியுற்றதும், எனக்கு உயிர்ப்பிச்சையளித்துக் காப்பாற்றியதுமன்றி என்னை நல்வழிப்படுத்திக்தன் சகோதரனைப்போல அன்புடன் பராமரித்துப்போற்றிய பரமகருணை நிலயமாகிய எனது உயிர்த்துணைவனை காமபாலனுக்கு நேர்ந்துள்ள துன்பத்திற்காற்றாது மனமுடைந்து, அவன் இறந்து படுவதைக் கண்ணாற் காணுமுன் யானே இறந்துபோதல் நலமெனக்கருதி யிங்கு வந்துள்ளேன். இதுவே யான் துயரமடைதற்குக் காரணம்," என்று அப்பலிஷ்டன் கூறி முடித்தனன்.

அப்புதியவன் கூறியவற்றைக் கேட்டதும், எனது பிதாவுக்குச் சம்பவித்துள்ள ஆபத்திற்காக யான் அவனிலுந் துயரமடைந்தேன். உடனே எனது துயரத்தை ஒருவாறடக்கிக் கொண்டு, அவனை நோக்கி, யான் இன்னனென்பதை எடுத்துக் கூறிப் பின், இருவரும்கூடி எனது பிதாவினை விடுவிப்பதற்குக் காலதாமதமின்றிச் செய்யக்கூடிய உபாயம் யாதென ஆராய்ந்தோம். இவ்விதம் யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது, ஒரு பெரிய கிருஷ்ணஸர்ப்ப மொன்று அங்குள்ள வலையொன்றிலிருந்து தலையை வெளிநீட்டியது. உடனே அதனை யான் மந்திரத்தாற் கட்டிப்பிடித்து என் கைவசப்படுத்திக்கொண்டு என் நண்பனை நோக்கி, "நான் எனது பிதா விருக்குமிடத்தையடைந்து, ஒருவரு மறியாமல் இவ்வரவினை யவன்மேலெறிந்து எனது மந்திர சக்தியால் மிக்க விஷத்தினைக் கக்காமற் கடிக்கச் செய்து அவன் மயங்கிக் கீழேவிழுந்துவிடுமாறு செய்கிறேன்.

அவன் இறந்தவனைப்போல விழுந்து கிடப்பினும் அவனது உயிர்க்கு ஒரு சிறிதும் தீங்கு உறாது. இதற்கிடையில் நீ விரைந்து சென்று எனது தாயினையடைந்து நமது விஷயங்களை உள்ளவாறெடுத்துரைப்பாய்; அவளும் வேகமாக நம்மைச்சார்வள். ஆயினும் அவள் பின்வருமாறு செய்யவேண்டும். அவள் உன்னை அரசன்பால் அஞ்சாது அனுப்பித் தன் பொருட்டாகப் பின் வருமவற்றை அரசற்கு உரைக்கச் செய்யவேண்டும். 'சுத்தவீரனை அரசன் தன் கடமையைச் செலுத்துங்கால் உறவினரென்றும் அயலாரென்றும் நட்பினரென்றும் பகைவரென்றுங் கருதாது ஒப்பநாடித் துஷ்ட நிக்கிரகமும் சிஷ்ட பரிபாலனமுஞ் செய்யவேண்டுவது அத்தியாவசியமே. ஆயினும் ஒருஸ்திரீ தனது கணவனுக்குநேர்ந்த சுகதுக்கங்களைத் தன்னுடையனவாகப் பாவித்து அவன் இறக்க நேரிடில் தானும் உயிர் நீத்தலே கடமையாம். இப்பொழுது எனது தலைவன் இறந்ததால் யானும் உடன்கட்டையேறி ஸதிதருமத்தை அநுஷ்டிக்கவேண்டும்; ஆகையால் அவனது உயிர் நீங்கிய உடலினை யென்பால் அளிக்கவேண்டும். இதுவும் அரசன் செய்யவேண்டிய கடமைகளில் ஒன்று,' என்று இவ்விதமாக அரசனுக்கு உன்வாயிலாக அறிவிக்கவேண்டும். இதனைக்கேட்ட அரசன் அவள் வேண்டுகோட் கிணங்குவான். நீ உடனே அந்தச் சரீரத்தினை எடுத்துக்கொண்டு உனது வீட்டிற்குச் சென்று, பின்னர்த் தனியிடமொன்றில் சிதைகள் அடுக்கிச் சுற்றிலும் திரையிட்டு உடன்கட்டை யேறுதற்குவேண்டியவற்றைத் தயார் செய்து வைப்பாயாக. அவ்வமயம் அங்கு யான் வருவேன்; என்னையுட்புக விடுதி. உடனே எனது மந்திர வல்லபத்தால் எனது பிதாவினை உயிர்ப்புமூட்டி விடுகிறேன். பின்னர் யாவரும் ஆனந்தமாய்க் களித்துக் கூடியிருக்கலாம்." என்றேன். என் பிதாவின் பிரதானியாகிய அம்மனிதன் யான் சொன்ன வேலையை நிறைவேற்றுவதற்காக உடனே புறப்பட்டுப் போயின்ன். யானும் உடனே எழுந்து எனது பிதாவினைக் கொலை செய்ய எண்ணியிருக்கும் இடத்திற்குச் சென்று அங்கு இருந்த அடர்ந்த புளியமரமொன்றின் மேலேறிக் கிளைகளில் மறைந்திருந்தேன். சிறிது போழ்திற்கெல்லாம் ஒரு பெருங்கூட்டமொன்று அங்குக் கூடியது. எனது பிதா கை கால்களில்

விலங்கிடப் பெற்றுக் காவலாளிகளால் ஆண்டுக் கொணரப் பெற்றனன். கொலையாளி தண்டனையை நிறைவேற்றப் புகுவதற்கு முன் வழக்கம்போலக் குற்றவாளி செய்திருக்கும் பிழைகளை யாவருமறியுமாறு மும்முறை யெடுத்துப் பேசிப் பிரசுரஞ் செய்ய ஆரம்பித்து, என் பிதாவின்மேற் சாட்டப்பெற்ற பொய்க் குற்றங்களை யெல்லாம் எடுத்துக்கூறினன். அவன் மேலும் ஜனங்களை நோக்கி, "பிரபுக்களே! இக்குற்றவாளி நமது பழைய அரசனது புதல்வனாகிய சண்டகோஷனைக் கொலை செய்தவன்; இப்பொழுது அரசாளும் நமது ராஜனை அழிப்பதற்கு அவனது பள்ளியறையின்கீழ் அரக்கு மெழுகு அழிஞ்சில் கொழுப்பு குங்கிலியமாதிய பொருள்களை நிரப்பி நெருப்பிடத் தயாராக வைத்தவன். ஆதலால் இவன் செய்துள்ள இன்னோரன்ன பல குற்றங்களுக்காக இவனது கண்ணைச் சூன்றுவிடுமாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்தண்டனையை நிறைவேற்றவே ஈண்டுயாவரும் கூடியுள்ளதும். எனவே, இவனைப்போல ராஜத் துரோகிகளாய்க் குற்றம்புரிவோர்கள் எல்லாருக்கும் இத்தகைய கொடுந்தண்டம் விதிக்கப்படும் என்பதை அறிவிக்கிறேன்." என்று கூறி முடித்தனன். அவன் பேசியவுடன் ஜனங்கள் திரள் திரளாய்க் கொலைக் களத்தைக் குறுகினர்; இதனுண்டான ஆரவாரமும் குழப்பமும் அடங்குவதற்குமுன், மரத்தின் மேலிருந்த யான், கையிலிருந்த நாகத்தைப் பிதாவின் மேலெறிந்துவிட்டு ஒருவரும் அறியாவண்ணம் கீழிறங்கிப் பிதாவினருகடைந்தேன். நான் எதிர்பார்த்தபடி அக்கொடிய ஸர்ப்பத்தினுற் கடிக்கப்பட்ட எனது பிதா ஸ்மரணைதப்பி உடனே இறந்தவன் போலக் கீழேவிழுந்து விட்டனன். இதனைக்கண்ட ஜனங்கள் யாவரும், காமபாலன் செய்த குற்றங்களுக்கெல்லாம் கடவுளே முன்னின்று தக்கவாறு தண்டித்துவிட்டதாகத் தமக்குட் பேசிக்கொண்டனர். இதற்கிடையே பூரணபத்திரனால் இங்கு நிகழ்வன யாவற்றையும் முன்னறிந்துகொண்ட காந்திமதி தேவி, அதிவேகமாகத் தன்னுயகன் விழுந்து கிடக்கும் கொலைக் களத்தைக் குறுகி, அவனது தலையினைத் தன் மடிமேல் வைத்துக்கொண்டு பலவாறு புலம்பிப் பிறகு அரசனுக்குப் பின் வருமாறு தன் னுட்கருத்தினைத் தெரிவித்தனள். "ஈண்டு இறந்து கிடப்பவன் எனது பிராணநாதன். அவன் உனக்குத்

தீங்கிழைத்தனன் என்னும் விஷயத்தைக் கடவுளே யுள்ளவா றறிவார். அவன் செயலின் நன்மை தீமையினை ஆராய்வது என்னுடைய கடமையன்று. ஆனல் உயிரினுஞ் சிறந்த என் தலைவனிறந்த காலத்தில் உடனுயிர் மாய்வதே எனக்குரிய விதி யாம். உத்தமக் கற்புடைமகளிரி. னெழுக்கம் அதுவன்றே? ஆதலால் எனது கணவனுடன் சககமனஞ் செய்யத் துணிந்து விட்டனென். இங்ஙனஞ் செய்யாவிடில் நாமிருவரும் பிறந்த உத்தமகுலத்திற்கு என்னுற் பழிநேரிடும். ஆதலின் இப் பொழுதே ஸதிக்ரியையினை அநுஷ்டிக்க அரசனுகிய நீ சிறிதும் தாமதமின்றி அநுமதி தரல்வேண்டும்," என்று அவள் அரசனு க்கு விண்ணப்பஞ் செய்துகொண்டனள். அரசனும் இவள் கற்பினுறுதிக்கு வியந்து மகிழ்ந்து உடனே அவள் அங்ஙனஞ் செய்யச் சம்மதித்து விடையளித்தனன்; மேலும் தன் மைத்து னனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை மிக்க சிறப்புடன் காந்திமதிதேவியின் இஷ்டம்போல நடத்த ஆணைதந்தனன். யாவும் நான் நினைத்தபடியே நிகழ்ந்தன; என் தாய் மிகுந்த துக்கத்தை முகத்திற் கூட்டிப் புலம்பித் தன் தோழியர் முதலி யோரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பிதாவினுடலத்தைக் கிடத்தியிருக்கும் அறைக்குட் புக்கனள். முன் செய்துள்ள ஏற்பாட்டின்படிப் பூரணபத்திரன் என்னை உள்ளே வரவிடுத் தனன்; யான் சிறிதும் தாமதமின்றி வைஸதேய மந்திரத்தால் விடத்தை யகற்றிப் பிதாவினை எழுப்பிவிட்டேன். என் பிதா உயிருடனிருப்பதைக்கண்ட எனது தாய் பேரானந்தமடைந்த வளாய் அவனது பாதத்தில் விழுந்து வணங்கிப் பின் என்னைப் பன்முறையுந்தழுவிப் பொருமினுள். இழந்த மகனைக் காணப் பெற்றமைக்கு மகிழ்வாள்; பிதாவினை விடநீக்கிக்காத்ததுமின்றிப் பகைவர் கையினின்றும் விடுவித்ததற்காக என்னைப் பன்முறை யாசீர்வதிப்பாள்; எங்களிருவரையும் பிரித்துவைத்திருந்ததற் காகத் தாராவளியை நிந்தித்து வைவாள்; இங்ஙனம் மகிழ்வு துக்கம் முதலிய பல மனவெழுச்சிக்களோடும் என்னை யணைத் துத் தன் கண்ணீரான் மஞ்சன மாட்டினள். எனது பிதா இதற் கிடையில் நிகழ்ந்தவை யாவற்றையும் பூரணபத்திரனிட மிருந்து அறிந்து இணையற்ற இன்பத்தில் மூழ்கி, என்னைப் பெற்றதனுல் இந்திரனும் தனக்கு இணையில்லை யென்று மன

மகிழ்ந்தனன். எங்கள் உள்ளக் கிளர்ச்சியாவும் ஒருவாறடங்கிய பின், இனிமேல் நடக்கவேண்டியவற்றைக் குறித்து என் பிதாவினைக் கேட்டேன். அவன் என்னைநோக்கிக், "குழந்தாய்! இனி நாம் இரகசியமாக வினைநடத்த வேண்டிய அவசியமொன்று மில்லை. எனது அரண்மனை மதிலகழ் முதலியவற்றுன் மிகவும் வலியுடைத்து; பற்பல யுத்தாயுதங்களும் ஏராளமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. சிறந்த சேனவீரர்கள் என்னிடம் உள்ளன்போடு தொழில்புரிந்து வருகின்றனர். நகரத்திலுள்ள மாந்தர்களிலும் அநேகர் என்னை யிங்ஙனம் நடத்தியதற்கு அரசனிடம் வெறுப்புப் பூண்டிருக்கின்றனர். ஆதலால் இனித் தாமதமின்றி நாம் நமது மாளிகையை யடைந்து நம்மைச் சார்ந்தோர் யாவரையும் ஒருங்கு சேர்த்துக்கொண்டு இக்கொடுங்கோன் மன்னற் குதவிபுரியும் அத்தீய அமைச்சர்களை யெதிர்ப்போம்," என்று கூறினன். விஷயங்களை இவ்வாறே நடைபெறச் செய்தோம். இவற்றைக்கண்ட அரசன், நாங்கள் அவன் கையினின்றும் தப்பியதேயன்றி அவனை எதிர்க்கவும் வலிமை பெற்றதை யுணர்ந்து பொறுமையும் வெகுளியு மேற்கொண்டு பலவித தந்திரோபாயங்களால் இயன்றவளவும் எங்களை யழிக்க முயன்றனன். அவையாவற்றையும் யாங்கள் பயன் படாமற் செய்ததோடு, அவனைச் சார்ந்தோர் பலரையும் நால்வகை உபாயங்களாலும் பிரித்துவிட்டோம். கடைசியில், நான் அரசன் பள்ளியறையின் இருப்பிடத்தையறிந்து அதற்கும் எங்கள் அரண்மனைக்கும் ஒரு சுரங்கம் அமைக்கத் தீர்மானித்தேன். அங்ஙனமே சுரங்க மமைத்துக்கொண்டு போகும்பொழுது கோட்டைமதிலின் அஸ்திவாரத்தின் கீழ்ச் சிறிதுதூரம் அகழ்ந்து சென்றதும் அங்கோர் நிலவறையினைக் கண்டேன். அதனுட் புகுதலும், அங்கு அரம்பையிரினும் அழகுமிக்க பல மங்கையர் இருந்தனர். இஃது மண்ணில் மறைந்துகிடக்கும் வேறோர் சுவர்க்கமோ, அன்றி நாகருலகமோ என்று வியந்தேன். அவ்வமயம் அநேககோடி சூர்யர்களின் காந்தியைப்பரப்பும் திவ்ய தேகத்தையுடைய ஓர் அங்கனைத்தினம் என்கண் ணெதிர்ப்பட்டனள். இம்மண்ணினுள் மறைந்துறையும் பூமாதேவியோ அன்றி மன்மதன் சேனாபதியோ அல்லது அசுரேந்திரன் தனது பகைவர்க்குரிய இத்தனியிடத்திலொளித்து வைத்

துள்ள ஓரும்புதல்வியோ என்று பலவாறு யான் அப்பெண் மணியை வியந்து நின்றேன். இருளினைக் கீண்டென்னெதிர் வந்த அம்மங்கை யொரு தங்கப்பதுமைபோல விளங்கினள். அவளும் அவள் தோழியராகிய ஏனையமாதரும் என்னைக்கண்ட அளவில் அச்சமுற்று மலயாநிலத்தாற் றுவண்டொசியும் மாதவிக் கொடிகள்போல நடுக்கமுற்றனர். அப்பொழுது அம்மங்கையர்க்குள் வயதுசென்றவளாய் வெண்காசமலர் போலக் கூந்தல் விளர்த்த நரைமூதாட்டி யொருத்தி யென்முன் வந்து எனது பாதங்களில் விழுந்து வணங்கினள். அவர்கள் என்னைப் பாதலவுலகிலுள்ள அசுராதியோருடன் அமர்புரியக்கருதி இம்மண்ணினைக்கிழித் துட்புகு மொரு பெருந்தெய்வமென்று கருதினர்போலும். அங்ஙனம் பணிந்தவள் தோத்திரஞ் செய்து எழுந்துநின்று அபலைகளாகிய தங்களைக் காத்தருள்புரியுமாறு வேண்டிக்கொண்டனள். யான் அவர்களைநோக்கி, "மாதர்களே! நீவிரஞ்சன்மின்; யானொரு தெய்வமல்லேன், மனிதனே; காமபாலனுக்கும் காந்திமதிதேவிக்கும் பிறந்த புதல்வன் யான். யானிவ்வழியாக அரசனது அந்தப்புரத்தை யடைய முயற்சிக்கிறேன். ஆனால் நீவிர் யாவிர்? இந்நிலவறையிலேன் வசிக்கின்றீர்?" என்று கேட்டேன். அதற்கு அக்கிழவி பின் வருமாறு விடை கூறினள்; "அரசகுமார! இத்தகைய பெருமையும் வனப்பும் கருணையும் வாய்ந்த உன்னைக் கண்டதாற் கண்கள் படைத்த பேற்றினைப் பெற்றோம். எங்கள் வரலாற்றினைச் சுருக்கியுரைப்பேன். உன்னுடைய பிதாமகனாகிய சண்டசிம்மராஜனுக்கு லீலாவதி தேவியிடத்தில் இரு குழந்தைகள் பிறந்தன. உனது தாயாகிய காந்திமதிதேவியும் சண்டகோஷனாகிய ராஜகுமாரனுமே அக்குழந்தைகள். சண்டகோஷன் வாலிபத்திலேயே சிற்றின்பத்திலாழ்ந்து ரோகபீடிதனாகிப், பிதா ஜீவந்தனையிருக்கும் பொழுதே, மாண்டு போயினன். அவனிறக்கும்பொழுது அவனுடைய மனைவி ஆசாரவதியென்பாள் கருப்பவதியாயிருந்தனள். பின்னர் அவள், நீ இப்பொழுது ஈதோ உன்னெதிரிற் காணும் பெண்மணியாகிய மணிகர்ணிகாதேவியினைப் பெற்று வைத்துத் தன்னுயிர் நீத்தனள். பிதாமகனாகிய சண்டசிம்மன் என்னையழைத்துக் கூறுவான்: 'யான், எனது மகன் மகளாகிய இப்பெண்ணினை, மாளவாதிபதியாகிய என் நண்பன் மானசாரன்

புதல்வன் தர்ப்பசாரனுக்கு மணம்புரியத் தீர்மானித்து வாக்கு றுதியுந் தந்துள்ளேன். ஆனல் எனது மகள் காந்திமதி தன் மனம் போனவழிக் கந்தர்வ விவாகம் புரிந்துகொண்டதைப் பின் பற்றி இவளும் நடந்தா லென்செய்வதென்ற அச்சம் எனக்கு உண்டாகின்றது. ஆதலால் இவ்வித இடையூறு நேராவண்ணம் எனது பௌத்திரியை ஜாக்கிரதையோடும் இரகசியமாகவும் பாதுகாத்துவர ஏற்பாடுசெய்திருக்கிறேன். இக்கோட்டை யினைச் சார்ந்த பெரிய செய்குன்றினடியில் பூமிக்குள்ளாக ஒரு பெரிய நிலவறை சமைத்துள்ளேன். எக் காலத்திலேனும் பகையரசர்கள் மேலிட்டு இந்நாட்டினைக் கைக்கொண்டு, ராஜ குடும்பத்தை எதிர்க்கப் புகுந்தால், அவர்கள் தப்பிப் பிழைத் தலைக் கருதியே இந்நிலவறை யமைக்கப் பெற்றது. இதனுண் மையினை எவருமறியார். இந்நிலவறையிற் பல அறைகளிருக் கின்றன. அவையாவும் நவரத்தினங்களாலும் மற்றுமுள்ள விலையுயர்ந்த பொருள்களாலும் அலங்கரிக்கப் பெற்றுள்ளன. ஏராளமான உணவுப் பொருள்களாதிய இன்றியமையா எல்லாப் பொருளும் அங்கே நிரப்பப்பட்டுள்ளன; பலர் ஒருங்குகூடி நூறுவருடகாலம் அநுபவித்தாலும் அங்குள்ள அநுபவப் பொருள்கள் குறைவினபடையா. இத்தகைய நிலவறையரண் மனையில் எனது பௌத்திரியாகிய மணிகர்ணிகையினை யவள் தோழிகளோடு பிறரறியாது வளர்த்து வருவாயாக. மேலும் மாதர்க்கு இன்றியமையாத எல்லாக் கலைகளிலும் அவளை வல்ல வளாகச் செய்யும் கடமையும் உன்னதே,' என்று கூறினன். யான் அவன் வேண்டுகோட்கிணங்கிய பின்னர், அவனது சயனக் கிருகத்தி லொருவரு மறியாது மறைப்புண்டிருந்த வொரு திட்டிவாயிலைத் திறந்து எங்கள் பாவனையும் எண்டுக் கொணர்ந்து விட்டுப் போயினன். அன்று முதல் இன்றளவும் பன்னிரண்டு வருடங்களாயின. யான் இப்பெண்மணியினை யென் கண்மணியினு மருமையாக இவ்விடத்தில் வைத்து ஒரு வரு மறியாது வளர்த்து வருகின்றேன். இப்பொழுது இவள் மங்கைப்பருவம் அடைந்தனள். அரசனை அன்று முதல் இன்றளவும் எங்களைக் கண்டிலன்; அவன் எங்களை அடியோடு மறந்தனன் போலும். அரசன் தர்ப்பசாரனுக்கு இவளை மணஞ் செய்து கொடுப்பதாகக் கூறிய வாக்கும் இனி நிறைவேறு

மென்று கருதுதற்கு ஒரு சிறிதும் இடமில்லை. இவளுடைய நன்மையினைக் கருதுங்கால், இவள் உன்னைப் போன்ற நெருங்கிய உறவினனை மணத்தல் சாலச் சிறந்ததாகும். மேலும் உனதுதாய் காந்திமதியும் இவள்தாய் ஆசாரவதியும் உடனெத்த தோழியராகப் பழகியிருந்த முற்காலத்தில், ஆசாரவதி தனக்குப் பெண் பிறந்தாற் காந்திமதியின் பிள்ளைக்கே விவாகஞ் செய்து கொடுப்பதாக ஒப்பந்தமுஞ் செய்திருக்கின்றனள். ஆதலால் நீயே இவளுக்குப் புருஷன்; தெய்வமுஞ் சம்மதித்து உன்னையிப்பொழுதிங்கே கொணர்ந்து தந்தது. இனி யிவளைக் கைப்பற்றி எங்ஙனையும் காப்பாற்றுதல் நினதுகடன்," என்று அச்செவிலி தன் வரலாற்றினைக் கூறி முடித்தனள். இச்சொற்களைக் கேட்ட அம் மங்கையும் தலைகுனிந்து நாணிப் புன்னகை புரிந்து நின்று தன் சம்மதத்தையுங் குறிப்பாலுணர்த்தினள். ஆயினும் யான் அவர்களை யன்புடன் நோக்கி, நான் முதலில் அரண்மனையிற் செய்து முடிக்கக் கருதி வந்த எண்ணத்தை நிறைவேற்றிய பின்னரே வேறு காரியங்களைச் சிந்திக்க மனம் இடங்கொடுக்குமென்று கூறி, அம் மூதாட்டியினிடமிருந்து விளக் கொன்றினைப் பெற்று அவள் காட்டியவழியே அந்நிலவறையினின்றும் அரசன் அந்தப்புரத்தினை யடைந்தேன். நள்ளிருளில் எவரும் அறியாது திட்டிவாயிலின் வழியாகச் சயனக் கிருகத்தினுட் புகுந்து, ஆண்டு மஞ்சத்திலுறங்கிக் கொண்டிருந்த சிம்மகோஷனைச், சர்ப்பத்தினை இடுக்கிச் செல்லும் கருடனைப் போல, எளிதாகப் பாய்ந்து பற்றி, அவன் எவரையும் உதவிபுரியக் கூவியழைப்பதன் முன், அவனை யத்திட்டிவாயிலின் வழியே சுரங்கத்தினுளிழுத்துச் சென்று கதவினைச் சார்த்தித் தாழிட்டு நிலவறையடைந்தேன். பின்னர் அவனை விலங்கிட்டு என் பிதாவின் மாளிகைக்குக் கொண்டுபோய் என் பெற்றோர் முன் விடுத்தேன். அவர்களுக்கு நிலவறையின் விசேஷத்தையும் அங்கு யான் கண்ட அற்புதங்களையும் எடுத்துக் கூறினேன். இதனைக் கேட்டதும் அவர்கள் மனமகிழ்ந்து, சிம்மகோஷனைச் சிறையிலடைத்துப் பின் நிலவறையிற் புகுந்து அம்மங்கையரனைவரையும் தம் மாண்மனைக்கு அழைத்து வந்தனர். பிறகு அவர்கள் அநுமதியோடு மணிகர்ணிகாதேவியை விதிப்படி மணம்புரிந்து கொண்டேன். இவளை மணமுடித்ததால் அரசாட்சி யுரிமை

யினையும் யானே பெற்றேன். பிதாவின் சொல்வழி நின்று நெறிமுறை தவறாது யான் இராஜ்ஜியபாரம் செலுத்திவருகையில், எங்கள் நண்பனை அங்கதேசாதிபதியாகிய சிம்மவர்மனுக்கு நேர்ந்துள்ள இடையூற்றினைக் கேள்வியுற்று அவனுக்குத் துணை புரிய எண்ணி நால்வகைப் படையுடன் விரைந்திவண் போந்தனம். பின்னர்ங்கு நிகழ்ந்தனயாவும் அடிகளுணர்ந்தனவே. ஆனால், இவ்வமயத்தில், தங்களைக் காணும் பாக்கியத்தை யாங்கள் பெற்றமையால், இம்மூடனாகிய சிம்மகோஷனும் தங்கள் பாதாரோருகங்களில் விழுந்து வணங்கித், தான் செய்துள்ள பிழைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டிக்கொண்டு, யாவரும் சந்தோஷ மடைந்திருப்பது போலவே இவனும் சந்தோஷத்தை அடைய அநுக்கிரகித் தருளவேண்டும்" என்று அர்த்தபாலன் தனது சரித்திரத்தைக் கூறி முடித்தனன்.

இராஜவாகனனும் அவன் வேண்டியாங்கு செய்ய ஒப்புக்கொண்டு, பிரமதியினை நோக்கி அவனுடைய வரலாற்றினைக்கூற வேண்டிக்கொண்டனன். பிரமதியும் இராஜவாகனனை வணங்கிப் பின் சரிதத்தைக்கூறலாயினள்.

அதிகாரம் 11.

பிரமதி சரித்திரம்

நான் சிலகாலந் தங்களைத்தேடிப் பலவிடங்களிலும் அலைந்தபின் ஒருநாள், விந்தியமலைச்சாரலிலுள்ள வனமொன்றையடைந்தேன். அப்பொழுது மாலைக்காலமாகையால் மேற்றிசை யணங்கு செம்மலர் சூடிச் செஞ்சாந்துபூசிச் செவ்வணி யணிந்தது போல மேற்றிசையிற் செவ்வானம் விளங்கியது. யான் தெளிந்த நன்னீர்ப் பொய்கையொன்றில் மாலைக்கடன்முடித்து நீராருந்திக்களைப்பாறினேன். பின்னர் வழிதெரியாமல் மயங்கிருள் சூழ்ந்தமையின் அவ்வனத்திலேயே இரவினைக் கழிக்கத் துணிந்தேன். ஆண்டுச் சிதறிக்கிடந்த காய்ந்த இலைகளையோர் ஆலமரத்தினடியிற் பரப்பி, அதனையே சயனமாகக் கொண்டு, இடையூறின்றி இனிது காப்பாற்றுமாறு வனதெய்வத்தை வாயாரவாழ்த்தி வணங்கிப் பின் படுத்துறங்கினேன். சிறிது பொழுதிற் கெல்லாம் எனது தேகம் கட்டாந்தரையிற் படுத்திருப்பதை விட்டு மெல்லிய பஞ்சணைமேற் படுத்திருப்பது போன்ற உணர்

ச்சி எனக்குண்டாகியது. அளவிலா இன்பந்தருவதொன்றை ஊற்றின்பத்தினை என் மேனி பெற்றதாக உணர்ந்து உளங்களி கூர்ந்தேன். எனது வலப்புயந் துடித்தது; யான் கண்ணை விழித்துப் பார்த்தேன். அப்பொழுது யான் வறுந்தரையிற் கிடவாமல் உயர்ந்த அம்சதூளிகாமஞ்ச மொன்றிற் சயனித் திருப்பதையும் மேற்கட்டியான வெண்ணிற விதான மொன்று அழகிய தண்ணிலாவினை என்மேற் படவொட்டாமற் றடுத்து நிற்பதையுங் கண்டேன்; என்னிடப்புறந் திரும்பினேன்; உயர்ந்த மாடமொன்றின் அழகிய சுவர்த்தலத்தினடியில் அநேக வனப் புடை மாதர்கள் படுத்துறங்கினர். அன்னோர் யாவரும் பலவித வர்ணங்களை யுடைய மஞ்சங்களிற்றுயின்றனர். பின்னர் யான் வலப்புறந் திரும்பிப்பார்க்கும் பொழுது, ஒப்புயர்வற்ற பேரெழில் படைத்த வொரு மங்கையர் சிரோன்மணி என்னருகிற் கைவ லோன் புனைந்த வோவியம் போலக் கண்வளர்வதைக் கண்ணுற் றேன். இந்திரனது நந்தனவனத்தில் முளைத்த காமவல்லிக் கொடியொன்று ஐராவத யானையாற் பறிப்புண்டு கிடப்பது போற் சயனித்திருந்த அந்நங்கையர்திலகத்தின் கண்கள், இனவண்டினை யுள்ளடக்கிய மாலை யரவிந்தப் போதெனக் குவிந்து விளங்கின. சுத்த தாவள்யமான வெண்பட்டினணியன்ற சயனத்தின் மீது, அவள் படுத்திருந்த கோலம், ஆதிவராக மூர்த்தியின் சுவேததந்தங்களுக்கிடையே திகழ்ந்த பூமாதேவியி னெழிலைப் பொருவுமென்றும், அவள் போர்த்திருந்த முத்துக் களாலலங்கரிக்கப்பெற்ற உத்தரீயம் பாற்கடலின் அலைகளைப் போல மேற்றிகழ்ந்து கிடந்ததென்றும் புவிவாணர் போற்றுங் கவிவாணர் புனைந்துகூறப் பெரிதும்விரும்புவர். நான் படுத் திருந்த இடமெங்கே? நான் படுத்துக்கிடந்த இலைப் பாயலும் காடும் போனவிதமென்ன? இம் மாறுதற்குக் காரணம் யாது கொலோ? என்று மனமடங்காவியப்பினை யடைந்தேன்; ஈதோ என் கண்ணெதிரிற் றோன்றும் அரண்மனை யாருடையது? இதனுடைய உயர்ந்த ஸ்தூபியின் மேற் பல துவசங்களுக் கிடையே சத்திவேலினைக் கைப்பற்றிய கார்த்திகேய மூர்த்தி யின் றிருவுருவம் விளங்கக் காரணமென்னையோ? எங்கேயோ கிடந்தவனை யிங்குக் கொணர்ந்து விட்டதார்? ஈதோ துயிலும் மாதர்கள் யாவரோ? என்று பலவாறு எண்ணமிட்டேன்.

ஆயினும் என்னருகில், தாமரையிற் பிறந்த காமர் செந்திரு வெனப் பொலியு மிம் மங்கையாவள்? இவள் திருமேனி தெய்வ வொளி பரப்பினும், இவளது கண்கள் நிலாவிற் குவிந்த அம் போருகம்போலத் துயிலிடை மூடிக்கிடத்தலின் இவள் மாநுட மகளெ என்பதற் கையமின்று. இளமாமரக் கொம்பின் மீது பனி நீர்த்துளி படிந்து கிடந்தாற்போல இவள்மேல் வியர் வரும்புதலும் இவளது மெல்லிய துகின்மேற் றாசிபடிந்துறை தலும் இவள் மண்ணுலகமாதென்பதை வலியுறுத்தும். இவ் விதமாக யான் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில், அம் மங்கை மெல்லெனக் கண்விழித்து, அருகிற் படுத்திருக்கு மென்னை ஆச்சரியமும் அன்பும் பொருந்த நோக்கினள்; அவள் தனது தோழியரை எழுப்பக் கருதியவள்போலச் சுற்று முற்று மொரு முறை பார்த்தனளாயினும், பின்னர் அவ்வெண்ணத்தை விடுத் தவள் போலத் தோன்றினள். அதன்பின் அவள் சிறிது விலகி என்னைப் பார்த்தவண்ணம் மஞ்சத்திலேயாகப் படுத்து மீளவும் உறங்கிப்போயினள். கொஞ்சநேரத்திற் கெல்லாம் யானும் ஆழ்ந்த நித்திரையிலமர்ந்தேன். காலையிற் றுயிலெழு ந்து நோக்குங்கால், விந்தியமலைச்சாரல் வனத்திலிருந்த பழைய ஆலமரத்தினடியிற் றழைப்பாயலிற் படுத்திருக்கக் கண்டேன். இரவிற் கண்ட காட்சியெல்லாங் கனவோ நனவோ என்று மனங் கவன்றேன். நனவாயில், இரவிற் கண்ட மங்கையும் தோழியரும் மாளிகையும் எங்கே? கனவாயில் என் மேலின்னுங் கதம்ப பரிமளவாடை வீசக் காரணமென்னே? இதனுண்மையை, வெண்டுமாயில் எனதாயுள் முழுவதும் இவ்விடம் விட்டு நீங்கா மலிருந்து, அறிந்துகொள்ளாமல் அப்புறம் போவதில்லை யென்று தீர்மானித்தேன்.

இத்தறுவாயில், என்னைநோக்கி அழகிய ஸ்திரீ யொருத்தி வந்தனள்; அவள் தெய்வலக்ஷணமுடையவளாய்க் காணப்பெறி னும், கவலையாற் பீடிக்கப்பட்டு இளைத்துப்போன மேனியும் கந்தையுடையும் உடையளாயிருந்தனள். அழுதழுது அவள் கண்கள் சிவந்திருந்தன; கூந்தல் அழுக்கடைந்து சடையாய்க் கிடந்தது. உற்று நோக்குவார்க்கு அவள் பன்னெடு நாள் பிரி வெனுந் தழலிடை வாடிய கொடிபோன்றுளாள் என்பது விளங்

கும். அவன் என்னைக்கண்டதும் விரைந்தோடிவந்து என்னைத் தழுவிக்கொண்டு கன்றினுக்கிரங்கும் காராப்போல அன்பு பாராட்டினன். பின்னர் ஒருவாறு தன்னுள்ளக்கிளர்ச்சி யடங்கி என்னை நோக்கிப் பின்வருமாறு பேசினன்:—

"கனதன்புடைப் புதல்வ! அர்த்தபாலன் என்னுங்குழந் தையை மகதாதிபதியின் மனைவிமாட்டுச் சேர்த்தவள்யானே; யான் மணிபத்திர விந்தியாதரன் மகள், தருமபாலன் மகனிய காமபாலன் மனைவி; உனக்குத் தாய்முறையாடவள். எனது கணவன்மாட் டுண்டான வூடல் முதிர்ச்சியால் வெகுண்டு அவனைப் பிரிந்துவந்துவிட்டேன். ஒருநாள் யானுறங்கும் பொழுது ராகஸலினுருவனை எனது கனவிற்கண்டேன்; அவன் என்னைநோக்கி, 'கோபமிக்க மாதே! யான் உன்மீது ஆவேசித்து ஒரு வருடகாலம் உடனுறைவேன்,' என்று கூறி மறைந்தனன். அதுமுதல் யான் பைத்தியம் பிடித்தவள்போலவானேன். பிர வருடங்களுக்கு நிகராக நீண்டு வளர்ந்த அவ்வொருவருடமும் நேற்றிரவோடு முடிந்தது. நேற்றிரவு சிராவஸ்தி நகரத்தின் வாய்த் திரியம்பகமூர்த்தியின் திருவிழாக் கண்டு களிக்கத் தேவர் கந்தருவர் சித்தர் இயக்கர் வித்தியாதரராகிய பலரும் ஒருங்கு கூடினர். அவ்வமயம் யானும் அங்குச்சென்று சிவசன்னிதி யடைந்து இறைவனை வணங்கி யருள்பெற்றுப் புனிதையாகிப் பின் எனது உயிர்த்தலைவனை யடையக்கருதி இவ்வழியாக வந்து கொண்டிருந்தேன். பிரமராக்கதன் பற்றியிருந்த சாபத்தால் உன்னை யின்னனென்று அறிகிலேனெனினும், நீ வனதேவதைக் குச்செய்த வணக்கத்தைக்கேட்டு மனமகிழ்ந்து, உன்னைத் தனியே காட்டில் விட்டேக மனமின்றி நீ யுறங்குமளவுங் காத் திருந்தேன். நீ துயின்றதும் உன்னை யெளிதிற் றூக்கிக் கொண்டு சிராவஸ்தி நகரத்திற்குக் ககனமார்க்கமாகப் போயி னேன். ஆயினும் உன்னைத்தேவர்கள் கூடிய பரமசபைக்கு அழைத்துப்போதல் கூடாதாகையால், உன்னை யோரிடத்தில் விட்டுப்போகத் தீர்மானித்தேன். அப்பொழுது சிராவஸ்திநகர மன்னனுகிய தருமவர்த்தனன் மகள் நவமாலிகையின் கன்னியா மாடத்தைக் கண்டேன். உன்னை யங்கு விட்டுப்போக வெண்ணி அதனை யணுகினேன்; கன்னியாமாடத்தின் மேன்மாடியில்

ரதிகாலத்தைக் கழிக்கிற்க விலாமுற்றத்தில் சுவாமியைத் தனது தோழியர்களுடன் குயின்று கொண்டிருந்தனள். அவள் அவிர்கிருந்த மஞ்சத்தில் அவள் பக்கலில் உள்ளைக் கிடத்திவிட்டு யான் திரியம்பகரதன் சந்திதிக்குச் சென்றேன். பூசைமுடிந்தபின் தெவர்களின் கூட்டங்களிலிருந்து; யான் எனது உறவினர் தோழியர் முதலியோரிடத்து விடைபெற்றுத் திரிலோகரதன் கழல்பணிந்து போற்றிப் பின்பு எனது ஆன்மார்த்த தெய்வமாகிய பரசுதத்தியின் பதமலர் போற்றிப் புகழ்ந்து மனமுருகியின்னிசை பாடினேன். அம்மிசை எனதன்பிற்கு மகிழ்ந்து முறுவல்கூர்ந்து என்னை நோக்கி, 'பெண்ணே! ஒன்றிற்கும் நீ அஞ்சலை; உன் கலியவனைப்பிரிந்துறைய விதித்தகாலம் இன்றோடு முடிந்தது; இனி நீ உனது அன்பனையடைந்து நெடுங்காலங் களித்து வாழ்தி,' என்று அருளிசெய்தனள். இங்ஙனம் இறைவியின் திருவருள் பெற்று யான் திருமி உள்ளை விட்டுவந்த கன்னிமாடத்திற்கு வந்து, எனது கல்லுணர்வு மீளப்பெற்ற காரணத்தால் உள்ளை யின்னுமென்று நன்குணர்ந்து, எனதருமையுயிர் வகுகிய அர்த்தபாலனுடைய உயிர்த்தோழன் நீ யென்னை யுயிர்த்து, மிக மனமகிழ்ந்து ஆனந்த வாரிதியிலாழ்ந்தேன். மேலும் நேற்றிரவில் நீயும் அரசன் புதல்வியும் ஒருவரையொருவர் கண்டு பரஸ்பரங் காதல்கொண்டதும், அச்சத்தாலும் நாணத்தாலும் அம்மங்கை தன் தோழியரை யெழுப்பாவிடினும் உன்பாற் கழிபெரும் வெட்கைகொண்டு மஞ்சத்தி லொருபுறம் படுத்துறங்கியதுமாகிய விஷயங்கள் யாவற்றையும் நன்குணர்ந்தேன். உங்களிருவரையும் நாயகனும் நாயகியுமாக்க என்னிலை னெனினும், அவ்வமயத்தி லொன்றுஞ்செய்ய வியலாது, அவனின்று நின்னை யெடுத்துவந்திங்குக் கொணர்ந்து விடுத்தேன். இதுவே நடந்த செய்தி; இனி யான் ஒருகணமுங் காமதியாது நினது பிதாவாகிய என் நாதனையடைந்து சரணமிரந்தங்கனை வணங்கவேண்டும்," என்று அவள் கூறிமுடித்து, மீளவும் என்னைத்தழுவி விடுத்து அன்பளாய இன்மொழியாற் பிரியா விடைபெற்று விண்வாய் மறைந்தகன்றனள்.

இவற்றையெல்லாங் கேட்டபின் யான் சிராவஸ்தி நகரத்திற்குப் பிரயாணமாய்ப்புறப்பட்டேன். போகும் வழியிலொரு

வாளிக் கூட்டத்தினிருந்து சிலரொன்றினை யகற்றுதல்; அவற்றுள்ளும் கூட்டமாகக்கூடியிருத்தல்; அந்தியாதென வேகக் குஞ்சரம் ஆன்றவிழுப்பொருளும் கொழிச்சண்மையிற்றம் காலைச் சனங்கள் கூடியிருப்பதாகத் தெரியவந்தது. நான் சற்று நேரம் யானற்கறையும் உற்றுப்பார்த்துப் பின் புன்னகை புரிந்தேன்; என்னருகினிருந்த அந்தண னொருவன் அதற்கான்றி என்னைத் தனியே அழைத்துப்போய் வரலாற்றை யாவனுக்கு விரி வினான். யான் அவனேநோக்கி, "ஐயனே! நமதன்னை விசாதரப் பெண்ணும் ஒன்றும்மென்று சமயம்போலக் காணப்படு வதும், அதனறியாமல் நானிசுர (தேங்காய்ச்) சாதத்தைச் சேர்த்தபின்ன வகிய பருப்புடன்தாடி இந்த வலாகசாதத்தைச் சேர்த்த சாபமனிய பருப்புடனதைப் போர்செயப் பொருத்தல் நீதியா? இதற்கான காரணம் சனங்களும் என்னாற்றினை யொப்பினர்?" என்று கேட்டேன். அவன் என்னைப்பார்த்து, 'அன்பனே! நீ கூறுவதுண்மையே. இவ்விடத்தை இருப்புள்ள வரைபுரிபார்; அதனால் நீ இதைப்பற்றி யொன்றும் பேசற்க' என்று கூறி, என்னையழைத்துச் சென்று தன்னாருகில் வைத்துக்கொண்டு, தனது வெற்றிவேற் பெட்டகையைத் திறந்துவைத்துச் சாம்பூவம் போட்டுக்கொள்ளச் சொல்லினன். யாதும் அங்ஙனமே செய்தேன்; இருவரும் வெற்றிலை போட்டுக் கொண்டே அளவளாவி வேறு பல விடயங்களைப் பேசியிருந்தோம். பின்னர்க் குறித்த பொழுதில் சிறைவானை மீண்டுவருகும் போர் நிகழ்ந்தது; யான் கூறியபடித் தேங்காய்க் கோழியே வெற்றி பெற்றது; வலாகவாரணம் தோற்றது. வென்ற கோழிக் குரியவனை அவ்வந்தணன் என்னை யன்புடன் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று பற்பல மரியாதைகளும் செய்து விருந்தளித்து உபசரித்தனன். மற்றை நாள் யான் அவ்விடம் விட்டுப் புறப்படும் பொழுது அம் மறையவன், என்னை நோக்கி, "அன்பனே! என்னை நீ யென்றும் மறவாதே; உன்னைப் போன்ற உத்தம சீலன் கிடைப்பதரிது. என்னை யுனது நண்பனைக் கருதுவாய். இனி எக்காலத்திலேனும் என்னாலொருதனியினைப் பெற நீ விரும்பினால், ஒரு சிறிதும் தடையின்றி என்னைத் துணைக் கொள்ள வேண்டும்" என்று மிகவும் வேண்டிக்கொண்டனன். யான், அவன் செய்த உபசாரங்கட்கு மனமகிழ்ந்து வாளமான

திரவியங்களை யவற் களித்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுச் சிராவஸ்தி நகரமடைந்தேன். வழி நடந்த களைப்பினல் நகர்ப்புறச் சோலை யொன்றிற் படுத்தயர்ந்து நித்திரை போயினேன். சிறிது போழ்திற் கெல்லாம் யாரோ ஒரு ஸ்திரீயின் சிலம்பொலி கேட்டு விழித்துக்கொண்டேன். அப்பொழுது என்னை நோக்கி யொரு மாது வந்தனள்; அவள் தனது கையிலொரு படத்தை வைத்திருந்தனள். அவள் என்னை யணுகித் தன் கையிலுள்ள படத்திற் பொறித்துள்ள உருவத்தையும் என்னையும் சற்றுநேரம் உற்று நோக்கி ஒப்பிட்டுப் பார்த்துப் பெரிதும் வியப்படைந்தனள். யான் அவளை யழைத்து உட்காரச் செய்து, நகரத்திலுள்ள விசேஷங்களைக் கேட்டேன். அவள் என்னை யொரு தேசசஞ்சாரி என்பதை யறிந்து, யான் களைப்புற்றிருப்பதையுங் கண்டு, என்னைத் தன் வீட்டிற்கு வந்து சிரமபரிகாரஞ் செய்துகொள்ள வேண்டிக் கொண்டனள். யானும் அவள் விருப்பத்திற் கிணங்கி அவள் வீட்டிற்குப் போனேன்; அவள், ஓர் இராஜகுமாரனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களெல்லாம் எனக்குச் செய்தனள். யாணவுகொண்டு இளைப்பாறிய பிறகு அவள் என்னை நோக்கி, 'நண்ப! நீ தேச சஞ்சாரஞ் செய்துவரும் பொழுது கண்ட பலவற்றுள்ளும் மிக்க ஆச்சரியகரமான தொன்றைத் தெரிவிக்க வேண்டுகின்றேன்,' என்றனள். நான் உடனே தைரியங் கொண்டு, இப்படம் இராஜகுமாரத்தியாலெழுதப் பெற்ற தென்பதையும், இம் மாது அவளுடைய அந்தரங்க சேடியாரிலொருத்தி யென்பதையும், ஊகித்தறிந்து கொண்டேன். உடனே நான் அவள் கையிலுள்ள படத்தினைக் கேட்டுவாங்கி அதன் மற்றொரு புறத்தில் நவமாலிகையினுருவத்தினை அன்றிரவு மஞ்சத்திற் சயனித்திருக்கையிற் கண்டது போல என்கை வன்மையா லெழுதி, அவளிடங் காட்டி, "மாதே! ஈண்டு நோக்குதி; இத்தகைய அணங்கொருத்தியினை யான் காட்டினிடைத் துயிலுங்காற் கனவிற் கண்டேன்; அஃது கனவே யெனிற் கனவுமன்று," என்று கூறினேன். படத்தின் மறுபுறத்தில் யான் பொறித்த அரசகுமாரியின் உருவினைக் கண்டும் யான் கூறிய வரலாற்றினைக் கேட்டும் பெரு வியப்படைந்த அன்னாள், இந்த விருத்தாந்தத்தினை ஆதியோடந்தமாகச் சொல்லுமாறு என்னைக் கேட்டுக் கொண்டனள். யானும்

யாவற்றையும் விவரமாய் அவட்கெடுத்துரைத்தேன். பின்னர் அவள், தன் தலைவியாகிய நவமாலிகையின் காதற் பெருக்கினையும் அவளது விரகவேதனையையும் எனக்குக் கூறினள். பிறகு அரச குமாரியும் யானும் ஒருங்கு சேர்தற்கு வழியாதென இருவரும் கலந்து யோசித்தோம். யான் அவளை நோக்கி, அரச குமாரியை அடைதற் குரிய உபாயத்தினைச் செய்து சின்னாளிற் றிரும்பி வருவதாகக் கூறி அவளிடம் விடை பெற்றுப் பிரிந்தேன். யான், கோழிச் சண்டைக் காலத்தில் நட்புப் பூண்ட அந்தணனிடஞ் சென்றடைந்தேன். அவன் எதிர் பாராத வண்ணம் விரைந்து மீண்ட என்னைக் கண்டதும் மிகுந்த ஆச்சரிய மடைந்தவனுய் என்னையழைத் துபசரித்து, யான் உடனே மீண்டதற்குக் காரணம் யாதென விசாரித்தனன். யான் இராஜகுமாரியைக் கண்டது முதல் எல்லா விருத்தாந்தத் தினையும் அவனுக்குக் கூறி அவளை யடைதற் குரிய உதவியினை அவன்பாற் பெறுவதற்காகவே யான் மீண்டமையை அவனுக்கு வெளியிட்டேன். அவனும், சிறிதும் தடையின்றி இவ்விஷயத்தி லுதவிபுரிய ஒப்புக்கொண்டனன். அதன் பின் இருவரும் சேர்ந்தாலோசித்துப் பின்வரு முபாயத்தினைச் செய்யத் தீர்மானித்தோம்.

நான் பெண்வேடம் பூண்டு அவ்வந்தணன் மகளாக அவனைப் பின் றொடர்ந்து சென்றேன். அவன் என்னை யழைத்துக் கொண்டு இராஜ சமஸ்தானத்திற்குப் போய் அரசனைக் கண்டு ஆசிகூறி அவனிடம் அடியிற் கூறியாங்கு விஜ்ஞாபனஞ் செய்து கொண்டனன். "அரசே! ஈண்டு நீ கண்ணுறும் மங்கை எனது ஓர் புதல்வி; இவள் குழந்தையாயிருந்த பொழுதே தாயினையிழந்தனள்; ஆதலின் இவட்குத் தந்தையுந் தாயும் யானே; இவளை யன்புடன் பராமரித்து மாதர்க்குரிய பற்பல தொழில்களிலும் கல்வியிலும் பழக்கிவைக்குங் கடமை என்னுடையதாக முடிந்தது. எனது மாதுலன் வம்சத்தைச் சேர்ந்த உறவினனுகிய ஓர் அந்தண விளைஞனுக்கு இவளை மணஞ் செய்து கொடுப்பதாக முன்னரே வாக்குறுதி செய்துள்ளேன். சர்வ சாஸ்திர சம்பன்னனை அவ்வாலிபனும் இவளையே மணம் புரியத் தீர்மானித்தவனுய், விவாக காலத்தில் இவளுக்குத் தர வேண்டிய பரியப் பொருளைச் சம்பாதித்துக் கொண்டுவர

உஜ்ஜயினி மாகாத்திரருப் போயிருக்கிறான். அவன் வருகை யாது காரணம் பற்றியோ காமதிக்கின்றது: இவனை மன்னைப் பருவத்தினளாயினள். இனி இவள் மணவினை முடிக்காமலிருப் பதும் அநுசிதம். ஆதலான், யான் உஜ்ஜயினிக்குப் போய் அவனை யழைத்து வந்து இப்பெண்ணை யவனுக்குக் கல்யாணம் செய்வித்து என் கையிலுள்ள பாரத்தை அவன் கையிலொப்பு வித்துப் பின், எனதிஷ்டார்த்த லாபத்தைத் தருதிக் தலயாத் தினை மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். வயது வந்த பெண்ணைக் காப்பாற்றுதல் மிகவும் கஷ்டமுள்ளதாகும்: அதிலும் தாயற்ற பெண்ணாயிருந்தால் உண்டாகுந் துன்பம் கணக்கிடமுடியாதது. ராஜா, அவளுடைய பிரஜைகளுக்குப் பிதாவாவான், என்பது தர்மசாஸ்திரம். ஆகையால் யான் உஜ்ஜ யினிக்குப் போய் மருமகனை அழைத்துவருமளவும் இத்தாயற்ற பெண்ணை உனது மகள்போலப் பாவித்துக் காப்பாற்றிவர வேண்டிக் கொள்ளுகிறேன். யாருமற்ற எனக்கு இவ்விஷயத்தி லுதவி புரியவேண்டியது உனது கடமை." என்று அந்தணன் ஆசனை வேண்டிக் கொண்டனன். அரசன் இதனைக் கேட்டு மனமகிழ்வுற்று, அவன் போய் வருமளவும் என் னைக் காப்பாற்றித் தருவதாக உறுதிமொழி கூறி, எவ்வினையழைத் துத் தன் மகளிடமுடைய கன்னிமாடத்திற்கு அனுப்பி அவளு டன் வசித்துவர ஆஜ்ஞாபித்தனன்: மேலும் அவன், எவ்வி னயன்புடன் உபசரித்துப் பாதுகாத்து வரத் தன் மகன் நவமா லிகைக்கும் உத்தரவிட்டனன். இவ்விதமாக நான் நவமாலி கையை யடைந்து, எவ்வினயின்றியே அவளுக்கு மாத்தி ரம் அறிவுறுத்தி, இருவரும் இன்ப மாற்றிருந்தனம். யானும் மாதரும்மைத்துடன் சென்று அக்கன்னிமாடத்தை வசித்து வந்தேன். பின்னர்ப் பங்குனி உத்திர தினத்தில், அவ்வூர்க் கருகிலோடும் புண்ணிய நதியின் ஆற்றிடைக்குறையில் கோயில் கொண்டிருக்கும் சாத்திரகய முனிவருக்கு திருவிழா மிகச் சிறப்புடன் நடைபெற்றது. வடிலுள்ளார் பலரும் திருவிழா வினைப் பக்தி சிரத்தையோடு கொண்டாடினர். அவ்வினை யந்தப்புர மாதர்களனைவரும் உற்சவங் காணப் போயினர்: யானும் நவமாலிகையுடன் தோழியர்களோடு கூடிக், கோயிலுட் புக்கேன். முன், ஆற்றிலிறங்கி நீர் விளையாடிவரும். யான்

இதனை நல்ல சமயமென்று ஆற்றில் மூழ்கி நீரினுள்ளாகவே நெடுந்தூரம் நீந்திப்போய் ஒருவருமறியாமல் தனியிடமொன்றிற் கரையேறினேன். முன் சங்கேதப்படி எனது நண்பனை அந்தணன், யான் தரித்துக் கொள்ள வேண்டிய ஆடையுடன் அவ்விடத்தில் தயாராக இருந்தனன். நான் கரையேறினவுடன் வேடத்தை மாற்றி ஸ்திரீ யுடைகளை நீரிலெறிந்து விட்டு அந்தணனுடன் சென்றேன். நவமாலிகையும் தோழியரும் நீரில் மூழ்கிய என்னைக் காணாராய்ப் பெரிதும் மனம் வருந்தினர். அரசகுமாரி, அடைக்கலப் பொருளாகிய என்னையிழந்தபின், தான் உயிர் வாழேனென்று புலம்பியழுதனள். அவளது பெருந் துயரத்தைக் கண்டு யாவருந் துணுக்குற்று, யான் நீரில் மூழ்கி யிறந்தமையினை அரசற்கு அறிவித்தனர். அவனும் பலரைக் கொண்டு நீர்த்துறை யெங்கும் பரிசோதித்தனன்; அவர்கள் என்னைக் கண்டிலராகவே, யான் வெள்ள நீரால் இழுத்துப் போகப்பட்டு அகியாயமாய் மாண்டு போனேன் என்று யாவரும் மனங் கசிந்து பிரலாபித்தனர்.

இத்தறுவாயில், உஜ்ஜயினி சென்றிருந்த அந்தணன், என்னை ஆடை யாபரணங்களா லலங்கரித்துத் தன் மருமகளை அழைத்துக்கொண்டு அரச னவைக்களத்தை யடைந்து, அங்கு அரசனை நோக்கி, 'அன்பு மிக்க அரசனே! நான் உத்தேசித்துப் போன மருமகனை யழைத்து வந்துள்ளேன். இவனைப் போன்ற புருஷ சிகாமணி எவற்கும் மணமகனைக் கிடைத்த லரிது. இவன் மன்மதனை வென்ற அழகினனை இருப்பதோடு, நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் அறுபத்து நான்கு கலைகள் முதலான சர்வ சாஸ்திரங்களிலும் நிகரற்ற ஞானவான். மேலும் அரசர்க்குரிய தநுர்வேத மாதிய அஸ்திர சஸ்திரப் பழக்கத்திலும் சதுர்வித உபாயங்களிலும் இணையிலாத பராக்கிரமம் பெற்றவன். இத்தகைய மணவாளனைப் பெறும் பாக்கியம் என்மகள் முற்பிறப்பிற் செய்துள்ள புண்ணிய வசத்தாற் பெற்றனள். இனிச் சிறிதேனும் தாமதியாமல், நான் இவற்குச் செய்துள்ள வாக்குத்தத்தை நிறைவேற்றவேண்டும். இத்துணை நாள் யான் மீண்டுவருமளவும் என் மகளை உன் மகள் போல அன்புடன் பாதுகாத்து வந்த உனக்கு யான் என்ன கைம்மாறு செய்யப்

போகிறேன். எல்லாம் வல்ல முழு முதற் கடவுள் ராஜோத் தமனுகிய உனக்குச் சர்வ மங்களமும் உண்டாக்குவார். யான் இப்பொழுதே ஊருக்குச் செல்லவேண்டுமாகையால் என் மகளை என்பா லொப்புவிப்பாயாக; என்று காஷ்டமகமாய்ப் பேசினன். புரசன் இதனைக் கேட்டதும், இன்னது செய்வ தென் றறியாதவனுய் எல்லையற்ற இடருடும் இன்னலும் குடி புகுந்த முகத்தினனுயிருந்தனன்; அவன் மௌனஞ் சாதித்தலைக் கண்ட அமைச்சராதியோர், அப்பெண் நீரில் மூழ்கி மாண்டு போன விவரத்தை அந்தணற்கெடுத்துரைத்து, விதிப்பயன் அங்ஙனமிருந்தால் யாரென் செய்வது, என்று கூறி அந்தண னுக்குப் பலவிதமாகத் தேற்றரவு புகன்றனர். அந்தணன் மகளை யிழந்தமைக்கு நெடுநேரம் பலவாறு புலம்பி, அவளு டைய நற்குணம் அழகு கல்வி முதலியவற்றை யொவ்வொன்று யெடுத்துப் பிரலாபித்து, முடிவில் அதி கோபாவேசத்தை யெழு ந்து நின்று, அடைக்கலப்பொருளைப் பாதுகாவாத நிருபாதமர் கள் அடையும் தீக்கதியினைப்பற்றி நீண்டதோ ருபந்நியாசம் புரிந்தனன். பிறகு பிராமணன் அரசனை நோக்கி, "மன்னு! மகளையிழந்த மாபெருந் துயரினும், இவ்வந்தணற் குரைத்த வாக்குறுதிமொழி தவறி வாயிழக்க நேர்ந்ததாலுண்டான துய ரம் அளவிடற்பாலதன்று. இம் மகாபுருஷனுக்கு நான் நேர்ந்த மொழி தவருமற் காப்ப தனதுகடன். இவனை ஏமாற்றினு லெனக் குண்டாகும் பாவம் எத்தனைகாலம் நரகிற் கிடப்பினுந் தொலையாது. ஆதலால் இறந்து போன என் மகளுக்குப் பதி லாக உனது மகளை யிவற்கு மணம்புரிவிக்கவேண்டும். இல்லா விடில் நீ செய்த குற்றத்திற்குக் கழுவாயில்லை. இதுவே மநு முதலிய அறநூல்களிற் கூறிய நீதியுமாம்." என்று பேசினன். இவன் மொழியைக்கேட்ட அரசன் முதலியோர் இவன் வேண்டு கோளைக் காது கொடாமற் புறக்கணித்ததுமன்றி, எங்களிரு வரையும் சபாமண்டபத்தை விட்டு பலாத்காரமாய் அப்புறப் படுத்தினர். ஆனல் அவ்வந்தணன், இதனல் சிறிதும் தான் கொ ண்ட கருத்தில் மாறுதலையைக் கொஞ்சமும் பின்வாங்குதலின்றி, அரண்மனை வாயிலில் விறகினைக்குவித்து அழல்மூட்டித் தன் வேண்டுகோட்கு அரசன் இணங்கிலனென்றித் தான் தீப்பாய்வ தாகத் தீர்மானித்தனன்; அவன் அங்கியை வளர்த்து மும்முறை

வலம்வந்து அதனுட்புகத் தயாராயிருக்கு மமயத்தில், அரசனும் அமைச்சரும் அந்தணனிறப்பதாலுளதாகும் பிரமச்சாயையினுக் கஞ்சி, அவனை யடைந்து நெருப்பில் விழாவொட்டாமற் றடுத் துப் பிடித்து, அவன் வேண்டுகோளை நிறைவேற்ற மன மொரு மித்ததாகக் கூறினர். பிறகு அரசன், தன் மகளை நவமாலிகை யினை எனக்குப் பலவிதச் சிறப்புடன் மணமுடித்தனன். சின்ன ளில் அரசன் எனது திறமையைக்கண்டு வியந்து மகிழ்ந்து இராச்சிய பரிபாலனத்தை என்வச மொப்புவித்து, ஆன்மலா பத்திற்குரிய ஞான நூல்களை யாராய்ந்திருந்தனன்.

இவ்வமயத்தில் அங்கராஜனுகிய சிம்மவருமன் உதவிகேட் டனுப்பினன். யான் உடனே நால்வகைப்படையுடன் சம்பா புரிக்கு வந்தேன்; தங்களைத் தரிசிக்கும் பாக்கியமும் பெற்றேன், என்று கூறினன். இதனைக் கேட்ட இராஜஹம்சன் தனது நண்பனுடைய கூரிய அறிவினுக்கும் நல்லதிர்ஷ்டத்திற்கும் பெரிதும் கொண்டாடி மித்திரகுப்தனை நோக்கி, அவனுடைய சரித்திரத்தைச் சொல்ல ஆஜ்ஞாபித்தனன். மித்திரகுப்தன் பின் வருமாறு கூறுவானுயினன்.

அதிகாரம் 12.

மித்திரகுப்தன் சரித்திரம்.

யானும் எனது நண்பர்களைப்போலத் தங்களைத் தேடிக் கொண்டு போகையில், ஸும்மதேசத்தின் இராஜதானியாகிய தாமலிப்த நகரத்தை யடைந்தேன். நகர்ப்புறப்பொழிலொன் றில் பலர் திருவிழாச் செய்பவர்போலக் கூடியிருந்தனர். அவர் களுக்குச் சிறிது தூரத்தில் வாலிபனுருவன் அதிமுக்தலதாக் ருக மொன்றின் கீழிருந்து வீணை வாசித்துக்கொண்டிருந்தனன். யான் அவனை யணுகி அங்கு நடப்பதென்னெனவும் அவன் மாத்திரம் தனித்திருக்கக் காரணம் யாதெனவும் கேட்டேன். அவன் பின்வருமாறு விடைபகர்ந்தனன்.

"ஸும்மதேசாதிபனை துங்கதன்வன் நெடுங்காலம் புத் திரப்பேறின்றி யிருந்தனன். அவன் அக்குறையை நீக்கக் கருதி மகாதேவியாகிய விந்தியவாசினியைக் குறித்துத் தவம் புரிந்தனன். தேவி அவன் கனவிற் ரோன்றி, அவனுக்கு ஒரு

புதல்வனும் ஒரு புதல்வியும் உண்டாவார்களென்றும், அப்புதல்வியின் கணவனுக்குத் தொண்டுபூண்டு புதல்வனிருப்பனென்றும் கூறினள். மேலும் தேவி, அப்பெண் பிரதிமாதங் காத்திகைதினத்தில் தன்னை யன்புடன் பூசித்துத் தன் சந்நிதியிற் பந்து விளையாடவேண்டுமென்றும் அவள் விரும்பின கணவனுக்கே அவளை மணம்புரிவிக்கவேண்டுமென்றும் ஆஞ்ஞாபித்துப் போயினள். அந்தத் திருவிழாவிற்குக் கந்துகோத்ஸவமென்று பெயர். சின்னாளிற் றேவி அருளிய வண்ணம் அரசனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உதித்தனர்; அப்பெண்ணிற்குக் கந்துகவதியெனப் பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவருகின்றனன். அவள் இன்றையதினம் பந்து விளையாடுவதற்காக இப்பொழிலிடத்திற்குத் தன் சேடியருடன் வருகின்றனள். அவளுடைய அத்தை மகளாகிய சந்திரசேனை யென்பாள் அவளுக்கு உயிர்த்தோழி, எனக்கு உயிர்க்காதலி. ராஜகுமாரனாகிய பீமதன்வா அவளை விரும்பிப் பிடித்துவருகின்றனன்; அவளோ அவன்பாற் சிறிதும் விருப்பின்றி என்னையே அன்புடன் நேசிக்கின்றனள். இப் பீமதன்வாவின் உபத்திரவத்திற்கு அஞ்சி இன்று சந்திரசேனை கந்துகோத்ஸவத்திற்கு வருவாளோ வாராளோ என்று என் மனம் கவலுகின்றது. அவளை யீண்டுக் காணப்பெறுமையால் வருந்தித் தனியேயிருந்து புலம்புகின்றேன்" என்று அவ்விளைஞன் தன் வரலாற்றினைக் கூறினன்.

அவன் பேசி முடித்தவுடன் அருகிலொரு மாதின் சிலம்பொலி கேட்டது; அவள் யாங்களிருக்கும் லதாக்ருகத்தை யடைந்ததும், அவ்வாலிபன் திடீரென எழுந்து அவளை யாலிங்கனஞ் செய்து தன்னருகிருத்தித் தன் காதலியவளே யென எனக்குத் தெரிவித்தனன். இருவரும் அன்புடை மொழிகளால் அளவளாவிப் பேசியபின், அவள் தனக்கு இராஜகுமாரனுண்டாகும் இம்சையினை எடுத்துரைத்தனள். இருவரும் யோசித்து இனி இத்துயர் பொறுக்க முடியாதென்றும் இளவரசனுக்கு விரோதமாய் இங்நாட்டிலிருத்தல் பிழையென்றும் தீர்மானித்தனர். பின்னர் அவ்வாலிபன் என்னை நோக்கி, யான் பற்பல தினங்களுஞ் சுற்றிப்பார்த்து வருகின்றமையால் எத்தேயம் தாங்க

விருவரும் சென்று சேர்ந்து வசித்தற்குத் தக்கவளமும் நாக
ரீகமுமுடையது என்பதைச் சொல்லுமாறு கேட்டனன். அத
ற்கு யான், அவன் விரும்பியபடி யுறைதற்குத் தக்க உத்தம
தேசங்கள் உலகத்திற் பலவுள வென்றும் ஆயினும், இருந்த
இடத்திலேயே சந்தோஷமாயிருப்பதற்கு உபாயம் உண்டென்
றும், அதனையும் யான் தெரிவிக்கத் தயாரென்றுங் கூறினேன்.
யான் பேசி முடிப்பதற்குமுன் மாதர்களின் நூபுர வொலி
கேட்டது. உடனே சந்திரசேனை எழுந்து எங்களை நோக்கி
அதோ கந்துகவதி தன் தோழியருடன் வருகின்றனள்; யான்
இனி இங்கிருத்தல் கூடாது; அவள் பந்து விளையாடலை யாவ
ரும் கண்டு களிக்கலாம்; நீவிரும் அங்கு வம்மின்; யான் அவளை
விரைவில் அடையவேண்டும்; இன்றேல் என்னைத் தேடுவள்.'
என்று கூறி விரைந்து போயினள்.

நாங்களும் உடனே எழுந்து பந்து விளையாடுமிடத்திற்குப்
போயினேம். அங்கு இராஜகுமாரி அழகிய விதானமமைந்த
கூடகார மொன்றில் ஆயவெள்ளம் புடைசூழ வீற்றிருந்தனள்.
அவளது பேரழகினைக் கண்ட யான் கரைகடந்த காதல் கொண்
டேன். மையல் வலையிற் சிக்கிய யான் பரவச மடைந்தவனாய்
அத்தையலை வியந்து நோக்கி நிற்கும்பொழுது அவள் எழுந்து
விந்தியவாசினிதேவியின் இணையடிகளிற் பணிந்தெழுந்து
போற்றிசெய்து, மதன கோபத்தாற் சிவந்தொளிருங் காதலின்
கண் போன்ற செந்நிறக் கந்துக மொன்றைக் கையிலெடுத்துச்
சேடியருடன் விளையாடப் புக்கனள். அவள் அதனை முதலிற்
றரையில் மெல்லெனப் புடைத்து அது மேலெழுந்து வந்ததும்
தனது அழகிய புறங்கையாற் றட்டி விண்மிசை யெழுப்பிக்
கீழே மீண்டுவரும்பொழுது கைகளிற்பற்றி மேல் வீசினள்.
அக் கந்துகம், தாளக் கிரமத்திற்குச் சரியாகச் சதிபெயர்க்கும்
தன் சீறடியிலிட்ட நூபுர வொலிக்குத்தக நடிக்கு மளவும்
அதனை மெல்லென வடித்து, வேகங் குன்றியக்காற் சிறிதுங்
கருணையின்றிப் புடைத்தனள்; சில வமயங்களில் அப் பந்து
ஆகாயத்திற் சுற்றிச் சுற்றிப் பறக்கும் பறவை போல விளங்கி
யது. மாறி மாறித் தன் கைகளாலதனை யடித்து மேலெழுப்பி,
அஃது இறங்கும் பொழுது தன் சேடியர் மீது வீசினள்; தன்

முகத்திற்கு நேராய் வட்டமாகச் சுற்றிவர அதனை லாகவமாகப் புடைத்துத் தான். நாற்புறமு முலாவி, அக் கந்துகம் நிலத்திற் பட்டதெப் பொழுது மகயிலிருந்த தெப்பொழுது மேலெழுந் தந்தரத்திற் சென்ற தெப்பொழுது என்பதை எவருங் காண கில்லாராய்த் திகைக்க அதிவேகமாகச் சாரி வந்தனள். 'பின்னு முன்னு மெங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய் மின்னு மின்னினங்கொடி வியனிலத் திழிந்தென' அவள் சுற்றிவரும் தொறும் யாண்டும் கந்துகவதியினையே யாவருங் கண்டனர். 'பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட, மின்னிலங்கு மேகலைகளார்ப்ப வார்ப்ப வெங்கணும்,' அவ்வியக் கண்டோர் யாவரும் அரசன்மகள் தெவியின் அருளாற் பல்லாயிர முருவம் பெற்றனளென்றும் அவள் கைக் கொண்ட கந்துகமு மொன்றன்று பல வென்றும் யாவரும் வியந்தனர். இங்ஙன மவள் யாவர் மனத்தையும் பிரமிக்கச் செய்தனள். அப்பொழுது ஒரு புறத்தில், தன்னை மறந்து பரவச முற்றிருக் கும் என்னை யவள் கடைக் கண்ணுறுக்கி மெல்லென மந்த நகை புரிந்தனள்; அவள் முகத்தை அன்றலர்ந்த தாமரை யெனக் கருதிவரும் வண்டினங்களை யவள் பெருமூச்சா லோட்டுவதை யுணர்ந்து யான் அவள் நெஞ்சினுட் புகுந்ததை யுணர்ந்தேன். அவள் என்னை நோக்கி நாணி நின்றவண்ணம் தன் கைக் கந்துகம் மநோவேகமும் பின்னிடத் தன்னைச் சூழ்ந்துவர, மலர்க் காட்டினிடை விளங்கும் பொற்பதுமை போல நின்ற தோற்றத்தை யான் எக்காலமும் மறத்த லொண்ணாது. அவள் சிற்றிடை படுந்துயரினைச் சிலம்புகள் புலம்பித் தெரிக்கவும் ஒரு சிறிதும் பொருட் படுத்தாதவளாய்க் குனிந்தும் நிமிர்ந்தும் குதித்துக் காவியு நின்றும் ஓடியும் விளையாடினாள். பின்னர் அவள் தோழியரோடு சேர்ந்து விளையாடி யாவரினுஞ் சிறந்து விளங்கினள். பிறகு அவள் விளையாட்டின் முடிவில் தெவியின் பதமலர் பழிச்சித் தோழிமார் புடை சூழ்ந்துவரக் கந்துகத்தைப் பற்றியாங்கு என் நெஞ்சையுங் கைக்கொண்டு தன் கன்னி மாடத்திற் சேகினள். அவள் செல்லும் பொழுது என்னைக் கடைக்கணால் நோக்கிய பார்வை யென்னைக் காதலுங் கடலு ளாழ்த்தியது. எனது நண்பனாகிய கோசதாசன் வேண்டு கோளின்படி அவன் மனைக்கு விருந்தாயினேன்; என்னை யவன்

அளவுக்கு விஞ்சி உபசரித்தனன். அன்று மாலையிற் சந்திர சேனை அங்குவந்து தனது காதலனுகிய கோசதாசனருகிற் சென்று அவன் காதிடைச் சில இரகசிய மொழி புகன்று பின் அவன் பக்கலிலிருந்தனள். கோசதாசன் என்னை நோக்கி நகைத்து, 'அன்பனே, இனி எக்காலமும் எங்களை மறவாமல் அருள்புரிய வேண்டு' மென்றனன். யான் அதற்கு, 'நண்ப! நீ கூறுவதொன்றும் விளங்கவில்லை; அஞ்சன சக்தியால் உனது மாற்றுகிய பீமதன்வாவின் கண்ணுக்குச் சந்திரசேனை குரங்குபோற் றோன்றச் செய்தனையோ?' என்றேன். இதனைக் கேட்ட சந்திரசேனை முறுவலித்து என்னை நோக்கி, 'ஐயனே! தாங்கள் கூறியாங்கு என்னை யிப் பிறவியிலேயே வானரமாகச் செய்யின் தங்களுக்குப் பெரிதும் நன்றி பாராட்டுவேன்; எவ்விதத்தாயினும் யானும் என் காதலரும் இடையூறின்றி யிருந்தால் அதுவே போதுமானது. பந்து விழாக் காலத்தில் உம்மைக் கந்துகவதி கண்டு காதல்கொண்டு மதனன் கணைக்கு இலக்காய் வருந்துகின்றனள். இதனை யான் அறிந்து கொண்டேன்; இவ்விஷயத்தினை அவள் பெற்றோர்க்கு யானே அறிவிக்கப் போகின்றேன். அவர்களுந் தடையின்றி உனக்கே அவளை மணஞ்செய்து வைப்பார்கள்; தேவியின் ஆஜ்ஞை யங்ஙனமாதலின் அவர்கள் அதனைக் கடவார். நீர் கந்துகவதியினை மணந்த பின் ராஜகுமாரனுகிய பீமதன்வா உமக்கு அடிமையாகுவன்; இதுவும் தேவியின் அநுக்கிரகமன்றோ? பின்னர் இவ்ராச்சியம் உம்மதாகும்; பீமதன்வா எமக்கு இடையூறு செய்யும் வலியிலனவான். இன்னும் மூன்று நான்கு தினங்கள் நீவிர் ஈண்டுத் தங்கியிருக்கவேண்டும்" என்றனள். இங்ஙனங் கூறிய பின் தன் காதலனைத் தழுவி விடைபெற்றுக் கொண்டாண்மனை போயினள். கோசதாசனும் யானும் அவ்விரவு அவள் கூறிய வற்றைப்பற்றிச் சர்ச்சை செய்துகொண்டிருந்தோம். மற்றை நாள் வைகறைப் பொழுதில் யான் கந்துகவதி பந்து விளையாடிய சோலைக்குச் சென்றேன். அங்கு ராஜகுமாரன் தற்செயலாக என்னைக் கண்டு மரியாதை செய்தனன்; பின் அவன் மிகுதியும் வேண்டுதல் புரிந்து என்னை அவனது கூடகாரத்திற்கு அழைத்துச் சென்று விருந்துசெய்துபசரித்தனன். யானும் அவனுடன் பேசிப் பொழுது போக்கி அன்றிரவு அங்கேயே படுத்துறங்கி

னன். யான் தூங்குகையிற் கந்துகவதியால் ஆலிங்கனஞ் செய்யப்படும்படாக் கனவைக்கண்டு விழித்துக் கொண்டகையில், யான் விலங்கினாற் பிணிப் புண்டிருப்பதையும் வலிய கிங்கரர் பலர் என்னைச் சூழ்ந்து கிடப்பதையுங் கண்டேன். அப்போது இராஜகுமாரன் என்னை நோக்கி, "மூடா! நான் சொல்வதைக் கேள். சந்திரசேனையினைக் கவனித்து வரும்படி என்னால் அனுப்பப்பட்ட கிழவி, அவளும் நீயும் போகிறவண்டிமுக்கு மிதியின் முறுவலையும் எனக்குத் தெரிவித்தனள். கள்ள! இனிக் கந்துகவதியினை நீயோ மணக்கப் போகிறாய்? யாதே உனக்கு அடிமையாகப் போகிறேன். இவற்றையெல்லாம் நான்போய்; மூடனுகிய நீயோ சந்திரசேனையை என்னுடனின்றி அத்துஷ்டனன கோசதாசனுக்கு மணம் புரிவிக்கும் வன்மையுடையவன்?" என்று சினந்துகூறிக் கிங்கரர்களை யழைத்து, என்னைக் கொண்டுபோய்ப் நடுக் கடலில் வீழ்த்திவா அந்நாபித்தனன். அவர்கள் என்னைத் தூக்கிப்போய் ஒரு படகிலேற்றி நடுக் கடலிற் றள்ளிவிட்டுத் திருமினர். கைகள் என் சுவாதீனத்திலிருந்தமையால், தெய்வாதினமாய் அருகில் மிதந்து வந்த மரக்கட்டை யொன்றினைப்பற்றிப் பொழுது விடியுமளவும் நீரில் நீந்திக் கொண்டிருந்தேன். காலையில் ஒரு கப்பலைக் கண்டேன்; அதிற் பல யவனர்களிருந்தனர்; அவர்கள் என்னைக் கண்டதும் யான் மிதந்துகொண்டிருக்கும் இடத்திற்குத் தங்கள் கலத்தைச் செலுத்தி என்னை யெடுத்துக் கப்பலிற் சேர்த்தினர். அம் மரக்கலத்தின் மாலுமியாகிய இராமேசன் என்பான் யான் வலியலு யிருத்தலைக்கண்டு பல கடினமான வேலைகளைச் செய்ய ஆணையிட்டனன். அவ்வமயத்தில் சில மரக்கலங்கள் விரைந்துவந்து இந்த யவனரின் கலத்தைச் சூழ்ந்து கொண்டன. போர்வீரரேறிய பல கலங்கள் தமது கலத்தின்மேல், காட்டுப் பன்றியின்மீது பாய்ந்துவரும் வெட்டைநாய்களைப்போல, விரைந்து சூழ்ந்தமையைக்கண்டு அஞ்சி மனங்கலங்கினர். அவர்கள் கையினின்றும் தப்ப வகையுமில்லை. யாவருந் செய்வதின்னதென்று தெரியாது திகைக்கையில், யான் அவர்களை நோக்கி எனது விலங்கினை நீக்கிவிட்டால் பகைவரினின்றும் தப்பித்துக்கொள்ள உபாயம் காட்டுவேன் என்றேன். அவர்கள் என் தனையினைத் தறித்து

விட்டனர். உடனே யாவரையும் ஆயுதபாணியராகச் செய்து யாமும் வாளாயுருவி யுத்தசந்நத்தனானேன். பின்னர் அவ் யவனர்களை யுற்சாகப்படுத்திப் பகைவர்மேல் அஸ்திர சஸ்திரங் களைப் பிரயோகிக்கச்செய்தேன். எங்கள் மரக்கலத்தைச் செலுத்தி, பகைவருடைய கலங்களில் முன்வந்த கப்பலை நெருங்கி யான் சில வீரர்களோடு அதன் மேற்றட்டிற் பாய்ந்து அங்குள்ள பலரையும் கண்டதுண்டமாக்கி அவர் தலைவனையுஞ் சிறைப்படுத்தினேன். என்ன வியப்பு! அங்ஙனம் என் கையிற் சிறைப்பட்டவன் வேறெவனுமில்லை; பீமதன்வாவே. என்னைக் கண்டதும் அவன் தலை கவிழ்ந்தனன். விதியின் வல்லபத்தை யாவரே விலக்கல்கூடும்.? என்னைப் பிணித்த அவ் விலங்கிலையே அவனைக் கட்டிச் சிறையில் வைத்தேன். இவனுடன் வந்த ஏனையோர் இவனுக்குற்ற கதியைக்கண்டு தங்கள் கலங்களைத் திருப்பிச் செலுத்திக்கொண்டு ஓடிப்போயி னர். யாங்கள் திரும்பி யூர்க்கு வரும்பொழுது உண்டான பெரும் புயற்காற்றினால் எங்கள் மரக்கலம் அலைப்புண்டு கடலி னடுவணுள்ள ஒரு தீவினை யடைந்தது. சுத்தஜலம் பழங்கள் மூலிகைகள் கந்தமூலங்கள் முதலியவற்றைச் சேகரித்துக் கொ ள்ள யானும் சிலரும் அத்தீவில் இறங்கினேம். யாங்கள் தேடி வந்த பொருள்களெல்லாம் அபரிமிதமாய் எளிதிற் கிடைத்தன. அவற்றை யெல்லாம் மரக்கலத்திற் கொண்டுபோய்ச் சேர்க்க ஏனையோர்க்கு உத்தரவளித்து யான் தனியே அத் தீவிலுள்ள விநோதங்களைக் கண்டுவருமாறு புறப்பட்டேன். அங்கோர் அழகிய மலையினைக்கண்டு அதன்கணுள்ள இயற்கைவனப்பு என் மனத்தைக் கவர்ந்தமையால் அதன்மேலேறினேன்; இரு புறங்களிலுமுள்ள விநோதங்களைக் கண்டுகொண்டே சென்று அதன் சிகரத்தை யடைந்தேன். அவ்விடத்தில் மிக்க ரமணீய மான தடாகமொன்று தாமரை முதலிய மலர்களால் நிரம்பிக் கண்டோர் மனத்தைக் கவரும் பேரெழிலுடையதாய்த் திகழ்ந் தது; அத் தடாகத்தின் படிகளெல்லாம் நவரத்தினங்களா லிழைக்கப்பெற்றிருந்தன. யான் என் விடாய்தணிய நீரில் மூழ்கி ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தன முடித்துப் பின் வேட்கைநீங்க நீரருந்தி, அழகிய தாமரை மலர்களைப் பறித்துக் கழுத்தில் மாலையாக அணிந்துகொண்டு கரையேறினேன்.

அப்பொழுது என்னெதிரில் ஆகாயத்திற்கும் பூமிக்குமாகப் பெரியதோர் கரியவுருவம் ஒன்று முன்னின்றது. அஃதோர் பிரமராக்கதம். அவன் கோபமாக என்னை நோக்கி, 'என் உத்தரவின்றி எனது மலைமேல் நீ ஏறியதுமன்றி இப் புனிதநிர்ப்பூமியை மிதித்தனை. நீ யாவன்? எங்கிருந்து வருகிறாய்? இங்கு யாது கருதி வந்தனை?' என்று வினவினான். யான் எனது விருத்தாந்தத்தினை ஒன்றும் விடாமல் உள்ளவாறுரைத்தேன். பிறகு அவன், 'யான் கேட்கும் விஷயத்திற்கு நீ சரியான விடை யளிக்காவிடில் உன்னை யெடுத்து விழுங்கிவிடுவேன்' என்று அச்சுறுத்தினான். யான் அங்ஙனம் செய்ய ஒப்புக் கொண்டதன்மேல், இருவர்க்கும் பின் வரும் சம்பாஷணை நிகழ்ந்தது:—

இராக்ஷசன்:— "உலகத்தில் மிகக்கொடியதான து எது?"

மித்திரகுப்தன்:— "மாதர்களின் மனம்"

இரா:— "இல்லறவின்பத்திற்குக் காரணமாயிருப்பது எது?"

மித்:— "தற்காத்துத் தற்கொண்டானைப் பேணித்தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாத பெண்ணின் கற்புநிலை."

இரா:— "அன்பெனப்படுவ தியாது?"

மித்:— "ஆசையே"

இரா:— "உண்டாகும் இடையூறுகளை நீக்குவது யாது?"

மித்:— "நுண்ணறிவு."

மேற் கூறியவற்றைத் திருஷ்டாந்தப் படுத்தச் சில கதைகள் வேண்டுமாயிற் கூறுவேன் என்றேன். இராக்ஷதன் அவ்வாறே கேட்பதிற் பெருவிருப்புடையனாய்ச் என்னைக் கூற வேண்டிக் கொண்டனன்; யான் கூறத்தொடங்கினேன்.

தூமினியின் கதை.

திரிகர்த்த தேசத்தில் தனகன் காலியகன் தன்னியகன் எனப் பெயரிய சகோதரர் மூவரிருந்தனர். அக்காலத்தில் அந்நாடு பன்னிரண்டு வருடகாலம் மழையின்றிப் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருந்தது. அக்கொடிய துர்வாதசவருஷ சுஷ்காலத்தில், பயிர்கள் காய்ந்துபோயின; பசும்புற்றலையும் காண்பது

அரிதாய்விட்டது; ஆறு நூளம் கூலைல் தடாகம் ஆதிய நீர்நிலை களெங்கும் வரண்டுபோயின. யாகாதி கிருகியங்கள் கூடை பெருதிதாழிந்தன; வருணுஷ்டிராம தருமம் நிலைகுலைந்தன. கள்வருங்கொலைஞருமு .கணக்கின்றிப் பல்கினர். மனிதர் ஒரு வனையொருவர் கொன்று காமாதிசமும் புரிக்கத்துணிப்பட்டனர். நகரங்களும் பட்டினங்களும் பாக்கங்களும் சேரிகளும் பாழு டைந்தன. அக்கொடிய பருசத்தை நிலைக்கவும் மனம் பதறும். மேற்சொன்ன மூன்று சகோதரர்கள் விட்டிலுள்ள பொருள்கள் யாவுந்தாலைந்தபின் உண்ணுதற்கு உணவு ஒரு சிறிதுமின்றி முடிவில் தங்கள் பத்தினியரையும் உண்ண வொருப்பட்டனர். மூதலிரு சகோதரர்கள் பத்தினியரையும் உண்டபின்னர், மூன்ற வது சகோதரனுகிய தன்னியகனுடைய பத்தினி தூமினி என் பாள் ஒருத்தியே பாக்கியாக இருந்தனள். அவளையும் மற்றவர் தின்னுவதாகத் தீர்மானித்தனர். ஆயினும் தூமினியின்பாற் பேரன்புடைய அவருடைய கணவன் தன்னியகன் தனது பத்தினியைக்கொன்று தின்னுதற்கு மனமில்லாதவனுய் அன்றி ரவே பொருவருமறியாமல் தன் பத்தினியை யுடன்கொண்டு வனைனிட் டோடிப்போயினன். வழியில் கள்ளியமுலர்ந்து கிடக்கும் ஒரு காட்டிற்புகுந்து உண்ண நீரற்று விடாய்த்துத் தாகத்தால் வருத்தமுற்ற பத்தினிக்குத் தன் தேகத்திலிருந்து இரத்தத்தை யெடுத்துக்கொடுத்துக் காப்பாற்றியழைத்துப் போயினன். போகும்வழியில் கை கால் மூக்கு முதலிய அவய வங்களில்லாத உறுப்பறை யொருவன் வெய்யிலிற்றவழ்ந்து செல்வதைக்கண்டு, அவன் துக்ககரமான நிலைமைக்குப் பரிதாப முற்று இரங்கி அவனையும் தன்முதுகிற் சுமந்துகொண்டு பசலையடி வாரத்திலுள்ள குகை யொன்றை யடைந்தனன். அவ்விடத் தில் நல்லநீரும் கந்தமூலபலங்களும் கிடைத்தமையால் அக் குகையிலேயே மூவரும் சிலநாள் தங்கி இளைப்பாறினர்; பசல யடிவாரத்தில் மான்கள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தன. அம்மானினைச்சியும் இவர்களுக்குப் பயன்பட்டன. சிறிது காலத்தில் இவர்கள் தேகதிடமும் சரீரசௌக்கியமும் பெற்றனர். பலநாள் தன்னியகன் மான்வேட்டையின் பொருட்டுத்தனியே பிரிந்துபோயினன்; தூமினியும் முடவனுமே குகையிலிருந்தனர். இயல்பிலேயே துஷ்டையாகிய தூமினி மதத்தினுல் வேட்கை

மிக்கவனாய் முடவனைத் தன்னிச்சையின்படியொழுகப் பலாத்காரஞ்செய்து தனது மனோரதத்தை நிறைவேற்றிக்கொண்டனள். தேகத்திலுள்ள இரத்தத்தையும் கொடுத்து உயிரைக் காப்பாற்றிய அன்புடை நாயகனை வெறுத்து அப்பாதகி அவனைக் கொல்லவுந் துணிந்தனள். ஒருநாள் அவள், வெண்டி மெல்லறை கிணற்றில் நீர்மொள்ளுங் கயிற்றினைப் போட்டுவிட்டு, அதனை எடுத்துத்தரும்படித் தனது நாயகனைக் கேட்டனள். அவன் சூதறியாது கிணற்றிற்குனிந்து கயிற்றினை எடுக்க முயற்சிக்கும்பொழுது, இக்கொடியபாவி திடீரெனப் பின்புறமாக அவனைக்கிணற்றிற் பிடித்துத் தள்ளிவிட்டனள். பிறகு சனி தொலைந்ததென்று களித்துத் தனது ஆசை நாயகனாகிய முடவனைத் தோளிற்றூக்கிக்கொண்டு அவ்விடம் விட்டுப்போயினள். அவள் எவ்விடஞ்சென்றபோதிலும் அம்முடவனை அவளுடைய கண்வலுகவே யாவருங்கருதும்படி நடந்துகொண்டனள். இவ்வளவு அங்கஹீனமுகிய அக்குரூப நாயகனை வெறுக்காது முதுகிற் சுமந்துசென்று அவனை யன்புடன் பாதுகாக்கும் அத்தூமினையைச் சனங்கள் யாவரும் தெய்வமென்றே கொண்டாடினர்கள். இவ்விதமாக இவர்கள் அவந்தி நகரத்தையடைந்தனர். கற்பினுக் கணிகலமாகக் கருதப்பட்ட இவளுடைய நடவடிக்கையைப்பற்றிக் கேள்விப்பட்ட அவந்திமன்னன், இவள் வருகையால் தனது தேசம் க்ஷேமமடைந்ததென்று கருதியவனாய், அவளுக்கும் அம்முடவனுக்கும் தனியே மாளிகையொன்றளித்து உண்டிமுதலியன தந்து ஒரு குறைவுமின்றி யவர்களைப் பாதுகாத்து வந்தன். அவர்களும் அங்குச் சௌக்கியமாயிருந்தனர். நதிங்ஙனம் நிற்க; கிணற்றில்விழுந்த தன்னியகனைத், தற்செயலாயங்கு நீர் மொள்ளச்சென்ற வணிகக் கூட்டத்தாருட் சிலர் கண்டு, ஆழமில்லாத நீரில் உயிருடன் இருந்து தவிக்கும் அவனைக் கரையி லேற்றிவிட்டதுமன்றி, அன்பால் அன்புடையராய்த் தாம் வியாபாரநிமித்தம் செல்லுமிடங்களுக்கெல்லாம் அவனையும் உடனழைத்துப் போயினர். ஒருநாள் அவ்வணிகர்கள் இவனுடன் அவந்தி நகரத்தையடைந்தனர். அவ்வூரில் மிக்க அதிசயமாகச் சனங்கள் பேசிக்கொள்ளும் பதிவிரதா சிரோன்மணியையும் முடவனையும்பற்றித் தன்னியகன் தற்செயலாய்க் கேள்வியுற்று அவர்களைக்கண்டாயினும்

தன் பாவந்தொலைப்பக் கருதி அவர்கள் வதியும் மாளிகைக்குப் போயினன். தூமினி இவனைக்கண்டதும், தன் நாயகன் இன்னும் உயிர் பிழைத்திருக்கின்றனன் என்பதை அறிந்து, உடனே அரசனிடஞ்சென்று, 'அரசே! எனது பர்த்தாவினைப் பலவிதமான அங்கச்சேதஞ்செய்து துன்புறுத்திய மகாபாதகன் இவன்றன்' என்று தன்னியகனைக்காட்டிக் கொடுத்தனள். உடனே அரசன் தன்னியகனைப் பற்றி விலங்கிட்டுச் சிறையில்வைத்து அவனுக்குக் கொலைத்தண்டனையும் விதித்தனன். ஆயினும் தன்னியகன் அரசனை சோக்கி, "மகாராஜனே! யான் மரணதண்டனைக்குள்ளாகுமுன் அம்முடவனைத் தங்கள் சந்நிதானத்திலேயே கண்டு பேசவிரும்புகிறேன். அவனும், யானே அவனுக்குத் தீங்கிழைத்தவனுக என்முன்னிலையில் இவ்விராஜ சபை நடுநின்று கூறிவிடுவானுயின், என்னை யொருகேள்வியுங்கேளாமல் தூக்கிலிடுங்கள் என்றனன். அவன் கேட்டுக்கொண்டபடி அம்முடவன் ராஜ சபைக்குக் கொண்டுவரப்பட்டான்; அவன் தன்னியகனைக் கண்டவுடன் தன்னைக்காப்பாற்றிய மகாபுருஷனென்பதையறிந்து, தவழ்ந்துசென்று அவன் கால்களில் விழுந்து நமஸ்கரித்ததுமன்றி, நடந்த விஷயங்கள் யாவற்றையும் ஒன்றும் மறையாம லுரைத்தனன். இதனைக் கேட்டதும் அரசன் பெருங்கோபங் கொண்டு, அத்தூமினியைப் பற்றிவரச் செய்து அவளைச் சிக்ஷிக்க வேண்டிய வழியிற் சிக்ஷித்தனன். இத்தூமினியின் கதையால், உலகத்திற் கொடியது மாதர்களின் மனம் என்ற உண்மை விளங்கும். இராக்ஷதனே, இன்னுரு ஸ்திரீயின் கதைகூறுகின்றேன் கேட்பாயாக.

கோமினியின் கதை.

திராவிடதேசத்தில், சப்தபுரிகளுள் ஒன்றுகிய காஞ்சீபுரம் எனப்பெயரிய சிறந்த நகரமொன்று உண்டு. மிகுந்த தனிகனுகிய சக்திகுமாரன் என்ற வணிகனுருவன் அங்கு வசித்து வந்தனன். அவன் பதினெட்டு வயதுவரையில் விவாகமில்லாதிருந்தனன்; மனைவியில்லாத இல்வாழ்க்கை மயானவாழ்விற்குச் சமானமென்றும், இவ்வுலகில் ஒருவன் அடையக்கூடிய சுகம் எல்லாம், உத்தமக் கற்பினையுடைய தர்மபத்தினியினுலேயே உண்டாக வேண்டுமென்றும் தீர்மானித்துத், தானேநேரிற்

பலவிடங்களிலுஞ்சென்று தன்மனத்திற்குப் பொருத்தமான பெண்ணைத்தேடி விவாகஞ்செய்ய எண்ணிப் புறப்பட்டனன். போகும்பொழுது, இவன் சாமுத்திரிகாலக்ஷணத்தாற் குறி சொல்லுபவனைப்போல வேஷம்புனைந்து இருநாழி நெல்லைத் தன் அங்கவஸ்திரத்தின் தலைப்பில் முடிந்துகொண்டு பற்பல தேசங்களோறுஞ் சஞ்சரித்து வந்தனன். அவன் சென்ற இடங்களிலெல்லாம், விவாகத்திற்குப் பெண்வைத்திருப்பவர் யாவரும், தங்கள் பெண்களுக்குத்தக்க புருஷர்கள் கிடைப்பாரோ என்று அறியக்கருதி, அவனிடத்திற் குறி கேட்பதற்காகத் தங்கள் பெண்களை அழைத்துவருவார்கள். அப்பெண்களுக்குள் தன் மனத்திற்குத் திருப்தியான அழகினையுடைய பெண்ணை யிவன்கண்டால், அவளுக்குச் சொல்லவேண்டிய சோசியத்தைக் கூறிப் பிறகு தனக்கு தக்ஷிணையாகத் தான் கொணர்ந்திருக்கும் நெல்லைப் பாகஞ்செய்து தனக்கு அமுதளிக்கவேண்டிக்கொள்வது வழக்கம். எந்தப் பெண்ணும் அவன் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. அவனும் தேசங்களோறும் அலைந்து திரிந்து வந்தனன். அவன் சோழநாட்டை யடைந்து காவிரிநதியின் றென்கரையிலுள்ள ஒரு நகரத்திற் புகுந்தனன். அங்கோர் கன்னிகையைக்கண்டு அவளது செளந்தர்ய லக்ஷணங்களுக்கு வியந்து, அப்பெண்ணைப்பற்றி விசாரித்தனன்; காமினியென்னும் பெயருடைய அவள் தாய் தந்தையினை யிழந்து, உறவினளாகிய கிழவியொருத்தியால் வளர்க்கப்படுகிற விவரத்தை அறிந்தனன். இவன் அவள் வீட்டையடைந்து அப்பெண்ணின் ரூபலாவண்யத்திற்கு ஏற்பக்குறி கூறியபின், வழக்கம்போலத் தன்கையிலுள்ள இருநாழி நெல்லைக் காட்டி, அதனை அவள் கையாலேயே பாகஞ்செய்து தனக்கு அமுதளிக்க வேண்டிக்கொண்டனன். அப்பெண்ணும் புன்னகையாடி அங்ஙனஞ்செய்ய ஒப்புக்கொண்டனள். அவள் அந்நெல்லை வாங்கிச் சிறிதுநேரம் நீரிலூறவைத்தெடுத்துப் பின் வெய்யிலிலுலர்த்தினள். காய்ந்து ஈரம்புலர்ந்தபின் அதனை யெடுத்து நிலத்திற்றேய்த்து அரிசி உடையாமல் உமியினை நீக்கினள். பிறகு தன் செவிலியிடத்தில் அவ்வுமியினைக்கொடுத்து, இது தட்டார்களுக்கு உபயோகமாயிருக்கும்; இதனை அவர்களால் விற்றுக் கிடைக்கும் பணத்திற்குக் கொஞ்சம் விறகும் ஒருமுட்

சட்டியும் சில சிறு மட்கிண்ணங்களும் வாங்கிவாவெனச்சொல்லி விடுத்தனள். கிழவி போய்வருவதற்குள், அப்பெண் அரிசியை உரலிலிட்டு உலக்கையாற்குத்தித் தவிட்டினைப்போக்கிச் சுத்தமாக்கினள். கூறிய சாமான்களை வாங்கிக்கொண்டு கிழவிவந்தனள். உடனே அப்பெண் அடுப்பில் உலையேற்றி அரிசியினைக் களைந்து அக்கினிக்கு மும்முறை நிவேதித்துப் பின் உலையிற்பெய்தனள். அன்னம் பாகமானவுடன் பாத்திரத்தைக் கீழிறக்கிக் கஞ்சியைவடித்தெடுத்து வைத்துக்கொண்டு, அடுப்பிலுள்ள தணலை எடுத்து மூடிவைத்துக் கரியாக்கித் தன்செவிலிகையிற்கொடுத்து அக்கரியினைவிற்றுக் கிடைக்கும்பொருளுக்கு ஒருவாழை இலையும் கொஞ்சம் கறிகாய்களும், நெய், எண்ணெய், தயிர், மஞ்சள், முதலியவற்றிற் சிறிது சிறிதும் வாங்கிவரச்செய்தனள். கறிகாய்களைப் பாகஞ்செய்து எடுத்துத் தாளிதத்தால் நறுமணங்கமழச்செய்து கஞ்சிக்குத் தாமரைமலரின் மணமேற்றிப் பக்குவஞ்செய்து வைத்தனள். இன்னுஞ்செய்யக்கூடியவற்றை எளிதில் முடித்துச் சக்திகுமாரனை எண்ணெய்தேய்த்து ஸ்நானஞ் செய்துவருமாறு செவிலியைக்கொண்டு அவனுக்குத்தெரிவித்து அவள் போய்வருவதற்குள், போசனஞ்செய்யுமிடத்தைச் சுத்தமாக்கி, அவன் பூஜைசெய்தற்கு வேண்டிய பத்திர புஷ்பங்களையெடுத்துவைத்தனள். அவன் பூஜைமுடித்தபின், தான் பாகஞ் செய்தவற்றைக் கடவுட்கு நிவேதிப்பித்து, அவனைப் பீடத்திருத்தி வாழையிலைபோட்டு அவனுக்கு அமுதுபடைத்தனள். அகிற்கட்டையாற் புகையூட்டப்பெற்ற பாத்திரத்தில் நறியமலர்களின் வாசங்கலந்த நன்னீர்கொடுத்துப் பருகச்செய்தனள். பின்னர் அவன் உணவுகொண்டதன்மேல், எச்சில் இலையினைச் செவிலியாலகற்றுவித்து, அவன் படுத்துக் களைப்பகல உறங்குவதற்கு வேண்டிய சௌகரியங்களுஞ் செய்தனள். துயின்றெழுந்தபின், சக்திகுமாரன் மிகுந்த சந்தோஷமடைந்தவளைத், தான் ஊரூராய்த்தேடிவந்த விஷயத்தினைச் செவிலிக்கு உரைத்து, அவள் அநுமதியையும் பெற்று அப்பெண்ணை மணஞ்செய்துகொண்டனன். பிறகு அவன் தன் மனைவியோடு செவிலியையுமுடன்கொண்டு, தனது சொந்த நகரமாகிய காஞ்சீபுரத்தையடைந்தனன். அப்பெண், பாமனழையாகக் காணப்பட்ட தன் புருஷன் அளவற்ற ஐச்வரியங்களுக்குத் தலைவன் என்பதை

ROJA MUTHIAH

கிடையிலே கலை.

தென்று உயிர் வருந்தி அவனிடம் சென்றான்' என்று கூறினாள். இதற்கு மேல் அவள் அவனிடம், அவனுடைய மனைவியைப் பற்றி தான் கண்ட விபரங்களையும் கூறி, அவளுடைய தந்தை உபாயம் கூறியதையும் கூறினாள். இதைக் கேட்ட அவன் பின்வருமாறு கூறினான்:—

"என்னுடைய மனைவி என்னிடத்தில் மிகுந்த அன்புள்ளவளாக இருக்கிறாள். அவளுடைய மனதை நான் அறிவேன். அவள் என்னை விட்டுப் பிரிய மாட்டாள். நான் அவளுடைய விருப்பத்திற்கு விரோதமாக ஒன்றும் செய்ய மாட்டேன். அவளுடைய தகப்பனார் நீ என்னை மணந்து கொள்ளவேண்டுமென்று அவளிடம் கூறியதாக அவளுடைய தாயார் சொன்னார்கள். அப்படியானாலும் நான் அவளுடைய விருப்பத்திற்கு விரோதமாக ஒன்றும் செய்ய மாட்டேன். நான் அவளுடைய தகப்பனாரிடம் சென்று அவளை மணந்து கொள்ளுகிறேன். அவளுடைய தகப்பனார் என்னை ஏமாற்றி விடுவார் என்று நீ கூறுகிறாய். அவர் என்னை ஏமாற்றினாலும் சரி, நான் அவளை மணந்து கொள்ளுகிறேன். அவளுடைய தகப்பனார் என்னை ஏமாற்றுவதற்கு முன்னால் நான் அவரை ஏமாற்றி விடுவேன்." இவ்வாறு அவன் கூறியதைக் கேட்டு அவள் மனம் மகிழ்ச்சியடைந்தது. அவன் உனது மனைவிக்குத் தகாதவன்; அதனால் உன்போன்ற அவனுக்கு தகுந்த மனைவியாக இருக்கிறாள். உன்போன்ற விசுவாசமுள்ளவர்களை அவ்வாறு செய்ய மனம் இடங்கொடாது,' என்று சொல்லியதாக அவன் உபாயகாரனிடம் சென்று, என்னைக்கண்டு கனகவதியாகக் கருதினான்; யாதும் உடனே கிழித்துவிட்டு பங்கினை யளிக்குமாறு உன்னாயினாக வேண்டிக்கொள்ளுகிறேன். மிகுதியும் சுபாக்கியஞ்செய்து வாங்கித்தருவதாகச் சொல்லியிருக்கிறேன். அவன் என்னைக் கனகவதியாகாதிருந்து எனது அழகில் மயங்கினான். தற்பொழுது மிகவுமுடைய சுபோதகத்தின் தனது பெண்ணை இரண்டாவது பத்னியாகக் கொடுக்க உடன்படான் என்கிற விஷயம் என்னைவிட உனக்கு அதிகமாகத் தெரியும். அதனால் என்னைப்பிடிக்கும் உபாயத்தினைத் தெரிவிக்க உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன். நீ அதற்கிணங்கி என்மனத்தை உடன்படித்து பணம்போலப் பாவனைசெய்து, இருவரும் எவரும் அறியாமல் பாதேசத்திற்கு ஓடிப்போய் வாழலாமென்றும் அதற்கு என்

சம்மதத்தைப் பெற்றுவிட்டதாகவும் அவனுக்குத் தெரிவிக்க வேண்டும். இங்ஙனம் உனது முயற்சியால், கனகவதியென்னும் பெயரோடு யான் என் கணவனுடன் மறுதேயம் புகுந்து வாழ்வேன். இதுவே எனக்குத்தெரிந்த உபாயம்," என்று கூறி முடித்தனள்.

யாவும் மேற் கூறியவாறே நிகழ்ந்தன. பலபத்திரன் தனது மனைவியோடு ஒருவரு மறியாமல் மறு தேயத்திற்குப் போயினன். அவன் உற்றூர் பெற்றூர் நண்பர் முதலியோர்க்கு அச் சந்நியாசினி, மனைவியை வருத்தியதற்குப் பச்சாத்தாப முற்ற பலபத்திரன் அவளையு முடன்கொண்டு வேற்று நாட்டிற்குப் போய்விட்டதாகக் கூறிவிட்டனள். எங்ஙனமாயினும் அவர்கள் மனமொத்து வாழ்ந்தாற் போதுமென்று அவர்களும் வாளாவிருந்தனர். போகும்வழியில் இரத்னவதி தனக்குக் குற்றேவல் புரிய ஒரு தாதியை அமர்த்திக் கொண்டனள். பின்னர்ப் பலபத்திரன் மனைவியோடு ஒரு சிறு நகரத்தை யடைந்து சந்தோஷமாய் இல்லறம் நடாத்திவந்தனன். சாமர்த்தியமும் முயற்சியு முடையவனுதலால் அவன் கூடிய சீக்கிரத்தில் நல்ல வியாபாரஞ் செய்து லாபமடைந்து பெருந் தனிகனுயினன்; அவ்வூரில் அவனுக்கு மிஞ்சின செல்வமும் புகழுமுடையார் ஒருவருமில்லை. அவன் தனது நிலைமைக்கேற்க அநேக வேலைக்காரர்களைத் தன்கீ ழமைத்திருந்தனன். ஒருநாள், பழைய வேலைக்காரியை வைது அடித்தனன்; அவள் அவன்மீது கோபங் கொண்டு அவனைப்பற்றி அவதூறுக ஊரெங்கும் பேசினள். இவ்விஷயம் அவ்வூர்த் தலைவனன நியாயாதிபதி காதிற்கு எட்டவே, அவன் ஊரில் உள்ளாரைச் சபைகூட்டி, ஊருக்குப் புதியனுய் வந்த பலபத்திரன், குபேரதத்தன் மகளைத் துராகிருதமாக உடன்போக்கிற் கொண்டுவந்து விட்டனனென்றும் அத்தகையோன் சாதுக்கள் கூட்டுறவிற்குத் தகாதவனென்றும் தெரிவித்தனன். பலபத்திரன் இவ்விஷயத்தைக் கேள்வியுற்றதும், ஊரில் தனக்கு நாணயம் குறைந்துபோகுமே என்ற அச்சம் அவனுக்கு உண்டாகியது. ஆனல் இரத்தினவதி அவனை நோக்கி, "அன்பனே! நீ யொன்றற்கும் அஞ்சவேண்டாம். நீ சபையாரிடத்திற் சென்று, 'யான் அழைத்து வந்திருக்கும் மாது குபேரதத்தன் மகளாகிய கனகவதியல்லள்; ஆனல் இவள் வல்லபி

நகர மாளிகையிற் கிருகுப்தன் மகளாகிய இரத்தினவதியென் பவள்; இவளை இவள் பெற்றோரே மணஞ்செய்து கொடுத்துள் ளார். இதனுண்மையை அறியவேண்டுமாயின் நீயிர் வல்லபி நகரத்திற்குத் தூதரை யனுப்பி அவர்களைத் தருவித்து விசாரித் தறிந்துகொள்ளலாம்' என்று கூறிவிடு. அதன் பின் யாது மென்றாலும் ஒரே யச்சாயிருப்போமாதலால், எங்ங னம் நிகழுமென்பதை யறிவோம்," என்றனள். பலபத்திரனும் அவள் மொழிக்கிணங்கி அங்ஙனமே சபையாருக் கறிவித்தனன். அவர்களும் தக்க தூதர்களை வல்லபி நகரத்திற்கு அனுப்பி விசாரித்துவரச் சொல்லினர். கிருகுப்தன், தனது மகளும் மருமகனும் வசிக்கும் இடத்தை அவர்களால் அறிந்து சந்தோஷ மடைந்தவனாய் மனைவியோடு மகளிருக்குமிடத்தை யடைந்து இரத்தினவதியைக் கண்டு கழிபெருங் கடலுளாழ்ந்தனன். இவற்றையெல்லாங் கண்ட பலபத்திரன், தான் இதுகாறும் கனகவதியென்று கருதியிருந்த மாது தன்னை மணந்துகொண்ட இரத்தினவதியே யென்பதை யறிந்துகொண்டனன்; தன் மனை வியை தன்னை யேமாற்றியது புலப்பட்டது. ஆயினுமென், இப்பொழுது இரத்தினவதி தனக்கு உயிர் போன்றவளாயின மையால், அவள் தன்னை ஏமாற்றியதற்காகச் சிறிதும் அவன் கோபங்கொள்ளவில்லை. இருவரும் நெடுங்காலம் அன்புடன் வாழ்ந்துவந்தனர். ஆதலான் அன்பெனப்படுவது விருப்பமே. இனி, இன்னொருகதை கூறுகின்றேன்.

நிதம்பவதி கதை.

சூரசேனதேசத்தில் மதுராபுரியில் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த வைசிய னொருவனிருந்தான். அவன் சிற்றின்பப் பிரிய னாய் விடாக்கினாடும் கூடாடிகளோடும் கூடித் திரிந்தனன். அவன் அஞ்சா நெஞ்சும் நுண்ணிய புத்தியுமுடையனாயிருந்த மையால், பல சண்டை சச்சரவுகளிலும் சம்பந்தப்பட்டனன்; அதனால் அவனை யாவருங் கலகக் கண்டனென்ற யழைப்பார் கள். அவன் ஒருநாள் ஒரு சிற்பியின் கடையில் அழகிய ஸ்திரியின் படமொன்றைக் கண்டு, அதனழகில் மயங்கினன். அப்படக்காரனுக்கு வேண்டிய பொருளளித்து அப்படத்தி லெழுதியுள்ள மாது இன்னாளென்று தனக்கு அறிவிக்க வேண்

டினன். அச்சிற்பி, இம்மாது உஜ்ஜயினி நகர வியாபாரியாகிய அருந்தகீர்த்தியின் மனைவியாகிய நிதம்பவதி யென்பாள், என்று கூறினன். இதனைக் கேட்டதும் கலகண்டகன், தான் ஒரு பிச்சைக்காரனைப்போல வேடம்பூண்டு உஜ்ஜயினிக்குப் போய் அருந்தகீர்த்தியின் மாளிகைக்குச் சென்று பிச்சைகேட்டனன். பிச்சை போடவந்த நிதம்பவதியினைக் கண்டதும் அவளை தான் படத்திற் கண்டவள் என்பதை அறிந்தது மன்றி அவளை எவ்விதத்தாயினும் தன் வசப்படுத்தவேண்டுமென்று தீர்மானித்தனன். பிறகு இவன் நகரமாந்தரையண்டி வேண்டிக்கொண்டு அவர்கள் அநுமதியோடு மயானங்காக்குந் தொழிலிலமர்ந்தனன். இவன் தனது எண்ணம் நிறைவேறுதற்கு உதவியாக ஒரு பௌத்த பிக்ஷுணியாகிய சிரமணிகையைத் துணைக் கொண்டனன். நிதம்பவதியிடம் பிக்ஷுணியை அனுப்பி அவளை யழைத்துவருமாறு முயற்சித்தனன். தூதியின் எண்ணத்தை அறிந்த நிதம்பவதி வெகுண்டு அவளை வைது இனித் தன்னிடம் அவளை வரவேண்டாமென்று கூறி விலக்கினள். ஆனால் அச்சிரமணிகை சிறிதும் பின்வாங்காமல் அவளை நோக்கி, 'மாதே! உன் மனநிலையைப் பரிசோதிக்குமாறே அங்ஙனம் பேசினேன். உயர் குலத்தைச்சார்ந்த கற்புடை மகளை என்னைப் போன்ற துறவிகள் கெடுக்க முயலுவரோ? உனது உறுதிக்கு மெச்சினேன். வயது முதிர்ந்த விருத்தாப்பியனை உன் கணவனிடத்தில் அழகும் இளமையுமுள்ள நீ எங்ஙனம் வாழ்கின்றனை, என்பதை அறிய உன்னியே உன்னைப் பரீக்ஷித்தேன். உன் கற்பினுக்கு மிக வியந்தேன். ஆதலால், உனக்கு ஓர் நன்மை செய்யக் கருதுகின்றேன். விவாகமாகி இத்துணைக் காலமாயினும் நீ புத்திரப்பேற்றினை யடைந்தாயில்லை; அதற்குக் காரணம் உன் கணவனுடைய ஜாதகமே. ஆனால் கிரகபலனை மாற்றுதற்கு வழியும் உண்டு. நான் கூறியாங்குச் செய்ய உடன்படுவாயானால் உனக்கு அதனைக் கூறுவேன். கிரகரீதிகளை நன்கறிந்தவனும் மகா மந்திரங்களில் தேர்ச்சிபெற்றவனுமான ஒரு சமண பிக்ஷுணி யொருவனிருக்கின்றான். அவன் தொன்று கிழவனாதலால் அவன்பாற் சிறிதும் ஐயுறவேண்டுவதில்லை. இரவு கள்ளிருளில் நீ புனர மாளிகையைச் சேர்ந்தோலக்கு வருவாயானால், யான் அப் பிக்ஷுவை அங்கனழைத்து

வருகிறேன். நீ உனது இடதுகாலினை அவன் கைகளில் வைக்கவேண்டும். அவன் மந்திரம் ஓதி உனது பாதத்திற்கு மிகுந்த சக்தியைத்தருவன். பிறகு நீ உன் சயனக்ருகத்தை யடைந்து உனது நாயகனது மார்பில்ஊடியவள்போல மெல்லென உதைத்தவளவில் அவனைப்பற்றிய பீடையொழியும். உனக்குப் புத்திரசந்தான முண்டாகும்' என்றனள். நிதம்பவதி முதலிற் சிறிதுபோழ்து தயங்கினளாயினும் தனக்குக் கிடைக்கும் பேற் றினைக்கருதி யங்ஙனமேசெய்ய மனமொப்பினள். சங்கேதப்படிப் பொய்ச்சந்நியாசி பொழிலிற்கு முன்னடியே வந்திருந்தனன். நடுநிசியில் நிதம்பவதி அங்குச்சென்று தனது இடக்காலினை அவன்கையில் வைத்தனள். அவன் மந்திரஞ்செவிப்பவன் போல அவள் இடக்காலிலிருந்த சிலம்பைக் கழற்றிக்கொண்டு, தன்கையிருந்த கத்தியால் அவள் தொடையில் நன்றுகக் கீறி விட்டனன். உடனே நிதம்பவதி அச்சத்தாலும் வலியாலும் நிலை குலைந்து, இஃது யாதோ ஒரு சூழ்ச்சியென்று அறிந்து விரைந்து தன் மனையிற்புக்குத் தாஞகவே புண்ணிற்கு மருந் திட்டு, உடம்பு அசௌகரியம் என்னும் வியாஜத்திறற் பாயும் படுக்கையுமாக இருந்தனள். இவ்விதமாகத் தன்னை ஏமாற்றிய சிரமணிகையைக் காணப்பெற்றால் அவளைக் கொலைவாங்கும்படி யான அவ்வளவு கோபத்தோடுமிருந்தாள். மறுநாள் வஞ்சக னன கலககண்டகன் தான் கழற்றிக்கொண்ட சிலம்பினை எடுத்துக்கொண்டு அநந்தகீர்த்தியிடம் வந்து அதனைக்காட்டி விற்பனைக்கு விலைபேசினன். வியாபாரி பார்த்தவுடன் அது தன் மனைவியின் காற்சிலம்பென்பதை நன்றுக அறிந்து கொண் டனன். அவன் அப்பிச்சைக்காரனை நோக்கிச் சிலம்பு அவனுக் குக்கிடைத்த விவரத்தைச் சொல்லச்சொல்லினன். ஆனற் கலக கண்டகன், சிலம்பு சமாசாரத்தை நகரமாந்தர் சபையிலேயன்றித் தனிப்படக் கூறமுடியாது என்று மறுத்துவிட்டனன். அநந்த கீர்த்தி இவனைப்பற்றிச் சபையின்முன் இழுத்துச் சென்று விடயத்தைத் தெரிவித்தனன். சபையார் வியாபாரியின் மனை வியை அவளது காற்சிலம்புகளை யனுப்புமாறு கேட்டனர். அவள் தன் ஒரு காற்சிலம்பு பெரிதாயிருந்தமையாற்கழன்று விழுந்துவிட்டதென்று கூறி மற்றொரு சிலம்பினை மாத்திரம் கொடுத்தனுப்பினள். சபையார், இரண்டு சிலம்புகளையும் ஒப்பு

ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P. O.

நோக்கி ஓரேமாதிரியாக இருத்தலைக்கண்டு, பிச்சைக்காரன் கொணர்ந்த சிலம்பு வியாபாரி மனைவி காற்சிலம்பே யென்று தீர்மானித்துக் கலகக்கண்டகனை அது கிடைத்த விவரத்தைக்கூற ஆஜ்ஞாபித்தனர். அவன் பின்வருமாறு கூறினன்.

"ஐயன்மீர்! யான் தங்கள் அநுமதியின்மேல் இவ்வூர் மயானத்தைக் காத்துவரும் வேலையிலிருக்கிறேன். சிலர் திருட்டுத்தனமாக நள்ளிருளில் மயானத்திற்கு வந்து சவத்தைக் கொளுத்திவிட்டு எனக்குக் கொடுக்கவேண்டிய காசைக் கொடாமலேமாற்றிவிட்டுப் போவதைக்கண்டு யான் இரவு முழுவதும் தூங்காமற் காவல்புரியத் தலைப்பட்டேன். நேற்றிரவு ஒரு கரிய உருவத்தினையுடைய ஸ்திரீ மயானத்திற்கு வந்து காஷ்டத்தின்மேல் எரிந்துகொண்டிருக்கும் பிரேதத்தினை யிழுத்து முன்வைத்துக்கொண்டு தின்னத் தொடங்கினள். யான் அத்தீச்செயலினை யவள் செய்யவொட்டாமற் றடுக்கும்பொருட்டு, உடனே பாய்ந்து என் கையிலுள்ள கத்தியாற் குத்தினேன்; அஃது அவள் தொடையிற் பட்டுப் புண்படுத்தியது. அவள் உடனே அவ்விடம் விட்டு ஓடிப்போயினள்; ஓடும் வேகத்தில் அவள் காலிலணிந்துள்ள சிலம்பொன்று கீழே விழுந்துவிட்டது. அச்சிலம்பேயிது." என்றனன். சபையார் சில ஸ்திரீகளைக்கொண்டு நிதம்பவதியின் காயத்தைப் பார்த்துவரச்செய்து அஃது கத்திவெட்டுக் காயமாக இருந்ததால், யாவரும் கலகக்கண்டகன் கூறியது உண்மையென்றும், வியாபாரியின் மனைவி சவந்தின் மகளாகிய சாகினியென்றும் தீர்மானித்தனர். ஊரிலுள்ளார் அனைவரும் நிதம்பவதியினைக் கண்டனஞ்சியோடத் தொடங்கினர்; கணவனும் அவளை வீட்டைவிட்டு வெளியே வெருட்டிவிட்டனன். நிதம்பவதிக்கு உண்டான கஷ்டத்திற்கு அளவில்லை. அவள் இங்ஙனந் துன்புறுவதினும் இறத்தலே நலமென்று கருதி மயானபூமியை யடைந்து உயிரினை மாய்த்துக்கொள்ள முயற்சித்தனள். அப்பொழுது கலகக்கண்டகன் அங்கு வந்து அவளைத் தடுத்து, ஆதியோடந்தமாகத் தான் செய்த தந்திரங்கள் யாவற்றையும் அவளுக்குக் கூறி இந்நிணையும் அவளைப் பெறுவதற்காகச் செய்தவை என்பதையும் கூறினதுமன்றி அவரையிலை விட்டால் தானும் உயிரை விடுவதாகக் காலில்விழுந்து

முறையிட்டனன். வேறுவழியற்ற நிதம்பவதி இது விதிவல்ல பமே யென்று அவன் வேண்டுகோட்கிணங்கினள். பிறகு அவனும் அவளையே மணவியாகக்கொண்டு நல்வழியினின்றனன். இதனினை செய்தற்கரிய செயல்களை யெல்லாம் மதிவல்லபத்தாற் செய்துமுடிக்கலாம்.

இங்ஙனம் எனது கதைகளைச் சொல்லி முடித்தவுடன், அப்பிரமராக்ஷசன் மிக்க சந்தோஷமடைந்தவனாய், என்பால் அன்பு பாராட்டினன். அவ்வமயத்தில் ஆகாயத்திலிருந்து முத்துக்களும் நீர்த்துளிகளும் எங்கள்மேல் வீழ்ந்தன. யான் மேலே பார்த்தபொழுது இராக்ஷசனொருவன் ஒரு பெண்ணைப் பலாத்காரமாய்த் தூக்கிக்கொண்டு போவதைக் கண்ணுற்றேன். அவன் கையிலிருந்து விடுவித்துக்கொள்ள முயலும் அப்பெண்ணின் கண்ணீர்த்துளிகளும் அறுந்துபோன மாலையின் முத்துக்களுமே முன்னங் கீழ் வீழ்ந்தன. யான் அப்பெண்ணை விட்டுப்போகுமாறு அவ்விராக்ஷதனை அதட்டி வைதேன்; ஆயினும் ஆகாயத்திற் பறந்துபோகும் அவன் என் சொற்களைச்சிறிதும் பொருட்படுத்தவில்லை. கீழிருக்கும் யானும் இன்னது செய்வதென்றறியாது விழித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது எனது நண்பனை பிரமராக்ஷதன் மேலே பறந்துசென்று அவ்விராக்ஷதனைத் தடுத்துப்போர்புரிந்தனன். அவன் அப்பெண்ணினைக் கீழே எறிந்துவிட்டு இவனோடு போர்புரியத் தொடங்கினன். கீழேவிழும் மாதினை என் கைகளிலேந்திக் கொண்டேன்; ஆயினும் அவ்வதிர்ச்சியால் மூர்ச்சித்துப்போயினள். இரண்டு ராக்ஷதர்களும் மரங்களையும் மலைகளையும் பிடுங்கிச் சண்டையிட்டனர்; கற்களும் மரத்துண்டுகளும் அப்பெண்ணின்மேல் விழுமென்று கருதி அவளையெடுத்துக்கொண்டு தடாகத்தினண்டையிற் போனேன். இத்துணை நேரம் இராக்கதர்களின் சண்டையினைக் கவனித்து நின்றமையால், கையிலிருந்த பெண்ணின் முகத்தைப்பார்க்கவில்லை. பின்னர் நீர் நிலையினருகிற்சென்று அவளைப்பார்க்கும் பொழுது, என்ன ஆச்சரியம், என்னருமை உயிர்க்காதலியாகிய கந்துகவதி யென்பதை யறிந்து பேருவகைகொண்டேன். குளிர்ந்த நீரை அவள் முகத்திற்றெளித்து நினைவு தவறியிருந்த அவளைத் தெளிவித்தேன். அவள் பிரஜ்ஞையடைந்து கண்களை விழித்து என்னைக் கண்டதும் இன்னனென்றறிந்து அன்பு

பாராட்டினள். அவளுக்கு நேர்ந்தவற்றைக் கூறுமாறு நான் கேட்க, அவள் அடியிற்கண்ட விவரத்தை யறிவித்தனள்.

"என்னுடைய கொடிய சகோதரன் சூழ்ச்சியால் நீர் கடலில் மூழ்கிப்போன சமாசாரத்தை யான் கேள்வியுற்றதும், யான் உயிர்நிப்பத்துணிந்தேன். ஒருவருங்காணாது தோழியரின்றித் தனியே பொழிலினை யடைந்து ஆங்குத் தற்கொலை புரிந்துகொள்ள யத்தனிக்குஞ் சமயத்தில், இவ்விராக்ஷதன் வந்து எனதழகினைப் புகழ்ந்து தன்னை மணக்கவேண்டினன். யான் மறுத்தமையால் என்னைத் தூக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ச் சீதையைத்தூக்கிச்சென்ற விராதனைப்போற் பறந்துபோயினன். பின்னர் அவனை வேறோர் இராக்கதன் எதிர்த்தமையால் எதிர்த்தபொழுது அவனோடு சண்டைசெய்யக் கருதி என்னை யெறிந்துவிட்டனன்" எனக் கூறிமுடித்தனள்.

இவள் விருத்தாந்தத்தினைக் கேட்டபின் அவளை யழைத்துக்கொண்டு கப்பலேறிப் புறப்பட்டுத் தாமலிப்த நகரத்தை யடைந்தேன். மகனையும் மகளையும் இழந்த மாபெருந் துயரான் மனமுடைந்த துங்கதன்வாவும் அவன் மனைவியும் யாவற்றையும் வெறுத்துத் தேசத்தைத் துறந்து கங்கைக்கரையினை யடைந்து தவஞ்செய்யப் போயினர் எனக் கேள்வியுற்றனன். அரசனின்றித் தேசம் நிலைகுலைந்திருந்தது. நகரத்தார் அனைவரும், ராஜகுமாரனும் ராஜகுமாரியும் மீண்டுவந்தமைக்குப் பெரிதும் மகிழ்ந்தனர். நான் இருவரையும் அழைத்துக்கொண்டு துங்கதுங்வாவினிருப்பிடத்தை யடைந்து அவன் மக்களிருவரையும் அவன்பாற்சேர்த்தேன். நடந்தவையனைத்தையும் உணர்ந்து, அரசன் களிகூர்ந்து கந்துகவதியினை எனக்கு மணம்புரிவித்து இராஜ்ஜியாதிகாரத்தையும் என்வசமொப்புவித்தனன். பீமதங்வா என்மேல் விரோதமின்றி அன்புபாராட்டி யடங்கியிருந்தனன். சந்திரசேனைக்கும் கோசதாசனுக்கும் விவாகம் நடந்தேறியது. இங்ஙனம் யாங்கள் அனைவரும் தாமலிப்த நகரத்தில் ஆனந்தவாரியிலமிழ்ந்திருக்கும் பொழுது அரசனுடைய பழைய நண்பனாகிய சிம்மவர்மனிடமிருந்து உதவிக்கு உடனே வரவேண்டுமென்று எழுதிய கடிதம் கிடைத்தது. யாவரும் நால்வகைப் படையுடன் இங்குவந்தோம்; துங்கனைக்கண்டு யான் பெருமகிழ்

வடைந்தேன்.” என்று மித்திரகுப்தன் தனது சரித்திரத்தைக் கூறிமுடித்தனன்.

இதனைக்கேட்ட இராஜவாஹனன் நண்பனுக்கு நேர்ந்த அற்புத சம்பவங்களுக்கு வியந்து பாராட்டி, மந்திரகுப்தனை நோக்கி அவன் சரித்திரத்தைக் கூறவேண்டினன். அவனும் அடியிற் கண்டவாறு கூறத்தொடங்கினன்.

அதிகாரம் 13.

மந்திரகுப்தன் கதை

நான் தங்களைத் தேடிப்போகும்பொழுது கலிங்கதேசத்தை யடைந்தேன். அந்நாட்டின் தலைநகரை யடைந்து அதனருகி லுள்ள மயானத்திலிருக்கும் நீர்நிலை யொன்றன் கரையில் வழி நடந்த களைப்பகலப் படுத்துறங்கினேன். தன்னைமறந்து நெடு நேரந் தூங்கியெழுந்து பார்க்கையில் நடுநிசியாயிருந்தது; மை தீற்றியதுபோல யாண்டும் ஒரே யிருள் பரந்து நின்றது; அருகி லுள்ள பொருள்களையுங் காணமுடியாத அந்நிறைந்த இருளில் மழை பெய்வதுபோலப் பனி பெய்தது; எலும்பையும் ஊடுரு விச் சென்று பற்றும்படியாக வீசிய குளிர்ந்தவாடைக் காற்றி னிடையே மரங்களினிலைகள் அசைதலாலுண்டான ஓசை, இரவே பெருமூச்சு விடுவதுபோன்றிருந்தது. பூதபேதாள பைசாசங்களன்றி உலகிலுள்ள யாவுங் கண்ணுறங்கின. யான் கண்ணைவிழித்துப் பார்க்கையில், வேதாளமொன்று மற்றொன் றினை நோக்கி, “எலும்புந் தோலுமாக இளைத்துப்போன மந்திர வாதி எதற்காகக் கூப்பிடுகிறான்? அவன் யாது தீயசெய்கை புரியக்கருதியிருக்கின்றனன்? அம் மகாபாவியைத் தொலைக்கத் தக்க வல்லமையுடையான் உலகில் ஒருவனுமில்லையோ?” என்று இரங்கிக் கூறியது. இச்சொற்களைக் கேட்டதும், அவ்விஷயம் யாதென அறிந்துகொள்ளப் பெரிதும் அவாக் கொண்டேன்; உடனே யான் எழுந்து வேதாளத்தைப் பின் றொடர்ந்து சென் றேன். சிறிது தூரத்தில் ஒரு மனிதன், அளவற்ற எலும்பு மாலைகளைப் புனைந்து உடலெங்கும் சாம்பரைப் பூசிக்கொண்டு மின்னல்போல விளங்கும் சடைக்கற்றையுடன், கொழுந்துவிட் டெரியும் நெருப்புக் குண்டத்தின்முன் னுட்கார்ந்து எள் கடுகு முதலியவற்றை ஏராளமாகச் சொரிந்து ஓமம் புரிவதைக் கண்

னுற்றேன். யான் பின்றொடர்ந்து சென்ற வேதாளம், அவை னெதிரிற் கைகூப்பிநின்று, வணக்க ஒடுக்கத்துடன், "ஸ்வாமி! யான் செய்யவேண்டிய வேலையினைப் பணித்தருள்க," என்று கேட்டது. அவன் அதைப்பார்த்து, 'நீ கடிதிற்சென்று, கலிங்க தேசாதிபதியுகிய கர்த்தனுடைய புதல்வி கனகலேகையைக் கணப்பொழுதிற் கொணர்வாயாக' என்றனன். உடனே வேதாளம் மறைந்தது; மறு நிமிஷத்தில் ராஜகுமாரத்தியைத் தூக்கிக் கொண்டுவந்து அம் மந்திரவாதியின் முன் விட்டது. அரசன் புதல்வி அச்சத்தால் மெய்ம் மறந்திருந்தனள்; அவள் ஹீநஸ்வரத்துடன் தன் பெற்றோரையும் தோழியரையுங் கூவி யழைத்துப் புலம்பினள். அக்கொடிய மந்திரவாதி தனது ஒருகையால் அவளது அழகிய கூந்தலைப்பற்றி யிழுத்து மற்றொரு கையால் மந்திரவாளை யெடுத்து அவள் தலையினைத் துணிக்க வோங்கினன். அவன் செயலைக் கண்ட வேதாளமும் நடுங்கியது. இச்செயல் கண்ணுற் பார்க்கத்தக்கதன்று. அவன் வீசி மேலே தூக்கிய வாள் அப்பெண்ணின் கழுத்தில் விழுவதற்குமுன் யான் ஓரே பாய்ச்சலாக அவன்மேற் பாய்ந்து கையினைப் பற்றிக் கத்தியினைப் பிடுங்கி அப்பாவியின் சடைத்தலையினை வெட்டியெறிந்தேன். அத்தலையினையும் அவனுடையினையும் யொரு பெரிய வன்னிமரப் பொந்திலெறிந்துவிட்டு அவனுடலை நெருப்புக் குண்டத்திற் போட்டுவிட்டேன். நெருப்பும் அவன் மேற் கோபங்கொண்டதுபோல அவ்வுடலை நொடியிற் சாம்பராக்கியது. இதனைக்கண்டு நின்ற வேதாளமுங் களித்து ஆநந்தக் கூத்தாடியது. அது என்முன்வந்து வணங்கி, எனது வீரத்தினை யளவின்றிப் புகழ்ந்து, தானுந் தூங்காமல் தன்னுடைய அடிமைகளாகிய வேதாளங்களையுந் தூங்கவிடாமல் ஓயாத்தொழியற்றச்செய்த மாபாவியான மந்திரவாதியைக் கொன்றுவிட்டதற்காக என்னை வாழ்த்திப்போற்றியது. மேலும் அது என்னை நோக்கி, "வீரனே! என்னுனக்கு ஆகவேண்டும் பணி ஏதேனுமிருந்தால் உடனே கட்டளையிடுவாயாக. யான் சிறிதும் தாமதமின்றிக் களிப்புடன்செய்து முடிப்பேன்" என்றது. யான் உடனே அதனை நோக்கி, 'வேதாளமே! நீ தூக்கிவந்த இராஜகுமாரியை, அவளுடைய அரண்மனையுள்ளப்புரத் கன்னி மாடத்தில் எந்த இடத்திலிருந்து கொணர்ந்தனையோ அந்த

இடத்திலேயே கொண்டுபோய் உடனே சேர்த்துவிடுவாயாக' என்று ஆஜ்ஞாபித்தேன். அப்பேதாளம் அங்ஙனஞ் செய்யப் புகுமுன், இவற்றையெல்லாங் கண்டு நின்ற இராஜகுமாரி, நாணத் தாற்றன் றலை குனிந்து புறவடியை நோக்கிய வண்ணம், அழகிய கண்களினின்றும் நீரைச் சொரிந்துகொண்டு, தன் மலர்வாய் திறந்து பின்வருமாறு உரைத்தனள். "அன்பும் அருளும் நிறைந்த வீர சிகாமணியே! எனக்கு நேர்ந்த இவ்வாபத்து சாதாரணமானதன்று. இக்கொடிய பாவியின் கையினின்றும் என்னைக் காக்கவந்த தெய்வமென்றே உன்னை யான் கருதுகின் றேன். மேலும் உற்றூர்க்குரியர் பொற்றொடிமகளிர், என்றே முன்னோர் நூல்கள் கூறும். யான் இனி உனக்குக் குற்றேவல் புரி யத்தக்கவளல்லளோ? உனது பொற்பாத பதுமங்களிலொட்டிய பராகமென்றே என்னைக் கருதுவாய். உத்தமகுலத்திற் பிறந்து உயர்குணத்தையே அணிகலனைக்கொண்ட மாதர்கள், உயிரினைக் காத்தவரையே தலைவராகக் கொள்ளுவர்; அதுவே கற்பிலக்க ணம். யானுமத்தகையளே, ஆதலால் உன்னை விட்டொருகண மும் தனித்துவதியேன். நீ யாவனேயெனினும் உன்னையே எனதுயிர்த்துணையாக வரித்துவிட்டேன். ஆதலால் என்றேடு அரண்மனைக்குவர மனம் ஒருப்படுதல்வேண்டும்.' என்று இசை போன்ற இனியசொற்களால் தன்னுள்ளக்கிடக்கையினை யுரைத் தனள். இதனைக்கேட்டலும், அவள் அழகின் வயத்தனை யான், அவளது உத்தம குணத்திற்கும் வியந்து அவள் வேண்டு கோட்கியைந்தேன். உடனே வேதாளத்தை நோக்கி, எங்க ளிருவரையும் கன்னிமாடத்திற் கொண்டுசேர்க்க உத்தரவிட் டேன். அவ்வேதாளமும் மிக மனங்களித்து எங்களை யொரு நொடிப்பொழுதிலங்குக் கொண்டுபோய்ச் சேர்த்தது. யான் பிறரறியாமல் அக்கன்னிமாடத்திலேயே நிகரற்ற இன்பமநுப விக்துக்கொண்டு சில நாட்களைக்கழித்தேன். அப்பொழுது வசந்தகாலம் வந்தது. சந்தனமணத்தோடு கூடிய மலையாநிலம் மெல்லெனத் தவழ்ந்தது. இதுகாறும் வாய்மூடி மௌனியா யிருந்த குயில்களின் இன்னிசை யாண்டும் பரந்துநின்றது. கலிங்கதேசாதிபன் வசந்தத் திருவிழாவினைக் கொண்டாடக் கருதி தனது நாட்டின் கடற்கரைக் கானலில் கூடகாரங்கள் அமைத்து, அங்குத் தன் அந்தப்புரமகளிரோடும் பரிவாரங்க

ளோடும் சென்று இன்பமாகப் பொழுதுபோக்கினன். அப் பொழுது ஆந்திரமன்னனாகிய ஜயசிம்மன், கடற்கரையோரங் களிற் கொள்ளையடித்து வருபவன், தனது போர்ப்படைகு ளுடன் அங்குத் திடீரென வந்து கலிங்கமன்னனையும் அவன் மகளிரையும் பரிவாரங்களோடு சிறைப்படுத்திப் பிடித்துப் போயினன்.

இராஜபுத்திரியின் சிறையினைக்கேள்வியுற்றயான் மனம்டங் காத்துயரங்கொண்டு அவளைச் சிறைமீட்கும் வகையாதென ஆராய்ந்திருந்தேன். கடைசியில், ஆந்திரநாட்டிலிருந்து வந்த அந்தணனொருவனால், ஜயசிம்மன், முதலிற் கலிங்காதிபனை கர்த்தனைக் கொல்ல நினைத்தனையினும் அவன் மகள் கனக லேகையின் அழகால் மயங்கி அவனைக் கொல்லாதுவிட்டிருக் கின்றனனென்றும், கனகலேகையினைப் பிரமராக்ஷசனொருவன் பற்றியிருப்பதால் அரசன் முதலிய எவரும் அணுகக்கூடவில்லை யென்றும் அதனால் விவாகம் நடைபெறத் தடையுண்டிருப்ப தென்றும், மணிமந்திர ஔஷதாதிகளாற் பலவகை முயன்றும் அப்பிரம ராக்ஷசன் அரசகுமாரியைவிட்டு நீங்கவில்லையென்றும் தெரிந்துகொண்டேன். உடனே ஆந்திர நாட்டிற்குப்போகத் தீர்மானித்தேன். புறப்படுமுன் மயான பூமிக்குச்சென்று அங் குள்ள வன்னிமரப் பொந்திற்கிடந்த மந்திரவாதியின் சடையினை யும் உடையினையும் எடுத்து அணிந்துகொண்டு மந்திரவாதியாக வேடம்போட்டுக்கொண்டேன். உருமாறியபின் சோம்பேறி களான சிலரைச் சீடராக அமைத்துக்கொண்டு, செல்லும் வழி யிலுள்ள சிறார்களில் எனது தந்திர யுக்திகளாற் கிடைக்கும் பொருள்களை யச்சீடர்கள் மனமுவக்க அளித்து அவர்களையுடன் அழைத்துப்போயினேன். யான் ஆந்திர நாட்டின் தலைநகரை யடைந்து நகர்ப்புறத்திலுள்ள அழகிய விசாலமான பொய்கை யொன்றைக் கண்ணுற்றேன். அப்பொய்கை தாமரையாதிய மலர் கள் நிரம்பி அன்னம் போதா முதலிய பறவைகளுக்கிடமளிக் கண்டோர் மனத்தைப் பிணிக்குங் காட்சியதாயிருந்தது. அதன் கரைகளில் நறுமணங்கமழும் நவமல்லிகையாதிய கொடிகளும் பல புஷ்பபலவிருக்ஷங்களும் மநோக்கியமாய்த் திகழ்ந்தன. இதுவே தக்க இடமென்று கருதி அப்பொய்கைக்கரையில் அழ கிய பர்ணசாலையொன்றை என் சீடர்களைக்கொண்டமைப்பித்து

அவர்களோடும் அதன்கண் வசித்துவந்தேன். சின்னாளில் என் மாணாக்கர்களின் நன்முயற்சியால், யான் மணிமந்திர ஔஷதங் களிற் கைதேர்ந்த பெரிய மந்திரவாதியென்றும், திரிகால ஞானம் பெற்றவனென்றும் சர்வ சாஸ்திர சம்பன்னனென்றும் எல்லா இரகசியங்களையும் கண்டறிந்து கூறும் வன்மையுடையோ னென்றும் அவ்வூரெங்கும் பெரிய வதந்தி பரவியது. ஊர் முழு வதும் என்னைப்பற்றிய பேச்சே நிகழ்ந்தது. கடைசியில், இராஜ குமாரியைப் பிடித்துள்ள பிரமராக்ஷசனை நீக்கும் வல்லமையுள்ள மந்திரவாதி தற்செயலாயங்கு வந்துள்ள விவரம் அரசன் காதிற்கு மெட்டியது. அரசன் என்னை வந்து பார்த்துத் தினமும் வணங் கிப் பிரசாதம் பெற்றுப் போவானுயினன்; வரும்பொழுதெல் லாம் என் சீடர்களுக்கு அளவிறந்த பரிசுகள் தந்துபோயினன். இன்னணஞ் சில பகல் கழிந்தபின் ஒருநாள் அரசன் என்னை நமஸ்கரித்துத் தன் மனத்திலோர் குறையுண்டென்று விண்ணப் பித்துக்கொண்டனன். யோகசமாதியில் வீற்றிருந்த யான், எனது கண்களை விழித்துக் கம்பீரமாக மன்னனை நோக்கி, "அரசே! அதனை யான் முன்னமே யறிவேன். உலகிலுள்ள இரகசியங்கள் பலவற்றையும் எனது யோக வல்லபத்தாற் கர தலாமலகமாக வறிவேன்; யானறியாத விடயமொன்றுமில்லை. ஸ்ரீமூலர் என்னிடம் உபதேசங் கேட்ட சிறுபிள்ளை; கோரக்க னுக்கு வஜ்ஜிர தேகங் கொடுத்தது என்னுற் பிரசாதிக்கப்பெற்ற ஒரு சிறு மூலிகை. அநேகம் ஊழிகண்டுளேனெனினும் நரை திரை மூப்பின்றி ரூப யௌவனத்தோடு திகழ்வது என் யோக பலத்தாலேயன்றி வேறில்லை. நீயொரு பெண்ணின் விஷய மாகக் குறையுற்றிருக்கின்றனை. நற்குணங்களுக் கிருப்பிட மான அம்முக்தை உனக்கு எல்லா விதத்திலும் உரியவளே. நீ அவளை மணக்கக் கருதியிருப்பது உன் பெருந்தன்மைக்கு ஏற்றதே. ஆயினும் அவள்மேல் ஆவேசித்துள்ள யக்ஷதேவன் இடங்கொடுக்கான்; அந்த நீரஜலோசனியைக் கண்ணெடுத்துப் பார்த்தாலும் அவன் பெருங் கோபங்கொண்டு கிழித்துப் போடு வான். ஆயினும் மைந்தா, நீ கவலையுறுதே; அந்த ஸ்ரீதேவி போன்ற அணங்கினைப் பெறுதற்கு உபாயமுண்டு. இத்தினை நாள் பொறுத்திருந்ததுபோல இன்னும் மூன்று தினங்கள் பொறுப்பாய். அதற்குள் யாது செய்யவேண்டுமோ அதனைச்

செய்துமுடிப்பேன்." என்று கூறினேன். என்னுடைய ஞானத்திற்கும் யோகத்திற்கும் மிக வியந்த அரசன் மனமகிழ்ந்து அரண்மனைபோயினன். அவன் போனபின் ஒவ்வோரிரவும் வேலைசெய்து யான், அப்பொய்கைக் கரையினுட்புறத்தில் நீர்மட்டத்துக்குச் சரியாய் ஒரு சுரங்கமொன்றமைத்து அதன்வாயிலைச் செடிகொடிகளாலும் கற்களாலும் குப்பைகளாலும் மறைத்துவைத்தேன். இருள் யானையைக் கிழித்தெழும் இரவியாகிய கேசரியினைத் தினமும் ஆயிரத்தெட்டுக் கமல மலராற் பூசித்துச் சூரிய நமஸ்காரஞ் செய்துவந்தேன். அம்மலர்க் குவியல்களியாவும் அச்சுரங்கவாயிலை யெவருங் கண்ணுறுவண்ணம் மறைத்திருந்தன. மூன்று தினங்கள் கழிந்தபின் அந்திவேளையில் மேற்றிசையாகாயம் செஞ்சாந்து பூசியதுபோலச் செவ்வானம் ஒளிரும் மாலையம்பொழுதில், மன்னவன் என்னையடைந்து தனது இரத்தின கிரீடம் புழுதியிற் புரள என்னைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து நின்றனன். நான் அவனை நோக்கி, "புத்திரா! அதிருஷ்டமென்பது சோம்பேறிகளுக்கில்லை. முயற்சியே திருவினையுண்டாக்கும். ஆதலால் நீ தாமதமின்றி இப்பொய்கையை உனது கிங்கரர்களைக்கொண்டு பரிசோதனை செய்து சுத்தமாக்கவேண்டும். நீயும் ஆசாரமுடையவனாய் இப்பொய்கையில் இன்று நடுநிசியில் மகாசங்கற்ப மந்திரங்களைச் செபித்துப் பின்னர் ஸ்நானஞ்செய்து மூச்சடக்கிப் பிராணயமத்தோடு உன்னுலியன்றகாலம் நீரில் மிதக்கவேண்டும். பிறகு அம்சபக்ஷிகள் நீரில் மூழ்குவதுபோன்ற ஒலிகேட்கும். அந்த வொலி நின்றபின்னர் நீ மகா பராக்கிரமத்தோடு கூடிய தெய்வவுருவத்துடன் வெளிவருவாய். உன்னைக் கண்டமாத்திரத்தில் அந்த யக்ஷன் பறந்துபோவான். அம்மாதுசிரோன்மணி உன்னைக்கண்டு கர்முறுவாள். நீ பொய்கையினின்று வெளிப்படும் பொழுது ஒரு சக்கிரப்படையுடன் றேன்றுவாய். அச்சக்கிரத்தின் பிரபாவத்தாலுன் பகைவரனைவரு மழிவார். நீ நீரில் மூழ்கியிருக்கும்பொழுது உனக் கிடையூறுண்டாகாவண்ணம் உன் சேனைப்பொய்கைக் கரைமேற் சூழ நிறுத்திக் காவல் புரியச் செய்வாய். உனக்கு இவ்விடமாயில் இவ்வழியினை அடைத்திடலாம். இன்றேல் விட்டு விடலாம். நீ என்னை விரும்பிக் கேட்டமைபால், உனக்கு நன்மை புரிபவேண்டுமென்னும் கருத்

துடன் இத்துணைநாள் இவ்விடத்திற் றங்க நேர்ந்தது. என்னைப் போன்றவர்கள் ஓரிடத்திலும் நிலைபெற்றிரார். நாங்கள் லோகோபகாரமாய்ச் சிலவேளை மனிதசமூகத்திற் சேர்ந்திருப்போம்; வந்த காரியமானபின் உடனே போய்விடுவோம். இனி எனக் கிங்கு வேலையில்லை; இப்பொழுதே இமாசலத்திலுள்ள எனதாச்சிரமத்திற்குப் போகப்போகிறேன். இனி நீ என்னைக் காணவியலாது. நீ நினைத்த காரியம் கைகூடிய பின் விசேஷமான தான தருமங்களைச் செய்வாயாக." என்று கூறி யெழுந்தேன். அரசன், என் பிரிவினுக்கு மிக வருந்தினனெனினும், யான் செய்த உபகாரத்திற்குப் பெரிதுமுவந்து வணங்கிப்போற்றினன். உடனே யான் என் சீடரோடு புறப்பட்டுப் போய்விட்டேன்.

நான் எதிர்பார்த்தபடி அரசன் பொய்கையினைப் பரிசோதனை செய்து, அன்றிரவு தான் நீரில் மூழ்குவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்திருந்தனன். நன்றாக இருட்டியபின், யான் ஒருவருமறியாது மீண்டு வந்து பொய்கையிலிறங்கிச், செய்து வைத்திருந்த சுரங்கத்தில் மறைந்திருந்தேன். சுரங்கவாயில் மறைப்புண்டிருந்தமையால் என்னை எவருங் கண்டிலர். எல்லாம் யானினைத்தவண்ணம் நிகழ்ந்தன. நடுநிசியில் அரசன் படைஞர் புடைசூழவந்து பொய்கையிலிறங்கிச் சங்கற்பஞ் செய்து நீரின் மூழ்கி ஸ்நானமுடித்துப் பின் மூச்சடக்கிப் புனலின்மேன் மிதந்தனன். யான் சுரங்கத்திலிருந்து நீரில் மூழ்கி, அரசன் கழுத்தில் எனது வஸ்திரத்தாற் சுருக்கிட்டு நீரில் அமிழ்த்திக்கொன்று அவனதுடலை யொரு தொடியிற் சுரங்கத்திலிழுத்துப்போட்டு விட்டு, என்னுடைய சடைமுடி தாடி முதலியவற்றைக் களைந்து அரசனணிந்திருந்த உடையினையும் அணிகலன்களையும் தரித்துக்கொண்டு கரையேறினேன். அரசன் உருமாறியிருப்பதற்கு வியந்தனராயினும், அவன் படைஞர் முதலியோர் ஐயுஞ் சிறிது மற்றவராய் எனது தோற்றப் பொலிவினைக் கண்டு பெரிதும் மகிழ்வடைந்தனர். யான் ஆடையாபரணலங்கிருதனாய் அவர்கள் கொணர்ந்திருந்த பட்டத்துயானையின் மேல் ஆரோகணித்து அரண்மனையை யடைந்து, அங்கு எனது உத்தரவின்மேல் கூடிய அமைச்சர் சேனாபதியர் முதலிய பிரமுகர்கள் வீற்றிருந்த சபா மண்டபத்தைச்சேர்ந்து அங்

குள்ள கவரத்தின சிம்மாசனத்தில் அமர்ந்தேன். சபையிலுள் ளோர் யாவரும் அரசன் ரூபம் மாறியிருத்தலை நோக்கி ஆச்சரிய மடைந்தனர். அப்பொழுது யான் அவர்களை நோக்கி, "சபை யோர்களே! மகாசித்த புருஷரிடைய அநுக்கிரகத்தால் யாம் இத்திவ்யதேகம் பெற்றோம். பகைவர் யாவரும் நமது கையி லுள்ள இச்சக்கிரப் படையாலழிந்தொழிவது திண்ணம். ஆக லால் எவரும் நமது அடிகளைப் போற்றிவாழ்வாராக. தேவ குலங்கட் கெல்லாம் சிறப்பொடு பூசனை யாற்றித் திருவிழாக் கொண்டாடுவீராக. ஏழைகளுக்குப் பலவிதமான தருமங் களைச் செய்து அன்னோர் கவலையை நீக்குவீராக," என்று கம் பீரமாக மொழிந்தேன்.

இதனைக் கேட்ட மந்திரிகள், "அரசன் நீடூழிவாழ்க; அவன் புகழ் உலகமெங்கும் பரவுக; பத்துத் திக்குக்களும் அவன் சொல்வழி நடப்பனவாகுக;" என்று வாழ்த்திப் போற்றினர். பின்னர் அவர்கள் எனது ஆணையை நிறைவேற்றப் போயினர். அரசன் அந்தப்புர மாதர்களுக் கிடையே கனகலேகையின் உயிர்ப்பாங்கினைக்கண்டு, அவளைத் தனியே யழைத்து, "மாதே! என்னை யாவனென்று அறிவைகொல்?" எனக் கேட்டேன்; அவள் என்னைப்பார்த்ததும் இன்னனென்று அறிந்து கொண்ட னள். அவள் என்னை நோக்கி, "ஐயனே! இஃது விந்தையிலும் விந்தை! இது மந்திரஜால மில்லாவிட்டால், நின்னையானறி யேனோ? இதன் விஷயத்தை விளங்க வுரைக்கவேண்டும்" என் றனள். யான் நடந்த விஷயங்கள் யாவற்றையும் அவளுக்கு வுரைத்துக் கனகலேகைக்கும் அவளைச் சார்ந்தோர்க்கும் இவ் விவரத்தைத் தெரிவிக்கச் சொன்னேன். யான் ராஜ்ஜியபார த்தை நன்கு நிர்வகித்துக் குறைவற அரசியல் நடாத்தியதால் தேசமெங்கும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியது. கலிங்க தேசாதிபனை கர்த்தனனைச் சிறைவீடு செய்து அவன் மகளை யளிக்குமாறு கேட்டேன். அவனும் மனமிக மகிழ்ந்து தடை சிறிதுமின்றித் தன் மகளை யெனக்கு மணம் புரிவித்தனன். பிறகு அவனுக்கு உண்மையை விளங்க வுரைத்தேன். அவன் வியப்பும் களிப்புமடைந்து என்னைப் பலவாறு புகழ்ந்துகொண் டாடினன். எனது மாதுலனாகிய கலிங்காதிபதி கர்த்தனனை

ஆந்திரதேசத்திற்கும் அரசனுக்கினேன். அவன் அங்கமன்னனுக்குப் பழைய நண்பனுதலின், சமயத்தி லுதவிபுரியக் கருதிப் படையொடும் புறப்பட்டனன். யானு முடன்வந்தேன்; தங்களைக் கண்டு ஆநந்தங்கொண்டேன்." என்று மந்திரகுப்தன் தனது சரித்திரத்தைக்கூறி முடித்தனன்.

இச்சரிதையைக் கேட்ட இராஜவாஹனன் சித்த புருஷனை விளையாடிய தன் நண்பனைக் கொண்டாடிப் புகழ்ந்தனன். பிறகு விச்ருதனை நோக்கி அவனுடைய வரலாற்றினைக் கூறுமாறு ஆஜ்ஞாபித்தனன்; அவனும் பின்வருமாறு சொல்லினன்.

அதிகாரம். 14

விச்ருதன் சரித்திரம்.

நான் தங்களைத் தேடிவரும்பொழுது விந்தியாரண்ணியத்தை யடைந்தேன். அங்கு ஒருநாள் ஒரு கிணற்றினருகிற் சுமார் எட்டுவயதுள்ள ஒரு சிறு பையன் மிகுந்த துன்பத்தில் மூழ்கியவனுய் அழுதுகொண்டிருந்தனன். காரணத்தை அறிய அவனை நெருங்கியபொழுது, அவன் என்னைக் கண்டது மெழுந்து, தன்னைப் பாதுகாத்து வளர்ப்போனும் நண்பனுமாகிய பெரியவனொருவன் கிணற்றில் விழுந்துவிட்டதாகவும் அவனையெடுத்துக் காப்பாற்றி உதவிபுரியவேண்டுமென்றும் வணங்கித் தெரிவித்தனன். யான் உடனே பக்கங்களிற் கண்ட கொடிகளின் உதவியால் அவனைக் கிணற்றினின்றும் எடுத்தேன். அவன் வயது முதிர்ந்த விருத்தாப்பியனுக இருந்தனன். பிறகு ஆண்டிருந்த சில உயரிய லிகுச விருக்ஷங்களின் கனிகளைக் கல்லாலெறிந் துகுத்து அவற்றுடன், மூங்கிற் குழாய்களாற் கிணற்றினின்று மொண்டு கொண்ட நீரையும் உட்கொண்டு பசியை யொருவாறு நீக்கிக்கொண்டு, ஒரு பெரிய மரத்தினிழலிற் களைப்பகல உட்கார்ந்தோம். யான் அவ்வயோதிகனை நோக்கி, அவன் விருத்தாந்தத்தினைக் கூறுமாறு வேண்டிக்கொண்டேன். அவன் பின்னர்க் கூறிய வண்ணம் பகர்வானுயினன்:-

"புண்ணிய வர்மனெனப் பெயரிய விதர்ப்ப மன்னனொருவனிருந்தனன்; அவன் போஜராஜவம்சபூஷணன்; சகல நற்குணங்களுக்கும் இருப்பிடமானவனுய்த் துஷ்டநிக்ரகமும் சிஷ்ட

பரிபாலனமுஞ் செய்து, அறக்கடவுளின் அவதாரமென்று உரிமையோடும் பெருமையோடு மெங்கோனடாத்தி வந்தனன். அவனுக்குப் பிற்காலத்தில் அவனுடைய புதல்வனன் அருந்தவருமன் சிம்மாசனமேறினன். இவனும் பிதாவினைப் போல உத்தம குணங்கள் வாய்க்கப்பெற்றவனென்றாலும் தண்ட நீதியாகிய அர்த்த சாஸ்திரத்தை அலக்ஷியஞ்செய்து வந்தனன். அமைச்சர்களிற் சிறந்தவனை வசுரக்ஷகன் என்பான் அரசகுமாரனைத் தனியே யழைத்துத் தன்னருகிருத்தி, அரசன் என்னும் வரம்பையும் மீறி அவனைக் கண்டித்து இடித்துரைத்துப் பின் வருமாறு பேசினன்.

"அரசே! உத்தமனை போஜகுலத்திற் பிறந்தனை. உன் முன்னோரைப்போல அறிவு கல்வி யொழுக்கம் பராக்கிரம முதலியவற்றிலுஞ் சிறந்து விளங்குகின்றனை. ஆனால் உனது புத்தி ஆடல் பாடல் அபிநயங்களிலும் கவிசித்திர நயங்களிலும் பெரிதும் ஈடுபட்டுச் சிற்றின்பத்தையே விழைந்து நிற்கின்றது. மேலான கல்வியாற் றிருத்தமடையாத புத்தி அக்கினிபுடத்தாலெளியினைப் பெறுத தங்கம்போல மழுங்கிக்கிடக்கும். கல்வியறிவினைப் பெறுத அரசன் தனக்குப் பின்னிகழ்வ தின்னதென அறியான்; தன்னை அதிக்கிரமித்து மேலோங்க எண்ணுபவரைக் கண்டறியான்; தன்னை மென் மேலுயர்த்தும் வழிகள் யாவெனக் காணும் வன்மையிலனுவான். தன் மதிப்பினையுங் கௌரவத்தினையுங் காப்பாற்றிக்கொண்டு பிறரை யாளுஞ் சக்தி குறைவுபடவே, அயலாரே யன்றித் தன் சொந்த வேலைக்காரர்களும் அலக்ஷியஞ் செய்து ஆணையைக் கடந்து நடக்கத் தலைப்படுவார்கள்; பொது நன்மையைக் குறித்துப் பேசினும் அஃது வெற்றுரையென விடுத்துப் போவார்கள். இங்ஙனம் ஆணை செல்லாமற் போகவே இராஜ்ஜியம் நிலை குலைவது இயல்பன்றே? இவ்வாறு தான் நடத்த ஒப்புக்கொண்ட இராஜ்ஜியத்தைச் சீர்கேடடையச் செய்யும் அரசனுக்கு இம்மையிலே துன்பமும் பழியும் பொருந்துவதோடு மறுமையில் நரகமுஞ் சித்திப்பது ஒருதலை. ஆதலால், அரசகுமாரனே! விநோத விளையாடல்களிற் புத்தியைச் செலுத்தி வீண்காலம் போக்குவதை விடுத்து, அரசர்க்குரிய அர்த்த சாஸ்திரத்தை நன்காராய்ந்து அதனிட்கூறியாங்கு நடந்து, இக் கடல்சூழ்ந்த நிலவுலகத்தில் நிகரற்ற

காவலனெனப் பெரும் புகழ் படைப்பாய். உனது ஆணை உலகமெங்கும் பரவுமாறு உயர்நிலை யடைவது உன் முயற்சியிலுமே யன்றிப் பிறரான் நிகழ்வதொன் றன்று. உன் பிதாவின்மேல் யான் வைத்திருந்த அன்பினாலும் உன்னைக் குழந்தை முதல் வளர்த்துவந்த ஆசையாலும், உனக்குக்கேடு வராமற் பாதுகாத்தற் பொருட்டும் நன்மை மேன்மே லோங்குதற்பொருட்டும் யான் இவ்வளவு ஸ்வாதீனமாய் எடுத்துரைத்தேன். நான் செய்யவேண்டிய கடமையைச் செய்தேன்; இனி இறைவன் றிருவருளால் நீ நல்வழியடைந்து நீடூழிவாழவேண்டும்," என்று பழைய மந்திரி இடித்து நற்புத்தி புகட்டினன். இயற்கையாகவே நல்லறிவினையுடைய இராஜகுமாரன் மந்திரியை நோக்கி, "மந்திரி! நீ உண்மையாகவே நல்வழி காட்டினை. இனி யான் அங்ஙனமே நடப்பல்" என்று கூறிப் போயினன்.

இவற்றையெல்லாங் கேட்டுச் சிந்தனையிலாழ்ந்திருந்த அரசனை விகாரபத்திரன் என்னும் வேறொரு மந்திரியணுகி, அவன் மனத்திலுள்ள கவலை யாதெனக்கேட்டனன். அரசனும், தனக்கும் வசுரக்ஷகனுக்கும் நடந்த சம்பாஷணையை எடுத்துக் கூறினன். அவ்விகாரபத்திரன் அரசனுடைய அந்தரங்கமந்திரிகளில் ஒருவன்; இவன் ஆடல்பாடல் அபிநய சாஸ்திரங்களிற் றேர்ந்தவன்; சூதாட்டத்தில் நிபுணன்; ஊரிலுள்ள பல விவரங்களு நன்கறிந்தவன்; ஆயினும் சிற்றின்பத்தில் மூழ்கியவன்; விநோதப் பேச்சுடையான்; சமத்கார புத்தியோடு சமயோசிதமாக நடப்பவன். நகைமொழியாடுவதிலும் பிறரைப் பழிப்பதிலும் நிகரற்ற வல்லபமுடையான். பிறர்குற்றம் காண்பதில் அவனுக்கு எவரும் இணையாகார். தந்திரத்தில் மகாவித்துவான்; காமசாஸ்திரங் கரைகண்டவன்; துன்மார்க்க வித்தைகளில் ஒப்புயர்வற்ற நிபுணன். இவன் ராஜகுமாரனைப் பதுமைபோல் அசைத்தாட்டிக்கொண்டிருப்பவன். இராஜகுமாரன் சொன்னதைக்கேட்டுப் புன்னகை புரிந்து விகாரபத்திரன் பின்வருமாறு நீண்டதோ ருபந்யாசம் புரிந்தனன்:—

"ஐயனே! முற்பிறப்பிற் செய்த புண்ணியத்தின் பெருமையால் ஒருவன் ஸகல ஐசுவரியங்களையும் பெற்றால், அவன் அவற்றை யநுபவித்தற்குத் தடையாகச் சில கபடவேஷமுடைய வஞ்ச

கர்கள் நன்மை கூறப்புகுவார்போல ஏற்பட்டு உபதேசம்பண்ண ஆரம்பிப்பார்கள்; இவர்கள் சுய நன்மையிலே நோக்க முடை யரேனும்பரோபகாரிகள்போல நடிப்பார்கள்; தங்கள் காரியங் கைகூடுமளவும் தருமசர்ஸ்தாபம் பேசுதலே யொரு சிறிதும் நிறு த்தார். சிலர் அவ்வைச்வரியவானுக்கு உபதேசஞ் செய்வாராய் இம்மையிற் கிடைத்த செல்வமும் நிலையாது இளமையு நில்லாது யாக்கையும் நிலைபெறாது, ஆதலால் மறுமையில் நற்கதி பெறு தற்குரிய வழிகளைத் தேடவேண்டுமென்று அறிவுறுத்தி, அவனை ஓட்டாண்டியாக்கி மொட்டையடித்து அவன் இடையிற் ரூபாலக் கட்டித் தருப்பையைச்சுற்றிக் காட்டி லோட்டிவிடுவார்கள். அவன் சாம்பலைப் பூசிக்கொண்டு இராப்பட்டினி பகற்பட்டினி யுடன் மறுமையிற்கடைத்தேறுவதெக்காலமென்று வாடிவதங்கி யுயங்கிக்கிடப்பான்; ஆனல், உபதேசம் புரிந்த மேலோர்கள், அப்பிரபு தானதருமமாகக் கொடுத்த நிலையற்ற ஐச்வரியங்களை நிலைபெறக்கொண்டு தங்கள் குக்ஷிக்கு ஆறுகாலம் பூஜை நைவே த்தியங்கள் செய்து சுகமாக வாழ்ந்துகொண்டிருப்பார்கள். இன்னுஞ் சிலர் செல்வத்தை விட்டுவிடச் சொல்வதோடு, உற் ரூர் பெற்ரூர் பெண்டு பிள்ளைகளைக் கைவிடுவதுடன் வேண்டுமா யில் உயிரையும்விட வேண்டுமென்று தருமோபதேசஞ் செய் வார்கள்; இவர்கள் கருத்து உற்று நோக்குவார்க்கே புலப்படும். ஆனல் இத்தகையோரால் உபதேசிக்கப்பெற்றவர்கள் புத்திசாலி களாகவும் செல்வப்பற்றுடையாராகவும் இருந்தால் அவர்களை வேறு வழிகளாற் றமது வலையிற் சிக்கச் செய்வார்கள். இவ் வஞ்சகர் அவர்களை நோக்கி, யாங்கள் இரும்பைப் பொன்னாக்கு வோம், அணுவளவு தங்கத்தை மேருவாகச் செய்வோம், பகை ஞர்களை யெல்லாம் படைக்கலமின்றிக் கொல்வோம், அழியத் தக்க இம்மாநுட சரீரத்தினை அநந்த கற்பகாலமும் அழிவின்றி யிருக்கச் செய்வோம். ஆனல் இவையாவும் யாவர்க்கும் உரைக் கத்தக்கனவல்ல; எம்வழி நிற்பார்க்கே உரைக்குவம், என்று வேறுவழியாற் பகட்டுவர். எவனேனுமொருவன் நீவிர் கூறும் வழிகள் யாவெனக் கேட்பானுகில், அவர்கள் சிறிதுந் தடை யின்றிப் பின்வருமாறு உரைப்பார்கள். அரசனுக்கு வேண் டிய சாஸ்திரங்களிற் சிறந்தவை நான்கு, நயீ, வார்த்தா, தண் டநீதி (தர்க்கம்), தண்டநீதி (அர்த்தசாஸ்திரம்) என்ற மூன்று

ருடையன. முதல் மூன்றும் முக்கியம் என்றுலும் அவை தாமதமாகவே பயனைத்தரும். ஆதலால் அவையிற்றினைவிடுத் துக் கையுமெய்யுமாகப் பலனைத் தரக்கூடிய தண்ட நீதியினை உடனே கைக்கொள்ளவேண்டும். மௌரியனுகிய சந்திரகுப் தன் பொருட்டு மகாமேதாவியான விஷ்ணுகுப்தன் செய்துகொடு த்த அர்த்தசாஸ்திரம் ஆறுயிரஞ் சுலோகமுடையது. இஃது சுருக்க நூலாயினும் நன்றுகப் படித்தறிய நாட்சில செல்லும்; எப்படி இருந்தபோதிலும் அதனைப் படித்தறிய வேண்டியது அத்தியாவசியகம்." என்று கூறிவிடுவார்கள்.

இவ்வுபதேசத்தைக்கேட்ட அரசன் சிறிதும் தாமதமின்றி அர்த்தசாஸ்திரத்தைக் கற்றுங்கேட்டு நன்கறிந்துகொள்ளப் பெரிதும் முயற்சிக்கிறுன். அவன் படிக்கிறுன்; வல்லவர் கூறும் வியாக்கியானங்களைக் கேட்கிறுன்; இவ்விதமாக இத் தொழி லிலேயே அவன் காலத்தைத் தொலைக்கிறுன். ஒரு பயனு மின்றி விருத்தாப்பியனுகின்றுன். இதுவே யவன் கண்டது. ஒரு சாஸ்திரம் மற்றென்றுடன் சம்பந்தமுடையதே; எல்லா வற்றையும் பூரணமாக அறிந்தாலன்றி யொன்றையும் நன்றுக அறிதலியலாது. காலம் குறைவாகத் தேவையோ அன்றி அதி கமாக வேண்டுமோ, அதைப்பற்றிக் கவனித்தல் கூடாது; எப்படியும் படித்தே தீரவேண்டும். நல்லது, அப்படியே படி த்துத் தேர்ச்சிபெற்றதாக வைத்துக்கொள்வோம்; அவன் என்ன உபயோகமானவற்றைத் தெரிந்துகொண்டான் என்பதைப் பார்ப் போம். முதலில், மனைவி மக்களை நம்பாதே. அடுத்தது இவ் வளவு அரிசியைச் சமைத்தற்கு இவ்வளவு ஜலம் வேண்டும்; அந்த நீரைக் கொதிப்பித்தற்கு இவ்வளவு விறகு தேவை; ஆதலால் சமைப்பதற்கு முன் இவற்றை அளந்துகொள்ளவேண் டும். ஒரு ராஜா, வைகறையிற் றுயிலெழுந்து பற்றுலக்கிய வுடன், முதலிற் செய்யவேண்டியது, அன்றையதினத்திலாக வேண்டிய வரவு செலவினை ஓர் இம்மியும் விடாமற் கணக்கிடவே ண்டும். ஒரு சேரங்கை யளவுக்குக் கணக்குப்பார்த்துக்கொண் டிருக்கும்பொழுதே காரியஸ்தர்கள் கோடி கோடியாகக் கொ ள்ளையடித்துக்கொண்டிருப்பார்கள். சாணக்கியன், கணக்கர் கள் செய்யும் புரட்டுக்களை நாற்பதென்று ஒரு விதமாகக் கணக்

கிட்டுக் கூறியிருக்கின்றன்; ஆயினும், புத்தி சாதுரியத்தால் அவர்கள் ஒன்றை ஆயிரமாக்கிக்கொள்வார்கள். இவர்கள் தடுக் கின்கீழ் நுழைந்தால் அவர்கள் கோலத்தின்கீழ் நுழைவார்கள். கடுகுபோவதை ஆராய்ந்துகொண்டிருக்கும்பொழுதே பூசனிக் காய் போய்விடுகிறது. இந்தக் கணக்குப் பார்க்கிறவனேதான் அரசன் முதல் முகூர்த்தத்திற் செய்யவேண்டியது. இரண்டா வது முகூர்த்தத்தில் அவன், தன் குடிகளிடத்துள்ள குழறு படை வழக்குக்களைக் கேட்டு நியாயஞ் செலுத்தவேண்டும்; அரசன் இவ்வேலை செய்துகொண்டிருக்கும் பொழுது அவனு டைய நிலை பரிதபிக்கத்தக்கதே. நியாயத்தை நிலை நாட்டுதற் காக வென்றே ஏற்படுத்தப்பெற்ற நீதிபதிகள் முதலாளோர் தம் பாற் கொணரப்பட்ட வழக்குக்களிலுலேயே முன்னேற்றமடை கின்றனர்; எப்படிச்செய்தால் தங்களுக்கு லாபகரமென்பதை அறிந்து அதற்கேற்பத் தீர்ப்புக் கூறுகின்றனர். லாபத்தைத் தமது பங்கிற் போடவேண்டும். பழியையும் அவமானத்தையும் அரசன் பங்கிற் றள்ளவேண்டும்; இதுவே அவர்கள் முக்கிய மான கொள்கை. மூன்றவது முகூர்த்தத்தில் அவன் ஸ்நானஞ் செய்து உணவுகொள்ள அநுமதியுமுண்டு சாவகாசமு முண்டு. அவன் உண்டசோறு ஜீரணிக்குமளவும் விடத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே கிடக்கவேண்டும். நான்காவது முகூர்த் தத்திற் கப்பத்தை வாங்கவேண்டும். ஐந்தாவது முகூர்த்தத் தில் அவன் மந்திரிகளோடு கூடி மந்திராலோசனையிலிருக்க வேண்டும். அவ்விடத்தில் மந்திரிகள் சமபுத்தியையுடைய நிஷ்பக்ஷபாதிகளைப் போல நடித்து, நல்லதைக் கெட்டதென் றும் கெட்டதை நல்லதென்றும் ஒருவர் சொல்வதை மற்றொரு வர் ஆக்ஷேபித்தும், எல்லாரும் ஒருங்குகூடி யரசன் சொல்வ தைக் கண்டித்தும், தூதர்கள் கூறுவதை மாற்றியும், சம்பவிக்கக் கூடியதை அசம்பாவிதமாகவும் பொய்யை மெய்யென்றும் மெய் யைப் பொய்யென்றும் தங்கள் சொற் சாதுரியத்தாற் சாதித் துப் பேசுவார்கள். தமக்கு வேண்டியவர்களை உத்தியோகத்தி லமர்த்தச் சிபார்சு செய்வார்கள்; வேண்டாதவர்களை வேரறுப் பார்கள். இரகசியத்தில் அரசன் கோபத்தைத் தூண்டிவிட்டுப் பலர் முன்னிலையில் அவன் கோபத்தைச் சாந்தப்படுத்தித் தாங் கள் நல்லவர்களாகவும் அரசன் கெட்டவனாகவும் விளங்கவைப்

பார்கள். இவர்களுடைய ஜகஜ்ஜாலப்புரட்டிற்குக் கணக்கே யில்லை. ஆறுவது முகூர்த்தத்தில் அவன் வேடிக்கைகள் பார்த்து விநோதமாகப் பொழுதுபோக்க ஒன்றரைமணி நேரம் கிடைக்கும். இதில் அரசன் தனது இஷ்டம்போல இருக்கச் சாவகாசமுண்டு. ஏழாவது முகூர்த்தத்தில் அவன் தனது சேனைகளைப் பார்வையிடவேண்டும்; அவர்கள் படைபழகும் முறையினைக் கவனிக்கவேண்டும். எட்டாவது முகூர்த்தத்தில் அரசன், தன்னுடைய பராசைபிடித்த சேனபதிகளோடு கலந்து அவர்களுடைய தந்திரோபாயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதனோடு பகற்காலம் முடிந்தது. மாலைக்காலம் வந்தது. இரவு முதல் முகூர்த்தத்தில், அரசன் தனது அந்தரங்க ஒற்றர்களோடு கலந்துபேசிப் பகைஞரிடத்து அக்கினி கட்க விஷப்பிரயோகங்களைச் செய்ய ஆஜ்ஞாபிக்கவேண்டும். இரண்டாவது முகூர்த்தத்தில், அவன் உணவுகொண்டபிறகு வேதப் பிராமணனைப்போல வேதபாடத்தைச் சந்தைபோடவேண்டும். மூன்றுவது முகூர்த்தத்தில் மேளவாத்தியங்களோடு தூங்க அழைத்துப் போவார்கள். நான்காவது ஐந்தாவது முகூர்த்தங்களில், பலவிதமான கவலைகளும் இடங்கொடுக்காமல் மூன்றுமணி நேரம் இவன் துயில்வதற்கிடமுண்டு. ஆறுவது முகூர்த்தத்தில் இவன் சாஸ்திரங்களிற் கூறப்பட்ட கடமைகளைச்செய்யத் தயார் செய்துகொள்ளவேண்டும். ஏழாவது முகூர்த்தத்தில் அவன் தூதர்களையும் ஒற்றர்களையும் அனுப்பும் விஷயமாக மந்திரிகளோடு கலந்து யோசிக்கவேண்டும். இந்தத்தூதர் முதலியோர் இருதிறத்தாரிடத்தும் லஞ்சம் வாங்கிப் பொருளீட்டு மியல்பின ராதலால் வேலையில்லாத போழ்தும் தங்களுக்கு வேலையை யுண்டாக்கிக்கொள்ளும் ஆற்றல் படைத்தவர். எட்டாவது முகூர்த்தத்தில் புரோகிதர் முதலியோர் அவனைச் சூழ்ந்துகொண்டு தாம் இரவிற்கண்ட தீக் கனவுகளையுந் தோற்றங்களையு சகுனங்களையு மெடுத்துக் கூறித் தற்கால நவக்கிரக நக்ஷத்திர உதயாஸ்தமனங்களையும் அவற்றின் பலாபலன்களையும் விஸ்தாரமாகக் காட்டி, இவற்றால் உண்டாகும் ஆபத்துக்களை நீக்கும் பொருட்டுச் செய்யவேண்டிய சாந்திகளையும் பேசுவார்கள். சகல பாபதோஷ நிவாரண மார்க்கங்களெல்லாம் ஸுபவர்ண புஷ்பத்திலடங்கினவையே. இவர்களைத் தவிர

இன்னுஞ் சில பிராமணர்களுண்டு; அந்த விப்பிரோத்தமர்கள் ஒவ்வொருவரும் பிரமனுக்குச் சமானமானவர்கள்; அவர்களுடைய ஆசீர்வாத பலத்தால் அரசனுக்குச் சகல ஐச்வரியமுமுண்டாகும். அவர்கள் பெரிய குடும்பத்தினர், பாம ஏழைகள், எப்பொழுதும் முத்தீ வளர்த்து அக்கினிகோத்திர ஒளபாசனஞ்செய்துவருபவர். அவர்களுடைய வேள்விச் சிறப்பாலன்றே உலகில் மழைபெய்வது? இத்துணைநாளும் ஒரு வெகுமானமும் பெற்றவரில்லை; அவர்களுக்குக்கொடுக்கும் ஒவ்வொரு பொருளும் ஒன்று கோடியாக வளரும். இப்படிப்பட்ட சற்பாத்திரங்கள் கிடைப்பதருமை.. அரசன் அவர்களுக்குத் தானதருமங்களைச் செய்தால் நித்தியமான மோக்ஷ சாம்பிராச்சியத்தைப் பெறுவது நிச்சயம். இவ்விதமாக இவர்களைப் பூணந்துரைத்து ஒருவர்க்கொருவர் பரிவர்த்தனையாக, மகாராஜாவுக்கு இத்தன்மைத்தென்றறிய வொண்ணாத மோக்ஷ சாம்பிராச்சியத்தைக்கொடுத்துக் கையுமெய்யும் நிச்சயமான இவ்வுலகச் செல்வத்தைப் பெற்றுக் கொள்வார்கள். இவ்வந்தணரின் தந்திரத்தை யெவராலுங் கண்டுபிடிக்க வொண்ணாது. இவ்வாறு இரவும் பகலும் உணவுகொள்வதற்கும் பொழுது போதாமல் ஓயாத்தொழிலில் நாயாய் உழைக்கும் மகாராஜனுடைய நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கதே. தனது வீட்டிற் சண்டை சச்சரவு இல்லாமற் காக்கும் வகையறியாத ஒருவன் நாட்டையாள நினைப்பது நகைப்பிற்கு இடமாம்; அதுபோலச் சிற்றரசனுயிருப்பவன் தன்னுடு சீர்குலையும் நிலையிலிருக்கப் புவனேசுவரனுக விரும்புதல் பொல்லாப்பிழையாம். ஆதலால் நம்பிக்கையென்பது இல்லாவிடின் நாட்டை யரசாளுதல் இயலாது. அரசன் மற்றையோரை நம்பாவிடின் அவர்கள் இவனை எவ்விதம் நம்புவார்கள். நம்பல் என்பதுவே அன்பின் நிலைமை. ஆதலின் அன்பின்றி அரசாட்சி நடைபெறுது. இத்தகைய விஷயங்களில் உலகம் தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்ளுமென்பது சொல்லாமலறியலாம். கைக் குழந்தைக்குத் தாயின் முலைப்பாலையுண்ணை வழிகற்பித்துக்கொடுக்கத் தர்மசாஸ்திரம் எவையும் வேண்டா. ஆதலால் எதற்கும் இயற்கை யறிவொன்றனையே துணையாகக் கொண்டு இன்பமாகக் காலங் கழிப்பதே மேலானது. எனவே, ஏ ராஜகுமார! நீ இத்தகைய கட்டுக்களினின்றும் விலகி உன்

இம்மொழி கேட்டதும் இருவரும் மனம் பெரிதும் வருந்தினர். பாஸ்கரவர்மன் என்னை நோக்கி, "அண்ணலே! நினது உதவியா லன்றே யான் இத்துணைப் பெருமை யடைந்தேன். உன்னை விட்டொரு கணமுந் தரித்திரேன். உனது தந்திரோபாயமாகிய கயிற்றுலன்றே இவ்விராச்சியம் கட்டுண்டு என் காலின் கீழ்க் கிடக்கின்றது. நீயகன்றுல் அதுவும் அகன்றுபோமே. பேதை யேனுகிய யான் யாதுபுரிவல்? என்னை விட்டுப்பிரிய உனக்கு எங்ஙனம் மனம் வந்தது? அது நியாயமோ? நீ கட்டிய கட்டி டத்தை நீயே யிடித்தல் தருமமன்று." என்று பலவிதமாக என்னை வணங்கி முறையிட்டனன். யான் அவனை நோக்கிக், "குமாரா! நீ யொன்றிற்கும் அஞ்சாதே! ஆரியகேது அமைச் சனுயுள்ளவளவும் உனக்கு அபாயமென்பதேயில்லை. அரசாட் சிச் சகடத்தை யிடையூறின்றிச் செலுத்தும் வல்லபம் அவ னுக்கு நன்றுக உண்டு. அவன் இராஜ்ய தந்திர நிபுணன்; மிக்க அநுபவமுடையான்; அவனை உனக்கு உடற் காப்பாகக் கருது வாய். எனது ஸ்தானத்தில் அவனிருப்பான். யானும் விரை விற்சென்று மீண்டிவண்வருவேன். நீ சிறிதுங் கவலற்க," என்று தேற்றரவு கூறினேன். அவன் ஒருவாறு மனமொப்பினனுயி னும், என்னைச் சிலகாலமேனும் அவனுடனிருக்க வேண்டிக் கொண்டதுமன்றி என்னை அரசின்றிக்கிடந்த உற்கலதேசத் திற்கு அதிபனுக்கினன். யான் அந்நாட்டை என்னதாக்கிக் கொண்டு அங்குச் செய்யவேண்டிய அவசரமான செயல் களை முடித்துப்பின் தங்களைத் தேடி புறப்படுவதற்குச் சித்தஞ யிருந்தேன். விதர்ப்பாதிபதிக்கு நண்பனை சிம்மவருமனிட மிருந்து தூதர்கள் உதவிவேண்டி வந்தனர். உடனே யான் தாமதமின்றிப் பாஸ்கரவருமனுடன் நால்வகைப் படை புடைசூழ இங்கு வந்தேன்; தங்களைக் கண்டேன்; கழிபேருவகை கொ ண்டேன். இதுவே எனது சரித்திரமென விச்ருதன் கூறி முடித்தனன்.

இவ்வரலாற்றினைக் கேட்ட இராஜவாஹனன் பெரிதும் வியப்பினையடைந்து செயற்கரிய செய்த தன்னண்பனைக் கொண் டாடி அவனதுதண்டநீதி சாஸ்திர வல்லபத்தைப் புகழ்ந்து பேசினன். யாவரும் அளவிலா இன்பத்தில் மூழ்கியிருந்தனர்.

அதிகாரம் 15.

மூடிவுரை.

இங்ஙனமிவர்கள் களிப்புற்றிருப்புழி இராஜகாரணனன் தூதர்களைவிடுத்துத் தன் நண்பன் சோமதத்தனையும் அவன் மனைவி வாமலோசனையையும் அழைத்துவரச் செய்தனன். அவர்களும் விரைந்துபோந்து யாவரையுங்கண்டு களிபேருவகை பூத்திருந்தனர்.

ஈதிங்ஙனம் நிற்க, விந்தியாடவியிலிருந்த வேந்தன் இராஜஹம்சன், தன்னைவிட்டு நண்பருடன் சென்ற மைந்தனை இராஜவாஹனன் ஒருநாள் நள்ளிரவில் தோழரைப் பிரிந்து காணமற் போயினனெனவும் அவனை நாடி ஏனையோர் தேடிச் சென்றுளாரென்றும் திரும்பிவந்த வேலையாட்களிற் சிலர் சொல்லக் கேட்டுக் கடுந்துயரடைந்தனன். இதனையறிந்த வசுமதிதேவியும் அனலிற்பட்ட பூங்கொடிபோலத் துவண்டு வாடினள். மைந்தனுடைய நிலையினையறியக் கருதிய மன்னன், தன் மனைவியோடு வாமதேவ முனிவராச்சிரமத்தை யடைந்து, "ஸ்வாமி! தங்கள் விருப்பத்தின்படி எங்கள் உயிர்க்குயிரான குமாரனை நாட்டிலுள்ள விசேடங்களைக் கண்டுவர நண்பரோடு அனுப்பினேன். அவன் அவர்களைப் பிரிந்துபோயினனெனவும் அவனைத் தேடிக்கொண்டு ஏனையோர் சென்றுளார் என்றும் தூதர் கூறுகின்றனர். குமாரனது நிலையினைக் குறித்து எங்கள் மனம் பெரிதுங் கவலுறுகின்றது. அவனைக் காணப்பெறுமாயின் எம்முயிரை யாங்கள் நீப்போம். தேவரீரைக் கண்டு கேட்டால் அவன் நிலைமையாதென எங்கட் குரைத்தருள்வீரென நும் பாதபத்மங்களை யடைந்தோம்." என்று இரங்கி விண்ணப்பித்துக்கொண்டனன். வாமதேவர், அவர்களை யருகழைத்து வீற்றிருக்கச்செய்து, முக்கால வுணர்ச்சியும்பெற்ற தமது மூதறிவினால் சம்பவித்தவை யாவற்றையு நன்கறிந்து, மன்னனை நோக்கி, "அரசே! வருந்தேல், நின் மகன் சௌமமாயிருக்கிறான்; அவனது நண்பர்களும் அவனுடனிருக்கிறார்கள். இப்பொழுதே அங்கதேசத் தலைநகராகிய சம்பாபுரிக்கு விரைந்து செல்லும் தூதர்களை விடுத்து, அவர்கள் அனைவரையும் அழைத்துவரச் செய்வாயாக. அவர்கள் உன்னிற் பிரிந்துசென்றபின்

இஷ்டம்போல் நடப்பாயாக. ஐம்பொறிகளை யடக்கவேண்டும், காமக் குரோத லோப மோக மத மாற்சரியமென்னும் அறுவகைப் பகையை அறுத்தல்வேண்டும், கதங்காத்துக்கற்றுய்ந் தடங்கல் வேண்டும் என்றின்னோரன்ன நீதிகளை வாயோயாமற் கதறிக் கேட்போர் செவிகளைத் தொளைத்து ஓயாக் கவலையிலாழ்த்தும் உத்தம புருஷர்களான இவ்வஞ்சக மந்திரிகள் எப்பொழுது உன்னுடைய செல்வத்தை யபகரித்துப் பரத்தையர்க்கீயலாமென் றெண்ணமிட்டுக் கொண்டிருக்கின்றனர். இறைவனருளாலும் ஊழ்வினை வலியாலும் உயர்நிலையிற் பிறந்த உனக்கு இத்தகைய நீதிகளைப் புகட்ட இவர்கள் யாவர்? இத்தொழிலைச் செய்ய இவரை நியமித்தவர் எவர்? உன்னுடைய சுக்கிரன் ஆங்கீரசன் விசாலாட்சன் பாகுதண்டிபுத்திரன் பராசரனுதிய பிச்சைக்காரர்க ளெல்லோ அர்த்தசாஸ்திரம் வகுத்தவர்கள்? இவர்கள் எப்பகையை வென்றனர்? எந்த சாஸ்திரங்களைக் கடைப்பிடித்தனர்? தாங்கள் கூறிய நீதி நூல்களையேனும் பின்பற்றி யொழுகினரா? எல்லாந்தெரிந்த இவர்கள் தமக்கு இன்ன நிகழுமென்பதை முன்னறிந்து நடந்தனரா? மிகுதியாய்ப் படித்தவனும் மூடனுல் வெல்லப்படுவது உலக வியற்கையன்றே? மகாவித்துவானைச் சிறுபிள்ளை வென்ற கதையை நீ யறியாயோ? இறைவனருளால் உயர்நிலையும் இளமையும் அழகும் செல்வமும் பெற்றுளாய், இவற்றையெல்லாம் அனுபவித்தல் வேண்டாமா? இவற்றை வீணுக்கிழல் அஃது இறைவன்றிருவுள்ளத்துக் கேற்குமோ? நீயென் இராச்சிய நிருவாக காரியக் கவலைகளை மேற்கொள்ளவேண்டும்? பதினுயிரம் யானைகளும் மூன்று லட்சம் குதிரைகளும் கணக்கற்ற பதாதியரும், பல ஊழியளவுஞ் செலவழித்தாலும் சிறிதுங் குறைபடாப் பொக்கிஷசாலைகளும் படைத்திருக்கின்றனையே. அவையாவும் பயனற்றுப் போயினவா; அல்லது அவைபோதாவா? இன்னும் மேலு மேலும் பேராசைகொண்டு ஓயாத்தொழிலில் உழைத்தலெதற்கோ? மானுட வாழ்க்கையோ சில்வாழ்நாட் பல் பிணியுடைத்து. கிடைத்த செல்வத்தை யநுபவித்தற்குரிய இளமையோடிருக்குங்காலம் மிகவுங் குறைந்ததன்றே? எட்டினமட்டநுபவித்தலன்றே அறிவுடையார் செயல்? இடைவிடாது பொருளீட்டியும் அப்பொருளை நுகராதவர் மூடருள் மூடரல்ல

ரோ? இவ்வுபந்நியாசத்தை இவ்வளவோடு நிறுத்துநின்றேன். ஆகலால் இராச்சியபாரத்தை நம்பிக்கையுள்ள நிறுபுடையாரிடத்து ஒப்புவித்துக், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வேன்றும் என்ற பழமொழிக்கிணங்க அந்தப்புர மாதர்களின் ஆடல் பாடல் அபிநயானுபவங்களாலும் அமுதமயமான மதுபானத்தாலும் எல்லாமுள்ளபோதே ஆநந்தமாய்க் காலங்கழிப்பாயாக."

விகாரபத்திரன் இங்ஙனம் அரசனுக்கு நல்லறிவு புகட்டி அவன் பாதத்தில் வணங்கி நின்றனன். அந்தப்புர மாதர்களும் அவன் கூறியதே தக்கதென்று ஆமோதித்துப் புன்னகை புரிந்தனர். அரசனும் ஆநந்த பரவசனனன். அவன் அமைச்சனை நோக்கி, "அன்ப, நீயே தக்கவாறு அறிவுறுத்தினை உன்னையே எனது ஆசிரியனாகக்கொண்டேன். இனி உன் சொல்வழி நில்லேனையின் யானுங் குருத்துரோகியாவேனல்லேனோ?" என்று கூறி அவனை மார்புறத்தழுவித் தன் பக்கலில் இருத்தி வேண்டிய சிறப்புக்கள் செய்தனன். இதன்பின் அரசன் முன்னையினும் பன்மடங்கு அதிகமாய் விநோத விளையாடல்களை மேற்கொண்டு சிற்றின்பத்திலாழ்ந்து கிடந்தனன்.

தான் கூறிய மெய்யறிவு பயன்படா தொழிந்தமையைக் கண்ட பழைய மந்திரியாகிய வசுரகூதகன் அரசன் நிலைமைக்குப் பெரிதும் வருந்தினன். இராசாங்க காரியத்துள் முக்கியமான எதனையும் அரசன் இவன்பால் ஒப்புவிப்பதில்லை. இவனை மந்திராலோசனை சபைக்கு வரவழைப்பதுமில்லை. கண்டவிடத்தற்கலந் துறவாடிப் பேசுவதுமில்லை. இவற்றுடனில்லாமல் இவன் வலிய எடுத்துக்கூறும் விஷயங்களைச் செவி சாய்த்துக்கொளாது அவமதித்தது மன்றி அவன் சொல்லியதற்கு ஏறுமாறுகவே நடந்துவந்தனன். பழையமந்திரி செய்த நன்மை யாவுந் தீமையாய் முடிந்தன. அவன் விரோதியர்களின் சொல்வழியே அரசன் நின்றனன். தீயோரே உயர்வடைந்தனர்.

இத்தகைய சீர்கேடடைந்த நிலையில், பழையமந்திரி யாது செய்குவன்? தான் அபிமானம் வைத்த ராசகுலத்திற் பிறந்த மூடனை இளவரசனைக் கைவிட மனம் ஒப்பவில்லை. ஆயினும் தான் செவிசார்த்திய நல்லுரையைப் புறக்கணித்த குற்றத்தை

அரசகுமாரற் கெடுத்துக்காட்டுமமயம் எப்பொழுது வாய்க்கு மென்று ஆராய்ந்திருந்தனன். அசுமகதேசாதிபனும் இராச்சிய தந்திர நிபுணனுமான வசந்தபாநுவின் கையில் இவ்விராச்சியஞ் சேர்ந்துவிடின் இவ்விராசகுமாரன் நினைத்தற்கரிய துன்பத்துக் காளாவான்; அப்பொழுது தான் செய்த குற்றம் தனக்குப் புலப்படும். அவ்வமயம் அவனுக்குதவிபுரிந்து நல்வழிப்படுத்தலே தக்கதொரு கடமையாகுமென்று தீர்மானித்தனன்.

ஈதிங்ஙனம் நிற்க, அசுமகமன்னன் மந்திரியாகிய இந்திரபாலிதன், தனது மகனாகிய சந்திரபாலிதன் சிற்றின்பப் பிரியனுய்த் தன் சொல்வழி நில்லாமையால் அவனை நாட்டை விட்டுவெருட்டி விட்டதாகப் போக்குக்காட்டி, உண்மையாகவே அவனை ஓர் அந்தரங்க தூதனாக நியமித்து அநேக பரிவாரங்கள் புடைசூழ்ந்துவர விதர்ப்ப நாட்டை யடையச் செய்தனன். இச்சந்திரபாலிதனுக்கும் விகாரபத்திரனுக்கும் நெருங்கிய நட்புண்டாயிற்று. அவ்விருவருங் கூடி, அரசனைப் பலவிதமான தீயவழிகளிற் செலுத்தி அரசாட்சியைக் கைப்பற்றிக்கொள்ளச் சமயம் பார்த்திருந்தனர். தீயன செய்தற்குச் சிறிதும் மனங் கூசாத மாபாவியான விகாரதத்தன் அரசனைப் பல துன்மார்க்கங்களிலும் பிரவேசிக்க நல்லுபதேச மொழிகள் நவில்வானுயினன். வேட்டையாடுவதைப்பற்றி யொரு சம்பாஷணை நிகழுமாயின் அவன் அதனுடைய சிறப்பை யெடுத்துச் சொல்லாமலிரான். வேட்டை தேகாபிவிருத்திக்குச் சாலச்சிறந்தது; நன்றுகப் பசியெடுக்கச் செய்து உணவின் மாதுரியத்தை அதிகப்படுத்தும்; ஒருவனுக்குச் சுறுசுறுப்பினையும் வலிமையையும் திடத்தையும் தரக்கூடிய சஞ்சீவி அதுவே. மான் முதலியவற்றை வேட்டையாடுவதால் நாட்டிற் பயிர் பச்சைகளுக்குண்டாகும் கேடு குறையும்; துஷ்டமிருகங்களைக் கொல்வது தேசத்திற்குப் பலவிதத்திலும் க்ஷேமமன்றே? இதுபற்றியன்றே மாநிலங்காக்கு மன்னற்கு இதுவுமோர் கடமையாக நீதிநூல்கள் எடுத்து முழங்கும்? அரசன் அடிக்கடி வேட்டைக்குச் செல்வதனல், மலை காடுகளிலுள்ள குறுநில மன்னர் முதலியோர் அரசனைக் கௌரவித்துக் கொண்டாடி அடங்கி நடப்பார்கள். இதனல் மறுநில மன்னர்களும் இவனது பராக்கிரமத்திற்கு அஞ்சுவார்கள். சூதாட்

டத்தைப் பற்றிப் பேச புகுந்தால் அதன் பெருமையோ அபார மானது.. உலகிற் பொருளாசையை நிவிருத்திப்பதற்கு இதுவே சிறந்த உபாயம்; தாசாள சித்தமும் வள்ளற்றன்மையும் இதனால் ஒருவன் எளிதிலெய்தப் பெறலாம். ஜயம் உண்டானால் அளவுக்கு விஞ்சிக் குதூகலமடையாமலும் அபஜயம் உண்டானால் மனமுடைந்து போகாமலும், சுகதுக்கங்கள் இரண்டினையும் ஒப்ப நோக்கும் உத்தமப் பழக்கம் இச் சூதாட்டத்தினாற் சுலபமாக உண்டாகும். ஏகாக்கிரசித்தம், விடாமுயற்சி, தளராவூக்கம், அஞ்சா நெஞ்சம், கலங்காத சித்தம், அபாயங்களுக்கு அஞ்சாமை முதலான உத்தம குணங்கள் யாவும் சூதாட்டத்தாலன்றி வேறெதனாலுஞ் சித்தியாகமாட்டா.—இனிக் காமத்தைப் பற்றிப் பேசப் புகுந்தாலோ, செல்வம் இளமை முதலான பல நலன்களைப் பெறுதல் எதன் பொருட்டாக? துண்ணறிவினையும் சொல்வன்மையினையும் விருத்திசெய்வது எதற்காக? விரும்பிய மாதினைப் பெறுதலும் பெற்றபின் அவளைவைத்துப் பேணுதலும், அவளைப் பலவிதத்தாலும் திருப்தி செய்தலும், ஊடலுண்டாய காலத்து அதனை மாற்றி யின்பந்துய்த்தலும் முதலானவை சாமானியராற் செய்யப்பெறுவனவோ? பரலோக இன்பத்தை இகலோகத்திலேயே காட்டுவது இதுவே. அறத்தினாற் பொருளும் பொருளினாலின்பமும் பெற்று உலகியலை நன்கறிந்தவரே வீட்டையும் பெறுவர். இகபரமிரண்டினையுந் தரும் புத்திரப் பேற்றினை யளித்து ஒருவனைக் கரையேற்றுவது எது வென்பது யான் கூறுமலே யாவரும் நன்கறிவார்.— பின்னர், மதுபானம் அநேக நோய்களை நீக்கும்; நரைதிரையின்றி எப்பொழுதும் இளமைக் கோலத்தை யளிக்கு மியல்பினனென்றே அதனை அமுதமென்று பலருங்கொண்டாடிப் புகழ்கின்றனர். அதனையுண்டவர்க்கு மனக்கவலை யென்பது சிறிதுமில்லை. அன்பு ஆசை இரக்கம் முதலான உத்தமகுணங்களை விருத்தி செய்து கோபத்தை அறவே யொழிப்பது இம்மருந்துதான். மனத்திலுள்ளதை உள்ளவாறுரைக்கும் உத்தமகுணம் இதனாலன்றி வேறெதனாலுமில்லை. இன்பம் நீட்டிப்பதும் அழகு நிலைபெறுவதும் பலரும் உவக்குமாறு நடத்தலும் மதுவினாற்றான் சித்திக்கும். இவ்வுத்தம வஸ்து அச்சத்தையும் துன்பத்தையும் மறக்கச் செய்யும் வல்லமையுடைய காரணத்தாலன்றே யுத்த காலங்களில் இன்றி

மையாப்பொருளாக எண்ணப்படுகின்றது. மேலும் அரசன் கடுஞ்சொற் பேசவும் கடுந்தண்டம் புரியவும் நன்றுகப் பழகியிருக்கவேண்டும் இல்லாவிடில் அதிகாரஞ் செலுத்தும்வழியாது? யாவரோடும் இன்சொற் பேசிக்கொண்டு தண்டோபாயத்தைக் கைவிட்ட மன்னன் ராஜரீகம் புரிவதைவிடக் காட்டிற்கேகிக் கடுந்தவம் புரிந்து காலத்தைத் தொலைக்கலாம். அதிகாரஞ் செலுத்தத் தெரியாத அரசன் அரண்மனையிலுலாவும் பாவைக்குச் சமானமானவன்."

இவ்விதமான விஷமப் பேச்சிலுல் அரசனது புத்தியைக் கெடுத்து அவனைத் தீயவழிகளிற் செலுத்தினன். விகாரபத்திரன் சொல்வழி அரசாட்சி நடந்தேறியது; அரசன் அப் பரமாசாரியன் கற்பித்த பாடங்களைச் சிறிதுங் கவனக்குறைவின்றிக் கற்றுக் கைதேர்ந்துவந்தனன். மன்னனெப்படி மன்னுயிரப்படி; நாட்டிலுள்ள குடிகளனைவரும் அரசன் முதலிய பெரியோர் அநுட்டானங்களை மேல்வரிச் சட்டமாகக்கொண்டு, கொலை களவு பொய் கட் காமமாதிய பஞ்சமா பாதகத் தொழில்களிற் பழகிவந்தனர். அந்நாட்டில் வெட்கமென்பது வெட்கிப்போயது; நாணமென்பது நாணிமறைந்தது. பெரியார் சிறியார் என்ற பகுப்புத் தொலைந்து, யாருஞ் சமத்துவங் கொண்டாடத் தலைப்பட்டனர். கட்டுக்கடங்காமற் காமாதுரனை யொழுகுவானே கனவான் என்ற புதியதோர் இலக்கணவிதி அக்காலத்தில் நடைபெற்றது; யாவரும் அதனை மேற்கொண்டொழுகிவந்தனர். மாந்தர்கள் யாவரும் மதுபானமயக்கமின்றித் தந்நினைவோடிருந்த காலமே யில்லை; கள்ளினுஞ் சிறந்த பொருள் கண்டதில்லையென்று, ஊக்கத்தைத் தரும்படியான மதுவினைக் கைவிடாதொழுகிவந்தனர். அந்நகரத்திலுள்ள பெண்கள் பரகியைகளாகவும் சாமானியைகளாகவும் இருந்தனரேயன்றிச் சுவகியைகள் அவ்வூரில் மருந்திற்குங் காணலரிது. மாதர்கள் தங்கள் நாயகர்களுக் கெதிரிலேயே பரபுருடரோடு கூடிக் குலாவிக் குதித்துக் களித்தனர்; கண்டதே காட்சி கொண்டதே கோலம். மாதர்கள் இங்ஙனமாகவே சண்டைக்குக் கேட்பானேன்! முதல்நாட் காலைமுதல் மறுநாட் காலைவரை யொவ்வொருநாளும் கொலை கொள்ளை சண்டைகள் இல்லாமலிரா. வலியார் எளியாரை நலிதலும் செல்வர்கள் சொத்தை ஏழைகள்

பிடுங்கிக்கொள்ளுதலும் சகஜம்; உடல்பொருளாவி மூன்றினிடத்துமுள்ள அபிமானத்தை விட்ட பெரியோர்களாக யாவருமிருந்தனர். யாண்டு நோக்கினும் கும்பிய முகமுஞ் சாம்பியவுடலும் முணுமுணுக்கும் வாயுங் காணலாம். வருணச்சிரமதருமம் அடியோடற்றது.

இவ்விதமாக ஊரிற் குழப்பம் அதிகரிக்கவே, அரசனுக்கு விரோதிகளாயுள்ளோர் தங்கள் வஞ்சகக் கருத்தை நிறைவேற்ற இதுவே நல்லகாலமென்று துணிந்தனர். அரசன் வேட்டைக்குப் போனால், அவன் பரிவாரங்களையும் படைவீரர்களையும் அழிக்கத் தலைப்பட்டனர்; அவனுடைய ஆட்கள் மானைத் துரத்திக்கொண்டு ஒரு குகையில் நுழைந்தால், காய்ந்த விறகுகளையும் உலர்ந்த இலைகளையும் குகைவாயிற் குவித்து நெருப்பிட்டு மனிதர்கள் விலங்குகள் என்னும் வேற்றுமையின்றிக் கொன்றனர்; சில வீரரைப் புலியோடு எதிர்க்கச்செய்து மாய்த்தனர்; மற்றுஞ்சிலரைத் தண்ணீர் கிடையா விடங்களுக்கனுப்பிப் பசிதாகங்களாலிறக்கச் செய்தனர். சிலரை யானைகளைப் பிடிக்க அமைத்த படுகுழிகளில் வீழ்ந்தழிய வழியியற்றினர். சிலர் கால்களிற் றைத்த முட்களை யெடுப்பதற்கு உபகரிப்பதுபோல விஷந் தீட்டப்பெற்ற கத்திகளையும் முள்வாங்கிகளையும் கொடுத்து அவர்களைக் கொன்றனர். விலங்கினங்கள்மேல் அம்பு தொடுப்பதுபோலப் பாவனைசெய்து உண்மையில் அவற்றைச் சில வீரர்மேல் விடுத்துக் கொன்றனர். இன்னோரன்ன வழிகளால் அசுமகதேசாதிபதியினுடைய அந்தரங்க ஒற்றர்களுந் தூதர்களும் பலவிதக் கலகங்களையுமுண்டாக்கியும் ஒருவர்க்கொருவர் மித்திரபேதஞ் செய்தும் இரகசியமாகப் பலரைக் கொலைபுரிந்தும் நாட்டைக்கெடுத்து அநந்தவருமனுடைய பலத்தை வேர்களைந்து வந்தனர்.

அசுமகேசனுகிய வஸந்தபாநு, காட்டரசனுகிய பாநுவர்மனை அநந்தவருமனோடு போருக்கெழுத் தூண்டினன். பாநுவருமன் விரோதம் மூண்டிருப்பதை யுணர்ந்த அநந்தவருமன் தனது நட்பரசர்களை யொருங்கு சேர்த்துக்கொண்டு பகைவனை எதிர்க்கத் தீர்மானித்தனன். யாவருக்கும் முதலில் வஸந்தபாநுவே தன் சேனையோடு உதவிபுரிபவந்தனன். இதனைக் கண்

டதும் அரசன் வசந்தபாநுவே தனக்கு உயிர்த்தோழனெனக் கொண்டாடினன். மற்ற அரசர்களும் படைகளோடும் பரிவாரங்களோடும் வந்து சேர்ந்தனர். யாவரும் நருமதை யாற்றங் கரையிற் படை வீடிட்டுத் தங்கினர். அப்பொழுது அங்கு வந்தவர்களில் ஒரு சிற்றரசனாகிய குந்தளதேசாதிபதி யவந்தி தேவனுடைய பரிவாரங்களில் ஊர்வசியை வென்ற வனப்பினை யுடைய கணிகை யொருத்தி இருந்தனள். அவளைக் கண்ட காமாதுரனாகிய அசுமகவருமன் அவளைப் பலாத்காரமாகப் பற்றிக்கொண்டு போயினன். அப்பொழுது அசுமகன் குந்தளனை நோக்கி, "இக் கொடுஞ்கோல் மன்னனை யாமேன் றலைவனாகக் கருதவேண்டும்? இவன் நமது அந்தப்புர மாதர்களை என்ன தைரியமாகப்பற்றிப் போகின்றனன்? எத்தனை காலம் இவனுக் கடங்கி யாம் நடக்கவேண்டும்? உன்னிடத்தில் ஐஞ்ஞூறு யானைகள் இருக்கின்றன; என்னிடம் நூறு களிறுகள் உண்டு; யாமிருவரும் ஒன்று சேர்வோம். எனது நண்பர்களான மூளநாட்டிறை வீரசேனன், ரிசிகாதிபதி ஏகவீரன், கொங்கணமன்னன் குமாரகுப்தன், சாசிக்கியவேந்தன் நாகபாலன் முதலியோரும் இவனது ஏகாதிபத்தியத்தைப் பொறுக்கவில்லை; அவர்களையும் நம்முடன் எளிதிற் சேர்த்துக்கொள்ளலாம். காட்டரசனாகிய பாநுவர்மன் எனக்கு அந்தரங்கத் தோழன்; என் சொல்வழி நிற்பவன். அவன் நாளை யிக்கொடுங்கோலனை முன்புறத்தில் எதிர்க்கும்பொழுது நாமனைவரு மொருங்குகூடி இவனைப் பின் புறமாக எதிர்த்து இவனுடைய பொக்கிஷத்தையுஞ் சாமான்களையுங் கைப்பற்றுவோம், என்று உபதேசித்தனன்". அவனும் உடனே யொப்பினன்; கொங்கண வேந்தனுங் கூடினன். மற்ற வேந்தர்களும பேத தானோபாயங்களால் எளிதிற் கைவசமாயினர். மறுநாள் நடந்த போரில் அசுமகன் செய்த சூழ்ச்சியால் அசுமவர்மன் மாண்டனன். பொக்கிஷத்தையும் யானை குதிரை முதலியவற்றையுங் கைப்பற்றிக்கொண்ட வசந்தபாநு மற்ற மன்னர்களை நோக்கி, 'பலிஷ்டர்களின் வரிசைக் கிரமப்படிப் பொருள் முதலியனவும் பங்கிடவேண்டியது அவசியமாகையால் அவ்வரிசையை அவர்களுக்குள் தீர்மானித்துக்கொள்ள வேண்டுமென்றும், தன் சம்பந்தப்பட்ட அளவில் தனக்கு மற்ற மன்னர்கள் பார்த்து எவ்வளவு குறைந்த பாகத்தைக் கொடுத்தபோதி

னும் தான் பெற்றுக்கொள்ளத் தயாராயிருப்பதாகவும் வணங்க மாய்க் கூறினன். அவன் எதிர்பார்த்தபடியே ஏனைய மன்னர் கள் ஒருவரோடொருவர் எதிர்த்துப் போர் புரிந்து யாவரும் பலமற்றுப் போயினர். வசந்தபாது எல்லாப் பொருள்களையும் கைப்பற்றினன்; தனது நண்பனாகிய காட்டரசனுக்கு ஒரு சிறு பாகத்தைப் பங்கிட்டுத் கொடுத்துவிட்டுத் தான் மிகுந்த எல்லா வற்றையுந் தன் வசமாக்கிக்கொண்டு அநந்தவருமனுடைய ராஜ் யத்திற் புகுந்து அரசாளுவினன்.

பழைய மந்திரியாகிய வசுரகூடகன் அரசனது அகாலமர ணத்திற்கு வருந்தி, அவனுடைய பட்டத்துத் தேவியாகிய வசுந் தரை யென்பாளொடு புதல்வன் பாஸ்கரவர்மனையும் புதல்வி மஞ்சுவாதினியையும் அழைத்துக்கொண்டு இரகசியமாக இராச் சியத்தினின்றும் வெளியேறினன். ஆயினும் அவன் மிகவும் விருத்தாப்பியனுதலாலும் பெருந் துக்கத்தாற் பீடிக்கப்பட்டு மனமுடைந்ததாலும் சிறிது காலத்திற்குள் இவ்வையக வாழ்வை நீத்து விண்ணுலக மேவினன். பிறகு வசுந்தரை தனது மக்க ளொடு தனது கணவனுடைய மாற்றுந்தாய் வயிற்றிற் பிறந்த சகோதரனுகிய மித்திரவர்மன் எனப் பெயரிய மாகிஷ்மதி மன் னனை யடைந்து அடைக்கலம் புக்கனர். அவனுடைய பாது காப்பில் இவர்களுஞ் சின்னுள் வாழ்ந்தனர். வசுந்தரையின் அழகிலில் மயங்கிய மித்திரவருமன், தனது சகோதரன் மனைவி யென்றுங் கருதாதவனுய் அவளை விரும்பினன். ஆயினும் உத் தமியாகிய வசுந்தரை அவனுக்குச் சிறிதும் இடங்கொடாது அதிகோபத்துடன் கண்டித்துவிட்டனள்; எனினும், நினைத்த எண்ணம் ஈடேறுததால் வெகுளி மேற்கொண்ட மித்திரவரு மன் தனது மகனுகிய பாஸ்கரவருமனுக்குத் தந்தையின் அர சாட்சியினை மீட்டுத்தருவதில் விகாதஞ் செய்வதோடு மாத்திரம் நில்லாமல் அவனுயிர்க்குங் கேடுசூழ்வானை என்று அஞ்சி மனங்கலங்குவாளாயினள். அவள் இரகசியமாக என்னை அழை த்து இராஜகுமாரனை என்வசமொப்புவித்து அவனைப் பந்தா பஸ்தானவெறிடத்திற்குக் கொண்டுபோய்ச்சேர்த்து வேகமா மாய்ப்பாதுகாத்து வரவேண்டுமென்றும், தக்க பாதுகாப்புள்ள இடத்தினையடைந்ததும் அவ்விவரத்தினைத் தனக்கு இரகசிய மாகச்சொல்லியனுப்ப வேண்டுமென்றும் கல்லுங்கரையப்புலம்பி

வேண்டிக்கொண்டனள். நான் ஒருவருமறியாமல் உடனே இராஜகுமாரனை யழைத்துக்கொண்டு வெளிப்பட்டு, அரசனது ஒற்றர்கள்பின் றொடராவண்ணம், இவ்விந்தியாரணியத்திற் புகுந்தேன். பசியினாலும் தாகத்தினாலுங் களைத்துப்போன இவ்விளம்புதல்வனைத் தேற்றக்கருதி இக்கிணற்றினின்றும் நீர் மொள்ள முயற்சித்தேன். வயது சென்றமையாலும் வழிநடந்த இளைப்பினாலும் தலை கிறுகிறுப்புற்று மயங்கி நீரில்விழுந்து விட்டேன். நீ இங்குவந்து சமயத்தில் உதவிபுரிந்தாவிட்டால் யானிறந்து படுவது திண்ணம். கிழவனாகிய எனக்கு உயிர்ப்பிச்சைதந்த உத்தமனாகிய உன்னைக்கடவுள் என்றென்றும் காப்பாற்றுவாராக," என்று அம்முதியோன் தனது வரலாற்றினைக் கூறிமுடித்தனன்.

இச்சரித்திரத்தைக் கேட்டபின் யான், பட்டராணியான வசுந்தரையின் பெற்றோர் யாவரென்று கூறுமாறு கேட்டேன். அவள், கோசலதேசாதிபனை குசுமதன்வாவுக்குப் பாடலீபுத்திரநகரவணிகனாகிய வைச்சிரவணன் மகள் சாகரதத்தையென்பாளிடம் பிறந்த புதல்வியென்பதை அவன் பகர்ந்தனன். வைச்சிரவணன் தாயும் எனது பிதாவும் ஒரேதாய்வழிப் பாட்டனரின் வமிசத்திற்றோன்றியவர்கள். என்பிதா சுச்ருதன் சிந்துதத்தனுடைய மகனே. ஆதலான், பாஸ்கரவர்மன் எனது உறவினனாயினன். ஆகவே அவனுக்கு உதவிபுரியவேண்டிய கடமை எனக்கு ஏற்பட்டது. அவனது பிதாவின் ராச்சியத்தை அபகரித்துக்கொண்ட அசுமகமன்னனைத் தொலைத்து அவனிடத்தினின்றும் நாட்டை மீட்டுத்தந்து என்உறவினராகிய பாஸ்கரவர்மனைச் சிம்மாசன மேற்றுதவளவும் என்மனம் நிம்மதியடையாதென்று அறிந்துகொண்டேன். இது நிற்க, தற்காலம் எங்களிவருத்தும் கொடும்பசியைத் தீர்க்க வழிதேடுவது பெரும் ஆலோசனைக்கிடனாயிற்று.

இவ்வமயத்தில் அதிவேகமாகப் பறக்கும் இரண்டு மான்களைத் துரத்திக்கொண்டு வேடனொருவன் அவ்வழியாக ஓடிவந்தனன். அவன் ஏற்கெனவே மூன்று பாணங்களைப் பிரயோகித்தும் அவை குறி தவறிப்போயின. யான் அவனைத் தடுத்து அவன் கையிலிருந்து வில்லையும் மிகுந்திருந்த இரண்டு அம்பு

கனையும் பெற்று அவ்விரண்டு மான்கனையும் விழுத்தினேன். ஒருமானை வேடனுக்கு அளித்து, மற்றிரண்டினைத் தோலுரித்துக் குடர் முதலிய வற்றை நீக்கிச் சுத்தஞ் செய்து நெருப்பில் வாட்டிப் பாகஞ் செய்து யாவருந் திருப்தியாக உணவுகொண்டோம். எனது வில்வித்தைக்கு வியந்து மகிழ்ந்த வேட்டன் எங்களோடு கூடவே யிருந்தனன். மாகிஷ்மதி நகரத்திய சமாசாரம் ஏதேனும் அவன் காதில் விழுந்ததுண்டோ என்று யான் தற்செயலாக அவ்வேடனைக் கேட்டேன். அவன், தான் மாகிஷ்மதி நகரத்திற்குச் சென்று ஒரு புலித்தோலை விற்று விட்டு அப்பொழுதுதான் திரும்பி வருவதாகவும், அங்குச் சண்டவருமன் தம்பியாகிய பிரசண்டவருமனுக்கு மித்திரவருமன் புதல்வியாகிய மஞ்சுவாதினியை விவாகஞ் செய்யத் தீர்மானித்து வேண்டிய ஏற்பாடுகள் மிக்க விமரிசையோடு நடந்தேறி வருகின்றன என்றும், அவற்றைத் தான் நேரிற்பார்த்து வந்ததாகவும் தெரிவித்தனன். இதனைக் கேட்டதும் முதியவனைத் தனியாகவொருபுற மழைத்துப்போய்ப் பின்வருமாறு பேசினேன்:—

"அன்பனே! மாகிஷ்மதியில் நடக்கும் தந்திரோபாயம் இன்னதென்றறிந்தேன். மஞ்சுவாதினியை மித்திரவர்மன் தனது அபிமானபுத்திரியாக உலகமெச்சக் காட்டி அவள் தாயின் அன்பினைப்பெற வழிதேடுகின்றனன்; பிறகு இராஜகுமாரனைக் கொல்லவும் முயற்சிப்பன். ஆதலால் இதனை நிறுத்த உபாயஞ் செய்ய வேண்டும். நீ இப்பொழுதே புறப்பட்டு ராணியிடஞ் சென்று என்னைக் கண்டது முதலான எல்லா விவரங்களையும் அவளுக்கு இரகசியமாகத் தெரிவிப்பாயாக. பின்னர், நீங்களிருவரும் இராஜகுமாரனை பாஸ்கரவருமனைப் புலியடித்துக் கொன்று விட்டதான வதந்தியை வெளியில் விட்டு, நீங்காத்துயரத்திலாழ்ந்திருக்கவேண்டும். மித்திரவருமன் அரசகுமாரனின் அகால மரணத்திற்கு அந்தரங்கத்தில் மகிழ்ச்சி யடைவானெனினும் வெளியில் துயர்க்கடலுளாழ்ந்தவன்போலப் பாசாங்கு செய்வன். இதன்பின் ராணி அவன் மநோபீஷ்டத்திற்கு இணங்குபவள்போல நடையுடை பாவனைகளால் நடித்து அவனது மனத்திலுள்ள காம விகாரத்தை விருத்திசெய்யவேண்டும். இதோ யான் கொடுக்கும் வச்சநாபியாகிய படுவிடத்தைத் தனது முத்து மாலையிற் றடவி, அவன் கிட்ட நெருங்குமமயத்தில், அம்மாலை

யால் அவன் மார்பிலடித்து, 'நான் கொண்டகணவனையே தெய்வமாகக் கருதும் உத்தம பத்தினியாயின், இம்மாலையே வாளாயுதமாக மாறி இவனைக் கொல்லட்டும்' என்று சபதமொழி பேசட்டும். மித்திரவருமன் உடனே இறப்பது திண்ணம். பிறகு இராணி மாலையினை நீரிலல் நன்கு கழுவிவிட்டு அதனை யவள் மகள் மஞ்சுவாதினிக்கு உடற் காப்பாக அணிந்துகொள்ள அளிப்பாளாக. துஷ்டனாகிய சிற்றப்பனைக் கொன்ற மாலையை யவள் அணிவதால் அவள் அன்னையின் கற்புநிலை உலகத்தார்க்குப் புலனும். பின்னர், ராணி ராஜ்ஜியத்தையும் தன் மகளையும் பிரசண்டவருமனுக்கு அளிப்பதாக அவனுக்கு வாக்குறுதி தருவாளாக. இதற்கிடையில் யாங்கள் காபாலிக சந்நியாசிகளைப் போல வேடந் தரித்து அங்குவந்து ராணியை யடைந்து அவள்பாற் பிச்சையேற்று மயானவாசம் புரிவோம். ராணி, அமைச்சர்களையும் நகரமாந்தர்களையும் இரகசியமாகக் கூட்டி அவர்களுக்குத் தான் ஒரு கனவு கண்டதாகவும், அக் கனவில் விந்தியவாசினி தோன்றித் தனது புதல்வன் உயிரோடிருப்பதாகவும், அவனைப் பெண்புலியினுருவொடு தானே தூக்கிப்போய் அவனை அபாயமுண்டாகாமற் பாதுகாத்ததாகவும், நான்கு தினங்களுக்குள் பிரசண்டவருமன் உயிரினை யிழப்பனென்றும் தனக்குத் தெரிவித்ததாகப் பகிரங்கப்படுத்தவேண்டும். அவள், பின்னும் அவர்களுக்குத் தனது மைந்தன் ஐந்தாவது நாள் ரீவாநதிக் கரையிலுள்ள விந்தியவாசினி யாலயத்தில் நண்பனொருவனுடன் வெளிப்படுவனென்றும், அந்நண்பன் அரசகுமாரனைச் சிம்மாசனமேற்றி இராச்சியத்தை மீட்டுக் கொடுப்பனென்றும் அவ்வுபகாரத்திற்காக மஞ்சுவாதினியை அவனுக்கு மணம்புரிந்து வைக்கவேண்டுமென்றும் தேவி கூறிப்போனதாக வெளியிடவேண்டும். இவையாவும் எங்ஙனம் நிகழுமோ என்பது உண்மையாய் நடந்தபிறகே நிச்சயமாகுமாதலால், இவ்விஷயங்களை வற்றையும் சிறிதும் வெளியிடாது இரகசியமாக மனத்தில் மறைத்துவைக்க வேண்டுமென்றும் யாவருக்கும் ராணியைக் கொண்டு தெரிவித்து விடுவாயாக." என்று யான் அம்முதியவனுக்கு அறிவுறுத்தினேன்.

அவ்வயோதிகப் பிரபுவும் யான் கூறியதைச் செய்ய உடன்பட்டு ராஜகுமாரனை என் வசத்திலொப்புவித்துத் தான் ராணி

பாற் போயினன். சில நாட்களுக்குள், ராணியின் பதிவிரதா மகிமையால் முத்துமாலை வாளாயுதமாக மாறி மித்திரவருமனைக் கொன்றதென்றும், ஆயினும் அம்மாலையை ராஜகுமாரியின்னும் அணிந்திருப்பதால், அது தோஷமற்றதென்றும் நாடெங்கும் வதந்தியுலாவியது. இதனைக் கேள்வியுற்றவுடனே யாங்களிருவரும் காபாலிக சந்நியாசிகளாக வேடம்பூண்டு ராணிபாற் சென்றோம். எங்கள் வருகையினை முன்னறிந்தவளாயினும், நேரிற் கண்டதும் தன்வசமற்றுத் தன்னுள்ளக் கிளர்ச்சியினை மறைத்து வைக்கமுடியாமல் எங்களிடம், தான் ஒரு கனவு கண்டுள்ளதாகவும் அதிற் கண்டவண்ணம் யாவும் நிறைவேறினால் தனது மனோரதம் நிறைவேறுமென்றும் பகர்ந்தனள். அவள் தனது மகள் மஞ்சுவாதினியை யழைத்து எங்களிருவரையும் வணங்கச் செய்து என்னை மந்தகாசத்துடன் நோக்கி, "நீங்கள் உண்மையான காபாலிகர்கள் அல்லாவிடில், இவ்விளங்குமரனை என்பால் நிறுத்திக்கொள்வேன்," என்று கூறினள். யானும், 'அங்ஙனமேசெய்யத் தடையாதொன்றுமில்லை' என்று விடைபகர்ந்தேன். மஞ்சுவாதினியின் அழகிய உருவம் என்னெஞ்சிற் பதிந்து விட்டது. பின்னர் நாங்கள் இராணியிட்ட பிச்சையையேற்றுக்கொண்டு, முதியனகிய நளிஜாங்கனை எங்களோடு வரக் குறிப்பாகத் தெரிவித்து உடனழைத்துப் போயினோம். தனியிடமொன்றைச் சேர்ந்து, பிரசண்டவருமன் எங்குளானென்றறிவிக்கும்படி நளிஜாங்கனைக் கேட்டேன். அவன் தனக்கு இராச்சியபாரம் நிச்சயமாய்ச் சித்திக்குமென்ற துணிவால், இப்பொழுதே அரண்மனையைத் தனக்கு வாசஸ்தானமாகக் கொண்டு அந்தப்புரநடனமாதர்களோடு சல்லாபமாயிருக்கிறானென்று அம்முதியவன் கூறினன். பிறகு இராஜகுமாரனை நகர்ப்புறத்துள்ள பாழ்ங் கோயிலில் விடுத்து என்ன நேர்ந்தபோதிலும் வெளிவராதிருக்குமாறு ஆஜ்ஞாபித்து, யான் பரதசாஸ்திரவிற் பன்னன்போல வேடம்பூண்டு அரண்மனைக்குட் புகுந்தேன். கூட்டத்தோடு சேர்ந்து உட்புகுந்து பிரசண்டவர்மன் முன்னிலையடைந்து எனது பரதநாட்டிய வல்லபத்தை யவனுக்குக் காட்டினேன். பிரசண்டவர்மன், தான் இதற்குமுன் கண்டிராத அற்புத நடனத்தைக் கண்டு வியந்து கொண்டாடினன். யாவரும் பரவசமாயிருந்தனர். மாலைக்காலமானவுடன், பற்பல

விதமான நடன பேதங்களையும் இசைவேற்றுமைகளையுங் காட்டி யாவரையும் மகிழ்வித்தேன்; தேள்போலவும், முதலைபோலவும், மீன்போலவும் என்னுடலைத் திரித்துக்கொண்டு செய்வதற்கரிய நடனங்களைச் செய்து எல்லோரையும் பிரமிக்கச் செய்தேன். பிறகு ஆண்டு இருந்தோர்களிடத்துள்ள வாளாயுதங்களை வாங்கி என்னுடலிற் பல பாகங்களிலும் செருகிக்கொண்டு எவருங் கண்டறியாத அத்யற்புத வித்தைகளைச் செய்து காட்டினேன். யான் இவ் வாள் நடனம் புரிந்துகொண்டிருக்கையில், எனக்கு இருபது கஜதூரத்திற் கப்புறமிருந்த பிரசண்டவருமன் மார்பில் கூரிய கட்கமொன்றினை வீசியெறிந்து பாய்ச்சி அவனைக்கொன்று, 'உத்தமனுகிய வசந்தபாது ஊழிக்காலம் அரசு புரிவானுக' என்று உரக்கக் கூவினேன். அருகிலிருந்த வீரனொருவன் என்மேற் பாய்ந்து பற்றினன்; அவனை யொரேதூக்காய் மேலே தூக்கிப் பூமியிலறைந்துவிட்டுப் பிரமித்துநின்றோர் யாவரையும் அலக்ஷியமாகப் பார்த்துவிட்டு இரண்டு ஆள் உயரத்திற்கு மேலுள்ள அந்தப்புர மதிலை அநாயாசமாகத் தாவிக் குதித்து எளிதி லகழையுங் கடந்து சோலையை யடைந்து அங்கு வந்திருந்த நளிஜாங்கன் என் காலடிச் சுவடுகளை யெவருங்காண வொட்டாமல் அழித்துவர யான் அதிவேகமாக நகரமதிலையும் அகழியையுந்தாவி வெளியேறி, அரசகுமாரனை விட்டு வந்த பாழ்ங் கோயிலை யடைந்து காபாலிக சந்நியாசியைப் போல வேடம் புனைந்துகொண்டேன். பிறகு யாங்களிருவரும் மீளவும் புறப்பட்டு அரண்மனை வாயிலிற் கூடியிருந்த பெருங்கூட்டத்தினுட் புகுந்து அதிசிரமப்பட்டு மயானத்தை அடைந்தோம். அம்மயானத்தினிடையே காளி கோயிலொன்றுண்டு; அதற்குச்சிறிது தூரத்திலுள்ள குகை யொன்றில் நாங்கள் தங்கியிருந்தோம். முன்னதாகவே இந்தக்குகையிலிருந்து கோயிலின் கருப்பக்கிருகத்தினுள்ள காளிதேவியின் பெரிய கற்சிலையின் பீடத்தின் கீழ்வரை ஒரு சுரங்கமொன்றை அமைத்து வைத்திருந்தேன். குகையிலுள்ள பிலவாயினைப் பெரும்பாறை யொன்றினால் மறைத்து வைத்தேன். அன்று நள்ளிரவில் வசுந்தரா ராணி நளிஜாங்கன் வசமாக நவரத்தினங்களிழைத்த இரத்தின கிரீடங்களும் அரிய ஆபரணங்களும் உயரிய ஆடைகளும் உடைகளும் கொடுத்தனுப்பினள். அவற்றை யாங்கள் பெற்றுக்கொண்டதும் நளிஜாங்கன்

போயினன். பிரசண்டவருமனுக்குச் செய்யவேண்டிய ஈமக் கடன்களைச் செய்து முடித்தபின், ராணி, அசுமகேதசாதிபன் தூண்டுதலினாலேயே இவன் கொல்லப்பட்டிருக்கவேண்டுமென்று யாவருக்கும் அறிவித்தனள். பிறகு மற்றைநாள், ராணி தான் முன் செய்துள்ள ஏற்பாட்டின்படி, மந்திரிகள் பிரதானியர்கள் முதலிய சிறந்த நகரமாந்தர்கள் புடைசூழ்ந்து வர, விந்தியவாசினியின் அபிமான ஸ்தலமாகிய அத்துர்க்காலயத்தை யடைந்தனள். யாவருங் கண்டு பக்தி மேலீட்டால் மனமுருகும்படித் தேவிக்கு ஏராளமான அபிஷேகமும் அர்ச்சனைகளும் நடந்தேறின. யாவரும் கர்ப்பூர நீராஞ்சனம் தரிசனஞ் செய்தபின், தேவியின் அநுக்கிரகத்தால் ராஜகுமாரன் வரவினை எதிர்பார்த்தவர்களாய்க் கோயில் கருப்பக்கிருக வாயிலினை மூடித் தாழிட்டுக்கொண்டு, நடக்கப்போகும் விந்தையாதாகுமோ என்ற பேரவாவுடையராய்த் தேவியை ஸ்தோத்திரம் செய்துகொண்டு வெளியிலிருந்தனர். எல்லாவிதமான வாத்தியங்களும் கோஷித்துக் கொண்டிருந்தன. நாங்களிருவரும் ராணி யனுப்பின ஆடையாபரண முதலியவைகளால் அலங்கரித்துக்கொண்டு சுரங்கத்தினுட்புகுந்து காளியின் பீடத்தின்கீழ் வந்து சேர்ந்தோம். பிறகு யான் தேவியின், சிலாரூபத்தைப் பீடத்தோடு என் தலையிலே செங்குத்தாகத் தூக்கிக்கொண்டு சுரங்கத்தை விட்டுக் கருப்பக்கிருகத்தினுள் வந்து தேவியினுருவினை யோரிடத்தில் வைத்து, ராஜகுமாரனையும் பிலத்தினின்றும் வெளியேற்றிப் பிறகு அவ்வுருவினைப் பீடத்தோடும் முன்னிருந்த விடத்திற் சேர்த்துப் பிலவாயினை மூடிவிட்டேன். பீடத்தோடுகூடிய தேவியுருவினைப் பலர் கூடி எடுக்கினும் சிறிதும் அசைக்கமுடியாத அவ்வளவு கனமுடையதாகையால், அதனை யாரொருவனை தூக்கிவைத்தது அசாமானியமானது. சிறிதுபோழ்திற்கெல்லாம் ராணியும் மந்திரி பிரதானிகளும் மற்றுமுள்ள யாவர்களும் கபாடத்தினைத் திறந்துகொண்டு உட்புகுந்தனர். எங்களிருவரையும் அங்குக் கண்டமாத்திரையில் அவர்களுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. ராஜகுமாரனை மீளப் பெற்றமைக்கு யாவரும் பெருமகிழ்வடைந்தனர். அவ்வமயம் யான் அவர்களை நோக்கிப், பின்வருமாறு பேசினேன். "சகல சக்திஸ்வரூபியான தேவி என்மூலமாக உங்கள் அனைவருக்கும்

தெரிவிக்கும் பின்வருவனவற்றைக்கேட்டு நம்பி, அம்பிகையின் திருவருளைப் பெற்று யாவரு முய்வீராக. இராஜகுமாரனைக் கொண்டுபோன புலி யானே; அவனை எனது அபிமான புத்திர னாக ஸ்வீகரித்துள்ளேன்; அவனை உங்களுக்கு அரசனாக அளிக் கிறேன்; எனது ஆணைக்கு அஞ்சி யாவரும் அடங்கி யொழுகு வீராக. அவன் உடன்பிறந்தாளாகிய மஞ்சுவாதினியை என க்கு மணம்புரிந்து என்னைக் களரவிப்பீராக. இதுவே தேவி யின் ஆஜ்ஞை" என்று கூறினேன். இதனைக்கேட்ட ஜனங்கள் யாவரும், மகா கீர்த்திமானாகிய போஜராஜவம்சோத்பவனை ராஜகுமாரன் தங்களுக்குத் தேவியின் அநுக்கிரகத்தால் அரசனாக் கிடைத்த பாக்கியத்தை வியந்து களித்தனர். ராணி வசுந் தரைக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. அன்றைய தினமே அவள் தனது புதல்வி மஞ்சுவாதினியை எனக்கு மணஞ் செய்து கொடுத்தனள். காளி கோயிலில் யான் உண்டாக்கிய சுரங்கத்தை நன்றாக மூடிவிட்டமையால் யான் செய்த உபாய த்தை இன்றளவும் எவரு மறிந்திலர். காளிதேவியின் திருவரு ளால் அளவிறந்த திறல்படைத்துள்ளவனாக என்னை மாந்தர் யாவரும் ஒருதலையாக நம்பினர் ஆதலால் அவர்கள் என்மேல் வைத்திருந்த பக்தியினை எவராலும் மாற்றமுடியாது. பாஸ்கர வருமனை யாவரும் தேவியின் அபிமான புத்திரனாகக் கருதி ஆரியாபுத்திரனென்றே யழைத்தனர். அச் சிறுவனுக்குத் தண்டநீதி சாஸ்திரங்களைப் போதிக்கத் தக்க உபாத்தியாயர் களை நியமித்து அவனைக் கற்கச் செய்தேன். யானே ராஜாங்க காரியங்களைப் பிரதிநிதியாக நடத்திக்கொண்டிருந்தேன். அர சாட்சி யென்பது அபாரமானவேலை; அதற்கு மூன்று கருவி களுண்டு, சபை ஆணை முயற்சி யென்னும் பெயரினையுடையன. மந்திராலோசனைசபை செய்யத்தக்கன வின்னவென்று தீர்மா னிக்கும், ஆணை அவற்றை நடத்தவாரம்பிக்கும், முயற்சி நிறை வேற்றும். அரசாட்சிமுறையென்னும் விருக்ஷத்திற்குச்சபையே வேராகும்; ஆணையே பாரையாம்; எழுபத்திரண்டு பகுதிகளும் இலைகளாம்; 'படை குடி கூழமைச்சு நட்பு அரண்' என்னும் ஆறங்கமும் மலர்களாம்; சக்தியே அரும்பாம்; வெற்றியே பழ மாம். இத்தகைய அரசாட்சியென்னுந் தருநிழற்கீ ழரசனிரு ந்து வாழ்வானாக; அந்நிழல் அவனைக் காப்பதாக. அரசன்

அவைக்களத்தில், மித்திரவருமாவின் அமைச்சனை ஆரியகேது எனப் பெயரிய அறிவாளன் ஒருவனிருந்தனன். அவன் மிகுந்த திறமைீ வாய்ந்தவன்; அவனும் ராணி பிறந்த கோசலநாட்டினனுதலால் அவள் பக்கல் அன்பு மிகுந்தவன். இவனை அரசகுமாரனுக்குத் துணைவனுக்குவது நன்றெனக் கருதினேன். யான் நளிஜாங்கனை யழைத்து இரகசியமாக அறிவுறுத்தி அவனை அவ்வாரியகேதுவின்பால் அனுப்பிப் பின் வருமாறு பேசச் செய்தேன். "அறிவுமிக்கோய்! இவ்விதமாக இராச்சியாதிகாரத்தை வலிந்து கைப்பற்றித் தன்னிஷ்டம்போல நடத்தும் இப்புதியன் யாவன்? பாஸ்கரனை அரவம் விழுங்கிவிட்டது; இனி அவனைக் கக்குமாறு செய்தாலன்றே அவன் பிரதாபம் உலகமெங்கும் ஒளிவீசும். இதனைப் பற்றிய உன் கருத்தென்ன?" என்றிவ்விதமாகப் பிறரறியாது இரகசியமாக அவனது அந்தரங்க அபிப்பிராயத்தை அறியுமாறு அம்முதிய நளிஜாங்கனும் உபாயமாய்ப் பேசினன். இன்னும் பலவிதமான உபதைகளால், ஆரியகேதுவின் உட்கருத்தினைத் தெரிந்து தெளிய நளிஜாங்கன் என்னால் நியமிக்கப்பெற்று அதற்குத்தக வொழுகினன். ஆயினும் இவற்றாலொரு சிறிதும் மாறுபடாத மனத்தைக் கொண்ட ஆரியகேது அவனை நோக்கி, "அன்பனே! நீ யாராயாமற் பேசுகின்றனை. இவ்வற்புத குணவானைப்பற்றி நீயொன்று மறிந்திலை போலும். நீ இங்ஙனம் பேசுதல் எனக்கு வெறுப்பினை விளைக்கின்றது. இவ்வீரனது அறிவு ஆற்றல் ஆண்மை உபாயம் சத்தியம் பொறுமை முதலிய உத்தம குணங்களைக் காணும்பொழுது அவன்பால் என்னை யறியாமல் எனக்குப் பக்தி உண்டாகின்றது. இந்த ராஜ்ஜியம் இப்பொழுதுள்ள குழப்ப நிலையினின்றும் நீங்கி நன்னிலையடைந்து பகைவர் தலையெடாதொழிந்த பின்னர், இவ்வறிவாளனே ராச்சியத்தை நமது பாஸ்கரவருமனிடம் ஒப்புவிப்பான் என்பதை நான் நன்கறிவேன். நீயும் நம்புவாயாக. அவனுதவியாலேதான் அரசிளங் குமரனும் தன் பிதாவின் சிம்மாசனத்திலமர்வான் என்று திண்ணமாய் அறிந்துகொள்வாயாக. மேலும், மகா புத்திமானுகத் தன்னைக் கருதியிருக்கும் அசுமகராஜன் தனது நாட்டையுமிழந்து பரிதவிக்கப்போவதை நீயே கண்டு உண்மை அறிவாய்." என்று ஆரியகேது நிச்சய புத்தியுடன் மறுமொழி பகர்ந்தனன். இவ்

விதமாகப் பரீக்ஷை செய்து, அவனை நம்பலாம் என்று தெளிந்த பின்னர், அவனை என்னுடன் சேர்த்துக்கொண்டது மன்றி அவனை அந்தரங்க அமைச்சனாகவும் அமைத்தேன். அறிவு சத்தியம் முதலிய உயர்குணம் வாய்ந்த அவனது நண்பர்கள் பலரும் என் பக்கலிற் சேர்ந்தனர். இவர்களுடைய உதவியினால் அந் நாட்டில் நீதியும் வருணச்சிரம தருமமும் நிலைபெற்றிருக்கச் செங்கோன்முறை சிறிதும் வழுவுதலின்றி அரசு புரிந்து வந்தேன். தேசத்திலுள்ளார் அனைவரும் களிப்புற்று வாழ்ந்தனர்.

பிறகு யான் நால்வகைப் படையினையும் ஒருங்குசேர்த்து நாடோறும் யுத்தாயுதப் பயிற்சி செய்துவர ஆஜ்ஞாபித்துச் சேனையைப் பலப்படுத்தினேன். ஒருநாள் அமைச்சர் சேனாதிபதிகள் முதலியோரை மந்திராலோசனை மண்டபத்திற் கூட்டி, அரசகுமாரனைத் தந்தையின் நாடாகிய விதர்ப்பதேயத்திற்கு இறைவனுக்கச் செய்யவேண்டிய முயற்சிகளைப்பற்றி யாலோசித்து, உடனே சேனைவெள்ளம் புடைசூழ்ந்துவர விதர்ப்ப நாட்டிற் புகுந்தேன். இதற்கு முன்னரே என்னுணையால் என் அந்தரங்க தூதர்கள் விதர்ப்பநாட்டிற் புகுந்து பழைய அரசனுகிய அநந்தவருமனின் புதல்வன் பாஸ்கரவருமன் விந்தியவாசினியின் திருவருளால் அவளுடைய அபிமானபுத்திரனுக வரம் பெற்றுளானென்றும் அவனுக்குச் சகாயனுக விச்ருதன் எனப்பெயரிய மகாவீரன் தேவியால் நியமனம் பெற்றுளானென்றும் அவனை வெல்ல வல்லவர் இம்மாநிலத்தி லெவருமில்லை யென்றும், இவர்களை யெதிர்ப்பவர்களைத் தேவியே தனது கோபாக்கினியா லெரித்துப்போடுவாளென்றும் பற்பல விதமான வதந்தியினை அந்நாடெங்கும் பரப்பிவிட்டனர். ஜனங்கள் யாவரும் போஜகுலோத்தமனை இராஜகுமாரனே தங்களுக்கு அரசனுகவேண்டுமென்று பெரிதும் விரும்பினர். மேலும் எனது சாரணர்கள் பேதோபாயங்களாற் பலரையும் எங்கள் வசமாக்கிவிட்டனர். விதர்ப்பதேச சேனை முழுவதும் சண்டை தொடங்குமுன் எங்களைச் சேர்ந்துகொள்ளத் தீர்மானித்துவிட்டனர். இந் நிலைமையில் வசந்தபானு யாது செய்வன்? அவனுடு முன்னம் நட்புக்கொண்ட அரசர்கள் பலரும் பொக்கிஷத்தை முற்றிலும் அபகரித்

துக் கொண்ட வசந்தபாநுவினை அடியோடு தொலைக்க இதுவே நல்ல சமயமென்றும், தேவியின் அநுக்கிரகத்தைப் பெற்று வருபவர்களை எதிர்த்தல் அநுசிதமென்றும், அவர்களோடு சேர்வதால் தாங்களும் ஈடேறலாமென்றுங் கருதி எங்களைச் சேர்ந்து கொண்டனர். முற்பகல்செய்யிற் பிற்பகல்விளையுமென்பது வசந்தபாநுவின் விஷயத்தில் நிதரிசனமாயிற்று. அவன் சேனையோடு எங்களை எதிர்த்தனன். யானை எங்கள் சேனைக்கு முன்னல் காற்றினுங்கடுகிச் செல்லுங் கவனவாம்புரவி யொன்றன் மீதிவர்ந்து மின்னல்போலொளிவீசும் வாளாயுதத்தை விதிர்த்து வசந்தபாநுவை எதிர்த்துப் போர்புரிந்தேன். இருவர்க்கும் நிகழ்ந்த சண்டையில் யான் மிக எளிதாக வசந்தபாநுவின் சிரத்தை வெட்டி வீழ்த்தினேன். விதர்ப்பப் படையாவும் பாஸ்கரவர்மனுகிய ஆரியா புத்திரன் நீடுழிவாழ்க என்னும் வாழ்த்தொலியோடு எங்களைச் சேர்ந்தன. அசுமகநாட்டுச் சேனையிற் சிதறுண்டொழிந்தவர் போக ஏனையோர் எங்கள் பாதத்தில் வீழ்ந்து வணங்கி உயிர்த்தப்பினர். இவ்விதமாக யாங்கள் வெற்றி முரசறைந்து வாகைசூடித் தலை நகரினுட் புகுந்து அந்தவருமன் வீற்றிருந்த சிம்மாசனத்தில் அவன் மகன் பாஸ்கரவருமனை வைத்து முடிசூட்டி இரண்டு நாட்டிற்கும் அரசனுக்கினேன். ஏனைய மன்னர்கள் யாவரும் அவனை வணங்கி அவனருளால் வாழ்பவராயினர். இங்ஙனம் தந்தையின் கிரீடத்தை மைந்தன் முடியிற் சூட்டி யாவரையும் மகிழ்வித்தேன்.

ஒருகால் ராணி வசுந்தரையும் ராஜகுமாரன் பாஸ்கரவர்மனும் அளவளாவியிருக்கும்பொழுது யான் அவர்களை யணுகி, "யான் உங்களைவிட்டுக் கொஞ்சகாலம் பிரிந்திருக்கவேண்டும். நான் செய்ய மேற்கொண்ட கடமையொன்றுள்ளது. அதுமுடியுமளவும் யான் ஓரிடத்திலும் நிலைபெற்றிரேன். எனது உயிர் நண்பனை இராஜவாஹனனைக் கண்டாலன்றி மீண்டிவண்வரேன். நான் இதுகாறும் எடுத்துக்கொண்ட மற்றொரு காரியம் நிறைவேறியது. இனி முதலிலெடுத்த காரியம் சித்திபெறுமல் யான் வாளாவிருப்பது நீதியாகாது. நான் சென்று எனது நண்பனைத் தேடிக் கண்டு மீளவும் இங்கு வருமளவும் என் மனைவி மஞ்சுவாதினி யுங்களிடமே யிருக்கவேண்டும்" என்று அறிவித்தேன்.